11. ,, S. சுப்பையா பிள்ளை, சுகாதார ஆய்வாளர்.
12. ,, K. கருப்பழகு, கிராம நல ஊழியர் முதல் நிலை.
13. ,, R. [illegible], ,, ,,
14. ,, V. சுப்பையா, ,, ,,
15. ,, S. ராமையா, ,, 2-ம் நிலை.
16. ,, S. சாமுவேல், ,, ,,
17. ,, A. நடராஜன், ,, ,,
18. ,, P. ராமசாமிப்பாண்டியன் ,, ,,
19. ,, R. நாராயணசாமி ,, ,,
20. ,, R. ராஜகோபாலன், ,, ,,
21. ,, A. ராமானுஜம் ,, ,,
22. திருமதி. T. ராஜம்மாள், கிராம சேவிகா.
23. திரு. K. A. ரெங்கசாமி, சமூகநல ஊழியர்.
24. ,, N. S. முத்தையா செட்டியார், சமூகநல ஊழியர்.
25. ,, K. M. மீத்தீன் பிள்ளை, வயற்கண்காணி
26. ,, P. சுப்பையா, செய்துகாட்டும் கண்காணி.
27. ,, R. பாலகிருஷ்ண நாயுடு, ,, ,,
28. ,, சுந்தரராம அய்யர், ரோடு இன்ஸ்பெக்டர்
29. ,, அழகிரிசாமி ,, ,,
30. ,, காமு ரெட்டியார் ,, ,,
31. ,, A. ஜேசுதாசன், கதர் உதவியாளர், 2ம் நிலை.
32. ,, சாமுவேல்துரைராஜ், ஜீப் டிரைவர்.

## அலுவலகப் பணியாளர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. | K. M. சுந்தரம், | அலுவலக மேலாளர். |
| 2. | ,, | K. கந்தசாமி, | கணக்காயர். |
| 3. | ,, | G. சங்கரன், | தலைமை எழுத்தர். |
| 4. | ,, | V. சீனிவாசன், | மேற்பிரிவு ,, |
| 5. | ,, | P. நாராயணன், | ,, ,, |
| 6 | ,, | A. முத்துசாமி, | கீழ்ப்பிரிவு எழுத்தர். |
| 7. | ,, | S. சுடலைமணி, | ,, ,, |
| 8. | ,, | S. C. முத்தையா, | ,, ,, |
| 9. | ,, | A. ஜேம்ஸ் அந்தோணிராஜ் | ,, ,, |
| 10. | ,, | K. ஜெயராமன், | ,, ,, |
| 11. | ,, | P. துரைராஜ், | ,, ,, |
| 12. | ,, | பொன்னுசாமி, | ,, ,, |
| 13. | ,, | I. தனீஸ்லாஸ், | காஷியர். |
| 14 | ,, | S. M. அப்துல் மஜீத், | அட்டெண்டர். |
| 15. | ,, | வெங்கடரத்தினம் | ,, |
| 16. | ,, | U. மாரியப்பன், | கடைநிலை ஊழியர். |
| 17. | ,, | S. சுப்பா நாயக்கர், | ,, |
| 18. | ,, | S. பொன்னையா பிள்ளை, | ,, |
| 19. | ,, | S. பெருமாள், | ,, |
| 20. | ,, | K. கோமுசேர்வை, | ,, |
| 21. | ,, | M. அய்யனார், | ,, |

# நல்லது செய்திடும் கூட்டுறவே!

1. காற்றிற் பறந்திந்த வானில் மிதந்திடும்
காகங்கள் கூடிப் புசிக்குதம்மா!
போற்றி இனத்தினைக் கூட்டி எறும்பினம்
பொந்தினில் ஆட்சி நடத்துதம்மா!

2. விண்ணையளாவிடும் கோபுரங்கள்—பெரும்
வெற்பையுயர் கவின் மாளிகைகள்
மண்ணினில் மாபெரும் நீர் அணைக்கட்டுகள்
மானிடன் கூட்டுற வாகுமம்மா!

3. மேட்டை உடைத்துச் சமமாக்கும்—வெறும்
வெட்ட வெளியினில் பொன்விளைக்கும்
நாட்டினில் செல்வங்கள் கொட்டிக் குவிந்திடும்
நல்லது செய்திடும் கூட்டுறவே!

4. மண்ணைப் பிசையும் குயவர் முதல்—இந்த
மாநில மாள்பவர் தம்வரையில்
எண்ணிக்கை யற்றவர் இவ்வியக்கத்தினால்
எய்துவர் நன்மை அறிவாயம்மா!

5. கொம்பில் தேனீக்களின் கூட்டினைப் போலிந்த
கூட்டுறவின் உயர் தத்துவத்தை
நம்பிட மக்கள் நலம்பெறக் கூடிய
நாணய சங்கங்கள் தோன்றுதம்மா!

6. வட்டிக்கு வட்டி வசூல்செய்யும் வஞ்சகர்
வாயிற் படிதனை நாடாமல்
கிட்டும் வசதிகள் பெற்றிடலாம் மக்கள்
கேட்ட பொழுதிற் கடன் பெறலாம்!

7. பண்டங்கள் வாங்கிடத் தானியம் விற்றிடப்
பால்தயிர் பெற்றிடச் சங்கமுண்டு!
கண்டிடுவீர் இன்னும் கைத்தறி யாடைகள்
கண்ணைக் கவர்ந்திட நெய்வதுண்டு!

8. நூற்புமில் சர்க்கரை ஆலைகள் பற்பல
நுண்கலைச் செல்வங்கள் தாம்படைக்கும்
ஆற்றலுடையவர் சங்கங்கள் உண்டிவை
யாரு மறிகுவர் கேட்பாயம்மா!

9. அம்பர்ச் சர்க்காவுக்கும் சங்கமுண்டு—இன்னும்
அம்மாமி அப்பளாம் செய்வதுண்டு!
செங்கரும்புவெண் கருப்பட்டிச் சங்கங்கள்
தெருவினிற் காணலாம் சேயிழையே!

10. செங்கல் அறுத்திடும்! செக்குகள் ஓட்டிடும்
சிங்கார வீடுகள் வார்த்தெடுக்கும்!
மங்கையே! இன்னும் மருத்துவ சங்கங்கள்
வண்ணமலர் அச்சுக் கூடமுண்டு!

11. கூட்டுறவு தனை நாட்டிற் பரப்பிடக்
கொள்கை கொண்ட உயர் மாந்தரையே
ஏட்டில் எழுத்தினில் இன்னிசை பாடிநாம்
ஏத்தி வணங்குவோம் தோழியரே!

கூட்டுறவு தேதி
1—9—61

# "கிராம சுயராஜ்யம்"

"கிராம சுயராஜ்யம் என்றால் அது ஒரு பரிபூரணக் குடியரசு தான் என்பது என் கருத்து. ஜீவாதாரமான தேவைகளுக்கு அது அக்கம் பக்கத்து பிரதேசங்களை நாடியிருக்காது; ஆயினும் வெளியூர்களை நாடிப்பெற வேண்டிய தேவைகள் ஏதேனும் இருப்பின் அந்த உறவு பரஸ்பரத் தன்மை வாய்ந்ததாக இருக்கும். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும், ஆடைகளுக்கு வேண்டிய பருத்தியையும் உள்ளூரிலேயே உற்பத்தி செய்து கொள்ளும். ஆடு மாடுகளுக்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்கள் தனியாக இருக்கும். பெரியவர்கள் உல்லாசமாய் பொழுது போக்க இடமிருக்கும். விளையாட்டு மைதானங்களும் இருக்கும். இதற்கெல்லாம் வேண்டியது தவிர மீதமிருக்கும் நிலங்களில் உபயோகமுள்ள பணம் தரும் பயிர்களைப் (கஞ்சா, புகையிலை, அபினி முதலியவை தவிர) பயிரிடலாம். கிராமத்திற்கு ஒரு நாடக மேடை, பள்ளிக்கூடம், பிரசங்க மண்டபம் எல்லாம் இருக்கும். கிணறுகள், குளங்கள் இவைகளை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்வதன் மூலம் சுத்தமான தண்ணீருக்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆதாரக் கல்வித் திட்டத்தின் கடைசி வகுப்பு வரை எல்லோரும் படித்தாக வேண்டுமென்ற கட்டாயக் கல்வி முறை அமுலிலிருக்கும். கூடுமான வரையில் எல்லாக் காரியங்களும் கூட்டுறவு, பரஸ்பர ஒத்துழைப்பு முறையிலேயே நடந்தேறும். தற்காலத்தில் நிலவுகின்ற படிப்படியான பலரகத் தீண்டாமை முறையை வளர்க்கும் ஜாதி பாகுபாடு இருக்காது.

சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை என்ற ஆயுதங்களுடன் கூடிய அகிம்சையே கிராம சமூகத்தில் அதிகாரக் கருவியாக இருக்கும். கிராமக் காவல் வேலை கட்டாய முறையாக இருக்கும். ஒரு ஜாப்தா வைத்துக் கொண்டு ஒவ்வொருவரும் சிறிது கிராம காவல் வேலைகளை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு திட்டம் வகுக்கலாம்.

கிராம ராஜ்யம் பஞ்சாயத்து மூலமாக நடைபெறும். ஒரு குறைந்தபட்ச யோக்யதாம்சங்களைக் கொண்ட வயது வந்த ஆண்களும், பெண்களும் வருடமொருமுறை கூடி, பஞ்சாயத்திற்கு ஐந்து பேர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இந்த பஞ்சாயத்து கிராம நிர்வாகத்தை நடத்தும். கிராம நிர்வாகத்துக்குத் தேவையான எல்லா அதிகாரங்களும் இந்தப் பஞ்சாயத்தினிடம் இருக்கும். சாதாரணமாக நாம் இப்பொழுது பார்க்கிற தண்டனை முறைகள் எதுவும் இருக்காதாகையால், சட்டம் இயற்றல், நீதி பரிபாலனம், நிர்வாகம் இம்மூன்றும் பஞ்சாயத்தினிடம் இருக்கும்.

இது தனிமனித சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்ட பூரணமான ஜனநாயகம். தனி மனிதனே தன்னை ஆளும் சர்க்காரை நிர்ணயித்துக் கொள்கிறான். அவனையும், அவனது அரசையும் ஆள்வது அகிம்சா தர்மமல்லவா? எனவே அவனும், அவனது கிராமமும் ஒன்றுபட்டால் உலகத்தையே எதிர்த்து நிற்க முடியும். ஏனென்றால் தன்னுடைய மரியாதைக்காகவும், தன்னுடைய கிராமத்தின் மரியாதைக்காகவும் தன் உயிரையும் தியாகம் செய்ய வேண்டும் என்பதே ஒவ்வொரு கிராமவாசியும் மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கைத் தத்துவம்."

—மகாத்மா காந்தி



வட்டார வளர்ச்சி அதிகாரியும், விஸ்தரிப்பு அதிகாரிகளும்.



குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் பகுதி களப்பாளங்குளத்தில் அமைச்சர் கனம் V. ராமையா அவர்கள்



சென்னை மாகாண ஆளு திரு. மேதி அவர்கள்.



திருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருடன் அலுவலக ஊழியர்கள்.

# கலிங்கப்பட்டி பஞ்சாயத்து.

**திரு. S. சங்கரப்ப நாயுடு**

**தலைவர்.**

எங்கள் பஞ்சாயத்து கலிங்கப்பட்டி, முத்துரெட்டியபட்டி, மகாதேவர்பட்டி, கீழ மரத்தோணி, மேல மரத்தோணி, பிள்ளையார் குளம், வீரணபுரம், சின்னையாபுரம் ஆவரம்பட்டி, ராமராசபுரம் ஆகிய பத்து கிராமங்களைக் கொண்டது. எங்கள் பஞ்சாயத்தின் ஜனத்தொகை 4536. விஸ்தீரணம் 10·5 சதுர மைல்கள். எங்கள் பஞ்சாயத்து அலுவலகம் கலிங்கப்பட்டி கிராமத்தில் உள்ளது. அது கோவில்பட்டி பருவக்குடி சாலையில் கோவில்பட்டியிலிருந்து 20 மைல் தூரத்தில் உள்ளது. சுமார் 6785 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களில் 5835 ஏக்கரில் சர்குபடி கொண்டு வந்துவிட்டோம். எங்கள் கிராமத்தில் சுமார் 4000 பேர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் பொதுக்குளம் ஒன்றும் சிறுநீர் பாசன குளங்கள் மூன்றும் உள்ளன. இவற்றால் சுமார் 887 ஏக்கர் பாசனத்தில் வந்துள்ளது. சுமார் 1190 ஏக்கர் நிலங்கள் கிணற்றுப் பாசனமாகும்.



### விவசாயம்

சமுதாயநலத் திட்டங்கள் எங்கள் பஞ்சாயத்தில் செயல்பட்டதினால் எங்கள் நிலங்களில் நெல், பருத்தி விளைவு அதிகரித்திருக்கிறது. திருந்திய விவசாய முறைகள் புகுத்தப்பட்டு எங்கள் விவசாயிகள் நல்ல பலன் பெற்றுள்ளார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 63 டன் ரசாயன உரங்கள் விநியோகித்திருக்கிறோம். 6 டன் பொறுக்கு விதைகள் கொடுத்திருக்கிறோம். சர்க்கார் கடன் வசதி ரூ. 3500/- அளவில் பெற்று எங்கள் பஞ்சாயத்து மூலம் கம்போஸ்ட் உற்பத்தி ஆரம்பிக்கும்தருவாயில்இருக்கிறது எங்கள் விவசாயிகள் முற்போக்கு கருத்துடன் பயிற் பூச்சி தடுப்பு முறைகளை செயல் முறையில் கொண்டு வந்துள்ளனர். கடந்த இரு ஆண்டுகளில் 14 விவசாய நேரிடை விளக்கங்களை கொடுத்திருக்கிறோம். இது தவிர ஆற்றுக் குழாய் பாசனத்திட்டம் ஒன்றும் நிறுவ ஆவன செய்திருக்கிறோம். கடந்த இருஆண்டுகளில் 5 புதுக் கிணறுகள் வெட்டியும் 7 கிணறுகளை ஆழப்படுத்தியும், 50 பம்பு செட்டுகளும் அமைத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறோம். இவ்வகையில் ரூ. 7000/- சர்க்கார் கடன் பெற்றிருக்கிறோம்.

### கால் நடை

கால் நடை பராமரிப்பிலும் எங்கள் பஞ்சாயத்து சற்றும் பின் வாங்கியதல்ல. சுமார் 4520 எண்ணிக்கையுள்ள கால் நடைகளுக்கு நல்ல சீரானமுறையில் வைத்திய உதவி அளித்திருப்பதுடன் உயர்ந்த ஜாதி கால் நடை கோழிகள் முதலியன வழங்கி தரத்தை உயர்த்தி இருக்கிறோம். சுமார் ரூ. 775 சர்க்கார் உதவி பெற்று ஒரு முர்ரா எருமைக்கிடாவும்,

20 சாதி சேவல்களும், 7 இராமநாதபுரம் செம்மறிக் கிடாக்களும் பெற்றிருக்கிறோம்.

### சுகாதாரம்

கிராமமக்களின் சுகாதாரத்திற்கு எங்கள் பஞ்சாயத்து முக்கியத்துவம் அளித்துள்ளது. பஞ்சாயத்து ஒன்றிப்பு ஏற்பட்ட பின் எங்களுக்கு சர்க்காரிடமிருந்து சுமார் ரூ. 1500/- அளவில் மட்டுமே கிட்டினது என்றாலும், எங்கள் பஞ்சாயத்தின் மூலம் 15 கிராம கக்கூஸ்களை அமைத்தும் 500 கெஜ நீள புது சாக்கடைகள் அமைத்தும் 22 நீர் உறிஞ்சுகுழிகள் அமைத்தும் 2 குடி நீர் கிணறுகள் செப்பனிட்டும் சுகாதார வசதிகளைப் பெருக்கி இருக்கிறோம். சுகாதாரம் என்பது நாங்கள் மேற்கொண்டிருக்கும் முக்கியமான கடமையாகும்.

### கல்வி

எங்கள் கிராமத்தில் 6 ஆரம்பப் பள்ளிகளும் ஒரு உயர்தர ஆதாரக் கல்விப் பள்ளியும் இரண்டு சமூகக் கல்வி நிலையங்களும் உள்ளன. 410 ஆண்களும், 246 பெண் பிள்ளைகளும் படித்து வருகிறார்கள். ஒரு மாதர் நல சங்கமும் அமைத்திருக்கிறோம். முதியோர் கல்வி நிலையங்கள் இரண்டும், ஒரு வாசகசாலையும் உள்ளன. ரேடியோ நிலையமும் கட்டியிருக்கிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 38 முதியோர்களுக்கு கல்வி புகட்டியிருக்கிறோம். சர்க்காரிலிருந்து ரூ. 4500/- அளவில் பண வசதியுடன் ஆரம்பித்து பிள்ளையார் குளம் கிராமத்தில் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

### போக்கு வரத்து

பஞ்சாயத்தின் முன்னேற்றம் கிராமத்தில் ரஸ்தா வசதிகளைப் பொறுத்திருக்கிறது. எனவே 7 மைல் தூரம் சாலைகளை செப்பனிட்டும் 7 பர்லாங் தூரம் புது ரஸ்தாக்கள் அமைத்தும் 1 பாலம் அமைத்தும் அபிவிருத்தி செய்துள்ளோம்.

### கூட்டுறவு இயக்கம்

எங்கள் பஞ்சாயத்தில் ஏற்கனவே ஒரு கூட்டுறவு பண்டகசாலையும், இரண்டு கிராம நாணயக் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. பஞ்சாயத்து யூனியன் செயல்பட்ட பிறகு, கடந்த ஓர் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்திற்கே ஓர் மாபெரும் முன்னேற்றம் எங்கள் பஞ்சாயத்தில் ஏற்பட்டிருக்கிறது. சுமார் ரூ. 2000/- அளவு மட்டுமே பங்குத் தொகை கொண்ட எங்கள் பண்டகசாலையில் கடந்த சில ஆண்டுகளாக ரூ. 4000/- வரை ஆண்டுதோறும் லாபம் கிடைத்து வந்திருக்கிறது. தற்போது இறக்குமதி சரக்கு வியாபாரத்தை அதிகரித்தும், கிராம மக்களின் அன்றாட தேவைகளை நுட்பமாக கவனித்து சரக்கு கொள்முதல் செய்ததினால் லாபம் நாளுக்கு நாள் அதிகரித்து தற்சமயம்நடப்பு ஆண்டில் ரூ.9000 அளவில் லாபம் கண்டிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களின் நன் முயற்சியால் நடப்பு ஆண்டில் ரூ. 19000/- சர்க்கார் கடன் பெற்று பண்டகசாலைக்கு புதுக் கட்டிடம் நடந்துகொண்டிருக்கிறது. இஃதன்றியில் ரூ. 5000 கடனாகவும் ரூ. 5000 மானியமாகவும் ஆக ரூ. 10000 சர்க்கார் உதவியுடன் எங்கள் கிராம நாணயக் கூட்டுறவு சங்கத்திற்கு புது கிட்டங்கி கட்ட ஆரம்பித்திருக்கிறோம். தவிர புதிதாக ஒருபால் பண்ணையும் ஒரு கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கமும் அமைத்திருக்கிறோம். விவசாய மக்களுக்கு உபரித் தொழில் வாய்ப்பு கொடுக்கும் வகையில் ஒரு கூட்டுறவு செங்கல் உற்பத்தி சங்கமும் ஆரம்ப ஏற்பாடுகள் முடிந்து பதிவாகும் தறுவாயில் உள்ளது. நடப்பு ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கத்தை மேலும் விஸ்தரித்து வீட்டுக்கு ஒரு நபரை கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதே எங்கள் குறிக்கோள். எங்கள் பண்டகசாலையில் காப்பி அரைவை இயந்திரமும் எண்ணெய் பிழியும் இயந்திரமும் ரூ. 20000 அளவில் நிறுவ முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறோம்.

### பஞ்சாயத்து

எங்கள் பஞ்சாயத்துத் தலைக்கிராமமாகிய கலிங்கப்பட்டியில் 4 வார்டுகள் உள்ளன. கடந்த இரு ஆண்டில் மட்டும் ரூ 12000 வரை வருமானம் வந்திருக்கிறது. 29மின்சார தெரு விளக்குகளும் 32 இதர தெரு விளக்குகளும் அமைத்துள்ளோம். ரூ 8635 வரைக்கும் செலவு செய்து பொதுக் கட்டிட மராமத்து வேலைகளை பஞ்சாயத்து மேற்கொண்டு செய்திருக்கிறது. இதற்கு முந்திய ஆண்டுகளில் ரூ 13421 அளவில் அரசாங்க மான்யம் பெற்று பல பொது கட்டிட வேலை செய்து முடித்தோம்.

எங்கள் பஞ்சாயத்து முன்னேற மேலும் பல திட்டங்கள் தீட்டியுள்ளோம். அவைகளை சாதனை செய்த பின்பே அவற்றை தெரிவித்துக் கொள்வது அழகும் பண்பும் ஆகுமென்று கருதுகிறோம்.

**வளம் பெற நம் நாடு!**

**மலர்க பஞ்சாயத்து ஆட்சி!!**

**ஓங்குக கூட்டுறவு!!!**


## பாத்திமா ரைஸ் மில்

இளையரசனேந்தல்.

குறித்த காலத்தில் நேர்த்தியான முறையில் உணவுக்கு சுவையான அரிசி தயாரித்து கொடுக்கும் எங்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**R. கெங்கா நாயக்கர்**

உரிமையாளர்:

பாத்திமா ரைஸ் மில்,

இளையரசனேந்தல்.



# வடக்கு குருவிகுளம் பஞ்சாயத்து.

**திரு. V. வேலப்ப நாயக்கர்,**
**தலைவர்.**

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை"

என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கிணங்க, ஆற்றல் வாய்ந்த உறுப்பினர்களையும், பொதுமக்களையும் கொண்ட எங்கள் பஞ்சாயத்து எல்லா வகையிலும் ஏற்றமுடன் விளங்குகிறது.

வடக்கு குருவிகுளம் கிராமத்தைச் சேர்ந்தது கணபதிபட்டி என்ற குக்கிராமம ஆகும். வடக்குக் குருவிகுளம கிராமத்தின் பகுதி முழுவதற்குமாக எங்கள் பஞ்சாயத்து அமைக்கப்பட்டு கிராம நலம் கருதி செயலாற்றிவருகிறது. பஞ்சாயத்து மக்கள் தொகை சுமார் 4800. பரப்பளவு சுமார் 5 8 சதுர மைல்கள். வருமானம சுமார் 5000–00. உறுப்பினர்கள் 15 கொண்டது தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போடப்பட்டுள்ளது.

"பார் முழுவதும் மக்கள் படித்தவர்கள் ஆக வேண்டும" என்னும் நம் பாரதப் பிரதமரின் ஆசைக்கிணங்க, இரு ஆரம்பப் பள்ளிகளும், ஓர் உயர் ஆரம்பப் பள்ளியும், ஓர் உயர்நிலைப் பள்ளியும இங்கு நடைபெற்று வருகிறது. பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்ல வேண்டிய ஏற்பாடுகளை பஞ்சாயத்து 'சமூகக் கல்விக் குழு' கவனித்து வருகிறது.

"கூட்டுயர்வே நாட்டுயர்வு" என்ற பன்மொழிக்கிணங்க கூட்டுறவு இயக்க வளர்ச்சியிலும் இப் பஞ்சாயத்து முன்னணியில் உள்ளது. வளர்ந்துவரும் சமுதாயத்தில் மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. தேவைகளை நிறைவேற்றுதல், எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிடல், ஆகிய செயல்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடத்தத் தேவைப்படுகிறது. இவ்வாறு தங்கள் தேவைகளை நிறைவேற்ற உரிய காலத்தில் பணவசதி தேவைப்படுகிறது. கிராம மக்களுக்கு குறைந்த வட்டியில் கடன்வசதியளித்து தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கம் நன்முறையில் செயலாற்றி வருகிறது.

மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்ற ஒரு கூட்டுறவு பண்டகசாலையும், ஆடையில் தன்னிறைவு காண ஒரு கூட்டுறவு நெசவாளர் சங்கமும், சத்துள்ள உணவு அளிக்க ஒரு கூட்டுறவு கைக் குத்தல் அரிசி சங்கமும், சமையல் செய்ய நல்ல பாண்டங்கள் அளிக்க ஒரு கூட்டுறவு மட்பாண்ட சங்கமும், விவசாயக் கருவிகளை அளிக்க ஒரு 'விஸ்வகர்ம கூட்டுறவு சங்கமும், பால் வழங்க ஒரு கூட்டுறவு பால் பண்ணையும், வீட்டு வசதி அளிக்க ஒரு விடுசட்டும் கூட்டுறவு சங்கமும் ஆக மக்களின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்ய கூட்டுறவு முறையில் பல சங்கங்கள் குருவிகுளத்தில் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

கண்ணும், காதும், மூக்கும் மனிதனுக்கு அவசியமானது போல, பள்ளியும், பஞ்சாயத்தும், கூட்டுறவும் ஒவ்வொரு கிராமத்திலும் இயங்க வேண்டும் என்னும் நமது பாரதப் பிரதமர்—ஆசியாவின் ஜோதி ஒப்புவுயர்வற்ற தலைவர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களின் கனவு இங்கு நனவாகி வருகிறது என்பதைப் பெருமிதத்துடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"கிராம ராஜ்யமே தன் லட்சியம்" என்று எண்ணி அதற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த நமது தேசப்பிதா-மகாத்மாகாந்திஜி அவர்கள் "கிராமங்களே நாட்டின் செல்வம்" "கிராமங்களே இந் நாட்டின் முதுகெலும்பு என்று கூறியுள்ளார்." நம் நாட்டின் வாழ்வு, கிராமங்களின் வாழ்விலேயே அமைந்துள்ளது" என்றும் கூறியுள்ளார்.

"கிராமங்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும். பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படவேண்டும். கிராமங்கள் சுத்தமாக வைக்கப்பட்டு "சுத்தமே சோறு போடும்" என்ற கருத்துக்களை மக்கள் உணரவேண்டும். அபினியும், புகையிலையும், கஞ்சாவும் அற்ற சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு நல்ல குடிநீரும், பொழுதுபோக்கு வசதிகளுக்கு சமுதாய மண்டபமும், அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையமும் ஏற்பட வேண்டுமென்று என்று கனவு கண்டார்"

அக் கனவு நனவாகி வருகிறது கிராம சுத்தத்திற்கு முதல் கவனம் செலுத்தப்படுகிறது. மலஜலம் கழிக்க 8 கக்கூஸ்கள் கட்டப்பட்டு, அவைகளில் மலஜலம் கழிக்கும்படி எடுத்துக் கூறப்படுகிறது. அபினியும், கஞ்சாவும், புகையிலையும் இக் கிராம எல்லையில் பயிராகவில்லை. வட்டார வளர்ச்சித் திட்ட உதவி ரூபாய் 2000-00 பெற்று. மக்கள் தொகை ரூபாய் 4000-00 கொண்டு ஆக ரூபாய் 6000–00 செலவில் சமுதாய மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் வழங்கும் முயற்சியில் இப்பஞ்சாயத்து வெற்றிகண்டு ரூபாய் 25000 செலவில் ஒரு மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டி வருகிறோம். இன்னும் இரு மாதங்களில் இது முடிவுறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பஞ்சாயத்திலிருந்து தின, வார, மாத ஏடுகளும் வாங்கப்பட்டு, பொது மக்களின் உபயோகத்திற்கு அளிக்கப்படுகிறது.

மேலும் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு சார்பிலும் ஒரு கிளை நூல் நிலையம் இங்கு நல்ல முறையில் இயங்குவதால் பொதுமக்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாகிறது.

உடற்பிணி போக்க, வராமலும் தடுக்க அரசாங்கத்திலிருந்து ஒரு 'ஆரம்ப சுகாதார நிலையம்' உள்ளது. எங்களூர் மக்கள் ரூபாய் 10,000·00 செலவில் ஒரு கட்டிடம் கட்டி இந்நிலையத்திற்கு அளித்துள்ளனர்.

'மாந்தர் எங்கும் கலகமின்றி
மருவி வாழக் கோரினால்

காந்தி மார்க்கம் ஒன்றையன்றி
கதி நமக்கு வேறில்லை' — என்ற

கருத்துக்களை உள்ளத்திலே கொண்ட எங்களூர் வாசிகள் இது போன்று ஊர்ப் பொதுக் காரியங்கள் அனைத்துக்கும் உதவி புரிந்து வருகின்றனர்.

போக்குவரத்து சௌகரியங்களையும் பஞ்சாயத்து நல்ல முறையில் கவனித்து வருகிறது. ஊரில் முக்கியசாலைகளுக்கு கருங்கல் ஜல்லி பரப்பப்பட்டுள்ளது. கணபதிபட்டிக்கு ரூபாய் 10,000-00 செலவில் ஒரு ரோடு போடப்பட்டு வருகிறது. ஹரிஜனங்களின் குடியிருப்புக் கருகாமையால், கண்மாய் வெள்ளத்தால் வீடுகள் பாதிக்காமல் இருக்க ஒரு தடுப்புச்சுவர் ரூபாய் 6500-00 செலவில் ஹரிஜன நலநிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளது.

"இளைஞர்களே இந்நாட்டின் செல்வம்" ஆகும் 'என் கடன் பணி செய்து கிடைப்பதே" என்ற கொள்கையினையுடைய இளைஞர்களைக் கொண்ட இளைஞர் விவசாய சங்கம் கணபதிபட்டியில் பணியாற்றி வருகிறது. பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சமூகக்கல்வி நிலையம் ஒன்றும் நடந்து வருகிறது. இதன் மூலம் மக்கள் தங்கள் அறிவை விருத்தி செய்துகொள்ள ஏதுவாகிறது.

பசிப்பிணி போக்க திருந்திய விவசாய முறைகளைக் கொண்டு விளைச்சலை அதிகப்படுத்துவதில் நாங்கள் ஈடுபட்டுவருகிறோம்.

இக்கிராம மொத்த விஸ்திரணம் 3721 ஏ. 12 செ. இதில் நஞ்சை 1 ஏ. 10 செ. புஞ்சை 3565 ஏ. 24 செ. புறம்போக்கு 163 ஏ. 24 செ. பாசன குளங்கள் இல்லை. கிணற்று நீர் இறைத்தே சாகுபடி செய்யப்படுகிறது. பருத்தியும், கம்பும் அதிகம் பயிரிடப்படுகிறது. கம்போஸ்ட் உர உற்பத்தி மூலம் உரத்தேவையை பூர்த்தி செய்ய முயற்சி செய்கிறோம். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியின் கருத்துக்களைக் கொண்டு, உழவுத் தொழிலை நல்ல முறையில் விருத்தி செய்து வருகிறோம.

உயர் ஜாதி கோழிகள் வளர்க்கப்படுகிறது. கால் நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க தடுப்பு ஊசிகள் அவ்வப்போது போடப்பட்டு வருகிறது. 5 பொலி ஆடுகளும் 20 உயர் ஜாதிக்கோழிகளும், வழங்கப்பட்டுள்ளது.

திரு ரா. ராமசாமி நாயக்கரின் 5 எக்கர் நிலத்தில் ஒரு மாதிரிப்பண்ணை நடைபெறுகிறது. திருந்திய சாகுபடி முறைகளை இங்கே கையாண்டு எல்லா விவசாயிகளுக்கும் அதன் அவசியம்பற்றி எடுத்துச் சொல்லப்படுகிறது.

காந்திஜி கண்ட ராமராஜ்யமாகிய 'கிராம ராஜ்யத்திற்கு அஸ்திவாரமான "கதரும் கிராமக்கைத் தொழில்கள்" இங்கே நல்ல முறையில் நடக்கிறது. கிராம கைத்தொழில்கள் கூட்டுறவு முறையில் இயங்கி வருகிறது.

எங்கள் கூட்டுறவு பண்டகசாலைக்கு அண்மையில் அரசாங்க மான்யம் 3 ஆண்டுகளுக்கு சிப்பந்திச்செலவுக்கென முறையே ரூ. 900. ரூ. 600 ரூ 300 என்ற விகிதத்தில் கிடைத்துள்ளன இந்த பண்டகசாலையில் வெளி நாட்டிலிருந்து முக்கியப் பொருள்கள் இறக்குமதி செய்து அங்கத்தினர்களுக்கு சகாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது. சுமார் 300 இராட்டைகளுக்கு மேல் இங்கு வழங்கப்பட்டுள்ளது ஒரு கதர் டெப்போவும் உள்ளது. இதன் மூலம் சிட்டங்கள் வாங்குதல், பஞ்சு அளித்தல், துணி கொடுத்தல் ஆகிய காரியங்கள் செவ்வனே நடைபெற்று வருகிறது.

கட்டி நின்று காந்தி செய்யும்
கருணை வாழ்வை ஒட்டியே
கிட்டிவிட்டது சொந்த ஆட்சி"
— 2—10—60-ல்

என்று பெருமிதத்துடன், என் உள்ளத்தில் மகிழ்ச்சியுடன், "பெற்றுவிட்டோம் பஞ்சாயத்து ராஜ்யம்" என்று கூறுகிறேன்.

ஆக்கப் பாதையிலே ஏறுநடை போடும் எங்கள் பஞ்சாயத்து 2—10—60 முதல் குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனில் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

வாழ்க பாரதம்! வளர்க பஞ்சாயத்துஆட்சி!

---

## பரம்பொருள்.

"நீரிலும் நிலத்திலும் காற்றிலும் தீயிலும ஆகாயத்திலும் எங்கும் நிறைந்த பொருள் ஒன்று இருக்க வேண்டும். அப்படி நிறைந்த பரம்பொருள் இருப்பதால் தான் இவ்வைம் பூதங்களாகிய நீர், நிலம், வாயு, தீ, ஆகாயம் குறித்த விதிகளடங்கி இயங்குகின்றன. இப்படி விதிப்படி இயங்க வேண்டுமாயின் அப்பரம் பொருள் எங்கும் இவ்வைம் பூதங்களிருக்குமிடமெல்லாம் வியாபித்திருக்க வேண்டும். ஆக எங்கும் வியாபித்த பொருள் இருப்பதென்றால் அதனை விட இரண்டாவது பொருளிருக்க முடியாது. ஆனதால் நமது தோற்றத்தில் காணும் மலைகள், மடுக்கள், சிறிய பெரிய ஜீவராசிகள் இவையெல்லாம் எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குள்ளேயே கடலிலடங்கிய பல கோடி ஜீவராசிகளைப் போல் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்
சுபகிருது ஞு ஆடி மீ.

---



# ஜமீன் தேவர்குளம் பஞ்சாயத்து.

திரு. T. N. போத்திராஜ் நாயக்கர்,
தலைவர்.

சமூகப் பொருளாதாரத் துறையில் மக்களின் கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்த்தி அதிகாரங்களை பரவலாக்கும் திட்டம் ஒரு தனிச்சிறப்பாகும். பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றன. இச் சீர்திருத்தங்கள் சிறப்புற நடக்குமானால் காந்தியடிகள் கண்ட கனவு நனவாகும் நாள் அண்மையிலேயே இருக்கிறது என்பது துணிவு. இததிட்டங்கள் நிறைவேற மக்களின் ஒத்துழைப்பு அவசியம். எனவே கிராமப் பஞ்சாயத்தும் கூட்டுறவும்தான் இதை செயலாற்றமுடியும். கிராமத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் கிராம விவசாய மேம்பாட்டை ஒட்டியேயுள்ளது. கிராம விவசாயமோ மக்களின் பல்வித இடையூர்களிலிருந்து காக்கப்படவேண்டியவை. சீர்திருந்திய விவசாயம் செய்ய முதற்கண் பணவசதி, விவசாயக் கல்வியறிவு முதலியன தேவை. ஆகவே கிராமத்தின் சுபிட்சமானது அக்கிராமத்தின் பஞ்சாயத்து, பள்ளி, கூட்டுறவு முன்னேற்றங்களைப் பொறுத்ததேயாகும். இந்தக் கண்ணோட்டத்துடன் தான் எங்கள் கிராம அபிவிருத்தி வேலைகளைச் செய்து வருகிறோம். பின்வரும் புள்ளி விபரங்கள் இதை ஓரளவு தெளிவுப்படுத்தும் என்று நம்புகிறேன்.

எங்கள் கிராமம் வானரமுட்டி-இளையரசனேந்தல் ரஸ்தாவில் இளையரசனேந்தலிருந்து சுமார் 4 மைல் தூரத்தில் உள்ளது. சுமார் 1600 ஜனத்தொகையும் 23·42 ச மைல் விஸ்தீரணமும் உள்ளது. சுமார் 2668 ஏக்கர் விவசாய நிலங்களில் 2108 ஏக்கர் வரையில் சாகுபடிக்கு கொண்டு வந்துவிட்டோம். அதில் 113 ஏக்கரில் நன்செய் சாகுபடி நடக்கிறது 3 கண்மாய்களும் 92 கிணறுகளையும் கொண்டுதான் சாகுபடி செய்கிறோம். பஞ்சாயத்து யூனியன் ஆட்சி ஏற்பட்டபின் விவசாயத்தில் பொறுக்குவிதைகளை உபயோகப்படுத்தியும், ரசாயன உரமிட்டு நிலத்தை சீர்செய்தும் உற்பத்தியை பெருக்கி இருக்கிறோம் 146-11 ஏக்கரில் தற்சமயம் நெல் சாகுபடி நடக்கிறது. 88 ஏக்கரில் பருப்பு வகைகள். 664 ஏக்கரில் சோளம், 53 ஏக்கரில் கம்பு, 636 ஏக்கரில் கேப்பை, 666 ஏக்கரில் பருத்தி முதலியன மகசூல் செய்கிறோம்.

எங்கள் பஞ்சாயத்தில் 1640 கால்நடைகள் உள்ளன. தரத்தை உயர்த்தும் வகைக்காக ஒரு காங்கேயம் பொலிகாளையும் சர்க்கார் சலுகை பெற்று வாங்கி இருக்கிறது.

85 சாதாரணக் கிணறுகள் வெட்டியும் 3 புதுக்கிணறுகள் புதுப்பித்தும் 4 கிணறுகளை பழுது பார்த்தும் வந்து இருக்கிறோம். சர்க்கார் கடன் உதவிபெற்று மூன்று பம்பு செட்டுகளும் அமைத்திருக்கிறோம்; 2000 அடி நீளமுள்ள சாக்கடைகள் கட்டியிருக்கிறோம்.

முதியோர் கல்வித் திட்டத்தில் 25 பேர்களுக்கு கடந்த ஆண்டில் கல்வி கற்பிக்கப்பட்டது. ஒரு ஆரம்பப்பள்ளி உள்ளது அதில் சுமார் 110 பிள்ளைகள் படிக்கின்றனர். எங்கள் கிராமத்தில் கல்வி மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருந்து வந்திருக்கிறது எங்கள் கிராமத்தில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சிறுபிள்ளைகளையும் விவசாயத்திலேயே ஈடுபடச் செய்து உற்பத்தியைப் பெருக்குவது என்ற ஒரே குறிக்

கோவில் அவர்களுடைய கல்வியை வெகுவாய் புறக்கணித்து வந்திருக்கிறார்கள். இதிலிருந்து மக்களை மீட்பது சற்று கடினமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் வெகுவாகப்பாடுபட்டதில் 1600 ஜனத்தொகை கொண்ட எங்கள் கிராமத்தில் 110 மாணவர்கள் பள்ளியில் சேர்ந்திருக்கின்றனர். இதை அதிகப்படுத்தவும் பள்ளியை உயர்தர ஆரம்பப் பள்ளியாக மாற்றவும் முயற்சி எடுத்து வருகிறோம். எங்கள் கிராமத்தில் ஒரு வாசகசாலையோ, மாதர் சங்கமோ இல்லை வாசகசாலை அமைக்க ஏற்பாடுகள் செய்துவருகிறோம்.

எங்கள் கிராமத்தில் விவசாயத்திற்குத்தான் அதிக இடம் கொடுத்திருக்கிறது. அது சம்பந்தமாக எந்தத் திட்டம்வரினும் அதை மேற்கொள்ள எங்கள் கிராம வாசிகள் தயாராக இருக்கிறார்கள். குருவிகுளம் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி அவர்களின் நன்முயற்சியால் எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு பண்டகசாலை நிறுவ ஆரம்ப ஏற்பாடுகள் பூர்த்தியாகி ஸ்ரீ முருகன் கூட்டுறவு பண்டகசாலை என்ற பெயருடன் சங்கம் சமீபத்தில் பதிவாகி உள்ளது. இதை இந்த மாதத்திற்குள் ஆரம்பித்து விடுவோம். விவசாய மக்களுக்குத் தேவையான எல்லாப் பண்டங்களும் இதில் வாங்கி விற்கப்படும். இதைத் தவிர ஒரு கூட்டுறவு நாணயச்சங்கம் தற்சமயம் நடந்து வருகிறது.

அடுத்தபடியாக குடி தண்ணீர் திட்டத்தினால் எங்கள் கிராமத்தில் ஒரு மேல் நிலைத் தண்ணீர் தொட்டியும் கட்ட ஏற்பாடுகள் ஆகி வருகின்றன. இதைத்தவிர கடந்த ஆண்டுகளில் ரூ. 8501 அரசாங்க உதவி பெற்று பல பொது மராமத்து வேலைகளைச் செய்து முடித்திருக்கிறோம். ஐந்துவார்டு கொண்ட எங்கள் பஞ்சாயத்தில் வருடவருமானம் ரூ. 971 தற்சமயம் நாங்கள் இரண்டு பாலவேலைகளையும், ஒரு கிணறு வேலையும் மற்றும் சாக்கடை கட்டுவது போன்ற மராமத்து வேலைகளையும் பஞ்சாயத்து மூலம் மேற்கொண்டு செய்திருக்கிறோம்.

"வாழ்க கிராம ராஜ்யம்"

ஸ்ரீ கன்னிவிநாயகர் துணை.

# தேவி

## கடலை எண்ணெய்

**PURE GROUND NUT OIL**

நன்றாக பில்ட்டர் செய்த எங்கள்
தேவி கடலை எண்ணெயே மேலானது.

**Sri Ganapathi Rice and Oil Mills**

Proprietor:- N. T. T. GANAPATHI CHETTIAR,

**Kovilpatti.**



குருவிகுளம் வட்டார கிராம நல பணியாளர்களும், சமூக ஊழியர்களும்.

34221



சென்னையில் நடந்த
பஞ்சாயத்துத் தலைவர்கள்
மாநாட்டில்
நேருஜி.



ஆலமநாயக்கர்பட்டி இளைஞர் விவசாய சங்கத் தலைவரும், உறுப்பினர்களும்.



திரு. ஆரோக்கியம், தலைவர் மகேந்திரவாடி.



குருவிகுளம் உயர்நிலைப்பள்ளி திறப்புவிழாவில் முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் உரையாற்றுகிருர்.



# செவல்குளம் பஞ்சாயத்து.

*திரு. T. பாப்பையா நாயக்கர்,*

தலைவர்.

"பருவத்தே பயிர் செய்" பருவ மழையையே எதிர்பார்த்து விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கிருேம். அப்பருவத்தில் பயிர் செய்தால் தான் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம் எனவே காலத்தே பயிரிடுதல் மிகவும் முக்கியமானது அடுத்தபடியாக திருந்திய முறைச் சாகுபடியைக் கையாளுதல் சாலச் சிறந்தது. நல்ல பொறுக்கு வித்துக்களைத் தேர்ந்தெடுத்தல் அவைகளுக்கு நோய்த் தடுப்பு முறைகள் அனுஷ்டித்தல், நாற்றங்கால் கவனிப்பு. வயலை நடவுக்கு ஏற்றதாக்குதல், இயற்கைத் தழையிடுதல், நாற்றுக்கள் நடுதல், வயலுக்கு உரம் வைத்தல், களையெடுத்தல் போன்ற பல முக்கிய நிலைமைகளில் விவசாயிகள் அதிகக் கவனம் செலுத்த வேண்டியதிருக்கிறது. இதற்கான சீர்திருந்திய முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துச்சொல்லவும். அவ்வப்போது தேவையான பண வசதிகளைக் கொடுத்து வரவும் ஏற்பாடு செய்ய வேண்டியது கிராமத் தலைவர்களின் மேம்பட்ட கடமையாகும் இதற்கான பயிற்சியும் எங்கள் கிராமத்திற்குச் சென்ற ஆண்டுகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நல்ல முறையில் செயல்படுத்த கிராமப் பஞ்சாயத்தும், கூட்டுறவுச் சங்கமும் முன் வர வேண்டும். கிராமவாசியின் மற்ற இன்றியமையாத தேவைகள் குடியிருப்பு வசதி, குடிதண்ணீர் வசதி, தொழில் வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி இவை நன்கு அமையவேண்டும். இவைகளில் படிப்படியாக முன்னேற்றம் காணமுடியும். மக்களாட்சி செயல் முறைக்கு வந்தே இரண்டு ஆண்டுகள் தான் ஆயினவெனினும், எங்கள் கிராமத்தில் அதிகப்படியான முன்னேற்றம் கண்டிருக்கிருேம். அவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்,

எங்கள் கிராமம் சங்கரன்கோவில்-கோவில்பட்டி நெடுஞ்சாலையிலிருந்து வடக்கே 2 மைல் தூரம், குருவிகுளத்திற்கு மேற்கே 3 மைல் தூரத்தில் உள்ளது. இது நல்ல செழிப்பான கிராமம். இதன் ஜனத்தொகை 4195. விஸ்தீரணம் 5350 ஏக்கர். இதில் நஞ்சை 236 ஏக்கர். புஞ்சை 4531 ஏக்கர். 582ஏக்கர் வரை புறம்போக்கு. இதில் சுமார் 25 ஏக்கர் தரிசு. எங்கள் கிராமத்தில் முக்கிய தொழில் விவசாயம். நூற்பு உபரித்தொழில் இக்கிராமத்தின் நீர்ப்பாசன வசதிக்கு 6 மானவாரிக் குளங்கள் தாம் உள்ளன. அதனுல் நாங்கள் கிணற்று நீர்பாசனத்தை வெகுவாக நம்பி இருக்கிருேம். சர்க்கார் பணவசதியுடன் 17 புதுக்கிணறுகள் வெட்டியும் 11 கிணறுகளை புதுப்பித்தும், மூன்று குளங்களை மராமத்து செய்தும் அரும்பாடுபட்டிருக்கிருேம். அதனுல் நல்ல பயனும் பெற்றிருக்கிருேம் தற்சமயம் 357 ஏக்கரில் நெல் சாகுபடியும், 152 ஏக்கரில் சோளமும், 519 ஏக்கரில் கம்பும், 226 ஏக்கரில் கேப்பை 292 ஏக்கரில் இதர தானிய வகைகள் 506 ஏக்கரில் பருத்தி 52 ஏக்கரில் பயறுகள் முதலியன மகசூல் செய்து வருகிருேம். இவ்வாறு நல்ல முறையில் பயனடைந்ததற்கு காரணம்யாதெனில் நாங்கள் கடந்த இரண்டாண்டில் சர்க்கார் பண வசதியுடன் 8 டன் ரசாயன உரம் உபயோகித்தும், நவீன விவசாய கருவிகள் உபயோகித்தும், சுமார் 2250 பவுண்டு வரை பூச்சி மருந்து உபயோகித்தும் வந்திருக்கிருேம். 105 கம்போஸ்டு குழிகள் இட்டோம். 26 புதிய விவசாயக் கருவிகள் வாங்கி இருக்கிருேம். செயல்முறை விவசாய விளக்கம் 8 தடவை செய்து காட்டி இருக்கிருேம். எனவே எங்கள் கிராமம் விவசாயத்தில் முன் நிற்பதில் ஆச்சரியம்

ஏதும் இல்லையல்லவா? இதுதவிர 120 பழக் கன்றுகள் நட்டு நன்கு பராமரித்து வருகிறோம். இன்னும் சில ஆண்டுகளில் அவை பயன் தரும்.

முதியோர் கல்வித்திட்டத்தின் கீழ் எங்கள் பஞ்சாயத்தில் கடந்த இரு ஆண்டுகளில் 47 பேர் கல்வி பயின்று இருக்கின்றனர். ஒரு சமூகக் கல்வி நிலையம் உள்ளது. ஒரு இளைஞர் விவசாய சங்கத்தையும் மாதர் சங்கத்தையும் அமைத்திருக்கிறோம்.

கதர் உற்பத்தியில் எங்கள் கிராமம் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. தொழிற் கருவிகள் ரூ 203 அளவில் சர்க்கார் மான்ய பண வசதியுடன் வாங்கி வினியோகித்திருக்கிறோம்.

கடந்த ஆண்டில் கிராமங்களில் மனிதர் ஆக்க சக்தியை முற்றிலும் பயன்படுத்தி பொது வேலை செய்வதென்ற அரசாங்கத் திட்டத்தில் குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் மட்டும் தான் நமது மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது யாவரும் அறிந்ததே அத்திட்டத்தின் கீழ் எங்கள் கிராமத்திலும் ரூ 3200 அளவிற்கு புது ரோடுகள் நிறுவுவது போன்ற பொது வேலைகளை மேற்கொண்டு குறித்த காலத்திற்குள்ளாக செய்துமுடித்தோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, எங்கள் கிராம கூட்டுறவு வளர்ச்சியைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன் எங்கள் கிராமத்தில் பலநோக்கு கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் செயல்படாமையால் க்ஷீண திசை அடைந்திருந்தது. கடந்த ஆண்டு வரை செயலிழந்து மூடும் தறுவாயில் இருந்தது. பின் வட்டார கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் நன் முயற்சியால் மறுபடியும் சீரமைத்து, மத்திய பாங்கரையும், கூட்டுறவு இலாக்காவினரையும் சம்மதிக்கச் செய்து மறுபடியும் ரூ 30000 வரை நடப்பு ஆண்டில் கடன் வசதி வாங்கி கொடுத்திருக்கிறோம். இனிமேல் நன்முறையில் சங்கம் செயல்படும்.

இதைத்தவிர ஒரு கூட்டுறவு பண்டகசாலையும் நிறுவ ஆரம்ப ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

சுகாதார வசதிகளில் எங்கள் பஞ்சாயத்து அதிக கவனம் கொண்டுள்ளது. கடந்த இரு ஆண்டில் 13 கிராம கக்கூஸ்களும் 15 உறிஞ்சும் குழிகளும் அமைத்தும் 2 குடிதண்ணீர் கிணறு வேலை மேற்கொண்டும் இருக்கிறோம். அவற்றில் கோபாலகிருஷ்ணபுரம் கிராமத்து கிணற்று வேலை இன்னும் நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டில் ரூபாய் 2848 அரசாங்க உதவி பெற்ற பிரசவ விடுதியும் கட்டி முடித்தோம். இதைத் தவிர கடந்த ஆண்டுகளில் ரூ அரசாங்க உதவி பெற்று பொதுமக்கள் உதவியுடன் பல பொது மராமத்து வேலைகளை செய்து முடித்திருக்கிறோம்.

எங்கள் பஞ்சாயத்து பகுதியில் ஒரு சீனியர் ஆதாரப் பள்ளியும். நான்கு ஜூனியர் ஆதாரப் பள்ளியும் உள்ளன. எங்கள் கிராமத்திற்கு இதுவரை மின்சார வசதி ஏற்படாதது ஒரு பெருங் குறைதான். அதை இவ்வாண்டு நிவர்த்திக்க தீர்மானித்திருக்கிறோம்.

"வணக்கம்"


குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன்

**ஆண்டு விழாவிற்கு**

**எனது நல் வாழ்த்துக்கள்,**

V. அர்ஜுன ராஜா,

நூல் வியாபாரம், கோவில்பட்டி.




# திருவேங்கடம் பஞ்சாயத்து.

திரு. வி. சுப்பா நாயக்கர்,

தலைவர்.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து."

நோயில்லாதிருத்தல். செல்வம், விளை பொருள் வளம். இன்ப வாழ்வு, நல்லகாவல் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு என்று வள்ளுவர் கூறியுள்ளார் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு–

நம்முடைய பழம் பெரும் சமுதாயத்தின் அடிப்படை ஆணிவேராக கிராம அமைப்பு முறைதான், இருந்து வந்திருக்கின்றது. இந்த கிராம அமைப்பு முறை ஆங்கிலேயர் ஆட்சியில் அடியோடு அழிந்து விட்டது. ஏற்ற மிக்க விவசாயிகள், கேட்பாரற்று, பிறர் கையை எதிர்பார்த்து நடப்பவர்களாக மாறுகிற அவல நிலை ஏற்பட்டது.

சுதந்திரம் அடைந்ததும் நாம் செய்ய வேண்டிய முக்கிய வேலை. பழங்காலத்தில் நிலவி வந்த கிராம பஞ்சாயத்து முறைக்கு மறுபடியும் உயிரூட்டி, அவைகளை ஜீவ சக்திகளாக மாற்றியமைத்து. நாட்டிலே உலவ விடுவதுதான். கிராமம்தான் சுதந்திரத்தின் அடிப்படையாக அமைய வேண்டும். கல்வி உற்பத்தி, சுகாதாரம், காவல்வேலை, உணவு உற்பத்தி ஆகியவை கிராமப் பஞ்சாயத்தின் கைகளில் ஒப்படைக்கப்படுதலே நிர்வாகத்திற்கு அழகு என்று லோகமான்ய திலகர் 100 ஆண்டு காலத்திற்குள் சொல்லியுள்ளார். வள்ளுவன் நாட்டிற்கு தேவை என்று கூறியவைகள் அனைத்தும் பஞ்சாயத்துக்குத் தேவை என்று திலகர் கூறுகிறார். 2000 ஆண்டு காலமாக நாட்டின் நிர்வாகத்திற்கு அணி வகுத்த நம் பெரியோர்கள் கண்ட கனவு 2-10-60ல் நனவாக ஆரம்பித்து, கிராமங்கள் சுதந்திரமாக இயங்கவல்ல பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட்டு பஞ்சாயத்துக்கள், உணவு உற்பத்தி, சுகாதாரம், கல்வி, கிராமக்காவல் ஆகிய பெரும் பொறுப்புகளை ஏற்றுப் பணி செய்து வருகிறது.

'முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்'

என்றபடி திருவேங்கடம் பஞ்சாயத்தும், சமுதாய முன்னேற்றத்திற்கு திட்டமிட்டு, காந்திஜி கண்ட கிராம ராஜ்யத்தை உருவாக்கும் ஆக்கப்பாதையிலே சென்று கொண்டிருக்கிறது.

திருவேங்கடம் பாறைப்பட்டி, ஆவுடையாபுரம். புதுப்பட்டி, செல்லபட்டி என்ற குக் கிராமங்களை உள்ளடக்கிய திருவேங்கடம் கிராம முழுவதற்குமாக எங்கள் பஞ்சாயத்து அமைக்கப்பட்டுள்ளது. பரப்பு 5·42 சதுர மைல். மக்கள் தொகை 3198. கோவில்பட்டி பருவக்குடி பாட்டையில் மேற்கே 15 மைல் தொலைவில் உள்ளது. குருவிகுளத்திலிருந்து வடக்கே 6 கல் தொலைவில் உள்ளது. மின்சார வசதி பெற்றுள்ளது. 38 தெரு விளக்குகள் உள்ளது.

சாகுபடி விஸ்தீர்ணம் 3110 ஏக் 50 செ. முக்கியதொழில் விவசாயம். உறுப்பினர்கள் 15பேர். வருமானம் சுமார் 9000-00 ரூபாய்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிக்கிணங்க, கூட்டுறவு இயக்கத்தில் எங்கள் கிராமம் முன்னணியில் நிற்கிறது. பக்கத்து கிராமங்களிலுள்ள 6 கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கங்களை ஒன்று சேர்த்து

கூட்டுறவு விவசாய பேங்க் 1960ல் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. கிராம வாசிகளின் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதோடல்லாமல், நகை, தானிய ஈட்டின்பேரிலும் கடன்கொடுக்கப்படுகிறது. விவசாய பேங்க் கட்டிடம் கட்ட அரசாங்கத்திலிருந்து ரூபாய் 5000-00 மான்யமாகவும், ரூபாய் 5000 கடனாகவும் அளிக்கப்பட்டது. தானியங்களை சேமித்து வைக்க ரூபாய் 15,000 செலவில் கிட்டங்கி கட்டப்பட்டுள்ளது இதில் அரசாங்கம் ரூபாய் 5000 மான்யமாகவும், ரூபாய் 10,000 கடனாகவும் அளித்து கூட்டுறவு இயக்கத்தை நமது அரசாங்கம் விரிவுபடுத்தி வருவது நமது கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாமான்கள் நியாய விலையில் கிடைக்க ஒரு கூட்டுறவு பண்டகசாலை நடைபெறுகிறது. பால் வழங்க கூட்டுறவு பால்பண்ணை செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி கூட்டுறவு மத்தியபண்டக சாலையிலிருந்து அதிக அளவில் சாமான்களை வாங்கி பொது மக்களுக்கு வினியோகித்தும், கடன் பாக்கியில்லாமலும் நல்ல முறையில் பணி புரியும் பிரதம கூட்டுறவு சங்கங்களுக்கென அளிக்கப்படும் போட்டி பரிசில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முக்கியமான ஒரு கிராம கூட்டுறவு பண்டக சாலையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசு அளிக்கப்பட்டது என்பது நம் வட்டாரத்திற்கே ஒரு பெரும் மகிழ்ச்சியாகும்.

• கேடில் விழுச் செல்வமாகிய கல்வி பயில 3 ஆரம்பப் பள்ளிகளும், 2 உயர் ஆரம்பப் பள்ளிகளும் எங்கள் கிராமத்திலேயே இயங்கிவருகின்றன. பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"சுழன்றும் ஏர் பின்னது உலகம்" என வள்ளுவர் புகழ்ந்து கூறிய விவசாயமே எங்கள் முக்கிய தொழில். திருந்திய விவசாய முறைகள் பின்பற்றப்படுகின்றன. 'தக்கைப்பூண்டு' என்னும் பசுந்தாள் உரப்பயிர் எல்லா இடங்களிலும் வளர்க்கப்படுகிறது. "குப்பையில் கோடி தனம்" ஏரினும் நன்றும் எருவிடுதல்" என்னும் முதுமொழிகளுக்கிணங்க கம்போஸ்ட் உரம் சேகரிப்பில் தீவிர கவனம் செலுத்துகிறோம். பொறுக்கு விதை விநியோகிக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். 200 பழச் செடிகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 7 நவீன விவசாயக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. 30 மரங்கள் புறம்போக்கு நிலத்தில் நடப்பட்டு, செவ்வனே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சாகுபடி விஸ்தீர்ணம் 4064 ஏக்கர். 3 பாசனக் குளங்களும், 200 பாசனக் கிணறுகளும் உள்ளன.

2000 மீன் குஞ்சுகளும் 31 உயர் ஜாதிக் கோழிகளும் யூனியனிலிருந்து இக் கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கால்நடை சிகிச்சைக்கெனவும், கால்நடையின் தரத்தை அபிவிருத்தி செய்ய ஆலோசனை கூறவும் ஒரு கால்நடை முதலுதவி நிலையம் இயங்கி வருகிறது.

குடிநீர் வசதிக்காக ரூபாய் 1435-00ல் ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ளது. ரூபாய் 1088-00 செலவில் ஒரு குடிநீர் கிணறு புதுப்பிக்கப்பட்டுள்ளது. பாறைப்பட்டியில் கடந்த ஆண்டு ரூபாய் 1800-00 செலவிலும் திருவேங்கடத்தில் ரூபாய் 1200-00 செலவிலும் இரு கிணறுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. புதுப்பட்டியில் ஒரு கிணறு கட்டப்பட்டுள்ளது.

'மலஜலம் கழித்து உண்', சுத்தமே சோறு போடும்', என்பது நம் மூத்தோர் வாக்கியங்கள். அதற்கேற்ப, ஊரின் சுகாதாரத்திற்குக் கேடில்லாமல், மலஜலம் கழிக்க 8கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன.

விஞ்ஞானமும், நாகரீகமும் வளர்ச்சியுற்றதின் காரணமாக போக்குவரத்தும் அதிகரித்து வருகிறது. இதற்கு நல்ல பாட்டை வசதிகள் வேண்டும். பருவக்குடி-கோவில்பட்டி ரோட்டில் திருவேங்கிடம் அமைந்துள்ளதால், நல்ல தார் போட்ட ரஸ்தா வசதியுள்ளது. ஆவுடையாபுரத்திற்கு 2மைல் தூரம் ரோடுபோட்டு, கருங்கல்பரப்ப ரூபாய் 19,921-00 செலவழிக்கப்பட்டது. இங்கிருந்து குண்டம்பட்டிக்கு பஞ்ச நிவாரண நிதியிலிருந்து ரோடு போடப்பட்டுள்ளது. ரூபாய் 3000-00 செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. செல்லபட்டி ரோடு 2 பர்லாங்க் பஞ்சாயத்தால் ரூபாய் 1200-00 செலவில் போடப்பட்டுள்ளது. பிரயாணிகள் தங்க, பஸ்கள் நிற்க திருவேங்கடம் பஞ்சாயத்திலிருந்து ரூபாய் 15, 000-00செலவில் ஒரு பஸ் ஸ்டாண்டு திருவேங்கடத்தில் கட்டப்படுகிறது. நம் மாநில ரெவினியூ அமைச்சர் கனம் V. ராமையா அவர்களால் இதற்கு அஸ்திவாரமிடப்பட்டது.

விவசாயத்தை தொழிலாகக் கொண்ட கிராமத்தில் அதன் உபதொழில்கள் அவசியமல்லவா? ஆங்கிலேயர் ஆட்சியில் மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்து, உற்பத்தி பொருள்களாக இறக்குமதி செய்ததின் காரணமாகத்தானே கிராமக் கைத்தொழில்கள் நலிந்தன; கிராமத்தினர் மெலிந்தனர்; நாடு அழிவுப் பாதையில் இறங்கியது. ஒவ்வொரு கிராமத்திலும் மூலப்பொருள்களை உபபொருளாக செய்தால்உள்ளூர் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் கிராமத்தின் செல்வமும் பெருகி, சீரும் சிறப்புடன் விளங்குமல்லவா? சுதந்திர நாட்டின் அடிப்படை ஆணி வேரான கிராமப் பஞ்சாயத்து கைத்தொழில்கள் சிறக்கப் பாடுபடுவது அவசியமல்லவா?

அதற்கேற்ப இரு 'வார்தா செக்கு' கள் மூலம் நல்ல எண்ணெய் உற்பத்தி செய்யப்படுறது. கொல்லும், தச்சும் வளர்வதற்காக 9 தொழிலாளிகளுக்கு வட்டாரம் மூலம் தலைக்கு ரூ 200ல் நவீன தொழிற் கருவிகள் வாங்கி அளிக்கப்பட்டுள்ளது. தலைக்கு ரூ 500 வீதம், ரூ 2000-த்தை 4 தொழிலாளர்களுக்கு, கொல்லுப்பட்டரை அமைக்கவும், சோப்பு செய்யவும் வழங்கப்பட்டுள்ளது. 62 இராட்டைகள் வழங்கப்பட்டு நூற்பு வளர்ச்சியடைந்துள்ளது. விவசாய கருவிகள் பெரிய அளவில் உற்பத்தி செய்ய ஒரு கூட்டுறவு தொழில் சங்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கதர் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்திவருகிறோம். எங்களூரில் உள்ள கதர் விற்பனை நிலையம் இங்குள்ள மக்களின் ஆடைத் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

சமூக கல்வி என்பது முடிந்த பொருள் அல்ல; முடிவைப் பெற அது வழியாகும். நமது லட்சியம்-நல்ல சமுதாய அமைப்பு-அதைப் பெற ஒவ்வொரு மனிதனும் நம் அரசின் கொள்கை, பஞ்சாயத்து சிறப்பு, நாட்டின் நடப்பு, நல்வாழ்வு நடத்தும் முறைகள் ஆகியவைகளைப் பற்றி தேர்ந்து தெளிய வேண்டும். அதற்காக, ஒரு நூல் நிலையமும், ரேடியோவும் இயங்கி வருகிறது-தினசரிப் பத்திரிகைகள் வாங்கப்படுகின்றன. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை பஞ்சாயத்து யூனியனிலிருந்து நிர்வாகிக்கப்படும் சந்தை கூடுகிறது—

இம்மட்டோ? கிராம மக்கள் ஒன்று கூடி கிராம ஆட்சி முறை பற்றி விவாதிக்க ஒரு சமுதாய மன்றம் கட்டப்பட்டுள்ளது.

சமுதாய நல திட்டத்தை, மக்கள் திட்டமாக ஏற்று நடத்தி மக்களால் அதிக அளவு வேலை செய்த சிறந்த கிராமத்திற்கென்று அரசினரால் அளிக்கப்பட்ட நேருஜி பரிசு நம் மாநிலத்தில் திருவேங்கிடத்திற்குக் கிடைத்ததென்றால் "கல்வி கேள்வியில்" சிறப்புற்ற எங்களூர் வாசிகளின் பெருமுயற்சியும், குருவிகுளம் வட்டார வளர்ச்சித் திட்ட ஊழியர்களின் அரும்பெரும் சாதனையுமேயாகும்.

சென்னை மாநில முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்களின் பாராட்டு பத்திரத்துடன், நேருஜி பரிசாகிய ரூபாய் 1000-00 எங்கள் கிராமத்திற்கு அளிக்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி ரூபாய் 2000-00 செலவில் கட்டப்பட்ட சமுதாய மன்றம் நேருஜி "பரிசின் நிலை பொருளாக" பெருமிதத்துடன் காட்சியளித்து, எங்கள் கிராமத்தினருக்கு நம்ஒப்பற்ற பிரதமர் "நேருஜி" அவர்களின் லட்சியத்தை

" இந்தியாவின் பெருமை முற்றும்
இந்த காந்தி மார்க்கமே
அந்த ஞான உரிமை தன்னை
அழிவிலாது காக்கவே
ஒன்று சேர்ந்து உழையுங்கள்
ஒற்றுமையாய் வாழுங்கள் "

என்று பறை சாற்றிக்கொண்டிருக்கிறது.

வாழ்க பஞ்சாயத்து ஆட்சி!
வளர்க பாரதம்!! வணக்கம்!!!



# ஆலங்குளம் பஞ்சாயத்து.

## திரு. S. ஆழ்வார்சாமி

தலைவர்.

"என் தாய்நாடு யாதாயினும் ஆருக;
என்ன குறைகளுடையதாயினும் ஆருக;
எப்படியும் அது என் தாய் நாடே"

எங்கள் கிராமம் குருவிகுளத்திலிருந்து 2 மைல் தெற்கில், கோவில்பட்டி-சங்கரன் கோவில் சாலையின் அருகில் உள்ளது. சமீப காலத்தில் தான் இதை கோவில்பட்டி தாலுகாவிலிருந்து பிரித்து, சங்கரன்கோவில் தாலுகாவில் சேர்த்திருக்கிறார்கள். ஜனத்தொகை 815 பேர்கள். எங்கள் கிராமம் மிகச் சிறியதாயினும் கடந்த 2 ஆண்டுகளில் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. 102 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடியும் 218 ஏக்கர் நிலங்களில் இதர தானியங்களும் பயிர் செய்கிறோம். இதைத் தவிர 75 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடியும் செய்து வருகிறோம். பாசன வசதிகள் 3 குளங்களும், 70 கிணறுகளும் தான். ஒரே ஒரு ஆரம்பப் பள்ளி உள்ளது. சுமார் 103 சிறுவர்கள் கல்வி கற்கின்றனர். கிராமம் பூராவிலும் விவசாயமே தொழிலாக உடையது. அதில் சுமார் 50 பேர்கள் கதர் நூற்பை உபரித் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு சங்கம் உள்ளது. மின்சார வசதி கிட்டிய பின் 10 கிணறுகளில் 'பம்பு செட்' அமைத்தும் விருத்தி செய்திருக்கிறோம். 'ஹரிஜன நல இலாகா' வின் மூலம் ரூ. 15 ஆயிரம் அளவில் சர்க்கார் பண உதவியுடன் 20 காலனி வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டே வார்டுகள் கொண்ட எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் சுமார் ரூ. 850. ஆகவே பஞ்சாயத்தின் மூலம் அதிகமாக பொது மராமத்து வேலைகள் மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது. எங்கள் கிராமத்தில் பெரும்பாலோர் ஹரிஜன மக்கள் ஆவர். எங்கள் கூட்டுறவு சங்கத்தில் சுமார் 100 பேர்கள் தான் மெம்பர்களாக உள்ளனர். இதை இருமடங்காக்கி குடும்பத்திற்கு ஒரு நபர் வீதம் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து, விவசாயிகளுக்கு முழுக்கடன் உதவித் திட்டம் செயல்பட வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மேலும் கிணறுகள் தோண்டி பம்பு செட்டுகள் அமைத்து விவசாயத்தை விருத்தி செய்ய முயற்சி செய்து வருகிறோம்.

"ஜெய்ஹிந்த்"

"தன் கையே தனக்குதவி என்ற உண்மையைப் போற்றி அன்னியோன்ய உதவி மூலம் தன்னுதவி என்ற உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது கூட்டுறவு இயக்கம்"
('கூட்டுறவு')

"சேவை செய்ய வேண்டும் என்ற சிறந்த உணர்ச்சியின் பெருக்கமே கூட்டுறவு முயற்சியில் தோன்றும் ஆர்வத்திற்கு அடிப்படை"

'வருவாய்க்கு ஏற்ப வாழ்வதற்கு பழகு; சங்கம் இருக்கிறது என்பதற்காக அதிலிருந்து அளவுக்கு மீறி கடன்வாங்கி அவதியுருதே" —



முன்னாள் கோட்டாட்சி தலைவர் திரு. R. கிருபாகரன் விஸ்வகர்மா தொழில் சங்கத்தில் தலைவர் திரு. ராமசுப்பு நாயக்கருடன்.



திருவேங்கடம் விவசாய பாங்க் திறப்பு விழா.



வெள்ளாகுளம் கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாமில் திரு V. ராமகிருஷ்ணன் உரை நிகழ்த்துகிறார்.



குருவிகுளம் வட்டார விவசாயிகள் சுற்றுப் பயணம்-சென்னையில் உலக விவாயக் கண்காட்சியில்



மருதன்கிணர் ஆக்க வேலைத் திட்டத்தில் ஜில்லா எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸர் திரு. குஞ்சிதபாதம், கமிஷனர் திரு. S. நம்பி பஞ்சாயத்து தலைவர் ஆகியோர்.



பஞ்சாயத்துத் தலைவர்கள் பயிற்சி முகாமில் கலெக்டரின் திட்டப்பிரிவு உதவியாளர் திரு. E. V. சோமசுந்தரம் B. A. உரை நிகழ்த்துகிறார்.



குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கனம். சபாநாயகர் திரு. S. செல்லப்பாண்டியன்.



சபாநாயகர் திரு. S. செல்லப்பாண்டியனுக்கு குருவிகுளம் யூனியன் சார்பில் தலைவர் திரு S. சங்கரப்ப நாயுடு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கிறார்.



குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப விழா 2—10—60 அன்று.



குருஞ்சாகுளம் பஞ்சாயத்து தலைவருடனும், கூட்டுறவு சங்க தலைவருடனும் கோட்டாட்சி தலைவர் திரு. D. சீதாராமன் உரையாடுகிறார்.



உமையதலைவன்பட்டியில் ஆக்க வேலையின் போக்கை ஆய்வுறுகிறார் கோட்டாட்சி தலைவர் திரு. D. சீதாராமன். வலது கோடியில் பஞ்சாயத்துத் தலைவர் திரு S. மாரியப்பத் தேவர்.



# காரிசாத்தான் பஞ்சாயத்து.

திரு. ஆறுமுகத் தேவர்,

தலைவர்.

எங்கள் கிராமம் மிகப் பழமையானதும் புராண வரலாறும் பெற்றது. எங்கள் கிராமத்தின் தென்கிழக்கு எல்லையில் நிக்ஷேப நதி பாய்கிறது. காரிசாத்தான் மலை அடிவாரம் ஓரமாக இந்த நதியின் கரையில் சூரியலிங்க சுவாமி கோயிலும், சுப்பிரமணிய சுவாமிகோவிலும் இருக்கின்றன. இவற்றில் முன்னது சங்கப்பிரசித்திபெற்ற அதிவீரராமபாண்டியனரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக சரித்திர வரலாறு கூறுகிறது. திவிரவும் அண்மையிலுள்ள பஞ்சஸ்தலங்களில் ஒன்றாகிய கருவையம்பதியில் (கரிவலம்வந்தநல்லூர்) இருக்கும் கோவில் திருவிழா துவக்கங்கள் எங்கள் கிராமத்தில் மேற்சொன்ன கோவிலுக்கருகில் இருந்து மண் எடுத்துச்சென்றுதான் ஆரம்பிப்பது இன்றும் வழக்கமாய் இருந்துவருகிறது. இதே நிக்ஷேபநதியில் அரன் ஈரந்தியடிகளின் அஸ்தியில் ஒருபாகம் கொண்டுவந்து கரைக்கப்பட்டது. ஆகவே சரித்திர புராண முக்கியத்துவம் பெற்ற கிராமமாகும்.

எங்கள் பஞ்சாயத்து காரிசாத்தான், ரெங்கசமுத்திரம், என்ற இரண்டு ரெவின்யூ கிராமங்களும் அதன்மஜராக்களையும் கொண்டது. பரப்பு 6·77 சதுர மைல்கள் கோவில்பட்டி—பருவக்குடி ரஸ்தாவில் 24-வது மைலில் தெற்கே நான்கு பர்லாங்குகள் தள்ளியிருப்பதுதான் காரிசாத்தான் கிராமம். எங்கள் பஞ்சாயத்தில் 2602 ஜனத்தொகை. அவற்றில் 1306 பேர் விவசாயிகள். 688 பேர் விவசாயக் கூலிகள் 375 பேர் நெசவாளிகள். மருதங்குளம் சிறுபாசனக்குளத்தின் மூலம் 127 ஏக்கர் சாகுபடி நடக்கிறது. சுமார் 400 ஏக்கர் நிலம் கிணற்றுப் பாசனத்தைகொண்டது. மிகுதியிருக்கும் நிலம் சுமார் 3000 ஏக்கர் மானவாரி பயிர்தான் செய்கிறோம். ஆகவே பாசன வசதிகள் மிகக்குறைவு. எனினும் திருந்திய விவசாய முறைகளைக் கையாள்வதிலும் கடும உழைப்பினாலும் ஒருவாறு சரிக்கட்டி வருகிறோம். பருத்திதான் அதிக மகசூல். 5 புதுக்கிணறுகள் வெட்டியும் ஒரு கிணற்றை மராமத்து செய்தும் சற்றே வசதி செய்திருக்கிறோம். இதைத்தவிர பஞ்சாயத்தின் மூலம 86 பலன் தரும் மரங்கள் நட்டியிருக்கிறோம்.

சுகாதார முறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 4-குடிதண்ணீர் கிணறு ஏற்படுத்தி இருக்கிறோம். 3 முதியோர் கல்வி நிலயங்களும் ஏற்படுத்தி இருக்கிறோம். அவற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 26 பேர்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. இரண்டு சமூகக் கல்வி நிலையங்களும் ஏற்படுத்தி, உழைத்து அயர்ந்து இருக்கும் மக்களுக்கு ஓரளவு மனமகிழ்வு அளிக்கும் வகையில் ரேடியோ வசதியும் செய்திருக்கிறோம். இதைத்தவிர எங்கள் கிராமத்தில் ஒரு இளைஞர் விவசாய சங்கமும் ஏற்படுத்தி அதற்கென பிரத்தியேகமாக ஒரு ரேடியோவும் கிடைத்துள்ளது.

எங்கள் பஞ்சாயத்தில் நான்கு ஆரம்பப் பள்ளியும் ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியும் இருக்கின்றன. இவற்றில் 335 பையன்களும் 106 பெண்களும் கல்வி கற்கின்றனர்.

நம் கிராம அபிவிருத்தி கமிஷனர் திரு. கோ. வெங்கடாசலபதி அவர்கள் நம் பஞ்சாயத்துகளின் செல்வத்தைப் பெருக்க அடிக்கடி கூறும் யோசனையாகும். அதற்கேற்ப கடந்த ஆண்டில் நமது கோவில்பட்டி கோட்டாட்சித் தலைவர் எளியார்க்கு எளியார் திரு. D. சீத்தாராமன் அவர்கள் முதலில் ஒரு செடி நட, தொடர்ந்து பலர் நட, பாட்டையின் இரு மருங்கும் பச்சைப் பசேலென்று பக்குவமாய் தென்றலுடன் தலை வணங்கி, வாருங்கள் என்று வருவோரை வரவேற்று" இதுபோல் நீங்களும் உங்கள் கிராமத்தில் செய்யுங்கள் என்று கூறும் 50க்கு மேற்பட்ட மரங்கள் இன்று காட்சியளிக்கின்றன.

கால் நடை வளர்ச்சியில் நாங்கள் கோழி வளர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

எங்கள் கிராமத்தினருக்கு கூட்டுறவு இயக்கம் மூலம் வேண்டிய தேவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறோம். திருவேங்கடம் கூட்டுறவு விவசாய பாங்கியிலிருந்து வேண்டிய கடன் வசதிகளைப்பெற்று வருகிறோம்.

"பாலர் அனைவரும் படிக்க வேண்டும்
பாரத மணிகளாய் திகழ வேண்டும்"

என்பதற்காக பள்ளி வயதுப்பிள்ளைகள் அனைவரையும் பள்ளிக்கு அனுப்புகிறோம். பஞ்சாயத்து யூனியன் மறவர் உயர் ஆதாரப்பள்ளி ஒன்று உள்ளது. மூன்று ஆசிரியர்கள் பணிபுரிந்த எங்கள் பள்ளியில் கடந்த ஆண்டிலிருந்து கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இப்பள்ளியில் 130க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கல்வி பயிலுகின்றனர். இந்த ஆண்டு எங்கள் பள்ளி உயர் ஆரம்பப் பள்ளியாக மாற்றப்பட்டதால் ரூ.2000 அளவில் பள்ளிக்கென தனிக் கட்டிடம் ஒன்று பழுதுபார்த்து புதுப்பித்துள்ளோம்.

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை"

என்னும் நம்கிராம அபிவிருத்தி கமிஷனர் திரு. கோ. வெங்கடாசலபதியின் வேண்டுகோளுக்கு இணங்க ஏழைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு போடப்படுகிறது.

நூற்பு இங்கு உபதொழிலாக இருக்கிறது 50% மக்கள் நூற்பில் ஈடுபட்டுள்ளனர்.

கிராமச் சுகாதாரம் போற்றி பாதுகாக்கப்படுகிறது இரண்டு வருடங்களுக்கு முன் தெருக்களில் கழிவு நீர் ஓடும்–துர்நாற்றம் வீசும். இதுகண்ட ஓயா உழைப்பாளர், எங்கள் கமிஷனர் திரு. S. நம்பி அவர்கள் மனமுறுவ, வார்கால் கட்டவேண்டிய அவசியம் பற்றி எடுத்துக்கூறவும், எல்லோரும் சம்மதித்து, 1000 அடிதூரம் வார்கால் கட்டியுள்ளோம். தெருக்கள் சுத்தமாக காட்சி அளிக்கின்றன. நான்கு கக்கூஸ்கள் கட்டியுள்ளோம்.

"ஒற்றுமைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒரு பெருஞ்செயல் செய்வாய்"

என கூறி எல்லோரும் சேர்ந்து, ஆக்க வேலை திட்டத்தை நடத்துங்கள்–ஊக்கமுடன் உழையுங்கள்–உன்னத நிலை உங்களுக்கு கிட்டும் என்று, ஆக்க வேலைத் திட்டத்தை 28—4—61ல் ஆரம்பித்து வைத்த எங்கள் நலம் பேணும் யூனியன் தலைவர் திரு. சங்கரப்ப நாயுடு உணர்ச்சி ததும்ப கூற, உடல்வலிமையும் உள்ள உறுதியும் கொண்டுழைத்ததால் மூன்று மாதகாலத்தில் 3 ரோடுகள் போட்டோம். குளம் ஒன்று செப்பனிட்டோம். முயற்சித்தால் முடியாததுவும் உள்ளதோ?

குடிதண்ணீர் கிணறு இரண்டு வெட்டியும், நல்லதண்ணீர் கிடைக்கவில்லை. என்பதுதான் எங்கள் குறை. இக்குறை தீர பஞ்சாயத்து முயற்சி செய்துவருகிறது. வாழ்வின் மலர்ச்சிக்குரிய நம்பிக்கை எங்களிடத்தில் இருப்பதால், எங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும் என்பது நிச்சயம். பஞ்சாயத்து யூனியன் உதவிபெற்று ஆரம்பிக்கப்பட்ட சமூக கல்வி நிலையத்திற்கு தின வார மாத பத்திரிக்கைகள் வாங்கப்படுகிறது. நாட்டின் நடப்பு பற்றி தங்கள் பொறுப்பையும் அறிவையும் அறிந்து கொள்ள இதுசிறந்த நிலையமாக பணியாற்றி வருகிறது.

தொக்கின மலர்துறை
விலாத சோலையும்
புக்கிளர் தாமரை
நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறை விரி
விலாத வந்தியும்
மக்கள் இலாத தோர்
மனையும் போல

பஞ்சாயத்துக்கள் இல்லாத நாடு–அதாவது அரும்பு, மலர், காய் கனியற்ற சோலை, தாமரை பூத்து தண்ணெழில் காட்டாத குளம், திங்கள் இல்லாத அந்திமாலை, குழந்தைகள் இல்லாத வீடு இவைகளால் எப்பயனும் இல்லையோ அதுபோல் பஞ்சாயத்து இல்லாத நாடு ஆகும்.

ஆகவே நம் மாநிலம் முழுவதும், பஞ்சாயத்து ஆட்சி செயல் முறைக்கு வந்துவிட்டது. 375 பஞ்சாயத்து யூனியன்களும் 12500 பஞ்சாயத்துகளும் அமைக்கப்பட்டு "வெற்றி எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே" –என்று பாமரர் பாடும் பாட்டு ஒலிக்கிறது.

"வளர்க கிராம சமுதாயம்"

"வையம் குருடன்றே
மாமறை நூல் பொய்யன்றே
ஐயன் உறைத்த தமிழ்
ஆரறிவார்—வையத்துக்கு
ஊன்றுகோல் எந்தை
எதிராசன் உத்தரித்த
மூன்று கோல்
காண்பதற்கு முன்"

[பொருள்:

இந்த உலகனைத்துக்கும் வாழ்வுக்கு ஒரு பற்றுக்கோடாகிய எந்தையாகிய எதிராசர் என்று பெயர் பெற்ற இராமானுசர் தூக்கிய திருதண்டத்தை ஸேவிக்கு முன்பு இவ்வுலகு குருடாகவும், வேதங்கள் பொய்யாகவும், மாறன் உரைத்த தமிழ் வேதம் எல்லோராலும் அறியப்படாமலிருந்தது. அவர் மூன்று கோல் உத்தரித்த பின்பே கண் பெற்றது. வேதப் பொருள் மெய்யாயிற்று. நம்மாழ்வாரின் தமிழ் உலகறியப் பரவிற்று.

"திருக்கோயில்"
ஆகஸ்டு–1962.



# ஜமீன் கரிசல்குளம் பஞ்சாயத்து.

**திரு. க. கிருஷ்ணத் தேவர்,**

தலைவர்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை". —வள்ளுவர்.

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது. அதனால் எவ்வாறு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது. என்ற பண்பிற்கிணங்க மிகப் பிற்போக்காயுள்ள எங்கள் கிராமத்திலும் கூட நாங்கள் விவசாயத்தையே மேம்பட்டதொழிலாகக் கருதுகிறோம். தவிர

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

என்று தொடர்ந்தே கூறியதற்கொப்ப நிலத்துக்குரியவர் காணி நிலமாயினும் கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்பு சாலச் சிறந்ததாகும்.

எங்கள் கிராமம் கழுகுமலை–கயத்தார் ரஸ்தாவில் கழுகுமலையிலிருந்து மூன்றாவது மைலில் பிரியும் ரஸ்தாவில் மேற்கே இரண்டாவது மைலில் உள்ளது. சுமார் 1000 ஜனத்தொகை கொண்ட எங்கள் பஞ்சாயத்து 2 சதுரமைல் விஸ்தீரணம் உள்ளது. ஏறக்குறைய 580 பேர்கள் விவசாயத் தொழில் செய்பவர்கள், சுமார் 50 பேர்கள் பெட்டி முடைதல் போன்ற சிறு கைத்தொழில் செய்பவர்கள். ஒரே ஒரு ஆரம்பப்பள்ளி உள்ள எங்கள் கிராமத்தில் 176 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். எங்கள் கிராமம் மிகுந்த பிற்போக்கான கிராமமெனினும் ஒரு வாசகசாலையும், ஒரு இளைஞர்–விவசாய சங்கமும் நிறுவியிருக்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சமூக மனமகிழ் மன்றமும் ரூ. 1500 செலவில் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு குடிதண்ணீர் கிணறும் ரூ. 2000 செலவில் பழுதுபார்த்திருக்கிறோம். எங்கள் கிராமத்தில் மின்சார–வசதி இன்னும் ஏற்படவில்லை. எனவே பம்புசெட், கிணறுகள் ஏற்படுத்த வசதி இல்லை. தற்சமயம் இருக்கும் 2 சிறுகுளங்களும் 43 நீர் பாசன கிணறுகளையும் கொண்ட சுமார் 461 ஏக்கர் நிலங்களை மிக்க முயற்சி எடுத்து சாகுபடிக்கு கொண்டு வந்திருக்கிறோம். சுமார் 33-37 ஏக்கர் நெல் சாகுபடியும். சோளம் இதர தானியங்கள் 67-63 ஏக்கர் நிலங்களிலும் பருத்தி 18·94 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளன. எஞ்சியவை மானாவாரியாகப் பயிரிடப்பட்டவை. எனவே எங்கள் கிராமப் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. இதில் முன்னேற்றம்காண நாங்கள் பலவாறு முயற்சித்து வருகிறோம், அடியிற் குறிப்பிட்ட முறையில் சீர்திருத்தம் செய்து இன்னும் சில ஆண்டுகளில் எங்கள் கிராமத்தின் நிலைமையை அபிவிருத்தி செய்ய முடிவு செய்திருக்கிறோம். முதலாவதாக எங்கள் கிராமத்தில் எப்பாடுபட்டேனும் மின்சாரம் கொண்டுவர ஏற்பாடு செய்வோம். அதன் பின் தற்சமயம் இருக்கும் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகவோ, 'கூட்டுப்பண்ணை' திட்டத்தின் மூலமாகவோ புதுக்கிணறுகள் அமைத்து பம்புசெட்டுகள் அமைத்து பாசன வசதியை பெருக்குவோம். கடைசியாக உயர்தர ஆரம்பப்பள்ளியை ஆரம்பித்தும் குடிசைக் கைத்தொழில் கூட்டுறவு சங்கம் அமைத்து எங்கள் விவசாய மக்களின் வருமானத்தை உயர்த்த வழி காணவும் தீர்மானித்திருக்கிறோம். மக்களின் ஆட்சியின் சீரான முறையில் மேற்கூறிய வாழ்க்கை வசதிகள் செய்துகொள்ள எல்லாவிதத்திலும் வாய்ப்பு இருக்கிறதென்பதே எங்களுடைய உறுதியான நம்பிக்கை. அதற்கு எங்கள் பஞ்சாயத்து மக்களின் சலியாத உழைப்பே சான்றாகும்.

**வாழ்க நம் நாடு!**


## செல்வ விநாயகர் மேச் ஒர்க்ஸ்

பிச்சைதலைவன்பட்டி.

குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் ஆண்டு விழாவுக்கு புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் எங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலையினரின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

உரிமையாளர்
L. ரெங்கசாமி நாயக்கர்
பிச்சைதலைவன்பட்டி.

எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும்
கிராம்ப்டன் மோட்டார், தண்டாயுதபாணி பம்பு செட்டுகளும் கிடைக்கும்.

## தி மகாலெக்ஷிமி

## எலக்ட்ரிக் கம்பெனி,

(அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்)

மெயின்ரோடு :: கோவில்பட்டி.

## முத்துமாரியம்மன் மேச் ஒர்க்ஸ்

இளையரசனேந்தல்.

"பழனி மலை பிராண்ட்"

தீப்பெட்டிகளையே வாங்கி உபயோகியுங்கள்.

மழை காலத்திற்கு உத்தரவாதமுள்ள சிறந்த முறையில் தயாரிக்கப்படும்

சீ. சங்கரசுப்பு செட்டியார்
உரிமையாளர்
முத்துமாரியம்மன் மேச் ஒர்க்ஸ்,
இளையரசனேந்தல்.

குருவிகுளம் விஸ்வகர்மா கூட்டுறவு குடிசைத் தொழில்
சங்கம் லிமிட்டெட் Ind 145.
குருவிகுளம்.

எங்களது சங்கத்தில் மேஜை, நாற்காலி, பீரோ, பெஞ்சு, விவசாய கருவிகள் மற்றும் கிலான் சர்க்கா முதலிய சாமான்கள் சிறந்த வனப்புடன் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறோம். பொதுமக்களின் ஆதரவை எப்பொழுதும் எதிர்பார்க்கும் எங்கள் சங்கத்திற்கு ஒரு முறை விஜயம் செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

'உங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்'
'உங்கள் தேவையே எங்கள் சேவை'.

V. ராமசுப்பு நாயக்கர்
தலைவர்,
மற்றும் நிர்வாகஸ்தர்கள்.

தந்தி: PAINTCO போன்: 2186.

வா. அ. மு. ரத்தினம் & பிரதர்ஸ்
இரும்பு, வர்ணம், சிமெண்ட் வியாபாரம்
44, அம்மன் சன்னதி, மதுரை-1

எங்களிடம் தங்களுக்குத் தேவையான கொல் தச்சர்களுக்கு வேண்டிய நவீன கருவிகள், விவசாய கருவிகள், சாலிமார் பெயிண்ட் டாடா, S & L நாகக் குழாய்கள், போல்ட், நட்டுகள், சங்கர் பிராண்ட் சிமிண்ட் மற்றும் கட்டிடங்களுக்கு வேண்டிய சாமான்கள் சகாய விலையில் கிடைக்கும்.

வா. அ. மு. சிதம்பர நாடார் & சன்ஸ்
உரிமையாளர்கள்.



# வாகைக்குளம் பஞ்சாயத்து.

திரு. பி. ஞானமுத்து,
தலைவர்.

வாகைக்குளம் பஞ்சாயத்து குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனின் ஒரு பகுதியாகும். எங்கள் ஊர் 360-80 ஏக்கர் பரப்புள்ளது மக்கட்தொகை 1128 பேர். இதில் பெரும்பாலோர் விவசாயம்செய்து வாழ்க்கை நடத்துபவர்கள். 70·7 ஏக்கரில் நன்செய்யும் 280·00 ஏக்கர் புன்செய் சாகுபடியும் நடந்து வருகிறது. இங்கு முக்கியமாக மிளகாய். வெங்காயம் போன்ற பொருள்கள் அதிகம் உற்பத்தியாகின்றன. இவையாவும் விருதுநகர் மதுரை, திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. குளங்கள் மூலமாக-கிணற்றின் மூலமாக விவசாயம் நடைபெறுகிறது. சில கிணறுகளில் மின்சாரப் பம்பின் மூலம் தண்ணீர் இறைத்து விவசாயத்தை வளர்க்கிறோம் பசுந்தழை உரங்களை தயாரிப்பதிலும் அதை உபயோகிப்பதிலும் எங்கள் ஊர் மக்கள் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர். வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து 50கிலோ தாவரநோய் தடுப்பு மருந்து வாங்கி உபயோகித்திருக்கிறோம். விவசாயத்திற்காக ரூ.2000 அளவில் வாங்கி விவசாயத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருக்கிறோம்.

எங்கள் கிராமத்தில் 1115 கால்நடை இனங்களும், கோழிகளும் உள்ளன. 70 ஜோடி காளை மாடுகளுக்கும், பசுக்களுக்கும் தொண்டை அடைப்பான், சப்பை நோய் போன்ற தொத்து நோய்கள் வராமல் தடுக்க தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. 180 கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் நோய் வராமல் தடுப்பூசி நடவடிக்கை கால்நடை விஸ்தரிப்பு அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்னும் முதுமொழிக்கிணங்க எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தில் இரண்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. அதன் மூலம் விவசாயத்திற்கு வேண்டிய கடன் வசதிகளையும், உரம்போன்ற பொருள்களையும் பெற்று, பயனடைகிறோம்.

எங்கள் கிராமத்தில் உயர்தர ஆதாரப்பள்ளி ஒன்றும் இளையோர் ஆதாரப் பள்ளி ஒன்றும் நடைபெறுகிறது. அதில் 255 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். முதியோர் கல்வியை வளர்க்க முதியோர் பாடசாலை ஒன்றும் உள்ளது. இது தவிர சமூக சேவைக்காக இப்பஞ்சாயத்திலுள்ள பெண்களை ஊக்குவிக்க பஞ்சாயத்து நிதியிலிருந்து ரூ 1000/ மதிப்பில் ஒரு மாதர் சங்கக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பணிசெய்வதே மாதர் கடமை எனக்கொண்டு தாய் நாட்டிற்கு கிராமமுன்னேற்ற திட்டங்களில் பங்கு கொள்வதில் ஆர்வம்காட்டும் கிராமப் பெண்களுக்கு ஓய்வு காலப்பணியாகவும், வருவாய் தேடித்தரும் ஆக்கப்பணியாகவும் இருக்கும் பொருட்டு ஒரு தையல் மிஷன் வழங்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியனின் இம் மாதர் முன்னேற்றப் பணியால் எங்கள் பஞ்சாயத்துப் பெண்களில் பலர் குடும்ப வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்ருன சீரான உடை தைத்து அணிவது என்ற கலையை நன்கு கற்றுணர்ந்திருக்கிருர்கள். இது போல் ஒவ்வொரு கிராமத்திலும் மாதர் முன்னேற்றத்திற்கு ஆவன செய்தால் கிராமப் பெண்கள் பழைய சுறுசுறுப்பற்ற வாழ்க்கையைக் கைவிட்டு நவீன உலகத்

திற்குத் தக்கவாறு தங்களைத் திருத்தி அமைத்துக் கொள்வார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சுகாதார வசதிக்காக இரண்டு பொதுக் கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன. இரண்டு குடி தண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் ரூ. 7028 அளவில் பொதுக் கட்டிட வேலை செய்திருக்கிறோம்.

கிராமக் குடியாட்சிக்கும் மற்றும் பலசீரிய நவீன விவசாய இதர முன்னேற்றத்திற்கும் கிராமமக்கள் விழிப்படைய வேண்டியது மிகவும் அவசியம், விவசாயிகளை விழிப்படையச் செய்யவும், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உலகின் பல பாகங்களிலும் அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளவும், விவசாய உற்பத்தியைப் பெருக்குதல், கால்நடை பராமரிப்பு, சுகாதார சீரமைப்பு, கல்விச் சிறப்பு, கூட்டுறவுச் சிறப்பு, சிறுதொழில்களின் மாண்பு போன்ற வகைகளைக் கட்டுரைகளாகவும், சொற்பொழிவுகளாகவும், கிராம கலா நிகழ்ச்சிகளாகவும் மக்களின் மனதில் எளியமுறையில் பதியச் செய்ய வல்ல வானொலிப் பெட்டி ஒன்றும் எங்கள் பஞ்சாயத்துக்குக் கிடைத்துள்ளது.

மக்களின் சோம்பலை நீக்கி, ஊக்கத்தை ஊட்டி ஆக்க வேலைக்கு அழைக்கும் கிராம நல ஏடு போன்ற பல ஏடுகளாலும், எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து மக்களின் நவீன உலகத்தை உணர்ந்து அதற்குத் தக்கவாறு தங்களைச் சிறுகச் சிறுக திருத்தியமைத்து வருகிறார்கள். இதனால் மிக விரைவில் அண்ணல் காந்தி கண்ட கிராம சுயராஜ்யத்தை அடைந்தே தீருவோம்.

''வாழ்க கிராம சுயராஜ்யம்''


# செந்தாமரை
## மேட்ச் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்,
இளையரசனேந்தல்.

மழைகாலத்திற்கு உத்திரவாதமுள்ளதும்
எங்கள் நேரடி மேற்பார்வையில்
தயாரிக்கப்படுவதுமான
''ஸ்டாக் ஹெட்'' தீப்பெட்டிகளையே
எல்லோரும் வாங்கி உபயோகிக்கவும்.

**S. ஆறுமுகம் செட்டியார்**
உரிமையாளர்:
செந்தாமரை மேட்ச்
காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ்,
இளையரசனேந்தல்.




# A. கரிசல்குளம் பஞ்சாயத்து.

திரு. V. வீராசாமி நாயக்கர்,

தலைவர்.

'இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்
தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடுஇன்றால்
எம்மை உலகத்தும் யாம் காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து'—நாலடியார்.

எங்கள் கிராமம் சங்கரன்கோவில்-திருவேங்கடம் ரஸ்தாவில், சங்கரன்கோவிலிலிருந்து 4வது மைலில் உள்ளது. 114 ஏக்கர் நன்செயும். 3477 ஏக்கர் புஞ்சையும் கொண்ட எங்கள் கிராமத்தின் மொத்த ஜனத்தொகை 4209. பரப்பளவு 7 சதுர மைல்கள் இங்கு பருத்தி, சோளம், கம்பு தான் முக்கிய மகசூல். கடந்த இரண்டு ஆண்டுகளில் பருத்தி சாகுபடி 4 மடங்கு உயர்ந்திருக்கிறது. இரு கண்மாய்கள் உள்ளன. சுமார் 115 ஏக்கர் ஆயக்கட்டுள்ளது. சென்ற ஆண்டில் 3148 ஏக்கர் தான் சாகுபடி செய்திருந்தோம். இவ்வாண்டில் 3515 ஏக்கர் சாகுபடி செய்திருக்கிறோம். சுமார் 10 டன் ரசாயன உரங்களும், அதிக அளவில் பொறுக்குவிதைகளும் உபயோகித்திருக்கிறோம். நடப்பு ஆண்டில் மட்டும் திருந்திய விவசாயம் ஏற்படுத்த சர்க்கார் மான்யம் ரூ. 650ம், சர்க்கார் கடன் ரூ. 2000ம் பெற்று முன்னேற்றம் கண்டிருக்கிறோம்.

மேலும் அரசாங்க உதவித்தொகை ரூ 100 பெற்று, எங்கள் ஊர் பிரமுகர் உயர்திரு சுப்பையா நாயக்கர் அவர்களால் ஒரு கோழிப்பண்ணை ஏற்படுத்தி இருக்கிறோம். இதைத்தவிர எங்கள் கிராமத்தில் நாட்டுக் கோழியின் தரத்தை அபிவிருத்தி செய்ய 20 வெள்ளை லெக்கான் ஜாதிச் சேவல்கள் பரிவர்த்தனை முறையில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பஞ்சாயத்தில் ஒரு முதியோர் ஆதாரப்பள்ளியும் ஒரு இளையோர் ஆதாரப் பள்ளியும் உள்ளன. நல்லமுறையில் கல்வி புகட்டப்படுகின்றன. எங்கள் பஞ்சாயத்தில் ஒரு வாசகசாலையும் ஒரு இளைஞர் சங்கமும் நிறுவி இருக்கிறோம். இவையெல்லாம் நன்கு நடைபெற்று வருவதால் கிராமத்தில் எந்த முற்போக்கான சீர்திருத்தங்களும் மேற்கொள்ள முடிகிறது.

எங்கள் பஞ்சாயத்தில் ஒரு பலநோக்கு கூட்டுறவு சங்கம் நன்கு செயல்பட்டு வருகிறது. அதில் 184 அங்கத்தினர்கள் உளர். நடப்பு ஆண்டில் ரூ. 25000 அளவில் கடன் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தின் மூலம் நடப்புஆண்டில் 23டன் ரசாயன உரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் ஒரு கூட்டுறவு பண்டகசாலைநிறுவ முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

சமுதாய அபிவிருத்தித் திட்டம் செயல்பட்ட பின் எங்கள் கிராமங்களில் கீழ்க்கண்ட பொதுவேலைகளை அரசாங்க மான்யம் பெற்று செய்து முடித்திருக்கிறோம்.

| கிராமம் | | செய்த வேலைகள் | அரசாங்க மான்யம். |
|---|---|---|---|
| 1 ஆலமநாயக்கன்பட்டி | | | |
| | 1 | கிணறு வேலை | 1959-00 |
| | 2 | ஆலமநாயக்கன்பட்டியிலிருந்து சங்கரன்கோவில் – திருவேங்கடம் சாலைக்கு ரஸ்தா அமைத்தல். | 5345 00 |
| | 3 | கக்கூஸ் | 1371 00 |
| | 4 | தடுப்புச் சுவர், பாலம் | 6674-00 |
| | 5 | பள்ளிக் கட்டிடம் | 8639-00 |
| | 6 | சமுதாய மன்றம் | 500-00 |
| | 7 | சாக்கடை | 1336-00 |
| 2 அய்யாபுரம் | | | |
| | 1 | அய்யாபுரம் கரிசல்குளம் ரஸ்தா | 1846-00 |
| | 2 | பாலம் | 285-00 |
| | 3 | பள்ளிக்கூடம் | 2743-00 |
| 3 ஆலடிப்பட்டி | | | |
| | 1 | கிணறு வேலை | 816-00 |
| | 2 | சங்கரன்கோவில்-திருவேங்கடம் சாலைக்கு சந்திப்பு ரஸ்தா. | 1725-00 |
| | 3 | மனமகிழ் மன்றம் | 500-00 |
| | 4 | சாக்கடை | 1146-00 |

எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் நடப்பு ஆண்டில் ரூ 5237 இதில் எங்கள் பஞ்சாயத்தில் 19 மின் தெரு விளக்குகளும் போட்டிருக்கிறோம். கடந்த இரண்டாண்டுகளில் மூன்று குடி தண்ணீர் கிணறு செப்பனிட்டிருக்கிறோம். பத்து நீர் உறிஞ்சு குழிகள் வெட்டி இருக்கிறோம். வரும் ஆண்டுகளில் எங்கள் பஞ்சாயத்து நல்ல திட்டமிட்ட பாதையில் முன்னேற்றம் காண தீர்மானித்திருக்கிறோம்.

வணக்கம்!

## மாதர் நலம்

"கிராமங்களில் வாழும் மாதர்களின் வருவாய் பெருகுவதற்கு அரசாங்கம் நிறைவேற்றிவரும் திட்டங்கள் வெற்றிபெற சேவை உணர்ச்சி உள்ளவர்கள் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியம்"

"கிராமப் பெண்களின் வருவாயினைப் பெருக்க, அவர்களுக்கு கல்வியும், கைத்தொழில் பயிற்சியும் அவசியம். பெரும்பான்மையான கிராமங்களுக்கு தற்போது மின்சார வசதி வந்துவிட்டது. கிராமங்களில் விவசாய காலங்களில் தவிர, மற்றக் காலங்களில் வேலை கிடையாது. அங்குள்ள தாய்மார்கள் ஓய்வு காலத்தில் சம்பாதித்து, வருவாயை உயர்த்திக் கொள்ள வழி செய்ய வேண்டும். அதற்கு அவர்களுக்கு கல்வியறிவு ஏற்பட வேண்டும். கிராமங்களில் கல்வி பயில நாம் வசதிசெய்து தருகிறோம், வருவாய் உயர, இளம் பெண்களுக்கு வழி செய்து தருகிறோம். நெசவு நூல் நூற்பது போன்ற பல தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தலாம். கிராமங்களுக்கு மின் சார வசதி வந்து விட்டபடியால், சிறு இயந்திரங்கள்மூலம் கிராமப்பெண்கள் சில தொழில்களை நடத்த வழி செய்ய வேண்டும். தமிழ்நாட்டுக் கிராமங்களில் கிடைக்கும் மின்சார சக்தியை சிறு இயந்திரங்களை இயக்கப் பயன்படுத்தலாம்......"

—சென்னை முதலமைச்சரின் சொற்பொழிவு
25—5—62.



# மலையான்குளம் பஞ்சாயத்து.

திரு. அ. முருகன்,
தலைவர்.

"உடையரெனப்படுவ(து) ஊக்கம் அஃதில்லார்
உடைய துடையரோ மற்று"

பல வருடங்களாக உற்பத்தி திட்டங்களில் முக்கியமாக விளைபொருள் உற்பத்தியைப் பெருக்குவது, சிறுபாசனமாகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. சுகாதாரம், கல்வி இளைஞர் சங்கங்கள், மாதர் சங்கங்கள் முதலிய துறைகளில், மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலையை இத்திட்டத்தின் இணைப்பானதும் முக்கியமானதுமான ஒரு அங்கமாக கருதப்படுகிறது. எனினும் விவசாயத் துறை அபிவிருத்தியிலும், அதிக உற்பத்தி சாதனைகளிலும் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய முடியும். கடந்த இரு ஆண்டுகளில் எங்கள் கிராமம் புரிந்த சாதனைகளின் விவரம் வருமாறு:-

எங்கள் பஞ்சாயத்தில் 8வார்டுகள் உண்டு ஜனத்தொகை 1205, முக்கிய தொழில் விவசாயம். நீர்பாசன வசதிக்கு 6 மானவாரிக் குளங்களும் மற்றபடி தோட்டக்கிணறுகளும் தான். ஆகவே வெகுவாகப்பாடுபட்டு விவசாயத்தில் முன்னேற்றம் காணவேண்டியதிருக்கிறது. நவீன விவசாய முறைகளை பின்பற்றியும், கம்போஸ்ட் உரம்தயாரித்தும், ரசாயன உரங்கள் விநியோகித்தும் நடைமுறை விளக்கங்கள் அளித்தும், கிராமமக்களின் விவசாய அறிவையும் ஆற்றலையும் பெருக்கியிருக்கிறோம். கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் 18 டன் உரங்கள் விநியோகித்திருக்கிறோம். 325 கிலோக்கள் பொறுக்கு விதைகளை கொடுத்திருக்கிறோம். சுமார் 2700 ராத்தல் பூச்சி மருந்து உபயோகப்படுத்தியும் 2000கிலோக்கள்வரை எலும்புத்தூள் உபயோகித்தும், 56 கம்போஸ்ட் குழிகள் தயாரித்தும், 3 வரப்பு கலப்பை முதலிய கருவிகள் அளித்தும் குழிகள் தயாரித்தும், 8 செயல் முறை விளக்கங்கள் கொடுத்தும் விவசாயத்தை ஊக்குவித்திருக்கிறோம். இதன் பயனாக கடந்தஆண்டில் மட்டும் முக்கிய பயிர்கள் சாகுபடி விவரம் பின்வருமாறு;

| | ஏ. | செ. |
|---|---|---|
| நெல் | 556 | 43 |
| சோளம் | 99 | 24 |
| சிறுதானியங்கள் | 224 | 26 |
| கேப்பை | 91 | 27 |
| காணம் | 40 | 31 |
| மிளகு சாகுபடி | 113 | 80 |
| பருத்தி (கம்போடியா) | 129 | 66 |
| சோள நாற்று (கால்நடை உணவு) | 127 | 29 |
| வேர்க்கடலை | 159 | 37 |
| வாழை | 25 | 78 |
| எள் | 44 | 44 |

எங்கள் கிராமத்தில் 1236 கால் நடைகள் உள்ளன. அத்துடன் கோழிகளின் தரத்தை பெருக்க 10ஜாதி சேவல்கள் சர்க்கார்உதவியுடன் கொடுக்கப்பட்டன.

சர்க்கார் பண வசதியுடனும் கூட்டுறவு சங்கத்தின் உதவியுடனும் 27 பம்பு செட்டுகள் மின்சார வசதியில் அமைக்கப்பட்டன. முதியோர் கல்விமுறையில் 18 பேர் கல்வி பயிலுகின்றனர். ஒரு இளைஞர் சங்கமும்அண்மையில் நிறுவி இருக்கிறோம். உறிஞ்சும் சாக்கடைகள் மற்றும் சுகாதாரவசதிகள் நன்கு செய்திருக்கிறோம். எங்கள் கிராமத்தில் மாதர் சங்கம் ஒன்று அமைத்திருக்கிறோம், ஒருபாலம் கட்டப்பட்டது. சமூகக்கல்வி திட்டத்தில் ஒரு ரேடியோ பெற்றிருக்கிறோம். கடந்த ஆண்டுகளில் ரூ. 5447 அளவில் அரசாங்க பண உதவிபெற்று பல பொது மராமத்து வேலைகள் செய்திருக்கிறோம்.

எங்கள் கிராமத்திலிருக்கும் கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் வீட்டுக்கொரு நபர் கூட்டுறவு இயக்கத்தில் சேர்த்து ஒரு கூட்டுறவு பண்டகசாலையும் அமைக்க திட்டமிட்டிருக்கிறோம். வணக்கம்!

# பஞ்சாயத்தின் பஞ்சசீலங்கள்.

பஞ்சாயத்து என்ருல் ஐந்துபேர்கொண்ட ஒரு குழு என்று பொருள். அப்பஞ்சாயத்தில் ஐந்து அம்சங்கள் இருக்கவேண்டியது அவசியம்;-

### 1 அன்பு

கிராமப் பஞ்சாயத்தின் "உறுப்பினர்"களில் அன்பும் ஒன்று. கிராமம் முழுவதும் ஓரேகுடும்பமாக இருக்கவேண்டும். அன்புக் குடும்பத்தை அமைக்கும் பணி அன்பின் உருவிலேயே நடைபெற வேண்டும். கிராமத்தில் ஏதோ சிறிதளவு அன்பு நிலவுவது உண்மைதான். ஆனல் வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளேயே அது அடைபட்டுக் கிடக்கிறது. "இவன் என் மகள்; இவன் என் மனைவி" என்று அத்துடன் நின்றுவிடுகிறது ஆனல் இதுபோதாது. கிராமம் முழுவதுமே ஓரே குடும்பமாக ஆகிவிடவேண்டும்.

### 2 அஞ்சாமை

கிராமப்பஞ்சாயத்தின் அடுத்த "உறுப்பினர்" அஞ்சாமையாகும். இன்ரே எங்கும் அச்சத்தையே காண்கிறோம். விவகாரங்கள் அனைத்தும் அவநம்பிக்கையின் பேரிலேயே நடக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை என்ற மிகப்பெரிய ஸ்தாபனம் இருக்கிறது. எல்லா நாடுகளின் பிரதிநிதிகளும் ஒன்ருக உட்கார்ந்து உலகத்தில் சமாதானம் நிலைநாட்டுவது எவ்வாறு என்பதைப்பற்றி ஆலோசனை செய்வார்கள். ஆனல் அவர்களிலேயே ஒருவரையொருவர் நம்புவதில்லை. ஒவ்வொருவரும் மற்றவரிடம் பயப்பட்டுக்கொண்டே இருக்கிருர்கள். கிராமப்பஞ்சாயத்தில் இத்தகைய விஷயங்கள் நடக்கவேகூடாது. அச்சத்திற்கு இடமே இருக்கக்கூடாது.

### 3 அறிவாற்றல்

கிராமப்பஞ்சாயத்தின் மூன்ருவது அம்சம் அறிவாற்றல், இன்று கிராமங்களில் கல்வியறிவேயில்லை. கொஞ்சம் படித்தவர்களும் கிராமத்தைவிட்டு நகரத்திற்கு ஓடியேவிடுகிருர்கள். பல்கலைக்கழகங்கள் இருந்தயிடத்தைவிட்டு அசையாத அமைப்புகள். ஆனல் அறிவைப் பரப்புவதோ தீவிரமாக நடைபெறவேண்டிய ஒரு திட்டம். இன்று கிராமங்களுக்கு அறிவாற்றலைக் கொண்டு போவதற்கான திட்டம் எதுவுமேயில்லை கிராமத்தின் பஞ்சாயத்தின் உறுப்பினர்களில் ஒன்று அறிவாற்றல், அது அனைவருக்கும் கிடைப்பதாக இருக்கவேண்டும்.

### 4 கைத்தொழில்

பஞ்சாயத்தின் நான்காவது உறுப்பினர் கைத்தொழில். இன்று கிராமங்களில் கைத்தொழில்களே நடைபெறவில்லை. விவசாயத்தைக்கொண்டுமட்டும் இந்தியாவில் கிராமங்களின் வாழ்க்கை எவ்வாறு நடைபெறமுடியும்? விவசாயத்துடன்வேறு துணை தொழில்களும் நடைபெறவேண்டும். கிராமக் கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்கு சங்கற்பம் செய்துகொள்ளவேண்டும். எல்லா கிராமங்களிலும் அனைவருக்கும் அடிப்படையான தேவை துணி. ஒவ்வொருவருக்கும் குறைந்தது 15 கஜம் துணியாவது. தேவை. இதை கிராம பஞ்சாயத்தே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.

### 5 துப்புரவு

தூய்மைதான் பஞ்சாயத்தின் ஐந்தாவது உறுப்பினர் மனிதர் வாழும் இடங்களையெல்லாம் மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் அங்குமிங்கும் அசுத்தங்கள் கிடக்கும்படி விடக்கூடாது. இதனல் அசங்கியம் குறைந்து ஈக்கள் மொய்ப்பதும் இல்லாமற்போய்விடும். இன்றுள்ள நிலைமை என்ன?......கிராமவாசிகளை நோயிலிருந்து காப்பது யார்? அரசாங்கத்தின் டாக்டர்களா? இல்லை சுத்தம்தான் சிறந்த டாக்டர். தண்ணீர், சுற்றுப்புறம் வீடுபோன்ற எல்லா துறைகளிலும் சுத்தம் துப்புரவு இருக்க வேண்டும். கழிவுப்பொருள்களை சரியான முறையில் அகற்றவேண்டும். கண், காது உடை ஆகிய அனைத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

ஆசார்ய விநோபாஜீயின் தலையங்கத்தின் சாராம்சம். (கிராமராஜ்யம்: 24-8-62)



# மருதங்கிணர் பஞ்சாயத்து.

திரு. R. சண்முகத் தேவர்,

தலைவர்.

"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்"

என்ற வள்ளுவன் வாழ்மொழிக்கிணங்க கிடைப்பதற்கரிய காலம் வந்து வாய்க்குமானல் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்கள் புரியவேண்டும். நாளை வாழ்வேன் என்பது அறியாமை. இன்று வாழ எண்ணுவதுகூட காலம் கடந்த எண்ணமே நேற்றே வாழத் தொடங்கினவர் அறிவுடையோர், என்று கற்றறிந்தவர் கூறுவர். இன்றைய அரசியல் முறையில் மக்களின் வாழ்வுத் திட்டத்தை மக்களே வகுத்து மக்கள் மன்றத்தில்நிறைவேற்றி மக்களாட்சியில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நியதி ஏற்பட்டுவிட்டதால், புதிய சமுதாய திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்து சபைக்கு பெருவாரியாக பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. 1175 பேர் ஜனத்தொகை கொண்ட எங்கள் கிராமங்களில் பஞ்சாயத்து ஆட்சி நடத்திவரும் எங்களுக்கு விழிப்புடனே இருந்து மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை வழிவகுத்துச் செயல்படச் செய்வதே எங்கள் முக்கிய நோக்காகும்.

எங்கள் பஞ்சாயத்து மருதங்கிணர் கிராமத்தில் அலுவலகம் உடையது. சுமார் 3 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. எங்கள் கிராமங்கள் பெரும்பாலும் நெடுஞ்சாலைகளுக்கு மிகவும் விலகி பஸ் போக்குவரத்துக்கு மிகவும் அப்பாற்பட்டதாயிருக்கின்றன. ஆகவே எங்கள் கிராமங்களில் நகரங்களில் நிலவிவரும் இன்றைய நாகரீகச்சின்னங்கள் குறைந்தேதான் இருக்கும். எனினும் கடும் உழைப்பும் கண்ணும் கருத்துமாய் தொழில் செய்துவரும் தன்மை அதிகம தெரிய வல்லது. உழைப்புக்கு பெயர் பெற்றமறவர் சமுதாயமும் ஹரிஜன சமுதாயமும ஒருங்கேயமையப் பெற்ற கிராமம் விவசாயம் தான் இங்கே பிரதான தொழில். ஒரு குளம்தான் பாசன வசதிக்கு சில சமயங்களில் மட்டுமே கிடைக்கக் கூடியது. ஆகவே கிணற்றுப்பாசனத்தையேதான் வெகுவாகநம்பியிருக்க வேண்டியதாகயிருக்கிறது. எங்கள் பஞ்சாயத்து எல்கைக்குள் சுமார் 400 கிணறுகள்வரை பராமரித்து வந்துள்ளோம். சீர்திருந்திய விவசாய முறைகளைப் பின்பற்றியே கடந்த சில ஆண்டுகளாக முயற்சி செய்ததில் சாகுபடி வெகுவாக அதிகரித்திருக்கிறது. கம்போஸ்ட் உரத்தின் அவசியத்தை நன்கு உணர்த்தி இயற்கை உரத்தின் உபயோகத்தை அதிகரிக்க செய்திருக்கிரும். சிறு கிராமங்களாக இருந்தாலும் திருந்திய விவசாயம் மக்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளது. தற்போதைய சாகுபடி விவரம் பின்வருமாறு:

| | எக்கர் |
|---|---|
| நெல் | 100 |
| சோளம் | 150 |
| கம்பு | 70 |
| கேப்பை | 100 |
| பருத்தி | 25 |
| மற்றவை | 40 |

விளைச்சலை மேலும்பெருக்க முயற்சிசெய்து வருகிரும்.

எங்கள் கிராமம் சற்று பிற்போக்கான கிராமமாயிருப்பதனால் பொருளாதார வசதிகள் மிகக்குறைவு. எனவே மக்களின் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் ஆக்க சக்தியையுங்கொண்டேதான் நாங்கள் முன்னேற்றம் காண விழைகிறோம்.

சென்ற ஆண்டில் எங்கள் பஞ்சாயத்தில் அரிஜனங்களுக்கென ஒரு குடிதண்ணீர் கிணறும், மறவர்களுக்கென ஒரு குடிதண்ணீர் கிணறும புதிதாக அமைத்திருக்கிறோம்.

எங்கள் கிராமங்களில் பனையும், தென்னையும் ஆங்காங்கே வைத்திருக்கிறோம் பெரும்பாலும் செவல் தரையானபடியால் எங்கள் விவசாயத்தில் வாழையும் நெல்லும் அதிகமாகப் பயிரிடமுடியும்.

எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நாணயசங்கம் செயலாற்றி வருகின்றது. அண்மையில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் முழுக்கடன் உதவி திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவந்துள்ளபடியால் இனி ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு நபர் கூட்டுறவு சங்கத்தில்சேர்ந்து விவசாயத்திற்கு தேவையான பணவசதிகள் பெறவிருக்கிறது. எனவே நடப்பு ஆண்டுகளில் எங்கள் கூட்டுறவு சங்கம் நன்கு செயல்பட்டுவரும என்பதற்கு சற்றும் ஐயமில்லை.

மக்கள் ஆட்சியின் அடிப்படை ஆதாரம் கிராமப்பஞ்சாயத்து. கிராம மக்களின் கல்வித்தரம் வாழ்க்கைத்தரம் இவை உயரப்பெறின் நாட்டின் சுபிட்சம் மேலோங்கி வளரும். ஆகவே கல்வித்தரத்தை உயர்த்த எங்கள் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளும் ஆசிரியர்களும் நன்கு பாடுபடுகின்றனர். கிராம மக்களும் நன்கு ஒத்துழைத்து பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதில் அதிகக் கவனம செலுத்துகிறோம் எங்கள் கிராமங்களில் திருமலாபுரம், சிவஞானியாபுரத்தில் T. D. T. A. மிஷன் பள்ளிகள் உள்ளன. மருதன்கிணற்றில் 7 வகுப்புகள் கொண்ட பஞ்சாயத்து யூனியன் பள்ளியுள்ளது. அதில் சேவை செய்துவரும் இரண்டு ஆசிரியைகளுக்கு, பொதுஜன உதவியும், வட்டார அபிவிருத்தி உதவியும் பெற்று, வசிப்பதற்கு இரண்டு வீடுகளும் கட்டிக்கொடுத்திருக்கிறோம்.

அண்மையில் நமது மாநில முதலமைச்சர் கூறியுள்ளபடி ஆரம்பக்கல்வி நன்கு புகட்டுவதில் ஆசிரியைகள்பால் குழந்தைகளை கல்வி கற்கவிடுதல் சாலச்சிறந்தது என்பதை நாங்கள் நடப்பில் உண்மையெனக் காண்கிறோம். எனவே எங்கள் கிராமங்களில் ஆசிரியைகளுக்கு வசதிகள் அதிகம கொடுக்கும் அளவில்தான் மேற்கண்டவாறு குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம்.

கிராம முன்னேற்றத்தில் பெண்கள்தான் அதிகபங்கு வகிக்கின்றனர். பெண்கள் சமுதாயம் உயர்ந்தால் நாட்டின் வருங்காலப் பிரஜைகளான சிறுர்கள் நல்லமுறையில் பழக்கப்பட்டு நாட்டுச்சேவைக்கு உறுதுணையாக உள்ளவராவார்கள். எனவேஒரு மாதர் சங்கமும் எங்கள் கிராமத்தில் நிறுவியிருக்கிறோம். பெண்களுக்கு உபரி வருமானம் பெருகும்வகையில் தையற்கலை கற்றுக்கொடுக்க அரசாங்க பணஉதவியுடன் ஒரு தையல் இயந்திரமும் வாங்கிக்கொடுத்திருக்கிறோம்.

அன்றாட கடும் உழைப்பிற்குப்பின் ஓய்வு மிக அவசியம் ஆகவே வானொலிப்பெட்டி வசதியும் ஒரு மனமகிழ் மன்றமும் கட்டியுள்ளோம். நாட்டின் முன்னேற்றத்திற்கான செய்திகளையும், நாட்டின் தலைவர்கள் நிர்வாகிகள் கல்விமான்களின் அறிவூட்டும சொற்பொழிவுகளையும் நன்மொழிகளையும் அன்றாடம் தெரிந்துகொண்டு நல்லமுறையில் கிராம வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள வாய்ப்புஏற்படுகிறது. தவிர வாரந்தவறுமல் பிறமாவட்டங்களின் அபிவிருத்தி ஆக்கவேலைகளைப்பற்றிய சொற் சித்திரங்களை சுலபமாகக்கேட்டு விவாதித்துக்கொள்ளவும் முடிகிறது.

மனித ஆக்கவேலைத்திட்டம் நமதுமாவட்டத்தில் கடந்த ஆண்டு பரீட்சார்த்தமாகக் கொண்டுவந்தபோது, நமது பஞ்சாயத்து யூனியன்தான் பிரத்தியேகமாக தேர்ந்தெடுத்து வெற்றியும் கண்டனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

சிறு அளவில் அரசாங்கத்தினரிடமிருந்து பணஉதவி பெற்று, குடும்பத்துக்கொரு நபராக முன்வந்து ஆக்கவேலையில் ஈடுபட்டோம். எங்கள் பஞ்சாயத்தைப்பொறுத்தவரையில் மருதங்கிணற்றிலிருந்து மகேந்திரவாடி வரையிலும் $1\frac{1}{2}$ மைல்நீள ரஸ்தா மேற்படி திட்டத்தில் அமைத்தோம் இந்த வேலை ரூ. 5000-க்கு மேல் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக சிறு செலவுகளுக்கென நாங்கள் பெற்றது ரூ 3000 அளவில்தான் எனினும் சிதறிக்கிடக்கும் மனித ஆக்க சக்தியை ஒருங்குசேர்த்து சிக்கனமாக மகிழ்ச்சியூட்டும் வகையில் நாங்கள் ஒரு மகத்தான சாதித்துவிட்டோம் என்றால் இனி வருங்காலத்தில் இதே திட்டத்தை நன்குவிரிவுபடுத்தி மேலும் ஆக்கவேலைகளை இதினும் பன்மடங்கு விகிதத்தில் லாபகரமாக செயலாற்ற கிராமங்களின் பொருளாதார நிலையையும சீர்படுத்த ஏதுவாகும் என்பதில் சற்றும்ஐயமில்லை. இதை அரசாங்கம் நன்குபயன்படுத்துமென்று நம்புகிறேன்.

மேற்சொல்லிய பல கிராமப்பணிகளும் சீர்திருத்தங்களும் செய்தும்கூட எங்கள் கிராமங்களில் தேவைகளும் குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. எங்கள் கிராமத்தைச்சுற்றிலும் கண்மாய்க்கரையேதான். அதன் மத்தியில் அநேகமாக ஒரு சிறுதிட்டு போன்றுதான் எங்கள் கிராமம் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் கண்மாயில் தண்ணீர் பெருகும்பொழுது, கிராமம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. இதற்கு ஓரளவில் பரிகாரம் காணவேண்டியது அவசியம். இது தவிர, எங்கள் கிராமத்தை முறையே பழங்கோட்டையுடனும், நீலிதநல்லூருடனும் இணைத்து ரஸ்தாக்கள் போடவேண்டியது அத்தியாவசியமாகும்.

இவையெல்லாம் நடப்பு ஆண்டுகளில் செயலாக்க எங்கள்பஞ்சாயத்து தீர்மானம் கொண்டுள்ளது, அண்மையிலேயே எங்கள் கிராமங்கள் அதிக அளவில் முன்னேற்றங்கண்டு பிறகிராமங்களுக்கு சரிநிகராய்த் திகழ இறைவன் அருள் புரிவாராக.

வாழ்க கிராமஆட்சி! வளர்க மக்கள் நலம்!!

PHILIPS

MAESTRO



Price: Rs. 795/- net
(exclusive of all taxes)

B6CA67A (AC) 7 Noval Type valves, 5 Wave bands with Bandspread

PHILIPS novosonic RADIO

A NEW WORLD IN SOUND

Authorised Radio Dealer

சுவாமி அன் கோ;

பிலிப்ஸ் ரேடியோ, கிராமபோன் எலெக்டிரிக்கல்ஸ் டீலர்ஸ்,

கோவில்பட்டி.

எங்களிடம் பிலிப்ஸ் ரேடியோக்கள் விலை ரூ. 135/- முதல் ரூ. 1020/- வரையிலுள்ள எல்லா மாடல் ரேடியோ செட்டுகளும் ஸ்டாக் இருக்கின்றன. ஒரு முறை விஜயம் செய்து பிடித்தமான ரேடியோவை வாங்க வேண்டுகிறோம்.

எல்லாவிதமான எலெக்டிரிக் சாமான்களும் கிராம்டன், கேஸில்ஸ், ஓரியண்ட், உஷா சீலிங் & டேபிள் விசிறிகளும் ரெடி ஸ்டாக் இருக்கின்றன. தங்கள் தேவைக்கு உடன் சப்ளை செய்கிறோம்.

பேட்டரி சார்ஜும், ரேடியோ சர்வீஸும் குறித்த காலத்தில் செய்து தருகிறோம்.

தங்கள் அன்புள்ள,

C. இராமகிருஷ்ணன்,
கோவில்பட்டி.

# முழுக்கடன் உதவித் திட்டம்.

முழுக் கடன் திட்டம் என்பது விவசாயிகளின் குறுகிய மத்திய காலக் கடன் தேவைகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே அவர்களது கடன் தேவைகள் அனைத்தையும் வழங்கி உதவுவதன் வாயிலாக விவசாய உற்பத்தியை அதிகரிக்க தக்கதொரு வாய்ப்பை ஏற்படுத்துவதென்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டம் குருவிகுளம் வட்டாரத்தில் 1-9-62முதல் அமுல் செய்யப்பட்டிருக்கிறது

அத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

1) முழுக்கடன் திட்டத்துக்காக தேர்ந்தெடுக்கப்படும் பிரதேசம் பூராவும் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமங்களில் அவைகள் ஏற்படுத்தப்படும் அல்லது ஏற்கனவே உள்ள சங்கங்களின் விவகாரம் எல்லைகளை அந்த கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படும்.

2) எல்லா விவாசயக் குடும்பக்ளும் நிலச் சொந்தக்காரர்களானாலும் சரி, அல்லது குத்தகைதாரர்களாயினும் சரி. கூட்டுறவு சங்கத்தினுள் கொண்டுவரப்படும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்தது ஒரு நபராவது கூட்டுறவு சங்கத்தினுள் சேர்க்கப்படுவர்.

3) விவசாய உற்பத்திக்காக குடியானவர்களுக்கு தேவையேற்படும் கடன் முழுவதையும் (குறுகிய, மத்திய காலக் கடன்கள் ஆகியவைகளை) நிர்ணயந் செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவை வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கூடிய மட்டில் உரம்போன்ற சில விவசாயத்தேவைகளை பொருள்களாகவே விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

4) குடியானவர்களின் விவசாய உற்பத்திப் பொருள்களை விற்றுத் தருவதில் விற்பனை சங்கங்கள் வேண்டிய உதவியைச் செய்யும்.

ஒள்வொரு அங்கத்தினருக்கும் விவசாய உற்பத்திற்குத்தேவையான கடனை கணக்கிட்டு அவர் நிலச் சொந்தக்காரராயிருந்தாலும் கரி. அல்லது குத்தகை விவசாயியாயிருந்தாலும் சரி. அதைப் பொருட்படுத்தாமல் வேண்டிய அளவு கடனை வழங்கக் கூட்டுறவு சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ரூ 1000 வரையிலுள்ள கடன்கள் நபர் ஜாமீனின் பேரிலும், ரூ 3000 வரையுள்ள கடன்கள் நில அடமானத்தின் பேரிலும் வழங்கப்படும்.

கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சொத்து மதிப்பு குறைந்தவர்களுக்கும். சொத்து இல்லாதவர்களுக்கும் வழங்கப்படும் கடன்களினுல் ஆபத்து ஏற்படலாமென்பதை உத்தேசித்து அரசாங்கமானது கூட்டுறவு சங்கங்கள் கொடுக்கும் மொத்த குறுகிய மத்திய காலக் கடன்களில் 10 சதமானம் வரை உத்திரவாதம் அளிக்க ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த மொத்த அளவுக்குட்பட்டு ஒவ்வொரு தனி நபர் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ¾ பங்கு நஷ்டத்தை ஈடு செய்ய அரசாங்கம் ஏற்றுள்ளார்கள்.

ஆகவே விவசாயிகள் ஆங்காங்குள்ள கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர வேண்டும். இது சம்மந்தமாய் கடன் மனுக்களை பரிசீலனை செய்து தாமதமன்ளியில் உடனுக்குடனே கடன் வழங்க ஏற்படும் அதிக வேலைகளை முன்னிட்டு அதிகப்படியாக மேற்பார்வையாள்ர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த அதிகச் செலவை சமாளிக்க் கூட்டுறவு மத்திய பாங்கிற்கு அரசாங்கம் விசேட மான்யம் அளித்துள்ளது.

முழுக் கடன் திட்டம் அமுலிலிருக்கும் பிரதேசத்தில் தக்காவிக் கடன்கள் (குறுகிய, மத்திய கால, நீண்ட கால அரசாங்க கடன்கள்) கொடுக்கக் கூடாதென்பதாக அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது. ஆனால் கீழ்கண்ட அரசாங்கக் கடன்கள் இதற்கு விதிவிலக்காகும்.

நில அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பிளாக் பட்ஜெட்டில். நீர்ப்பாசனம், நில அபிவிருத்திகளுக்காக வழங்கும் கடன்களில், மான்யம் பற்றிய அம்சங்கொண்ட கடன்கள் புதிய கிணறுகள் வெட்டும் திட்டத்தின் கீழ் மான்ய உதவி கொண்ட கடன்கள் ஆகியவை'



# வடக்குப்பட்டி பஞ்சாயத்து.

திரு. இராஜகோபாலசாமி நாயக்கர்,

தலைவர்.

"விடுதலை நம் உடைமை ஆக வேண்டுமானல் அது கட்டப்படுத்த வேண்டும். ஆயினும் இக்கட்டுப்பாட்டை சமூகம் எவ்வளவு குறைந்த அளவு சகித்துக்கொள்ளும் என்பதே ஒவ்வோர் அறிவுடையோர் குழுவும் இடைவிடாது கவனிக்க வேண்டியவிஷயம்" என்று எங்கோ படித்ததாகவோ, கேட்டதாகவோ ஞாபகம். ஆகவே எங்கள் கிராம ஆட்சியில் ஆளும் சுதந்திரத்தை வழிவகுத்துக்கோட்பாடுடன் நாடுநலம்பெற உழைக்க வேண்டுமென்பதே எங்கள் அவா. இந்த கருத்துடனேயேதான் நாங்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தில் பங்குகொள்கிறோம். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது என்றும் மறக்கற் பாலதன்று. இனி எங்கள் கிராம வாழ்க்கையின் அம்சத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள், பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றியில் மூன்ருவது மைல்கல்லை அடையும் இத்தருணத்தில், கூற விரும்புகிறேன்.

எங்கள் கிராமம் கோவில்பட்டி-பருவக்குடி ரஸ்தாவில் 9-ஆவது மைலில் வானரமுட்டிக்கு பிரியும் ரஸ்தாவில் 1-ஆவது மைலில் உள்ளது. 1138 ஜனத்தொகையும் 4 சதுரமைல் விஸ்தீரணமும் கொண்டுள்ளது. புராதன கிராமமாகிய இளையரசனேந்தல் கிராமத்திலிருந்து 1¼ மைல் தூரத்திலுள்ளது. சுமார் 2000 ஏக்கர் விவசாய நிலங்களில் 1500 ஏக்கர் வரை விவசாயம் செய்து வருகிறோம். அதில் புஞ்சை சாகுபடி 1200 ஏக்கர் வரையுள்ளது. சுமார் 5 ஏக்கர்தான் நஞ்சை. மிகுதி மானவாரிப் பயிர்தான். எங்களுக்கு விவசாயம்தான் பிரதானத்தொழில் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி வருகிறோம். எங்கள் கிராமத்தில் சுமார் 150 பேர் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருந்து வருகிறர்கள்.

கிராமத்தில் பெரும்பாலோர் எளிய விவசாயிகள். ஆகவே கூட்டுறவு சங்கத்தின் மூலம் ஒரு கிட்டங்கி கட்டமுயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவ்வாறு கிட்டங்கி கட்டி முடிக்கப்பட்டால் விவசாயிகளின் தானியங்களை சேகரித்து வைத்து சொற்ப வட்டியில் 70 சதவிகிதம் வரை ஈட்டுக்கடன்கள் வழங்கி நல்ல விலை ஏற்படும் வரையில் மேற்படி கிட்டங்கியில் விவசாயப்பொருள்களை பாதுகாத்துக்கொடுக்க எண்ணியிருக்கிறோம். கிராமத்தின் மத்தியில் இருக்கும் புறம்போக்கு நிலத்தில் 17 செண்ட் வரை சங்கத்தின் பெயரால் பராதீனம் செய்யக் கோரியிருந்தும் எங்கள் கோரிக்கைகள் நிறைவேறவில்லை, கிராமத்தில் பெரிய நிலச் சுவான்தார் ஒருவர் மூலம் வேறு நிலம் ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடுகளை ரெவின்யூ இலாகா மேற்கொண்டிருக்கிறது. மேற்படி பெரிய நிலச்சுவான்தார்கள் வசத்திலிருக்கும் நிலத்திலாவது அல்லது மேற்படி புறம்போக்கு நிலத்திலாவதுதான் கிட்டங்கி கட்ட மனை ஏற்படவேண்டும். இதைத்தவிர கிராமத்தில் வேறு இடம் கிடையாது. எங்கள் கிராமத்திற்கு சென்ற ஆண்டு இந்த விஷயமாய் விஜயம் செய்து கனம் கோட்டாட்சி தலைவர் கிராமப் பிரமுகர்களைக் கண்டு விவரமாய் பரிசீலனை செய்தார்கள். ஆகவே நடப்பு ஆண்டில் ஒரு நல்ல முடிவு ஏற்படுமென்று நாங்கள் வெகு ஆவலாக எதிர்பார்க்கிறோம். தவிர முழுக்கடன் உதவித்திட்டம் செயல்பட ஆரம்பித்து விட்டால் குடும்பத்திற்கு ஒரு நபர் சங்கத்தில் சேர்ந்து குடும்ப பொருளாதாரத் தேவைகளை சங்கத்தின் மூலம் கொடுத்து, அவர்களுடைய விவசாயப் பொருள்களை இருப்ப

ஏக்கர் கம்பு சாகுபடி. கேப்பை தானியம் வகையராகவும் கொஞ்சம் பயிர்செய்கிறோம்.

சுமார் 1924 கால்நடை எண்ணிக்கையுள்ள எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு பால் பண்ணை நடத்தினால் நல்ல முன்னேற்றம் காணலாம். ஏற்கனவே எங்கள் கிராமத்தில் 202 உறுப்பினர்கள் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனம் உள்ளது. இந்த ஸ்தாபனத்தில் ரூ 12000 மதிப்பில் ஒரு கிட்டங்கி கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். நடப்பு ஆண்டில் இதற்கென சர்க்கார் கடன்மான்ய வசதிகள் ரூ 10000 வரையில் வரவிருக்கிறது.

சுகாதார வசதிகளைப் பொறுத்த வரையில் எங்கள் பஞ்சாயத்தில் முக்கியமாக 8 குடி தண்ணீர் கிணறுகள் நிறுவி இருக்கிறோம். முதியோர் கல்வித் திட்டத்தில் சென்ற இரண்டு ஆண்டுகளில் 12 ஆண்களும், 8 பெண்களும் கல்வி கற்றிருக்கின்றனர். ஒரு வாசகசாலை, ஒரு இளைஞர்சங்கம் ஆகிய இவை ஆரம்பித்து நன்கு செயல்பட்டு வருகின்றன. ஒரு மாதர் சங்கமும் இருக்கிறது. எங்கள் பஞ்சாயத்தில் உள்ள 3 ஆரம்பப் பாடசாலையில் 240 சிறுவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

சமுதாய அபிவிருத்தி திட்டம் ஆரம்பித்த சிலஆண்டுகளில் மட்டும் ரூ 4914 அளவில் சர்க்கார் மான்யம் பெற்று பல பொது மராமத்து வேலைகளைசெய்து முடித்திருக்கிறோம். கடந்த இரு ஆண்டுகளாக போக்குவரத்து வசதிகளிலும் எங்கள் பஞ்சாயத்து முன்னேற்றம் கண்டிருக்கிறது. 50 கெஜ நீளம் ரஸ்தா அமைத்திருக்கிறோம். எங்கள் கிராமத்தில் இப்பொழுது மின்சார வசதி உள்ளது.

கதர் இயக்கத்திலும் எங்கள் கிராமம் சற்றும் பின்வாங்கியது அல்ல. 120 சர்க்காக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் கிராமம் முன்னேற்றம் காண எந்த அபிவிருத்தி திட்டத்தையும் எப்போதும் நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

வாழ்க காந்தீயம்! வளர்க நம் நாடு!!


**பாத்திமா**

**மேச் இண்டஸ்ட்ரீஸ்**

**சிதம்பராபுரம்.**




எல்லோரும் விரும்புவது

**மணி மார்க் தீப்பெட்டி**

உரிமையாளர்:

**S. M. M. மரியமிக்கேல்,**

பாத்திமா மேச் இண்டஸ்ட்ரீஸ்

சிதம்பராபுரம்.

டிப்போ:

புளியங்குடி
சேர்ந்தமரம்
சொக்கநாதன்புத்தூர்
சங்கனச்சேரி




வரவேற்பில் சபாநாயகர் திரு. S. செல்லப்பாண்டியன் உரை நிகழ்த்துகிறார். பஞ்சாயத்து யூனியன் தலைவர் தலைமையில்.



புதூர் ஹரிஜனக் காலனிக்கு அஸ்திவாரக் கல் நாட்டு விழா நடைபெற்ற போது திரு. M. முத்துக்காமாட்சி ஜில்லா ஹரிஜன நல அதிகாரி.



ஆக்கப்பணியில் ஈடுபட்டுள்ள வெள்ளாகுளம் இளைஞர் விவசாய சங்க உறுப்பினர்கள் தலைவர் திரு. சுப்பா நாயக்கருடன்



ராமலிங்கபுரத்தில் கோட்டாட்சித் தலைவர், திரு. D.சீதாராமன் பஞ்சாயத்துதலைவருடன் ஆக்கவேலையை கண்டு மகிழ்ச்சியுறுகிறார்.



நடுவபட்டியில் ஆக்கவேலைத் திட்டத்தை துவக்கி வைக்கும் யூனியன் தலைவர் திரு. S. சங்கரப்ப நாயுடு ஊர்வாசிகளுடன்.



வெள்ளாகும் விவசாய உற்பத்தித் திட்டம் நிறைவேறிய போது கமிஷனர் திரு.S.நம்பியுடன் ஜில்லா விவசாயஅதிகாரி



குருவிகுளம் மாதர் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்கள்.



கோவில்பட்டி தலைவர் திரு. D. சீதாராமன் பஞ்சாயத்துத் தலைவருடன் விவாதிக்கிறார். வெள்ளாகுளத்தில் 30—7—61.



குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் கோழிப்பண்ணை.



பஞ்சாயத்து யூனியன் தலைவர் நடுவபட்டியில் ஊராட்சி மன்ற உப தலைவர் திரு சீனி நாயக்கருடன் ஆக்க வேலையை ஆய்வு நடத்துகிறார்.



குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்கள் நெல்லையில் நடந்த பஞ்சாயத்து வளர்ச்சி மாநாட்டிற்கு செல்லும் வழியில்.



கணபதிபட்டியில் கோட்ட பஞ்சாயத்து அதிகாரியும், பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி C. சீதாராமனும்



# சத்திரப்பட்டி பஞ்சாயத்து.

**திரு. S. சண்முகசுந்தரத் தேவர்,**

**தலைவர்.**

எங்கள் பஞ்சாயத்தில், சத்திரப்பட்டி, குலசேகரப்பேரி, சுப்பையாபுரம் என்ற மூன்று ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. அதில் சத்திரப்பட்டியில் மட்டும், சத்திரப்பட்டி, குலசேகரன்கோட்டை, சுவாமிநாதபுரம் ஆகிய மூன்று மஜராக்கள் உள்ளன. சுமார் 2¼ ச. மைல் பரப்புகொண்ட எங்கள் பஞ்சாயத்து 1599 ஜனத்தொகை கொண்டது. அவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள் தாம். எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் 142ஏக்கர் நிலங்கள் சிறுபாசன குளங்களுக்குட்பட்டவை. மிகுதியில் 167 ஏக்கர் நிலங்கள் கிணற்றுநீர்ப்பாசனம் கொண்டு தான் செய்கிறோம். பாசன வசதிகள் தான் என்றாலும் எங்கள் கிராமமக்கள் வெகுவாகப்பாடுபட்டு மற்றுமொரு 1000ஏக்கரில் மானாவாரியாக விவசாயம் செய்ய வெகுவாகப்பாடுபடுகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஹரிசன மக்கள். எஞ்சி இருப்பவர்கள் மறவர். மற்றவர்கள் இதர ஜாதியைச் சேர்ந்தவர்கள். பருத்திதான் எங்கள் முக்கிய மகசூல். இருப்பினும் கடந்த 2 ஆண்டுகளில் 185ஏக்கர்வரை நெல்சாகுபடியும் நடத்தி வருகிறோம். பஞ்சாயத்து ஆட்சி செயல்பட்டபின் முக்கியமாக கடந்த இரு ஆண்டுகளில் திருந்திய விவசாய முறைகளை கிராம மக்களுக்கு பயிற்றுவித்ததின் மூலம் பருத்தி இதர தானிய வகைகள் வெள்ளாமை அதிகரித்து இருக்கிறது.

எங்கள் கிராமத்தில் கால் நடைகளின் எண்ணிக்கை சுமார் 2111. ரூ 100 அளவில் சர்க்கார் பண உதவி பெற்று கடந்தாண்டில் சுவாமிநாதபுர கிராமத்தில் ஒரு சிறுகோழிப் பண்ணை ஆரம்பித்திருக்கிறோம். இன அபிவிருத்திக்காக 10 ஜாதி சேவல்களும் எங்கள் கிராமங்களுக்கு கிடைத்திருக்கின்றன.

எங்கள் பஞ்சாயத்தின் மூலம் சிறு கட்டிட வேலைகள்செய்திருக்கிறோம். இப்பஞ்சாயத்தின் வருடவருமானம் ரூ 2433 அளவில் உள்ளது. எனவே அதிகம் செய்வதற்கில்லை.

எங்கள் கிராமத்தில் இரண்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் உள. அண்மையில் ஒரு கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது இதன் மூலம் சர்க்கார் கடன் பெற்று 30 பேர்களுக்கு வீடு கட்ட உத்தேசித்திருக்கிறோம்.

கூட்டுறவு சங்கங்களில் 198 மெம்பர்கள் உளர். ஹரிசன முன்னேற்றம் கருதி 20 வீடுகள் கொண்ட ஒரு காலனி ரூ. 15000 அரசாங்க உதவியுடன் ஏற்கனவே எங்கள் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதைத் தவிர குலசேகரப்பேரியில் 10 வீடுகள் கொண்ட மறவர் காலனியும் ஏற்படுத்தி இருக்கிறோம். ஒரு சமுதாய மனமகிழ் மன்றமும் கட்டியிருக்கிறோம். ஒரு மாதர் சங்கமும் ஆரம்பித்திருக்கிறோம். இதைத் தவிர சுவாமிநாதபுரத்தில் ஒரு அநாதை ஆசிரமம் 140மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதியுடன் நிறுவப்பட்டுள்ளது. திரு. S. ராமசாமி ரெட்டியார் இதை நல்லமுறையில் நிர்வாகித்து வருகிறார். எங்கள் கிராமத்தில் கதர் இயக்கம் நன்றாக வேரூன்றி வளர்ந்திருக்கிறது. சுமார் 45 நூற்பாளர்களும் உள்ளனர். சத்திரப்பட்டியில் சர்வோதய சங்கத்தின் மூலம் 20 அம்பர்சர்க்கா வாங்கி

கொடுத்திருக்கிறோம். எங்கள் பஞ்சாயத்தின் மூலம் 100 பலன் தரும் பழ மரங்கள் நட்டிருக்கிறோம். இன்னும் 5, 6, ஆண்டுகளில் பலனை எதிர்பார்க்கலாம்.

இயற்கை வசதி அதிகமில்லாத எங்கள் கிராமத்தில் கடும் உழைப்பினால் தான் முன்னேற முடியும் என்றிருப்பதால் ஆக்க சக்தியை வெகுவாக நம்பிஇருக்கிறோம். அதை முற்றிலும் பயன் படுத்தி கீழ்க்கண்ட ஆக்க வேலைகளை மக்கள் முயற்சியினால் கடந்த ஆண்டில் செய்து முடித்து இருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1 | குலசேகரன்கோட்டையிலிருந்து கோவில்பட்டி-பருவக்குடி நெடுஞ்சாலைக்கு ரஸ்தா 2 பர்லாங்குகள். | 1500 |
| 2 | சத்திரப்பட்டியிலிருந்து நெடுஞ்சாலைக்கு தெரு 2 பர்லாங்குகள் | 1000 |
| 3 | சுவாமிநாதபுரத்திலிருந்து டி நெடுஞ்சாலைக்கு ரோடு 3 பர்லாங்குகள் | 1500 |
| 4 | சத்திரப்பட்டி மேலத்தெரு ½ பர்லாங்கு | 600 |
| | | 4500 |

இதைத்தவிர சர்க்கார் உதவியுடன் 8 கிராம கக்கூஸ்கள் 10 நீர் உறிஞ்சுகுழிகள் கட்டப்பட்டுள்ளன. 3 புதுக்கிணறுகள் வெட்டப்பட்டன, 5 கிணறுகள் பழுதுபார்க்கப்பட்டன. எங்கள் பஞ்சாயத்தில் கடந்த இரண்டு ஆண்டில் ஒரு சமூகக்கல்வி நிலையமும், ஒரு இளைஞர் விவசாய சங்கமும் அமைக்கப்பட்டன.

நாங்கள் மேலும் மேலும் பாடுபட்டு எங்கள் பஞ்சாயத்தின் அபிவிருத்தியை பன்மடங்கு பெருக்க உறுதி பூண்டிருக்கிறோம்.

வாழ்க சமுதாயம்! வளர்க ஆக்கசக்தி!!


# ஜெயராம் மேச் ஒர்க்ஸ்,

இளையரசனேந்தல். (P.O.)

(வழி) கோவில்பட்டி.

கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு அடைமழை காலத்திற்கும் உத்திரவாதமுள்ள முறையில் தயாரிக்கப்படும் எங்கள் கம்பெனி தீப்பெட்டிகளை உபயோகியுங்கள்.

M. S. M. R. ஜெயராஜ்
உரிமையாளர்
ஜெயராம் தீப்பெட்டித் தொழிற்சாலை
இளையரசனேந்தல்.




# நாலாந்துலா பஞ்சாயத்து.

திரு. S. அழகிரிசாமி நாயக்கர்,
தலைவர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்" —திருக்குறள்.

எங்கள் பஞ்சாயத்தில் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக நாங்கள் எடுத்துள்ள பல முயற்சிகளில் விவசாய முன்னேற்றம் தலை சிறந்ததாகும். எங்கள் கிராமங்களில் சிறந்த முற்போக்கு விவசாயிகள் உள்ளனர் எங்கள் பஞ்சாயத்து அலுவலகம் வைத்துள்ள நாயக்கர்பட்டி கிராமத்தில் நாங்கள் கூட்டுறவு முறையில் ஒரு கூட்டு விவசாயப் பண்ணை நிறுவியிருக்கிறோம். சுமார் 127 ஏக்கர் நிலங்கள் சரிவரகவனிக்க முடியாமல் கிடந்ததை நாங்கள் கூட்டாகச் சேர்ந்து சம்பந்தப்பட்ட 11 நிலச்சுவான் தார்களைக் கொண்டு இந்த விவசாயப்பண்ணையை நிறுவியிருக்கிறோம். சர்க்காரிடமிருந்து இதுவரை ரூ. 27,200 வரையில் டி பண்ணைக்கு கடன் வசதிகள் அளித்திருக்கிறோம். மேலும் ரூ. 10,000ல் கிட்டங்கி கட்டவும், ரூ. 4000ல் மாட்டுத்தொழு அமைக்க சாங்கிஷன் ஆகியுள்ளது. டி பண்ணையில் தற்சமயம் ரூ. 13.000 அளவில் கிணற்று வேலை நடந்து 5 கிணறுகள் நடப்பு மாதத்தில் தயாராகிவிடும். இதற்கென பிரத்தியோக மின்சார வசதிபெற எங்களுக்கு ஓர் ஆண்டுக்கும் மேலாக தாமதமாகிவிட்டது. இல்லையெனில் தற்சமயம் குறிப்பிட்ட 127 ஏக்கரிலும் பூரண சாகுபடி நடந்து கொண்டிருக்கும். எங்கள் விவசாயப் பண்ணைக்கு மாடுகள் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும், பம்பு செட்டுகள் அமைக்கவும், அதற்கான கட்டிடங்கள் கட்டவும். மானியத்துடன் கூடிய கடன் வசதி கிட்டியுள்ளது. எங்கள் பண்ணையில், பண்ணை நிர்வாகத்திற்கென ஒரு கூட்டுறவு சீனியர் இன்ஸ்பெக்டரும், ஒரு விவசாய பீல்ட் மேனும் பணிபுரிகின்றனர். நாங்கள் நடப்பு ஆண்டில் அமோகமான விளைச்சலுக்கான தீர்மானம் கொண்டுள்ளோம்.

எங்கள் பஞ்சாயத்து மேல நாலாந்துலா, கீழ நாலாந்துலா, நாயக்கர்பட்டி, ஓடைக்கரைப்பட்டி என்ற கிராமங்கள் கொண்டுள்ளது. ஜனத்தொகை சுமார் 1970 விஸ்தீரணம் 5·82 சதுர மைல்கள். ஏறக்குறைய 1496ஏக்கர் நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வந்துள்ளோம். எங்கள் மொத்த ஜனத்தொகையில் சுமார் 800 பேர் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். 100 பேர்கள் நூற்புத்தொழில் செய்து வருகிறார்கள். மூன்று குளங்களும் 145 கிணறுகளும்தான் பாசன வசதிகள். நடப்புடில் அதிகமாக பம்புசெட்டுகள் அமைக்கத் தீர்மானித்துள்ளோம். எங்கள் பஞ்சாயத்தில் இரண்டு பள்ளிக்கூடங்களும் ஒரு ரேடியோ நிலையமும் கட்டுவித்திருக்கிறோம். இரண்டு கூட்டுறவு நாணயச் சங்கங்களை கடந்த 2 ஆண்டுகளுக்குள் அமைத்திருக்கிறோம். ஓர் இளைஞர் விவசாயசங்கமும் நிறுவி இருக்கிறோம்.

கால்நடை பராமரிப்பிலும் எங்கள் பஞ்சாயத்து சற்றும் பின் வாங்கியதல்ல. வாரம் தவறாமல் குறிப்பிட்ட நாளில் கால்நடை விஸ்தரிப்பு அதிகாரி எங்கள் கிராமத்திற்கு வந்து கால்நடைகளுக்கு மருத்துவ உதவி அளித்து வருகிறார்கள்.

சுகாதாதார வசதிகளும கடந்த 4 ஆண்டு களாக வெகுவாகப் பெருக்கியுள்ளோம். 24 நீர் உறிஞ்சும் குழிகள் நிறுவி, ஒரு குடி தண்ணீர் கிணற்றை செப்பனிட்டும் கிராம கக்கூஸ்களை அமைத்தும் வசதி செய்திருக்கிறோம்.

கல்வி வசதிகளைப் பற்றி சொல்லுமிடத்து எங்கள் பஞ்சாயத்தில் 264 மாணவ மாணவிகள் கல்விபயின்று வருகின்றனர். 4ஆரம்பப் பள்ளிகள் உள்ளன.

மூன்று வார்டுகள் கொண்ட எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் ரூ. 1000. எனவே அதிகமாககட்டிட பொதுமராமத்து வேலைகள் மேற்கொள்ளவில்லை. எனினும் கடந்த சில ஆண்டுகளில் ரூ. 10449 சர்க்கார் பணவசதிபெற்று, பொதுஜன உதவியுடன் சாலைகள் செப்பனிட்டும் சிறு பாலங்கள் கள் அமைத்தும் நடைபாதைகள் போட்டும் பல விதத்தில் எங்கள் பஞ்சாயத்து பொது வேலையில் பங்கு கொண்டுள்ளது.

வரும் ஆண்டுகளில் எங்கள் பஞ்சாயத்து மேலும் பலங்கொண்டு ஆக்கவேலைகளை மேற்கொள்ளுமென்பதில் எங்களுக்கு ஐயமே இல்லை.

வாழ்க! மக்களாட்சி!!

'நமது நாட்டில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் கூட்டுறவு முயற்சி பெரும் பங்கு கொண்டுள்ளது. இந்த இயக்கம் நன்கு அபிவிருத்தியடைந்துள்ள ராஜ்யங்களில் பொருள்களின் விலைகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்து வருவதை நாம் காண்கிறோம். காரியங்களைச் சீரான வழியில் சிறப்பாக செய்து முடிக்கக் கூட்டுறவு முயற்சியை விடச் சிறந்த சாதனம் வேறு கிடையாது. நல்வாழ்க்கை வகுக்கும் முக்கிய வழியாகும் அது. அந்த வாழ்க்கைப் பாதையில் முதலாளித்துவ அம்சம் காணப்படுவதில்லை. அதே சமயத்தில் சோஷலிஸ தத்துவமும் அதில் பூரணமாய் இல்லை. சோஷலிஸ முறை நம்மை கிட்டத்தட்ட இட்டுச் சென்று அதனுடன் நம்மைப் பிணைத்து விட வல்ல சக்தியை இந்த இயக்கம் கொண்டுள்ளது.

—பண்டித ஜவஹர்லால் நேரு.

"சிந்தை தெளிய தெருவுக்கொரு பள்ளி வேண்டும்; வாழ்க்கை செழிப்புற ஊருக்கொரு கூட்டுறவு சங்கம் வேண்டும்."

"மக்களின் தேவைக்காக மக்களின் அறிவு வகுத்துக் கொண்ட முறையே அரசு".

—எட்மண்ட் பர்க்

'எல்லாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டும் என்பவர்களும் எதையும் மாற்றக் கூடாது என்பவர்களும் தான் வாழ்க்கைப் போரில் பெருத்த இடைஞ்சல் விளைவிப்பவர்கள்."

—ஆஸ்டர் பெருமாட்டி.

'மிகச்சிறப்பு வாய்ந்த அடங்கியலான ஆற்றல்கள் உள்ளன, என்ற மெய்ம்மையை அடிப்படையாகக் கொண்டதே குடியாட்சி.

—ஹாரி எமர்ஸன் பாஸ்டிக்.

'மக்களே, மக்களே, மக்கள் நலத்துக்காக ஆள்வதென்பதுதான் குடியாட்சி'.

—ஏபிரகாம் லிங்கன்.

'எனக்கு குடியாட்சியில் உறுதியான பற்று உண்டு. ஏனெனில் அதுவே ஒவ்வொரு மனிதனின் உள்ளார்ந்த ஆற்றலையும் வெளிப்படுத்த வல்லது.

உட்ரோ வில்சன்.

'விடுதலையினால் பொறுப்பு ஏற்படுகிறது. பெரும்பாலான மனிதர் இதனால் தான் அது வகையில் அச்சமடைகின்றனர்"

பெர்னார்டுஷா.



# வெள்ளாகுளம் பஞ்சாயத்து.

திரு. ந. கி. கோபாலசாமி நாயக்கர்,

தலைவர்.

"கருமம் செய வொருவன் கைதூவேன் என்னும் பெருமையின் பீடுடையது இல்"

"குடிப் பெருமைக்கு உரியகடமையைச் செய்வதற்கு சோர்வடையமாட்டேன். என்ற ஒருவன் முயற்சியும் பெருமையைப் போல் மேம்பாடானது வேறொன்றில்லை"

"நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நாம் வகுத்துள்ள பொருளாதார திட்டங்கள் அனைத்தும் ஜனநாயக அடிப்படையானவை. தேசியவாழ்வில் மக்கள் சுபிட்ச நிலைபெறச் செய்வதில் மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதில் தனிக்கவனம் கொள்ளவேண்டும். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமானால் நாட்டின் உணவு உற்பத்தி பெருக வேண்டும். தொழில்கள் பெருக வேண்டும்; வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஏற்றத்தாழ்வுகள் குறைந்து வளம்பிறக்க வழி ஏற்படும். இதை மனதில்கொண்டு திட்டங்கள் நிறுவப்பட வேண்டும். தற்போது இருக்கும் ஆட்சி முறையில் திட்டங்கள் மக்களால் நிர்ணயிக்கப்பட்டு அரசாங்கத்தின் ஆதரவால் நிறைவேற்றப்பட்ட இருக்கின்றன. எனவே கிராம மக்களின் அடிப்படையில் பொருளாதார சமுதாய சமத்துவம் காண நல்லதொரு முறையில் திட்டங்கள் வகுப்பது கிராமப் பஞ்சாயத்தின் தலையாய கடமையாகும்.

கிராமப் பஞ்சாயத்தின் நிர்வாகம் இது வரையில் ஏதோ ஒரே அப்பட்டமான முறையில் சட்டத்தின் சரத்துக்களை எழுத்தளவில் நிறைவேற்றிக் கொண்டு இயங்கி வந்தது. கிராம வாசிகளின் நலன் என்ற அம்சத்தைக் கொண்டு பரவலான முறையில் ஆட்சியில்லை. கிராம வாசிகளுக்கு அன்றாடம் வாழ்க்கையில் பலவித அம்சங்கள் தேவைகள் உள்ளன. அவை சம்பந்தமான பல்வேறு இலாகாக்கள் மூலம் அரசாங்கம் செயலாற்றி வந்திருக்கிறது.

ஆனால் கிராம அடிப்படையில் ஒன்றுக்கொன்று "கூட்டு முறை" நேர்முக முறையில் இயங்கவில்லை. ஏனெனில் கிராம பஞ்சாயத்து சபைகள் தங்களை ஒவ்வொரு அம்சத்திலும் சம்பந்தப்படுத்திக்கொள்ளவில்லை. இந்த முறை சீக்கிரம் மாறவேண்டும். ஒரு கிராமத்தை யெடுத்துக்கொண்டால் அதனுடைய எல்லா பிரச்சினைகளையும் கிராமப் பஞ்சாயத்து ஆராய முயலவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு குடும்பத்தினுடைய நலன், தேவை, வரவு செலவு முறை முதலியவைபற்றி ஓரளவு தெரிந்து அதை மொத்த முறையில் பரிகாரம்காண வழி வகுக்கவேண்டும். கிராமவாசிகளின் விவசாயத்திற்கு இன்றியமையாத தேவைகளை பணவசதி முறையிலோ, பொருள் ரூபத்திலோ தேவைகளை கிராமப் பஞ்சாயத்து திட்டமிட்டு நிர்ணயித்து அதை பஞ்சாயத்து யூனியன் மூலம் பெறுதல் வேண்டும். இவ்வாறு செய்தால், அதுவும் பல்வேறு இலாகாக்களின் உதவியெல்லாம் கிராமப் பஞ்சாயத்தின் மூலமாகத்தான் நடக்கவேண்டும் என்று செயல்முறையில்

மாறினால் கிராம ராஜ்யம் பலமான அஸ்திவாரத்தில் எழும்ப சாத்தியமாகும். இது நடைமுறையில் வர சில ஆண்டுகள் செல்லலாமெனினும், இப்பொழுதும்கூட கிராமப் பஞ்சாயத்துகள் ஒவ்வொரு அபிவிருத்தி திட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு சேவைசெய்து தொடர்பு வைத்துக்கொண்டால் நாளடைவில் கிராமப் பஞ்சாயத்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாததாக ஆகிவிடும்.

மேற்சொன்ன கருத்துக்கள் சிந்திக்க வேண்டியவை. எங்கள் கிராமம் சம்பந்தப்பட்டவரை மேற்கூறிய அளவில் எங்கள் பஞ்சாயத்து சம்பந்தப்படுத்திக்கொள்ளாது போயினும் அனுபவத்தில் எங்கள் கிராமப் பிரச்சினைகளில் நாங்கள் எங்களை சம்பந்தப்படுத்திக்கொள்கிறோம். எங்கள் கிராமம் விவசாயத்திற்கு நல்ல பெயர்பெற்றது. அதில் மக்களுக்கு இருக்கும் ஆர்வம் சொல்லிமுடியாது. திருந்திய விவசாய முறைகளை வெகுவளிதில் நாங்கள் பழக்கப்படுத்திக்கொள்வோம்.

எங்கள் கிராமத்தில் வாலிபர்களாயினும் சரி, வயோதிகராயினும் சரி வாழ்க்கைமுன்னேற்றங்களை ஆவலுடன் பின்பற்றுவோம் எங்கள் கிராமத்திலிருந்து படித்து வெளியேறிய பல வாலிபர்களும் ஒவ்வொரு துறையில் சிறப்படைந்து இருக்கிறார்கள். பல உயர் பதவிகளிலும் உள்ளார்கள். எனவே ஒவ்வொரு புதுத்திட்டத்திலும் நாங்கள் செயல்முறையில் வெற்றி கண்டிருக்கிறோம் என்றால் அது எங்கள் ஒருமனப்பட்ட சீர்நோக்கும் தன்மைதான். இனி எங்கள் கிராமத்தின் பொருளாதார நிலையை பற்றி சொல்வது அவசியமென்று நினைக்கிறேன்.

எங்கள் கிராமம் குருவிகுளம் வட்டாரத்தில் திருவேங்கடம் பிர்க்காவில் ஒரு முன்னேறிய கிராமம். ஜனத்தொகை 2942. 3417 எக்கர் நிலப்பரப்பில் 2884 எக்கர் நிலம் தற்சமயம் சாகுபடிக்கு கொண்டுவந்துள்ளோம் எஞ்சியிருக்கும் 533 எக்கர் நிலம் சாகுபடிக்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கிறது. கண்மாய் வசதியில் சுமார் 45 எக்கர்தான் பாசனம் செய்யலாம். எஞ்சியிருப்பதில் 1946 எக்கர்வரை கிணற்று நீர்ப்பாசனம்தான். பஞ்சாயத்து ஆட்சி முறை அமுலுக்கு வருமுன் சாகுபடி செய்ததும் சென்ற ஆண்டில் சாகுபடி செய்ததும் நடப்பு ஆண்டில் சாகுபடியாவதும் ஆன விவரங்கள் கீழ்வருமாறு;-

| 1. சாகுபடி | ஆரம்பத்தில் (எக்கர்) | 60-61-ம் ஆண்டில் (எக்கர்) | 61-62-ம் ஆண்டில் (எக்கர்) |
|---|---|---|---|
| 1. நெல் | 53 | 91 | 107 |
| 2. பருப்பு வகைகள் | 340 | 415 | 315 |
| 3. பருத்தி | 875 | 920 | 1249 |
| 4. மற்றவை | 1632 | 1458 | 1213 |

(மேற்சொல்லப்பட்டிருக்கும் விபரங்களிலிருந்து எங்கள் விவசாயம் எவ்வாறு மேம்பட்டுவிட்டது எனத் தெரியவரும். பின்வரும் குறிப்புகள் அதை மேலும் தெளிவாக்கும்)

| | | | |
|---|---|---|---|
| 2. உரவினியோகம் மதிப்பு | ரூ. 290 | ரூ. 1560 | ரூ. 920 |
| 3. பொறுக்கு விதை வினியோகம் | — | 2200 கிலோ | 3400 கிலோ |
| 4. விவசாயக்கருவிகள் | — | ரூ. 110 | ரூ. 150 |
| 5. கம்போஸ்ட் தயாரிப்பு | — | (குழிகள்) 17 | 27 |
| 6. நேரிடை விளக்கம் | — | 4 (தடவை) | 5 (தடவை) |
| 7. கிணற்று நீர்ப்பாசனம் | — 819 (எக்கர்) | 854 (எக்கர்) | 1021 (எக்கர்) |

கால்நடை பராமரிப்பிலும் நாங்கள் வெகு கவனமாக உள்ளோம். நோய்த் தடுப்பு முறை உடனடியாக எடுத்துவருகிறோம்.

சமூகக்கல்வி அமைப்பில், விசேடமாக முதியோர் கல்வி திட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளிலும் முறையே 755, 806 பேர்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. ஏற்கனவே ஒரு வாசகசாலையுள்ளது. ஒரு இளைஞர் விவசாய சங்கமும அண்மையில் நிறுவப்பட்டது. மாதர் சங்கம் வெகு காலமாக உள்ளது.

2 ஆரம்ப பாடசாலைகளும் ஒரு மத்திய தர பாடசாலையும் உள்ளன. 399 மாணவர்கள் கல்வி புகன்று வருகின்றனர். எங்கள் கிராமத்தில் 375 பேர் கதர் நூற்று வருகிறார்கள். நாங்கள் யாவரும் கதரைத்தான் உடுத்துவோம் பஞ்சாயத்து யூனியனிடமிருந்து பணவசதி பெற்று ரூ. 3500 செலவில் கடந்த ஆண்டில் பள்ளிக் கட்டிடம் கட்டி முடித்திருக்கிறோம்.

எங்கள் கிராமம் திருவேங்கிடம் கூட்டுறவு பாங்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எங்கள் கிராமத்தவரான திரு: V. S. சாத்தூரப்ப நாயக்கர்தான் அதன் தலைவர். கூட்டுறவின் மூலம் எங்கள் கிராமத்திற்கு கடந்த ஆண்டில் ரூ. 1 லக்ஷம்வரை கடன் வசதி கொடுக்கப்பட்டது.

ஏற்படுத்தப்பட்ட மனித ஆக்கவேலை பரீட்சார்த்த திட்டத்தில், எங்கள் கிராமத்தில் பூரண வெற்றி கண்டோம். ரூ. 3150 செலவில் அடியிற்கண்ட வேலைகளை மிகவும் குறுகிய காலத்தில் செய்துமுடித்தோம்.

1. வெள்ளாகுளம் கரைபக்க ரோடு அமைத்தல்
2. ஊரணி வரை 4 பர்லாங் பாதை மராமத்து
3. தெருக்களுக்கு 5 பர்லாங் கல் பரப்பி தளம்போட்டது
4. களம் 1½' உயரத்திற்கு மண்போட்டது
5. காசிலிங்கபுரம் பீடர்ரோட் 6 பர்லாங் சரள் போடப்பட்டது

இதைத்தவிர கடந்த ஆண்டுகளில் ரூ. 16,210 அளவில் சர்க்கார் மானியம் பெற்று பொதுக்கட்டிட வேலைகள், தெருக்கள் போடுதல் முதலியன முடித்திருக்கிறோம்.

இனி வரும் ஆண்டுகளில் எம்கள் கிராம சபை ஒவ்வொரு ஆக்க திட்டத்திலும் பங்குகொண்டு செயலாற்றிவர எல்லா வாய்ப்புகளும் கிட்ட இறைவன் அருள்புரிவாராக.

வாழ்க மக்கள் ஆட்சி! வளர்க சமுதாயம்!!

'சமயப் பற்றற்ற ஒழுக்கம் வேரில்லாத மரம். ஊற்றுக் கசிவில்லாத ஓர் ஓடை. அது மணல் மீதமைந்த மனை. மழையில்லாதபோது அது வாழ்வதற்கெளிதாகவும், ஆனால் புயல் வந்தால் தாங்காது.'

—பெர்னார்டுஷா.

'வேற்றுமையுற்ற குடும்பம் நில்லாது பாதி அடிமைப் பண்பும், பாதி சுதந்திர மக்களையும் உடைய எந்த அரசாங்கமும் நிலைக்க முடியாது.

—லிங்கன்

'சுதந்திர நாட்டில் கூக்குரல் மிகுதி. ஆனால் துன்பம் குறைவு. வல்லாட்சி நடைபெறினும் நாட்டில் குறையிருத்தல் என்பதே கிடையாது. ஆனால் மக்கள் மனக்குறை மிகவும் பெரிது."

—கார்னட்.

'ஓயா வெற்றி நமக்கு உலகின் ஒரு புறத்தையே காட்டுகிறது. துன்பம் அதன் மறுபுறத்தை உணர வைக்கிறது.'

—கோல்ட்டன்.



# இராமலிங்கபுரம் பஞ்சாயத்து.

திரு. P. சுப்பா நாயக்கர்,

தலைவர்.

"பார்முழுதும் ஏர்முனையிலே" என்ற பாட்டிற்கிணங்க எங்கள் பஞ்சாயத்துப் பகுதியில் வாழும் மக்கள் உழவுத்தொழிலையே முக்கியமாகக் கொண்டவர்கள். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற வள்ளுவரின் வாக்குப்படி எங்கள் கிராமத்தினர் உழுது பயிர் செய்து உன்னத வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

எங்கள் பஞ்சாயத்து குருவிகுளத்திலிருந்து சுமார் 1கல் தொலைவில் அமைந்துள்ளது. பரப்பு 2· 5 ச. மை. மக்கள் தொகை சுமார் 2057. சுந்தரேசபுரம், இராமலிங்கபுரம் ஆகிய இரு கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. நைனும்பட்டி என்ற குக்கிராமம் இராமலிங்கபுரத்தைச் சேர்ந்தது. பஞ்சாயத்து 8 உறுப்பினர்களைக் கொண்டது. மின்சார வசதியுள்ளது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற மொழிக்கிணங்க மூன்று ஆரம்பப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு நன்றிது தேர்ந்திடல் வேண்டும்" என்பதற்கிணங்க மக்கள் கூட்டுறவாக இருந்து சமுதாய முன்னேற்றம் கருதி பாடுபட கூட்டுறவு இயக்கத்தை மிகவும் நல்ல முறையில் உருவாக்கியிருக்கிறோம்.

ஒரு கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கம் விவசாயிகளின் கடன் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

விவசாயிகளின் முன்னேற்றம் கருதி ஒரு கூட்டுறவு விவசாய முன்னேற்ற சங்கம் செயல்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 6 உறுப்பினர்களுக்கு ரூபாய் 11,000-00 வீடு கட்ட சாங்சன் ஆகியுள்ளது என்று மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு சங்கத்திற்கு தானியங்களை பாதுகாத்து வைக்க ஒரு கிட்டங்கி சாங்ஷன் ஆக இருக்கிறது என்பதும் எங்கள் அதிர்ஷ்டமே.

பஞ்சாயத்தின் மொத்த விஸ்தீரணம் 2301 ஏ. 89 செ. இதில் நஞ்சை சாகுபடி இல்லை. புஞ்சை சாகுபடி விஸ்தீரணம் 2136 ஏ. 24 செ. புறம்போக்கு 165 ஏ. 35 செ. கம்புமு், பருத்தியும் முக்கிய பயிர்களாகும், இதர புஞ்சை தானியங்கள் பயிராகி வருகிறது. குருவிகுளம் சமுதாய நலத்தின் மூலம் அடிக்கடி திருந்திய விவசாய முறைகளைப்பற்றிச் சொல்லுவதால் விவசாயிகள் திருந்தியமுறைகளைக் கடைப்பிடித்து அதிகப்படியான மகசூலைப்பெறுகிறார்கள்.

கால் நடையின் தரத்தை அபிவிருத்தி செய்ய காங்கேயம் பொலிகாளை ஒன்று வாங்கப்பட்டுள்ளது. திரு R. சுப்பா நாயக்கர் அவர்கள் பொலிகாளையைப் பராமரித்து வருகிறார்கள்.

"வரப்பே தலையணை வைக்கோலே பஞ்சு மெத்தை" என்று நாள்தோறும் கழனியிலே பாடுபடும் உழவர்களுக்கு தினமும் பொழுதுபோக்கு வசதிகள் அளிப்பது பஞ்சாயத்தின் கடமையல்லவா? அதற்கு மனமகிழ்ச்சி மன்றம் ஒன்று ரூபாய் 6000-00 செலவில் கட்டப்பட்டுள்ளது, ரூபாய் 1000-00 சமுதாய நலத்திட்ட நிதியிலிருந்தும் 5000-00 ரூபாய் பொதுமக்களாலும் கொடுக்கப்பட்டுள்ளது.

தினசரிப்பத்திரிகைகள் படிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு வசதி அளிப்பதின்மூலம் அறிவு வளர்ச்சிக்கும் வழி வகுக்கபபட்டிருக்கிறது. ஒரு நூல் நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

கிராம அபிவிருத்திக்குத் திட்டமிடும் அனைவரும் குடிநீர் போக்குவரத்து, சுகாதாரம் ஆகிய வசதிகள் செய்வதைப்பற்றி நினைக்காமல் இருக்கமுடியாது.

குருவிகுளத்திலிருந்து இராமலிங்கபுரத்திற்கு கருங்கல் சல்லிபோட்டு நல்ல பாட்டை அமைக்கப்பட்டுள்ளது. இராமலிங்கபுரத்திலிருந்து நைனும்பட்டி போகும் பாதையில் ஒரு பாலம் ரூபாய் 6000-00 செலவில் சமுதாய நலத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளது. தாங்குசுவர் பஞ்சாயத்து யூனியன் உதவியின் மூலம் ரூபாய் 2000-00 செலவில் கட்டப்பட்டுள்ளது.

மலம் ஜலம் கழிக்க ரூபாய் 900-00 செலவில் 4கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளது மேல்நிலைத் தண்ணீர் தொட்டி ஒன்று ரூபாய் 18000-00 செலவில் கட்டப்பட்டு வருகிறது. இதில் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ரூபாய் 13500-00 கிராமத்திலிருந்து ரூபாய் 4500–00ம் அளிக்கப்படும்.

"ஊக்கமது கைவிடேல்" என்ற பழமொழிக்கிணங்க எங்கள் ஊக்கமிக்க உணர்ச்சியினையும், ஆக்கச் சக்தியையும் கண்ட எங்கள் செயல்மிகு கமிஷனர் திரு S. நம்பி அவர்கள் ஒருநாள் எங்கள் கிராமத்திற்கு வந்து பொதுமக்களையும் என்னையும் சந்தித்து உங்கள் ஆற்றலின் வலிமையால் இதோ ஆக்கவேலைத்திட்டம். எடுத்து நடத்துங்கள் கிராமம் தழைக்க விவசாயிகளுக்கு வேலை கொடுக்க-என்று சொன்னதும்

"ஏற்றமிகு எழில் திட்டத்தை எடுத்து நடத்த நாங்கள் இருக்கிறோம் என்று கூறி திட்டத்தைச் செயல்படுத்த சம்மதித்தோம்

"உணர்வது உடையார் முன் சொல்லல் வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந் தற்று" என்ற பொய்யாமொழிப் புலவரின் கருத்துரைகளைக் கொண்ட எங்கள் யூனியன் கமிஷனர் அவர்களும் ஆக்கவேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைக்க ஏற்பாடுசெய்ய, கோட்ட ஆட்சித் தலைவர் திரு R. கிருபாகரன் M. A. Msc. அவர்கள் 2—5—62ல் ஆரம்பித்து வைத்தார்கள்.

"ஓயுதல் செய்யோம், தலைசாயுதல் செய்யோம் உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள் செய்வோம்" என்ற அமரகவி பாரதியின் பாட்டிற்கிணங்க ஓய்வின்றி, உள்ள உறுதியுடன் உண்மையாக உழைத்த எங்களூர் வாசிகளின், முயற்சியினால் சுந்தரேசபுரத்திற்குச் செல்லும்வழியில் 1 மைல் சரள் பரப்பப்பட்டு பாட்டைப் போடப்பட்டுள்ளது. நைனும்பட்டி செல்லும் வழியிலும் 1 பர்லாங் தூரம் பாட்டை போடப்பட்டுள்ளது. அத்திபட்டிசெல்ல $\frac{1}{2}$ பர்லாங் பாட்டை போடப்புட்டுள்ளது. குளம் ஆழப்படுத்தப்பட்டு அலைசுவர் கட்டுப்பட்டுள்ளது. குருவிகுளம் சமுதாய நலத்திட்டத்திலிருந்து ரூபாய் 3100-00 அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ரூபாய் 7500-00மதிப்புள்ள வேலை செய்யப்பட்டுள்ளது. சர்வோதய கருத்துக்களை உணர்ந்த எங்களூர் வாசிகள் ஆக்கவேலைத் திட்டத்திற்கு உழைப்புத்தானம் அளித்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமனிலாத இந்த நாட்டின்
ஞான வாழ்வின் சக்தியும்
சரிசமானமாக மற்ற
உயிரை என்னும் சாந்தியுமான

நமது தேசப்பிதா மகாத்மா காந்திஜி அவர்கள் கண்ட கிராம ராஜ்யம், உணவு உடை தேவையில் பிறரை எதிர்பார்க்காத நிலையில் உள்ள கிராமங்களைக் கொண்ட ராஜ்யம். எங்களூரைப் பொறுத்தவரையில் உருவாகி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"ராட்டை நூற்போம் நம்
நாட்டைக் காப்போம்" என்னும்

கருத்தினைக்கொண்ட எங்கள் கிராமத்தில் எல்லா வீடுகளிலும் நூற்பு நடக்கிறது. "கதர்மூலமே சமுதாய சேவை" என்னும் லட்சியத்தைக் கொண்டு பஞ்சாயத்து ஆட்சி மலர்ந்து மணம் வீச பாடுபட்டு வருகிறோம். இதுபோல் எல்லோரும் இந்த லட்சியத்தை உருவாக்கப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

"பசி பிணி போக்கும் பஞ்சாயத்தை
பாரினில் வளர்ப்போம்!!"

> 'ஒரு குடியாட்சியின் உண்மையான அரண்வரிசை அதன் பள்ளிக்கூடங்களேயாகும்.'
>
> —ஹோரேஸ் மான்.


✽ மழைகாலத்திற்கு உத்திரவாதமுள்ளதும்
✽ எந்த நேரத்திலும் எல்லோரும் விரும்பி வாங்குவதும்
✽ மார்க்கெட்டில் தலைசிறந்ததுமான

**வின்டர் & மஹால்**

**தீப்பெட்டிகளையே வாங்கி உபயோகியுங்கள்.**

தயாரிப்பாளர்:

**நியூஜோதி மேட்ச் இண்டஸ்ட்ரீஸ்,**

பழங்கோட்டை.

(வழி) கழுகுமலை.




# பழங்கோட்டை பஞ்சாயத்து.


திரு. S. கடற்கரை,

தலைவர்.


முன்னேற்றம் என்பது ஒரு குறிக்கோளன்று. ஒரு மறுக்க முடியாத நடைமுறைத் தேவை. அது மனித வகுப்பின் ஒரு கடமையன்று. இயற்கையின் ஒரு ஒழுங்கமைதி. இத்தகைய முன்னேற்றத்தில் உள்ள உறுதியான நம்பிக்கையே சென்ற இரு நூறு ஆண்டுகளாக உலக நாகரீகத்தின் அடிப்படையாகும். எனவே எங்கள் கிராமத்தை புனர் நிர்மாணம் செய்வதில் நாங்கள் ஆவலும், ஆர்வமும் கொண்டுள்ளது இயற்கை நியதியில் ஒன்றே. இதைப்பற்றி மேலும் விளக்கம் கூறுமுன் எங்கள் கிராமத்தைப் பற்றி ஒரு சில விபரங்கள் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் பஞ்சாயத்து 3981 ஜனத்தொகை கொண்ட ஒரே ரெவின்யூ கிராமத்தில் அடங்கியிருக்கிறது. பரப்பு 7·6 சதுர மைல். சரித்திரப் பிரசித்தி பெற்றதும் புராதன இந்து ஸ்தலமாகிய கழுகுமலையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. 420 ஏக்கர் நன்செயும் 2206 ஏக்கர் புஞ்சையும் கொண்ட நிலங்களில் இன்னும் 860 ஏக்கர் மட்டுமே சாகுபடிக்கு வர வேண்டியது. எங்கள் பஞ்சாயத்தில் சுமார் 1260 பேர் விவசாயத்தையே தொழிலாக உடையவர்கள். அது போக சுமார் 500 நபர்கள் தீப்பெட்டி செய்வதை குடிசைத் தொழிலாகக் கொண்டு கழுகுமலை தீப்பெட்டித் தொழிற் சாலையில் வேலை செய்து வருகிறார்கள்.

எங்கள் கிராமத்தில் வெகு காலத்திலிருந்தே கதர் இயக்கம் நடந்து வருகிறது. தற்போது சுமார் 100 பேர் நூற்பு மூலம் வாழ்க்கையை நடத்துகின்றனர். எங்கள் கிராமத்தில் சுமார் 8 கண்மாய்கள் உள்ளன.

பல வருஷங்களுக்கு முன்பே பிர்க்கா அபிவிருத்தி திட்டம் எங்கள் கிராமத்தில் தான் முதன் முதலாக செயல்பட்டு வந்தது. என்றாலும் எங்கள் நிலைமை பூர்ண அபிவிருத்தி அடைய இன்னும் சில ஆண்டுகள் ஆகும். சென்ற இரண்டு ஆண்டுகளில் சுமார் 6 கிணறுகள் வெட்டியும் புதுப்பித்தும் வந்திருக்கின்றன, எங்கள் பஞ்சாயத்து எல்லையில் சுமார் 435 கிணறுகள் ஏற்படுத்தி இருக்கிறோம். அவற்றின் மூலம் 1173 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்கு கொண்டு வர தீவிர முயற்சி எடுத்திருக்கிறோம். 15 நீர்பாசன கிணறுகளுக்கு மின்சார பம்பு அமைத்திருக்கிறோம். கிராம மக்களுக்கு பொழுது போக்கும் நிலையங்களாக, வடக்கு அழகு நாச்சியாபுரம், மேற்கு அழகுநாச்சியாபுரம் கிராமங்களில் மனமகிழ் மன்றங்கள் கட்டியிருக்கிறோம். எங்கள் பஞ்சாயத்தில் 30 பேர் கொண்ட ஒரு இளைஞர் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். தவிர ஒரு விவசாய சங்கத்தையும், இரண்டு மாதர் சங்கத்தையும் ஏற்படுத்தி இருக்கிறோம். எங்கள் பஞ்சாயத்தில் 1 உயர்தர ஆதாரப் பள்ளியும், 6 இளையோர் ஆதாரப் பள்ளியும் உள்ளது.

எங்கள் பஞ்சாயத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை மிக அதிகம். 592 மாடுகளும் 2300 ஆடுகளும் உள்ளன. கடந்த இரு ஆண்டுகளில் ஆறு ஜாதி கால்நடைகளை தருவித்திருக்கிறோம்.

போக்குவரவு வசதிக்கென பாதைகள் செப்பனிட்டும், புது ரஸ்தாக்கள் அமைத்தும் 5 மைல் தூரம் அபிவிருத்தி செய்திருக்கிறோம். ஆக்க வேலைத் திட்டத்தின் கீழ் பின்வரும் வேலைகள் செய்து முடித்துள்ளோம்.

1. குருவிகுளம் — சங்கரன்கோவில் நெடுஞ்சாலையிலிருந்து அவனிக்கோனேந்தல் 1½ பர்லாங்கு ரஸ்தா அமைத்தல்.

2. நாலுவாசன்கோட்டை-மகேந்திரவாடி ரஸ்தாவிலிருந்து வடக்கு அழகு நாச்சியாபுரத்திற்கு இணைப்பு ரஸ்தா 4பர்லாங்கு.

3. நாலுவாசன்கோட்டை – கீழநீலிதநல்லூர் ரஸ்தாவிலிருந்து மேல அழகுநாச்சியாபுரத்திற்கு இணைப்பு ரஸ்தா 1½ பர்லாங்கு.

4. கம்மாபட்டி வரை செப்பனிடல்.

5. தோணுகாலிலிருந்து 4 பர்லாங்கு தூரம் இடுகாட்டிற்கு பாதை அமைத்தல். இவற்றின் மொத்த மதிப்பு ரூ 7000.

கிராம மக்களால் முழு ஒத்துழைப்புடன் கொஞ்சம் சிலவில் குறுகியகாலத்தில் இவையனைத்தையும் நாங்கள் செய்து முடித்தோம் என்று மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் சொல்லிக்கொள்ளுகிறேன். இதைத் தவிர கடந்த ஆண்டுகளில் ரூ 24686 அளவில் அரசாங்க உதவி பெற்று பல மராமத்து வேலைகள் செய்து முடித்திருக்கிறோம்.

எங்கள்பஞ்சாயத்தில் பழங்கோட்டையில் ஒரு கூட்டுறவுச் சங்கம் வெகு காலமாக உள்ளது. தவிர சென்ற ஆண்டில் எங்கள் பஞ்சாயத்தைச் சேர்ந்த மேல அழகு நாச்சியாபுரத்தில் ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் நிறுவப்பட்டது.

சமீப காலத்தில் மேல அழகுநாச்சியபுரத்தில் கிராம புணரமைப்பு வீடு கட்டும் திட்டம் ஒன்று செயல்பட இருக்கிறது. சுமார் 132 வீடுகள் தற்போதைய முறைப்படி மாற்றி நடுவில் தெருக்கள் விரிந்து கொண்டதும் சுகாதார அமைப்பின்படி உள்ளதாகவும் அமைத்துள்ளோம். இதற்காக பழைய வீடுகளை கலைக்க நேரிடும் புறம்போக்கு நிலங்களையும் நில ஆர்ஜிதம் மூலமாகத்தான் அமைப்பு செய்ய வேண்டும். தனிப்பட்ட மக்களின் வரவு செலவு பணவசதி முதலியவை நன்கு பரிசீலிக்கப்பட்டு, புது வீட்டிற்கு எவ்வளவு பணம் தேவையாகும் என்று திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தெருக்கள் அமைப்பதிலும், பொதுக் கட்டிடங்கள் விளையாட்டுக் கூடங்கள், தபாலாபீஸ் போன்ற ஸ்தாபனங்கள் எங்கெங்கு அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு குறிப்பிட்டிருக்கிறோம். இதற்காக பிளான்கள் அமைத்து முடிந்து சென்னை மாநில விசேட சூப்ரிண்டெண்ட் இஞ்சினியர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஷை திட்ட முழு விபரத்தையும் கிராம மக்களின் முன் வைத்து நமது யூனியன் கமிஷனரும், கூட்டுறவு விஸ்தரிப்புஅதிகாரி அவர்களால் விளக்கம் கூறப்பட்டு ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம் நடைமுறையில் இன்னும் சில மாதங்களில் வருமென்று எதிர்பார்க்கிறோம். இவ்வாறு வீடுகள் அமைப்பதற்கு சர்க்காரிடமிருந்து நீண்ட கால தவணைகளில் போதுமான கடன் வசதிகள் கிடைக்க ஏற்பாடாகியுள்ளது. இதற்கென தனிப்பட்ட முறையில் வீடு கட்டும் கூட்டுறவு ஸ்தாபனம் எங்கள் கிராமத்தில் பிரத்தியேகமாக நிறுவி, நிர்வாக சம்பந்தமாக இலவசத்தில் ஒரு இன்ஸ்பெக்டரும் கிடைக்கும்படியாக சலுகை கிடைத்தால் எங்கள் கிராம புனர்நிர்மாணம் நல்ல முறையில் நடத்தி விடுவோம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

'வாழ்க நம் நாடு'. 'வளர்க ஊராட்சி மன்றம்.


எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், கிராம்ப்டன் மோட்டார், தண்டாயுதபாணி பம்பு செட்டுகளும் கிடைக்கும்.

**தி மகாலக்ஷ்மி**

**எலக்ட்ரிக் கம்பெனி,**

(அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்)

மெயின் ரோடு,

**கோவில்பட்டி.**




# அழகாபுரி பஞ்சாயத்து.


**திரு. அ. உடையார் கோனூர்,**

**தலைவர்.**


"ஒன்று சேர்ந்து உழைத்திடுவோம்
ஊக்கமாய் பணி புரிந்திடுவோம்
உன்னத கிராம ராஜ்யத்திற்கே
உணர்ச்சியுடன் செயலாற்றிடுவோம்"

என்னும் குறிக்கோளை தங்கள் வாழ்க்கையின் அடிப்படையாக கொண்ட எங்கள் கிராமம் சங்கரன்கோவில்–கோவில்பட்டி ரஸ்தாவில் ஐந்தாவது மைலில் தென் பக்கத்திலிருக்கிறது. அழகாபுரி, மதுராபுரி ஆகிய ரெவின்யூ கிராமங்களைக் கொண்டது எங்கள் பஞ்சாயத்து மொத்த விஸ்தீரணம் 967 67 ஏக்கர். இதில் நஞ்சை மட்டும் 137–67 ஏக்கர். மக்கள் தொகை 1184. குளங்கள் மூலம் 77.35 ஏக்கரும், கிணறுகள் மூலம் 203·45 ஏக்கரும் சாகுபடியாகிறது. குக்கிராமமாகிய சிதம்பராபுரத்தில் மின் வசதியுள்ளது.

காடு திருத்தி கழனியாக்கி கடின உழைப்பை மேற்கொண்டால் தான் வளர்ந்து வரும் சமுதாயத்தின் உணவுத் தேவையை சமாளிக்க முடியும்; என்பதை நம் தலைவர்கள் அனைவரும் கூறி வருகிறார்கள். அதற்கேற்ப எங்கள் கிராமத்தின் முக்கிய தொழிலான விவசாயத்தை கண்ணும் கருத்துமாக கவனித்து வருகிறோம். அது சம்பந்தமாய் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களிடமிருந்து, யோசனைகளையும் திருந்திய முறைகளையும், பொறுக்குவிதை, உரம், பாதுகாப்பு முறை, இவைபற்றிய தகவல்களையும்; பொருள்களையும் பெற்று முன்னேற்றம் கண்டிருக்கிறோம். கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் சுமார் 5 டன் இரசாயன உரங்களை விநியோகித்திருக்கிறோம். 255 கிலோக்கள் பொறுக்கு விதை 400 கிலோக்கள் பூச்சி மருந்து வகைகள் ஆகியவற்றை உபயோகித்துள்ளோம். 6-முறை செயல்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இதன் விளைவாக எங்கள் விவசாயம் திருந்தி வருகிறது. உற்பத்தி அதிகரித்து வருகிறது. எங்கள் பஞ்சாயத்தில் மட்டும் 68 கம்போஸ்ட் குழிகள் போடப்பட்டுள்ளன. தற்சமயம் நாங்கள் நடத்தி வரும் சாகுபடியின் சில முக்கியவிபரங்கள் பின் வருமாறு.

| | |
|---|---|
| நெல்:- | 55 ஏக்கர் |
| சோளம்:- | 42 ஏக்கர் |
| கம்பு:- | 88 ஏக்கர் |
| கேள்வரகு | 84 ஏக்கர் |
| சிறு தானியங்கள்:- | 59 ஏக்கர் |
| பருத்தி:- | 93 ஏக்கர் |
| மிளகாய்:- | 85 ஏக்கர் |

விவசாயத்திற்கு இன்றியமையாதது கால்நடை அபிவிருத்தியாகும். ஆகவே கால்நடை பராமரிப்பிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். பஞ்சாயத்து யூனியன் மூலம் கடந்த ஆண்டில் 10 ஜாதி சேவல்கள் வாங்கி, கோழிகளின் தரத்தை அபிவிருத்தி செய்து வருகிறோம்.

சமுதாய நல திட்டத்தின் மூலம் ரூபாய் 6000-00 செலவில் சிதம்பராபுரத்திற்கு

சரள் பரப்பி ரோடு போடப்பட்டுள்ளது. "உழைப்பின் வாரா உறுதியும் உளதோ?" அதன்படி எங்கள் கிராமவாசிகளின் சீரிய உழைப்பே இந்த பாட்டையை அமைக்க பங்குத்தொகையாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட்ட பிறகு ரூபாய் 4000-00 செலவில் பாலம் ஒன்று இந்த ரோட்டில் கட்டப்பட்டுள்ளது. மழை காலத்தில் பாலம் இல்லாமல் ஓடையைக் கடந்துவர மிகவும் கஷ்டமாய் இருந்தது. இந்த குறை, இந்த பாலத்தை கட்டியதின்பேரில் நிவர்த்தி செய்யப்பட்டது.

"கிராம சுகாதாரம்" போற்றிப்பாதுகாக்கப்படவேண்டும் என்பது நமது தேசப்பிதா காந்திஜியின் விருப்பமாகும். சுகாதாரத்தை அபிவிருத்தி செய்ய 14 கிராம கக்கூஸ்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 3 குடி தண்ணீர் கிணறுகள் செப்பனிடப்பட்டுள்ளன. வரசணாபுரத்தில் ஒரு கிணறு 1960ம் ஆண்டில் வெட்டப்பட்டது.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என கம்பன் கூறியபடி, கல்வி பயில் பள்ளிகள்பல ஏற்பட்டுள்ளன. சிதம்பராபுரம் ஆர். சி. உயர்தர ஆதாரப்பள்ளி பலபேர்களின் பாராட்டுதலைப்பெற்று நல்ல முறையில் இயங்கிவருகிறது. அழகாபுரியில் பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஒன்றும், டி. பி. எப். பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. மதுராபுரியில் பஞ்சாயத்து யூனியன் பள்ளி நடைபெறுகிறது. எல்லா பள்ளிகளிலும் மதிய உணவு போடப்படுவதால் பாலர் அனைவரும் பள்ளிக்கு ஒழுங்காக வருகின்றனர். எங்கள் பஞ்சாயத்திலேயே நான்கு பள்ளிகள் இயங்கி வருவதைப் பார்த்தால், எந்த அளவு நமது யூனியனும் அரசாங்கமும் பொதுமக்களும் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வருகின்றனர் என்பது புலனாகும்.

எங்கள் கடன் தேவை, உரத்தேவை ஆகியவை சிதம்பராபுரத்திலுள்ள எங்கள் கூட்டுறவுநாணய சங்கத்தின் மூலம்பூர்த்தி செய்யப்படுகின்றது. நடப்பு ஆண்டில் அழகாபுரியிலும் ஒரு கூட்டுறவு நாணய சங்கம் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாழ்க்கை பணிசெய்யவேயாகும். இப்பணிதான் சமூகத்தொண்டாகும். இதற்கு சமூகக்கல்வி அவசியமாகும், அழகாபுரியில் ஒரு சமூகக்கல்வி நிலையம் உபதலைவர் திரு: நிறைகுளத்தான் மேற்பார்வையில் நடந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியனிலிருந்து தின, வார, மாதப் பத்திரிக்கைகள் வழங்கப்படுகின்றன. சிதம்பராபுரத்திலும் சமூகக் கல்வி நிலையம் அமைக்க ஏற்பாடாகியுள்ளது.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

என்ற பாரதியின் பாடலிற்கிணங்க எங்களூரில் மாதர் முன்னேற்றம் கருதி ஒரு மாதர் சங்கம் செயல்பட்டு வருகிறது.

கிராம கைத்தொழிலாகிய தீப்பெட்டி உற்பத்தி தொழில் சிதம்பராபுரத்தில் நடைபெற்று வருகிறது. கதர் அபிவிருத்தியிலும் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம்.

இவ்வாறு எங்கள் பஞ்சாயத்தும் கிராம வாழ் சமுதாயத்தின் வளத்தினை உள்ளத்தில் நிறுத்தி;

"பயிர் செழிக்க பருவ மழைபோல
பார் செழிக்க எங்கள் பஞ்சாயத்து"

பணியாற்றி வருகிறது. என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வாழ்க பாரதம்!**

> "நாகரீகம் ஏழை மக்களுக்குச் செய்துதரும் வாழ்க்கை வசதியின் அளவே, அதன் உண்மையான உரைகல் ஆகும்"
>
> —டாக்டர் ஜான்சன்.



# சித்திரம்பட்டி பஞ்சாயத்து.

திரு. கு. பழனிச்சாமி நாயக்கர்,

தலைவர்.

செந்நெல்லும் கரும்பும் தெவிட்டாத தேனமுதும், வற்றாத வளமும், குன்றாத செல்வமும் பெற்றுத் திகழ்ந்தது நம்நாடு "ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு" என்பதற்கிணங்க நம்மிடையே ஒற்றுமை இல்லாதிருந்தால், வியாபார நிமித்தம் வந்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டையே கொண்டனர். அன்னியர் ஆட்சியில் நாடு நலிவுற்றது, ஊற்றுக் கண்களாகிய கிராமங்கள் சுய பலமிழக்கச் செய்யப்பட்டது.

இதைத்தான் பாரதி,

"வாழ்க நீ! எம்மான், இந்தவையத்து
நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலைத்
தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத
தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா!
நீ வாழ்க!"

என்று கூறுகிறார்.

தாழ்வுற்று வறுமையுற்ற கிராமங்கள் தழைக்கவேண்டும். தன் பலம்பெறவேண்டும்; திட்டங்கள் தீட்டிச் சிறந்தமுறையில் கிராமங்கள் பலனடைய வேண்டும் என்பதே காந்திஜி கண்ட கனவாகும். இல்லாவிட்டால் பட்டம் பதவி வெறுத்துப் பாமரர்க்குப் பாடுபடத் துணிவு வருமா? தேசப்பிதா மகாத்மா காந்திஜி கண்ட கனவை நனவாக்கவே கிராமப் பஞ்சாயத்துக்கள் எங்கும் அமைக்கப்பட்டுப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எங்கள் பஞ்சாயத்து கிராமங்களுக்கு வேண்டிய ஆக்கப்பணிகளைச் செய்துவருகிறது. சித்திரம்பட்டி என்ற ஒரே கிராமத்தைக் கொண்டது எங்கள் பஞ்சாயத்து. பரப்பு 2·75 ச. மைல். மக்கள் தொகை 975. கோவில்பட்டி-பருவக்குடி ரோட்டிலிருந்து வடக்கே 3 கல் தொலைவில் உள்ளது. 7 உறுப்பினர்களைக் கொண்டது. பெண் உறுப்பினர் ஒருவரும் உண்டு. வருட வருமானம் ரூபாய் 1200 வீட்டு வரியே முக்கிய வருமானமாக உள்ளது. மின் வசதி பெற்றுள்ளது.

உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இல்லமும் பெற்று மனிதனின் அடிப்படைத் தேவைகளில் பிறரை எதிர்பாராது ஒவ்வொரு கிராமமும் திகழவேண்டுமென்பதே கிராமக் குடியாட்சியாகும்— உணவுப் பெருக்கத்திற்கு ஏற்ற வழிமுறைகளைச் செய்துவருகிறோம்.

பொறுக்கு விதையும், போதிய கம்போஸ்டும் பசுந்தாள் உரப்பயிரும் பயிர்ப் பாதுகாப்பும் நவீனக்கருவிகளும், மாதிரித்திட்டங்களும் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதால் அதிகப்படியான மகசூல் பெற முடிகிறது. பருத்தியும், கேழ்வாகுமே இங்கு சாகுபடியாக உள்ளது. கிணற்று

நீர் இறைவைச் சாகுபடியும் செய்யப்படுகிறது, குளங்கள் இல்லை.

"பருவத்தே பயிர் செய்" என்பதற்கிணங்க, உரியகாலத்தில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. பருத்தி சாகுபடிதான் வருவாய்ப்பெருக்கத்திற்கு உதவுகிறது. பருத்தியை அரைத்துப் பஞ்சாக்க ஒரு ஜின்னிங் தொழிற்சாலையும் இங்குள்ளது.

கூடிக் கூடிப்போட்டு
கோடி கோடி ஆக்கிடுவீர்
நாடி நாடிச் சேர்த்து
நல்லகுவை ஆக்கிடுவீர்
தேவையின் நிலை யுணர்ந்து
வேண்டியது பெற்றிடுவீர்.

என்பதற்கிணங்க கிராமத்தினர் ஒற்றுமையுடன் வாழவேண்டும். கூட்டுறவு முறையினைக் கைக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் இயங்கி வருகிறது. 107 உறுப்பினர்கள் இதில் உள்ளனர். எங்கள் கிராமக் கடன் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. வீட்டுக்கொருவர் உறுப்பினராகச் சேர வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டு வருகிறோம்.

"கல்வி சிறந்த தமிழ் நாடு, புகழ்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு"

என்று கல்வியில் நம்நாடு சிறந்திருந்தது என்று பாரதியார் கூறுகிறார். எங்கள் கிராமச்சிறார்கள் கல்வி பயில பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளி ஒன்றுள்ளது. பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். பள்ளியில் மதிய உணவு போட ஏற்பாடு செய்துவருகிறோம். ஊர்ப்பிரமுகர்களிடம் மதிய உணவின் அவசியம் குறித்து எடுத்துச்சொல்லி வருகிறோம். கூடிய சீக்கிரம் "இல்லை" என்ற நிலை இல்லையென்றாகிவிடும் என்று நம்புகிறோம். பள்ளிக்கு வேண்டிய சாமான்கள் பலவற்றை கிராமத்தினரே வாங்கியளித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. "கல்வி கரையில" என்பதற்கேற்ப, கல்விபள்ளியுடன் முடிந்துவிடாது பள்ளிப்படிப்பு முடிந்தும் பகுத்தறிவைப் பெருக்கிக்கொள்ள ஒரு நூல் நிலையமும் அமைத்துள்ளோம். இது இங்குள்ள கிராமவாசிகளுக்கு ஒரு "வரப்பிரசாதம்"போல் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

சமுதாயம் சிறக்கவேண்டுமானால்,

மக்கள் தெளிவுற்று விளங்கவேண்டும், படித்தால் மட்டும் போதாது; புரிந்துகொள்ளவேண்டும். நாட்டின் நடப்பு, நல்லாட்சி சிறப்பு, ஆகியவைபற்றித் தெரிந்துகொள்ள வேண்டாமா? உண்டு, உறங்கினால் மட்டும் வாழ்வு வளம்பெறுமா? ஆண்டான்—அடிமை, முதலாளி—தொழிலாளி, ஜாதி சமய வேறுபாடுகள் ஆகிய தீய உணர்ச்சிகள் மூலம் சமுதாயம் பாழ்படாமல் பார்க்கவேண்டாமா? இவைகளை அவ்வப்போது தேர்ந்து தெளிந்துகொள்ள ஒரு சாதனம் வேண்டாமா? வேண்டும் என்பது தானே நம் விருப்பம்! அந்த விருப்பத்தை நிறைவேற்றும் சாதனமாகிய சமூகக்கல்வியைப்பெறவே (அதாவது சமுதாயப்பிணக்குகளை விவாதித்துத், தீர்த்து நல்ல முறையில் சமுதாயம் செயலாற்றக்கற்றுக்கொள்ளும் ஓர் படிப்பினை) எங்களூர் கிராமவாசிகள் அனைவரும் ஒன்றுகூடி உழைத்ததின் பயனாய் எழிலுடன் காட்சியளிக்கும் எங்கள் சமுதாய மன்றக்கட்டிடம் ரூபாய் 5000-00 செலவில் கட்டப்பட்டுள்ளது.

சமுதாய நலத்திட்டத்திலிருந்து ரூபாய் 2350. உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. ரூ 500. மதிப்புள்ள ரேடியோ ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதில் பாதித் தொகை ஊர் மக்களால் அளிக்கப்பட்டது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஆகும். நோயின் ஆதாரம் அசுத்தமாகும். ஆதலால் கிராம சுகாதாரம் பாதுகாக்கப்படவேண்டும். கழிவுநீர் தேங்கி, தெருக்களை அசுத்தப்படுத்தாமல் இருக்க 700' தூரம் . வாய்க்கால் அமைத்துள்ளோம். ரூபாய் 1800 இதற்கென செலவிட்டுள்ளோம். வட்டார நிதியிலிருந்து ரூ 1200 அளிக்கப்பட்டது. குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய 2 கிணறுகள் ஆழப்படுத்திச் செப்பனிடப்பட்டுள்ளன. ஸ்தல நிர்வாகத் திட்டத்திலிருந்து ரூ 150-ம் வட்டாரம் மூலம் ரூ 500-ம் அளிக்கப்பட்டது இது தவிர பஞ்சாயத்து நிதியிலிருந்து ரூ 400. செலவழித்து 2 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தெருக்களுக்கு சரள் அடிக்கப்பட்டு சுத்தமாக வைக்கப்பட்டுள்ளன. ரூ 1000-வரை இதற்கு செலவழிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்திலிருந்து மின்வசதி செய்யப்பட்டுள்ளது. 7 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. இன்னும் 6 லைட்டுகள்போட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம் இது முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.

கதரும் கைத்தொழில்களுமின்றி நாடு வளம் பெறுமா? கிராமம் செழிக்குமா?

கிராமத் தொழில்களைச் சிறப்புறச்செய்யப் பஞ்சாயத்து யூனியனிலிருந்து தக்க மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு நவீனக் கருவிகள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

50 இராட்டைகள் வழங்கப்பட்டு,

சாந்தி சாந்தி என்று
சங்கு கொண்டு ஊதுவோம்
சோர்ந்திருக்கும் உலகினுக்குச்
சுகமெடுத்து ஓதுவோம்
மாந்தருக்குள் கோப தாப
வாது சூது மாறவே
காந்தி சொன்ன மார்க்கமின்றி
கதி நமக்கு வேறில்லை"—என்ற

இசையொலியோடு சுற்றிக்கொண்டிருக்கிறது என்பதனை உள்ள மகிழ்ச்சியுடன் கூறி விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

"வளர்க கிராமத் திருப்பணி"

## "பழங்களைப் பக்குவப்படுத்தல்"

பழங்களையும் காய்கறிகளையும் வீணாக்காமல் உபயோகிப்பதில் நாம் எவ்வளவு அக்கரை செலுத்தினாலும் அறுவடை காலங்களில் தேவைக்கும் மிகுதியாகக் கிடைக்கும் பழங்களையும் காய்கறிகளையும் அழுகி வீணாக்காமலிருக்க அவைகளைத் தக்க முறையில் பக்குவப்படுத்தலை கற்றுக்கொள்ள வேண்டும். நம் வீடுகளில் அன்றாடம் தேவைக்கான பழங்களை பக்குவப்படுத்துவதைத் தவிர வர்த்தக ரீதியில் அதிகமான அளவு பழங்களையும் காய்கறிகளையும் பக்குவப்படுத்துவதற்கு சிறந்த வாய்ப்பு இருக்கிறது. இந்தியாவில் ஆண்டு தோறும் உற்பத்தியாகும் சுமார் 4¼ கோடி டன் பழங்களில் கணிசமான அளவு உடனடியாக உபயோகிக்கப்படாததால் கணிசமான அளவு கெட்டுப் போகிறது.

மிகக் குறைந்த செலவில் சுலபமான முறையில் செய்யக் கூடிய இப்பழம் பக்குவப்படுத்தும் தொழிலை சிறு குடிசைத் தொழிலாக நடத்தலாம். இத்துறையில் ஈடுபட விரும்புவோருக்காக அரசாங்கம் தேவையான கடன் வசதிகளையும், பழம் பக்குவப்படுத்துதல் சம்மந்தமான விஞ்ஞான அறிவைப் புகட்டவும் தக்க வசதிகளைச் செய்துள்ளது. ஆகையால் இத்தொழிலில் அக்கரையும் ஆர்வமும் உள்ள விவசாயப் பெருமக்கள் நன்மை பயக்கும் இத்தொழிலில் ஈடுபட்டு தங்கள் வருவாயை அதிகப்படுத்தலாம். இதற்குத் தேவையான யோசனைகளையும், உதவிகளையும், உங்களுக்குஅருகாமையிலுள்ள பழ அபிவிருத்தி உதவியாளர் அளிப்பார்.

"மேழிச்செல்வம்"
1962, மே-ஜுன் மீ

## நிலக் கடலை.

நிலக்கடலை (வேர்க்கடலை) ஒரு சிறந்த உணவுப்பொருளாகும். 40 முதல் 50 சத விகிதம் கொழுப்புச் சத்தும் 25 முதல் 33 சத விகிதம் புரதச் சத்தும், 20 சத விகிதம் கார்போ ஹைட்ரேட்சும் இதில் உள்ளன. $1\frac{3}{4}$ அவுன்ஸ் பருப்பு $1\frac{1}{2}$ அவுன்ஸ் இறைச்சி, $2\frac{1}{2}$ அவுன்ஸ் முட்டை, 8 அவுன்ஸ் பால் இவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய புரதச்சத்து ஒரு அவுன்ஸ் நிலக்கடலையிலிருந்து கிடைக்கிறது. இதன் புரதச்சத்து விரைவில் ஜீரணம் ஆகக்கூடியதும், உயர்ந்த புஷ்டி தரக்கூடியதுமாகும். இதில், சிறந்த பாஸ்பரஸ் சத்தும், சுண்ணும்பும் சத்தும் உள்ளன. வைட்டமின் எனப்படும் உயிர்ச் சத்தும் உள்ளது. நிலக்கடலை சாப்பிடுவதால் அதன் எண்ணைச் சத்தினுல் ஜீரணக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்னும் நம்பிக்கை நம் நாட்டில் இருந்துவருகிறது. மேலும். நல்ல ரக நிலக்கடலை நமக்குக் கிடைப்பதில்லை. திண்டிவனம் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் பரிசோதிக்கப்பட்ட ஏ. எச். 6719 என்னும் பருமனை நிலக்கடலையானது குறைந்த எண்ணெய்ச் சத்தும் அதிக இனிப்புச் சத்தும் கொண்டது. ஏக்கருக்குச் சுமார் 1200 ராத்தல் வரை மேற்படி வித்திலிருந்து கிடைப்பதுடன் 125 நாட்களில் இப்பயிர் அறுவடைக்கு வருகிறது.

(மேழிச்செல்வம்—மார்கழி இதழ்)

## பீர்க்கன் காய்.

பூசணி இனக் காய்கறி வகைகளுள் பீர்க்கன் காய் மிக முக்கியமானது. தேக ஆரோக்கியத்திற்கு வேண்டிய சத்துள்ள உணவுப் பொருள்கள் இதில் உள்ளன. 0·9% புரதமும், 0·5% கொழுப்பும், 3·4% மாவுச் சத்தும், 0·278% தாதுப் பொருளும், 49 யூனிட் வைட்டமின் Cயும், 18 யூனிட் வைட்டமின் Dயும் உள்ளன. 55 முதல் 60 நாட்களில் பீர்க்கன் செடி காய்த்துப் பயன் தர வல்லது. கோயமுத்தூர் விவசாயக் கல்லூரி ஆய்வுக் கூடத்தால் பொறுக்கியெடுக்கப்பட்ட எச். 345 என்னும் பீர்க்கு மிகச் சிறந்தது.

—மேழிச்செல்வம். கார்த்திகை மாதம்


சிவராம்

ரேடியோ கம்பெனி

எக்கோ ரேடியோ, உஷா மின்விசிறி & தையல் மெஷின் வியாபாரம்,

பஸ் ஸ்டாண்ட் பக்கம்

கோவில்பட்டி.



எங்களிடம் எக்கோ ரேடியோ எல்லா மாடல்களிலும் விற்பனைக்குத் தயாராய் உள்ளது. நேரில் விஜயம் செய்து பிடித்தமான ரேடியோவை வாங்க வேண்டுகிறேம்.

உஷா தையல் மெஷின்களும், விசிறிகளும் (Fans) ரெடி ஸ்டாக் இருக்கிறது. ரொக்க விலைக்கும், தவணையிலும் கிடைக்கும். கிளியர்டோன் ஸ்டீல் பர்னிச்சர்களும் ஸ்டாக் உள்ளது. ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்

அன்புள்ள

R. அழகையா பிரதர்ஸ்,

கோவில்பட்டி.




# களப்பாளங்குளம் பஞ்சாயத்து

திரு. ம. அண்ணுமலைத் தேவர்,

தலைவர்.

குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துகளில் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தும் ஒன்று. எங்கள் பஞ்சாயத்தின் அலுவலகம் சம்பைகுளம் என்னும் கிராமத்தில் உள்ளது, எங்கள் ஊர் பரப்பளவு 2·17 சதுர மைல். இவ்வூர் கழுகுமலை-தேவர்குளம் ரஸ்தாவில் 4 மைலில் உள்ளது. இங்கு விவசாயம் முக்கியத் தொழில். இவ்வூரில் 155·95 ஏக்கர் நன்செயும், 997-17 ஏக்கர் புஞ்சையும் உள்ளது. பாசன வசதிக்காக 2 குளங்களும், 88 கிணறுகளும் உள்ளன.

குருவிகுளம் வட்டாரவளர்ச்சி திட்டத்தின் கீழ் எங்களூர் விவசாய இளைஞர்களுக்கு இரண்டு பொதுக் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஷை கட்டிடத்தில் விவசாய இளைஞர்கள் கூடி இன்றைய விஞ்ஞான சாதனைகளை விவாதித்து புரிந்துகொள்ள வசதியாக உள்ளது. குடிதண்ணீர் கிணறுகள் மூன்று உள்ளன. எங்கள் கிராமத்தில் பெரும்பாலும் மறவர்கள் வாழ்கின்றனர்கள். அவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான வசதிகள் வட்டார வளர்ச்சி அதிகாரி அவர்களால் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மக்கள் குடியிருக்க 14 வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. எங்கள் பகுதியில் மிளகாய், பருத்தி முதலியன பயிர் செய்து வருகிறோம். எருக்குழிகள் வெட்டப்பட்டு கம்போஸ்ட் உரம் தயாரித்து வருகிறோம். சென்ற ஆண்டில் 5 டன் ரசாயன உரம் உபயோகப்படுத்தியிருக்கிறோம்.

இப்பஞ்சாயத்து பகுதியில் சுமார் 378 கால்நடைகள் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. 217 பசுக்களும், எருமைகளும் உள்ளன. 954 செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் உள்ளன. இப்பகுதியில் செம்மறியாடுகளுக்கு அம்மைப் பிணி வராமல் தடுப்பு ஊசி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி வளர்ச்சிக்காக இப்பகுதியில் இரு ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. 140 குழந்தைகள் வரை கல்வி கற்று வருகின்றனர்.

எங்கள்கிராமத்தில் (சம்பைகுளம்கிராமத்தில் கூட்டுறவு சங்கம் ஒன்று உள்ளது. இச் சங்கதின மூலமாக விவசாயத்திற்கு வேண்டிய ரசாயன உர உப்புகளை பெற்று உபயோகித்திருக்கிறோம்.

பஞ்சாயத்தின் வருமானம் ரூ 800. இச் சிறு வருமானத்தில் ஊருக்குத் தேவையான பொதுப் பணிகள் அதிகம் செய்யாவிடினும் ஊருக்குஅவ்வப்போது தேவையானவற்றை செய்து முடித்து இருக்கிறோம். மூன்று கிணறுகள் புதிதாக வெட்டியுள்ளோம். இரண்டு கிணறுகளை சீர்படுத்தியுள்ளோம்.

சீர்குலைந்துள்ள கிராமங்களைசெப்பனிட்டு சீராக்கப் புகுந்த செம்மல் திரு. கோ. வெங்கடாசலபதி கிராம அபிவிருத்தி கமிஷனர் அவர்கள் எடுத்துக் கூறி வரும் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' வாக்கை வழிகாட்டியாக வைத்து பஞ்சாயத்தின் வருவாயை பெருக்க கிராமப்புறங்களிலும், குளத்துக் கரைகளிலும், புறம்போக்கு நிலங்களிலும் பலனுள்ள மரங்கள் வளர்த்து பயனடைய பாடுபட்டு வருகிறோம். பஞ்சாயத்து ஆட்சியை மக்களுக்கு பயனுள்ள ஆட்சியாக்கப் பாடுபடுவோம். வணக்கம்.

# மணலூர் பஞ்சாயத்து.

**பு. குருநாதக் கோனர்.**
தலைவர்.

எங்கள் கிராமம் சங்கரன்கோவில்-ராஜபாளையம் ரோட்டில் 4-வது மைலிருந்து பிரிந்து செல்லும் பாதையில் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது. எங்கள் கிராமம் தான் குருவிகுளம் வட்டாரத்தின் மேற்கு எல்லை கிராமம் சுமார் 3 சதுர மைல் பரப்புள்ளதாகும். ஜனத்தொகை 1504,

எங்கள்கிராமத்தில் முக்கியமாக இரண்டு குளங்கள் இருக்கின்றன. பெரியகுளம்- இது பொது மராமத்து இலாகாவினுல் பராமரிக்கப்படும் குளம். அதன் ஆயக் கட்டு சுமார் 274 ஏக்கர் மற்ருெரு குளம்- கண்டமாணிக்கம் குளம். இதன் ஆயக்கட்டு 38 ஏக்கர். ஜனங்கள் பெரும்பாலானவர்கள் விவசாயிகளே! விவசாயிகளுக்கு சென்ற வருடம் 6½ டன்கள் வரை ரசாயன உரங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

மணலூர் கிராமத்தில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதில் 130 குழந்தைகள் படிக்கிருர்கள். எங்கள் பஞ்சாயத்தை சம்பந்தப்பட்ட வரையில் ஒரு பஞ்சாயத்து நூல் நிலையம் ஒன்றும் நடத்தி வருகிறேம்.

எங்கள் பஞ்சாயத்தில் சுமார் 40 இராட்டைகள் இயங்கி வருகின்றன. மேலும் ஒரு கூட்டுறவு நாணயச்சங்கமும் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது'

சர்க்காரிலிருந்து எங்கள் கிராமத்தை ராஜபாளையம் ரோட்டுடன் 'இணைக்கும் ரோடு' போட்டுக் கொடுத்திருக்கிருர்கள். எங்கள் கிராமத்தின் மேற்கே P. W. D. பெரிய குளம் இருக்கின்றது. P. W. D. பெரிய குளத்தில் தண்ணீர் பெருகிவிட்டால் ரோடு தண்ணீரில் மூழ்கிவிடும்படியான நிலையில் இருக்கின்றது. ஆகவே குளத்தில் ஒருபாலம் கட்டினுல்தான் ஊருக்குள் போக முடியும், இதில் ஒரு பாலம் அத்தியாவசியமாக வேண்டியிருக்கின்றது. இந்த இடத்தில் ஒரு பாலம் கட்ட முயற்சி செய்து வருகின்றேம். கடந்த ஆண்டுகளில் ரூ. 6714 அளவில் அரசாங்க உதவி பெற்று பொது மராமத்து வேலைகள் செய்துள்ளோம்.

எங்கள் கிராமத்தின் வழியே ராஜபாளையம் தென்காசி "ரெயில்வேலயன்" செல்லுகிறது. எங்களுக்கு சமீபமாக உள்ள ரெயில்வே ஸ்டேசன் சங்கரன்கோவில்தான் அது சுமார் 6 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது எங்கள் கிராம எல்லைக்குள் ஒரு ரெயில்வே ஸ்டேசன் அமைத்தால் எங்கள் கிராமத்து ஜனங்களும் மற்றைய பக்கத்து கிராம ஜனங்களுக்கும் ஏறிச்செல்ல சௌகரியமாக இருக்கும். இதற்கும் வழிசெய்வதற்காக நாங்கள் பாடுபட்டுவருகின்றேம்.

இதற்கெல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டிக்கொண்டு எனது அறிக்கையைமுடித்துக்கொள்கிறேன்.

வணக்கம்!


குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன் ஆண்டு விழாவிற்கு
எங்கள் நல் வாழ்த்துக்கள்.
எங்கள் ஜின்னிங் பாக்டரியில்
பருத்தி நல்லமுறையில் அரைத்துக்கொடுக்கப்படும்.
P. N. அய்யலுசாமி நாயக்கர்,
உரிமையாளர்
ஜின்னிங் பாக்டரி, சிப்பிபாறை.




# அப்பனேரி பஞ்சாயத்து.

**திரு. V. கணபதிராமசாமி நாயக்கர்,**
தலைவர்.

"பஞ்சாயத்து ராஜ்யம் மலர்ந்திட்டது
பாமரர் வாழ்வில் ஒளி ஏற்பட்டது"

என்ற பாட்டு காற்றிலே பறந்து வந்தது.

30-9-62ல் எங்கள் பஞ்சாயத்தில் பஞ்சாயத்து நாள் கொண்டாடப்பட்டதன் எதிரொலி என நினைத்தேன்.

கிராமங்கள் சுயபலம் பெற்று, தானுக இயங்க வல்ல குடியரசாக மிளிர வேண்டுமென்று காந்திஜி கண்டகனவு நனவாகியது அந்த நாளில் தானே? அதனுல் தான் 'பஞ்சாயத்து ராஜ்யம் மலர, வாழ்வில் மணம் வீசுகிறது' என்ற பாட்டு உள்ளத்திலிருந்து கிளம்பியது.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம் எல்லோருக்கும் அமையவேண்டும். அந்நிலை எய்தினுல்தான் கிராமங்கள் சுயபலம் பெற முடியும். இந்த குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட 1958ம் வருட பஞ்சாயத்துச் சட்டத்தில், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைதீவிரமாக செயலாக்கவும், பஞ்சாயத்துகள் பொறுப்பேற்று பணியாற்றவேண்டும் என்று கண்டுள்ளது. ரோடு, சுகாதார வசதிகள், லைட் வசதிகள் ஆகியவை அமைத்துத்தருதலே தங்கள்பணி என்றிருந்த பஞ்சாயத்துகள், 2—10—60ல் இருந்து உணவு உற்பத்தியைப் பெருக்க திட்டமிடும் பொறுப்பையும் ஏற்றுள்ளது. கிராமத்தின் உணவு தேவை பூர்த்தியடைய பஞ்சாயத்துகள் வழி வகைகளைக் கண்டுபிடித்து திட்டமிடுதல் சாலச் சிறந்ததேயாகும்.

எங்கள் பஞ்சாயத்து கோவில்பட்டி-பருவக்குடி பாட்டையில் 1½ மைலில் பிரிந்து வடக்கே ஏழாயிரம்பண்ணைக்குச் செல்லும் வழியில், பிரிவிலிருந்து 1½ மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. அப்பனேரி, புது அப்பனேரி, லட்சுமியம்மாள்புரம் ஆகிய கிராமங்களைக் கொண்டது. மின்சார வசதியுள்ளது. மக்கள் தொகை 1196. பரப்பு 2 ச மைல். வருமானம் ரூபாய் 1800.

'இலமென்று அசை இ இருப்பாரைக்
காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்' என்று

வள்ளுவர் கூறியதற்கிணங்க, எங்களூரில் பொருள் இல்லை என்று சோம்பேறிகளாக காலம் கழிக்காமல், உழவுத் தொழிலை கிராமத்தினர் மேற்கொண்டுள்ளனர். நஞ்சை இல்லை. புஞ்சை சாகுபடியே அதிகம். மானவாரிப் பயிரே அதிலும் அதிகம். கிணற்று இறைவைச் சாகுபடி சொற்பமே. கீழ்க்கண்டபடி பயிர் சாகுபடி நடைபெறுகிறது;-

| | | |
|---|---|---|
| நெல் | 7 | ஏக்கர் |
| பருத்தி | 850 | ,, |
| சோளம் | 496 | ,, |
| கம்பு | 645 | ,, |
| ராகி | 20 | ,, |

பஞ்சாயத்து உணவுத் திட்டம் வகுத்து வேலை செய்து வருகிறது. கம்போஸ்ட் உர குழிகள் மூலம் உரம் தயாரிக்கப்படுகிறது. விவசாயமும் கால்நடையுமே நாட்டின் இரு கண்களாகும். கால்நடை அபிவிருத்தியில் தான் விவசாய வளர்ச்சி அமைந்துள்ளது

என்பதையும் அறிவோம். ஆதலால் கால் நடை அபிவிருத்தி, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்துமாறு எல்லோரையம் வற்புறுத்தி வருகிறோம். "வீடு தோறும் கோழி வளர்ப்பு" என்பதே எங்கள் தற்போதைய திட்டம்.

"ஒன்ருய் நின்றினி
வென்ரு யினுமுயர்
சென்ரு யினும் வலி
குன்ரு தோதுவம்" என்று

பாரதத்தின் வெற்றி முழக்கத்தைப் பாடும் பாரதி ஒன்ருய் நின்று வலி குன்ருது கூறுவோம் என கூறுகிருர். ஒற்றுமையின் நிலைக்களனய் எங்களூர் கூட்டுறவு சங்கம் அமைந்துள்ளது. கிராம கடன் தேவைகளை பூர்த்தி செய்யவும், சேமிப்பு முறைகளைக் கையாளும்படி செய்யவும் கூட்டுறவு சங்கம் பணியாற்றி வருகிறது.

'கல்லாதன் சொற்காமுறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண் காமுற்றற்று" என்று

வள்ளுவர் கல்லாமையை கடிந்து கூறுகிருர். ஆகவே எல்லோரும் கல்வி பயில பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியும், தனியார் பள்ளியும் நடைபெற்று வருகிறது. பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்லுகின்றனர்.

புது அப்பனேரிக்கு ரூபாய் 3000செலவில் சரல்பரப்ப ரோடு போடப்பட்டுள்ளது. ரூபாய் 2200 செலவில் கிணர் ஒன்று புதிதாக வெட்டப்பட்டுள்ளது. வார்கால் கட்டி, கிராம சுகாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. லட்சுமியம்மாள் புரத்திற்கு ரூபாய் 3000. செலவில் 3 பர்லாங்க் ரோடு போடப்பட்டு சரள் விரிக்கப்பட்டுள்ளது. அப்பனேரியில் ரூபாய் 1200 செலவில் கிணறுரிப்பேர் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 18500 செலவில் மேல் நிலைத் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. குறைந்த வருமானமுள்ள எங்களூரில் நிறைந்தவேலை செய்திருப்பதற்கு எங்கள் கிராமத்தினர் காட்டிய ஊக்கமும், உற்சாகமும், ஒத்துழைப்புமே காரணமாகும்.

"நோய்க் கிடங்கொடேல்" என்பதற்கிணங்க நோய் வராமல் தடுக்க கிராமம் சுத்தமாய் வைக்கப்படவேண்டும்–கழிவு நீர் தேங்கி நின்று தெருக்கள் அசுத்தப்படாமல் இருக்கவார்கால் கட்டப்பட்டுள்ளது. தெருக்களுக்கு சரள் அடித்தல், வார்கால் அமைத்தல், கிணறு செப்பனிடல் ஆகிய வேலைகளுக்கு பஞ்சாயத்திலிருந்து ரூபாய் 10,000க்குமேல் கடந்த 5ஆண்டுகளில் செலவழிக்கப் பட்டுள்ளது. இதுதவிர மக்கள் தங்கள் பங்கினைச் செலுத்தி வருகின்றனர். மக்கள் திட்டமல்லவா? ஆதலால் எங்களூர் வாசிகள் பொறுப்புணர்ந்து தங்கள் பங்கை ஆக்கப் பணிகளுக்குச் செலுத்தி வருகின்றனர். என்ருல் மிகையாது.

கட்சி வேறுபாடின்றி.கலவரமெதுவுமின்றி பஞ்சாயத்துகள் பணியாற்ற வேண்டும் அப்போதுதான் முன்னேற்றம் காணமுடியும் என தேசப்பிதா காந்திஜி அவர்கள் கூறியுள்ளார்கள்:

"கலகமற்று மனிதர் வாழக்
காந்தி மார்க்கம் ஒன்று தான்
உலகினுக்குத் தேவையென்ற"
உண்மையைக் கடைப்பிடித்து

கிராமம் செழிக்க, நாடு நலம் பெற பாடுபடுவோம்.

வணக்கம்!

"பசிபிணி போக்கும் பஞ்சாயத்து வளர பாடுபட்டு ழைத்திடுவோம்"


வாழ்க பாரதம்!
வளர்க பஞ்சாயத்து ஆட்சி!

குருவிகுளம்
பஞ்சாயத்து யூனியன்
ஆண்டு விழாவிற்கு
எனது
வாழ்த்துக்கள்

M. A. அழகிரிசாமி நாயுடு,
பஞ்சு, பருத்தி வியாபாரம்
மைப்பாறை.




# இளையரசனேந்தல் பஞ்சாயத்து

திரு K. V. கஸ்தூரிரங்க அப்பாசாமி நாயுடுகாரு,

தலைவர்.

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு" —குறள்:

பஞ்சாயத்து ஆட்சிமுறை அமுலுக்கு வந்து இன்றுடன் 2 ஆண்டுகளாகின்றன. கிராம சீர்மைப்பு பணிகளை நிறைவேற்றும் பொருப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதை நல்முறையில் செயல்படுத்த கிராம பஞ்சாயத்துக்களை வலுவடையச் செய்து அவைகளின் ஆதாயங்கள் பெருக்கப்பட்டு வருகின்றன. வருவாய் அளிக்கும் திட்டங்களையும் சமுதாயத்திற்கு நலன் பெறும் திட்டங்களையும் ஏற்று, அவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கிராம பஞ்சாயத்தைச் சாரும்: இக்கடமைகளையே கண்ணைக் கொண்டு பஞ்சாயத்து பரிபாலனம் நடக்க வேண்டும் பஞ்சாயத்து ஸ்தாபனம் இதர அபிவிருத்தி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு ஒத்துழைக்க வேண்டும். ஒரு கிராமத்தின் சுபீட்சம் அக்கிராமத்தின் கல்வி, கூட்டுறவு, பஞ்சாயத்து ஸ்தாபனங்களை நல்முறையில் நடத்துவதைப் பொறுத்துத் தான் இருக்கிறது. மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவென்ருல் கிராம பஞ்சாயத்து பொறுப்புணர்ச்சியுடன் அடிக்கடிகூடி திட்டங்களை விவாதித்து நல்ல முடிவுகள் காண வேண்டும். அவ்வாறில்லாமல் "ஏனோ தானோ' என்று நிர்வாகத்தில் சரிவர பங்கு கொள்ளாமல் பஞ்சாயத்தார்கள் நடந்து கொண்டால் சீக்கிரம் கிராமத்தின் சுபிட்ச பாதைக்கு மகத்தான தடங்கல் செய்ததாகவே முடியும். பொதுநலப்பணி ஏற்றபின் பிற அசௌகரியங்கள் மனதில் கொண்டு இருக்கக்கூடாது நல்லதல்ல. எனவே எங்கள் கிராம ஆட்சியில் ஒவ்வொரு பஞ்சாயத்தாரும் கிராம நலத்தையே பெரிதாகக் கருதி முன்னேற்றங்கள் காண விழைகின்றோம்.

எங்கள் கிராமம் மிகப் பழமையானதும் பெரிய விஸ்தீரணமுடையதும் ஆகும். இதன் பரப்பு 7½ சதுர மைல்கள் எங்கள் பஞ்சாயத்து இளையரசனேந்தல் முதல் பாகம்; இரண்டாம் பாகம்; லக்ஷ்மி அம்மாள் அக்ரஹாரம், வடமன்ஞர்குளம் கிராமங்களை உடையது. எங்கள் ஜனத்தொகை 4231, சுமார் 4600 ஏக்கர் அளவில் விவசாய நிலங்கள் உள். அதில் 650 ஏக்கர்வரை சாகுபடி இல்லாதது மீதி நிலங்களில் விவசாயத்தை பாடுபட்டு செய்து வருகிறோம். பாசன வசதிகளுக்கு 3 குளங்களும் தோட்டங்களும் தான். இங்கு தோட்டங்களும் காடுகளும் அதிகம். மித சீதோஷ்ண நிலையாதலால் மயில்கள் அதிகம் உண்டு. எங்கள் கிராமம் வெகு காலம் வரையில் ஜமீன்தார் வசமிருந்து சில ஆண்டுகள் முன்தான் 'இரயத்துவாரி' முறையில் வந்திருக்கிறது! எங்கள் பஞ்சாயத்தில் சுமார் 2010 பேர் விவசாயத்தொழில் செய்கிருர்கள். தீப்பெட்டி செய்வதை தொழிலாகக் கொண்டவர்கள் சுமார் 200 4 தீப்பெட்டி தொழிற்சாலை உள்ளது. பஞ்சாயத்து யூனியன் ஆட்சி அமைத்தபின் விவசாயத்தில் பல முன்னேற்றங்கள் செய்திருக்கிறோம். உதாரணமாக சுமார் 15 டன் ரசாயனஉரங்களும் 3 டன் பொறுக்கு விதைகளும், ரூ.300 மதிப்பில் நவீன விவசாய கருவிகளும் 750

கிலோக்கள் பூச்சி மருந்துகளும் விநியோகித்திருக்கிறோம். 65 கம்போஸ்ட் குழிகள் ஏற்படுத்தி இருக்கிறோம். 8 தடவைகள் விவசாய விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. ஒரு மாதிரி விவசாயப்பண்ணையும் 9 ஏக்கர் நிலத்தில் அமைத்திருக்கிறோம். ஆகவே விவசாய முன்னேற்றமும் நல்ல முறையில் பயன் கொடுத்தது சுமார் 170 ஏக்கரில்நெல் சாகுபடி 230 ஏக்கரில் பருப்புவகைகள் 1478 ஏக்கர் பருத்தி சாகுபடி 1160 ஏக்கர் கம்பு, 110 ஏக்கர் சோளம், 121 ஏக்கர் கேப்பை 1300 ஏக்கர் மற்றவை. இனிவரும் ஆண்டுகளில் எஞ்சியிருக்கும் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர முயற்சிப்போம்.

எங்கள் பஞ்சாயத்தில் 11,782 கால்நடைகள் உள்ளன. உயர்ந்த ஜாதி கால் நடை தருவிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். மற்றப்படி அவ்வப்போது கால் நடை மருத்துவம் அளிக்கப்பட்டும் வருகிறது எங்கள் பஞ்சாயத்திற்கென 500 மீன்வகைகளும் கொடுக்கப்பட்டு தரவிருத்தி செய்யப்படுகின்றன.

நீர்பாசன வசதியில் 41 கிணறுகள் வரை கட்டியும் புதுப்பித்தும் வந்திருக்கிறோம். 7 பம்பு செட்டுக் குழாய்கள் அமைத்திருக்கிறோம். இந்த வகையில் ரூ. 11,500 வரை கடன் வசதி பெற்றிருக்கிறோம்.

குடிதண்ணீர் வசதி திட்டத்தில் ரூ. 18,000 அளவில் ஒரு பெரிய மேல் நிலைத் தண்ணீர்த்தொட்டி (Overhead Tank) கட்ட திட்டம் அங்கீகரிக்கப்பட்டு கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கிறது. இவை எல்லாம் பஞ்சாயத்து யூனியன் பதவியேற்றபின் கிடைத்த மாபெரும் நன்மை. மற்றபடி ஒரு கைப்பிடி குழாய் நிறுவியிருக்கிறோம். 15 உறுஞ்சும் குழிகள் ஏற்படுத்தி இருக்கிறோம். வட்டார வளர்ச்சிதிட்ட மூலம் 5 கிணறு ஆழப்படுத்தியும் 10 கிணறு ரிப்பேர் செய்தும் 3 புதிதாக வெட்டியும் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சமூககல்வி அம்சத்தில் முதியோர் கல்வி திட்டத்தில் 62 முதியோர்கள் கல்வி பயின்றனர். ஒரு வாசகசாலை நல்ல முறையில் நடந்து வருகிறது அது பஸ்நிலையத்தற்கு அருகாமையில் இருப்பதால் பஸ்ஸுக்காக காத்திருக்கும் நேரங்களில் பொதுஜனங்கள் இதை நன்கு உபயோகிக்கின்றனர். ஒரு இளைஞர் விவசாய சங்கமும் அமைத்திருக்கிறோம். சமூக கல்வி திட்டத்திற்கும் எங்கள் பஞ்சாயத்திற்கு ரூ. 200 வரையிலும் பண உதவி கிடைத்திருக்கிறது,

நடப்பு ஆண்டில் ஒரு 'கிராம தலைவிகள்' பயிற்சிக் கூடம் நடத்தப்பட்டது. 40 மாதர்கள் பயிற்சி பெற்றனர், எங்கள் கிராமங்களில் 6 ஆரம்ப பாடசாலைகளும் ஒரு உயர்தர ஆரம்ப பாடசாலையும், ஒரு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன.

பஞ்சாயத்து யூனியனிலிருந்து ரூ. 1300 பண உதவி பெற்று ஒரு பாலம் அமைத்தோம். கதர் இயக்கத்திலும் எங்கள் கிராமங்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன. 55 நூற்பாளர்கள் இருக்கிறார்கள்.

எங்கள் கிராமத்தில் ஒரு ஆதி திராவிடர் கூட்டுறவு நாணயச் சங்கம் வெகுகாலமாக இருந்து வருகிறது. இதைத்தவிர இதர மக்களுக்காக ஒருகூட்டுறவு நாணயச் சங்கம் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது. நடப்பு ஆண்டில் இந்த சங்கத்திற்கு அரசாங்கம் ரூ. 10,000 கடன் மானியவசதிகள் அளித்திருக்கின்றது. பிளான் எஸ்டிமேட்டுகள் அங்கீகாரம் பெற்று 'கூட்டுறவு கிட்டங்கி' கட்டிடவேலை துவக்கப்பட்டு இருக்கிறது. இதைத்தவிர சுமார் 300 குடும்பங்கள் 'பள்ளர்' வகுப்பைச் சேர்ந்தவர்கள். தங்களுக்கென ஒரு பிரத்தியோக கூட்டுறவு நாணயச் சங்கம் அமைக்க வேண்டுமென கோரியிருக்கிறார்கள். இது விஷயமாய் ஆரம்ப ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்; நடப்பு ஆண்டில் இச் சங்கம் செயல்பட துவங்கிவிடும். எஞ்சியிருக்கும் சங்கங்களில் 554 மெம்பர்கள் இருக்கிறார்கள் கடந்த ஆண்டில் ரூ. 63,330 அளவில் கடன்கள் வழங்கப்பட்டன,

எங்கள் பஞ்சாயத்தில் 9 வார்டுகள் உள்ளன. எங்கள் கிராமத்தில் மின்சார வசதி இருப்பதால் 35 மின்சார தெரு விளக்குகள் போட்டிருக்கிறோம். எங்கள் பஞ்சாயத்து செலவில் ஒரு அலுவலகக் கட்டிடம் கட்டி இருக்கிறோம்.

ஒரு மருத்துவ உதவி நிலையமும் உண்டு குருவிகுள வட்டார மருத்துவ அதிகாரி வாரம் ஒரு முறைவந்து சிகிச்சை கொடுத்து வருகிறார். இதற்கு தனியாக ஒரு கட்டிடம் அமைத்துக் கொடுத்தால் நலம். இதற்கென முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் பலன் தரும் மரங்கள் வெகுவாக நட்டியிருக்கிறோம். ஒரு குடி தண்ணீர் கிணறு ஏற்படுத்தியிருக்கிறோம். ரோடு பராமரிப்பும் அவ்வப்போது செய்து வருகிறோம்: தவறாமல் எங்கள் பஞ்சாயத்து கூட்டங்கள் நடைபெறுகின்றன. எங்கள் கிராம மக்கள் கடும் உழைப்பாளிகள். கிராம அபிவிருத்தியில் பஞ்சாயத்துடன் ஒத்துழைக்கின்றனர். ஆகவே நாங்களும் கிராம சேவையே பிரதானமாகக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க நம் நாடு! வணக்கம்!!



# குறிஞ்சாகுளம் பஞ்சாயத்து.

**திரு. G. வெங்கிடசாமி நாயக்கர்,**

**தலைவர்.**

'மக்களது தேவைதனை மனதில் எண்ணி
மாபெரும் நற் பணியாகச் செய்தல்
வேண்டும்!

எக்கணமும் ஏதேனும் காரணத்தால்
எள்ளளவும் சோர்வுதனை விடுதல்
வேண்டும்!

தக்கபடி சமயத்தில் உதவி செய்தால்
தயங்காமல் எல்லோரும் ஒன்று சேர்
வர்!

இக்காலம் மறுமலர்ச்சிக் காலமாகும்
இவையெல்லாம்பணிபுரிவோர் நினைக்க
வேண்டும்"

பண்டைய சமுதாயங்களில் தலை சிறந்தது இந்திய சமுதாயம். இதன் நாகரீகம் பெயர் பெற்றது. சமீப காலம் வரை நம்மை அடிமைகளாக்கி ஆட்சி புரிந்து வந்த ஆங்கிலேயரின் நாட்டில் 'கற்காலம்' நடந்து கொண்டிருந்த போது நம் நாட்டில் சிறந்த நாகரீக வாழ்வு நடந்து வந்திருக்கிறதென்பதற்கு சரித்திர சான்றுகள் கதை கதையாகத் தெரிவிக்கின்றன, நம் நாட்டில் வாணிபம், கல்வி, விவசாயம், அரசாங்கம் இவையெல்லாம் இணையற்ற புகழோடு திகழ்ந்திருக்கின்றன. கிராம பஞ்சாயத்துகள் ஒருவருக்கொருவர் உதவி புரிதல், சமுதாயப் பணி என்பவை நல்ல முறையில் இயங்கி வந்திருக்கின்றன.

கிராமக் கட்டுப்பாடுகள், கிராமப் பொருளாதாரத்தையும், கிராம வாழ்க்கையும் நன்கு நடைபெற கிராமப் பஞ்சாயத்துகளே பொறுப்பேற்றல் முதலியன மேன்மையுடன் திகழ்ந்தன இவையெல்லாம் பழைய கதைகள். ஆங்கிலேயன் வியாபாரம் என்ற பெயருடன் நம் நாட்டில் அடி எடுத்து வைத்ததும் மக்களிடையே கட்சி பேதங்களை தோற்றுவித்து. பிரித்தாளும் சூழ்ச்சியை கொண்டே ஒரு நூற்றாண்டுக்குள்ளேயே நம்மை அடிமைப்படுத்தி விட்டனர். கிராமச் செல்வமாகிய முக்கிய விவசாய மூலப்பொருள்களை இங்கிருந்து மிகவும் கேவலமான குறைந்த விலைக்கு எடுத்துச் சென்று அதைக்கொண்டு தங்கள் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தனிப் பொருள்கள் தயாரித்து அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கு நம் நாட்டையே விற்பனை ஸ்தலமாக்கி ஒன்று 20 படங்கு விலையில் நம் தலையிலேயே கட்டி புத்திசாலிகளாகியிருந்தார்கள். சிறுகச் சிறுக அடிமைப்பட்டு விட்டதினாலும், அரசு நம் கையில் இல்லாததாலும் நாம் வெள்ளையரின் கைபொம்மையாகி நம் நாட்டு வாணிபத்தைக் கைவிட்டு, அன்னியர் வியாபரம் பெருக, அவர்கள் நாடு தழைக்க அவனுடைய ஸ்தாபனத்திற்கே பணியாட்களாக அமர்ந்தது மிகவும் துக்கப்பட வேண்டிய விஷயமாகும். இவ்வாறு நம் நாட்டு விவசாயமும், வியாபாரமும் ஒருங்கே நசுக்கப்பட்டு இனிமேல் அதிகம் தாமதித்தால் இந்நாட்டின்வறுமை தங்களையும் பிடித்து விடும் என்ற நிலைமையில் நம்முடைய சுதந்திர இயக்கமும் ஓங்கி வளர்ந்திடவே ஒருவாறுநம்மைவிட்டு நீங்கி விட்டார்கள். ஆகவே நம் நாட்டின் சுதந்திரம் 1947ம் வருஷம் ஆகஸ்ட மாதம் 14ம் தேதி நள்ளிரவில் நம்நாட்டின் ஆரம்ப

காலத்தின் இருண்ட வறுமையைக் காட்டுவதுபோன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே நம்முடைய மாபெருந் தலைவர்கள் இந்த வறுமையுடன் போராடி நாட்டை இன்றைய சுபிட்ச நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றால் நாம் சாதனைகள் மலையளவில் செய்திருக்கிறோமென்பது கண்கூடு. ஆரம்ப காலத்தில் நம் நாட்டின் அரசியல் சட்டத்தின் உள்நோக்கமே விவசாய உற்பத்தியைப்பெருக்கி, வறுமையகற்றி எல்லோரையும் சம அந்தஸ்து உள்ளவர்களாகச்செய்து எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதுதான் என்று இயற்றப்பட்டது. இதைத்தான் நான் இன்றைய நாட்களில் காந்திஜி அவர்கள் வகுத்துக்கொடுத்த சர்வோதய குறிக்கோளுடன் அமைக்குபடி சமுதாய ஆட்சியைப் பின்பற்றி வெற்றிகண்டு வருகிறோம் கிராம சுபிட்சம்தான் நம்நாட்டின் சுபிட்சத்திற்கு அடிப்படை. எனவே பழைய பஞ்சாயத்து ஆட்சி முறையை, சாம்ராஜ்ய சக்கிரவர்த்தி அசோகர் காலத்திலிருந்து செவ்வன நடந்துவந்த பஞ்சாயத்து ராஜ்யத்தை புனருத்தாரணம் செய்வதே நம் கடமை. இதைக் கருத்தாகக்கொண்டு கிராமப்பஞ்சாயத்து சபைகள் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அம்சங்களிலும் தலையிட்டு கிராம பொருளாதாரத்தை எல்லா வகையிலும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்.

இந்த அடிப்படைக் கருத்துடன்தான் நாங்கள் எலலா முன்னேற்ற திட்டங்களில் பங்கு கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் கிடையாது. எனவே பலவிதங்களில் நாங்கள் சென்ற ஆண்டுகளில், விசேடமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் முன்னேறியிருக்கிறோம். இனி எங்கள் கிராமத்தைப்பற்றிய சாதனைகள் ஓரிரண்டை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்குமென்று நினைக்கிறேன்

எங்கள் கிராமம் குருவிகுளம்-திருவேங்கிடம் ரஸ்தாவில் திருவேங்கடத்திலிருந்து $1\frac{1}{2}$மைல் தூரத்தில் இருக்கிறது. 2.8 சதுர மைல் விஸ்தீரணம் உள்ளது. 1379 ஜனத்தொகை விவசாயம்தான் முக்கியத்தொழில் சுமார் 1800 ஏக்கர் நிலங்களில் 1709 ஏக்கர் சாகுபடிக்கு கொண்டுவந்திருக்கிறோம். திருந்திய விவசாய முறைகளை பின்பற்றுவதால் எங்கள் விவசாயம் பன்மடங்கு பெருகியிருக்கிறது. இதற்காக நாங்கள் பின்வரும் வழிகளை கையாண்டோம். கடந்த இரு ஆண்டுகளாக 6000 கிலோ வரை பொறுக்கு விதைகள் விநியோகித்திருக்கிறோம். ரூ 420வரை மதிப்புள்ள ரசாயன உரமும் ரூ 230வரை விவசாயக் கருவிகளும் கொடுத்துள்ளோம். 42 கம்போஸ்ட் குழிகள் அமைத்து கம்போஸ்ட் உரம் தயாரித்தோம். 16 நேரிடை விளக்கங்கள் ஏற்பாடு செய்தோம். எனவே நெல் சாகுபடி 65 ஏக்கராவும், பருப்பு வகையில் 152 ஏக்கராவும் பருத்தி 743 ஏக்கர் வரையிலும், இதர பயிர்கள் 614 ஏக்கர் வரையிலும், விருத்தியாகியுள்ளது.

எங்கள் கிராமத்தில் கூட்டுறவு நாணய சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது 207 மெம்பர்கள் இருக்கின்றனர் கடந்த இரண்டு ஆண்டில் ரூ 60800வரையிலும் கடன் விநியோகித்திருக்கிறது. விவசாயக் கடன்கள் அதிகமாகத் தருவதினால் விவசாய உற்பத்தியைப்பெருக்க வசதியாயுள்ளது. எங்கள் விவசாய மக்களுக்கு தானியங்கள் இருப்புவைக்க வசதியில்லாததால் ஓரளவு குறைந்த விலைக்கு தானியங்களை நஷ்டப்பட்டு வியாபாரிகளுக்கும் இதரர்களுக்கும் கொடுத்துவந்தனர். இதைத் தடுக்கும் வகையில்தான் ஒரு கிட்டங்கி கட்ட ஏற்பாடுகள் நடந்து சர்க்காரிடமிருந்து ரூ 5000 கடனும் ரூ 5000 மானியமும் பெற்றிருக்கிறோம். இந்த கட்டிடம் நடந்துகொண்டிருக்கிறது. அநேகமாய் அடுத்த மாதத்திற்குள் கட்டிட வேலை முடிந்துவிடும். பிறகு தானிய ஈட்டுக்கடன்களில் பெருமளவில் கொடுக்க தீர்மானித்துள்ளோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ரூ 20000 அளவில் கடன்கள் கொடுத்துவந்த சங்கம் தற்சமயம் ரூ 87300 அளவிற்கு உயர்ந்துள்ளது. எங்கள் கிராமத்தில் 207 பேர் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து பயனடைந்திருக்கின்றனர். இதைத்தவிர ஒரு வீடுகட்டும் கூட்டுறவுசங்கம் உள்ளது இதில் நடப்பு ஆண்டில் இரண்டு வீடுகள் கட்டகடன்மனுக்கள் பரிசீலனையிலுள்ளன பிளான் எஸ்டிமேட்டுகளும் தயாராகிவிட்டன.

எங்கள் கிராமத்தில் ஒருவர் தவறாமல் கதர்தான் உடுத்தி வருகிறோம். 230 பேர் கதர் நூற்பை உபரித்தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

கால்நடை பராமரிப்பு செவ்வனே நடைபெறுகிறது, மொத்தம் 1945 கால்நடைகள் உள்ளன. 6 ஜாதிச் சேவல்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. கிணறு வெட்டுதல் மராமத்து வகையில் ரூ 3500 பணவசதி பெற்றிருக்கிறோம்.

சுகாதார வசதி திட்டத்தில் 30 உறிஞ்சு குழிகள் தயாரித்திருக்கிறோம்.

ஒரு வாசகசாலையும் முதியோர் பள்ளியும் உள்ளது. கடந்த ஆண்டு வரையில் 600 பேர் கல்வி பயின்றிருக்கின்றனர். ஒரு மாதர் சங்கமும் ஏற்படுத்தியிருக்கிறோம். ஏற்கனவே இருந்த ஒரு ஆரம்பப்பள்ளியை உயர்த்தி மத்தியதரப் பள்ளியாக கடந்த ஆண்டிலிருந்து நடத்திவருகிறோம். இரண்டாண்டுகளுக்கு முன் சுமார் 147 பேரளவில் மாணவர் கல்வி பயின்று வந்தனர். இன்று அது 300 வரையிலும் உயர்ந்திருக்கிறது. ரூ 6200 அளவில் ஒரு பள்ளிக் கட்டிடம் அரசாங்க பணஉதவியும் பெற்று கட்டியிருக்கிறோம்.

இனி எங்கள்கிராமத்தில் கடந்தஆண்டில் நாங்கள் செய்துள்ள ஆக்கவேலைத் திட்டத்தைப்பற்றி ஓரிருவார்த்தைகள்கூற ஆசைப்படுகிறேன்.

கிராமங்களில் பொது மராமத்து வேலைகள், கட்டிடங்கள் கட்டுதல், தெருக்கள் அமைத்தல் என்பன சாதாரணமாக இதற்கென இருக்கும் இலாகாவின் உதவியுடன் செய்வதுதான் வழக்கம். நாளடைவில் கிராமங்களும் நகரங்களும் வளர்ச்சியடைந்துகொண்டே போகும்போது மேற்சொன்ன பொறியியல் இலாகாவிற்கு தாங்கமுடியாத அளவு வேலைப்பளுவு ஏற்படுகிறது. தவிர ஒவ்வொரு வேலையையும் அவர்களே கவனிக்க வேண்டுமெனில் அதற்கென அவ்வப்பொழுது அமுலிலிருக்கும் சம்பள விகிதங்கள்படி வேலையாட்கள் பெருத்த அளவில் வைத்து சமாளிக்க வேண்டியதாகிறது. வேலைக்கு ஆள்கிடைப்பது தற்காலத்தில் அவ்வளவு சுலபமில்லை. எனவே இதில் சங்கடங்கள் ஏற்பட்டு மேற்கொண்ட எல்லா வேலைகளையும் குறித்த காலத்தில் செய்ய இயலாமலும், அதிகச் செலவும் ஏற்படுகிறது. இதற்கென அதிக அளவில் மேற்பார்வையாளர்களும் தேவைப்படுகிறது. இந்த எல்லா பிரச்சனைகளையும் சமாளிக்க வேண்டுமானால் ஒவ்வொரு கிராமமும் தன் சம்மந்தப்பட்ட ஆக்கவேலைகளை தன்னிடமிருக்கும் ஆட்களை வைத்து தாங்களே நடத்தி வந்தால் செலவு சுருக்கமாகவும், வேலைகளை சீக்கிரமாகவும் செய்வது சாத்தியமாகிறது. இதற்கு அரசாங்கத்திலிருந்து யூனியன் மூலமாக சிறிதளவில் பணவுதவி செய்து கொடுத்திருக்கிறார்கள். நெல்லை ஜில்லாவிலேயே நமது வட்டாரத்தில்தான் இம்மாதிரி மனித ஆக்கவேலை திட்டம் பரீட்சார்த்தமாகக் கொண்டுவரப்பட்டு பெருமளவில் வெற்றி கண்டிருக்கிறோம். உங்கள் கிராமத்தில் கீழ்க்கண்ட வேலைகள் செய்து முடித்திருக்கிறோம்.

1) சூரியமுத்து ஊரணியை ஆழப்படுத்தி, கரைகள் அமைத்தது.

2) குறிஞ்சாகுளத்திலிருந்து சக்கிலியர் ஊரணிக்கு 2 மைல் நீளம் புதுரோடு அமைத்தது.

3) ஊர்த்தெருவிற்கு சரள் போட்டது ஒரு பர்லாங் தூரம்.

இத்திட்டங்கள் நன்கு நிறைவேற நமது யூனியன் கமிஷனர் திரு. S. நம்பி அவர்களும் பிரத்தியேக பொறுப்பேற்ற கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி திரு. கோமதிநாயகம் அவர்களும் வெகுவாகப் பாடுபட்டார்கள். பின்னவர் வேலைகள் முற்றிலும் முடிவாகு முன்பே மாற்றிச் சென்றுவிட்டபடியால் அன்னாரின் பொறுப்பேற்ற திரு. R. புஷ்பவனம் அவர்கள் வேலைகளைத் தொடர்ந்து குறித்த காலத்தில் முடிக்க ஏற்பாடுகள் செய்து எங்களுடன் ஒத்துழைத்தார்கள். அவர்களனைவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

நடப்பு ஆண்டில் எங்கள் பஞ்சாயத்து கூட்டங்கள் மாதந்தவறாமல் ஒவ்வொரு மாதமும் 7ம்தேதியன்று கூடுவதென்ற வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறோம். கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி தவறாமல் விஜயம்செய்து கூட்டங்களை கவனித்து வருகிறார்கள். எனவே ஜனநாயகமுறையில் எங்கள் ஆட்சி செவ்வனேநடைபெறுகிறது

இனி வருங்காலத்தில் என்னென்ன புதத்திட்டங்கள் வந்தாலும் அவைகளை செய்து முடித்து பயன்காண எங்கள் கிராமம் என்றுமே தயாராகியுள்ளன.

வாழ்கநம்நாடு! வளர்க பஞ்சாயத்துஆட்சி!



# சங்குபட்டி பஞ்சாயத்து.

திரு. V. ராமகிருஷ்ணன்,

தலைவர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் சான்ருேர் வாக்கிற்கிணங்க, வாழ்க்கை நடத்தும் மக்களைக்கொண்ட சங்குபட்டி கிராமம் முழுவதற்குமாக இப்பஞ்சாயத்து அமைந்துள்ளது. சின்னகாளாம்பட்டி என்ற குக்கிராமம் இதில் அடங்கியது முக்கிய தொழில் விவசாயம் ஆகும். சுமார் 230 குடும்பங்கள் உழவுத்தொழில் செய்துவருகின்றனர். இது தவிர வியாபாரிகளும். விவசாயத்திற்கு உதவி செய்யும் தச்சர், கொல்லர்போன்ற தொழிலாளர்களும் வாழ்கின்றனர் பரப்பு 3·06 சதுர மைல்.

மக்கள் தொகை 1554

நீர்ப்பாசனக் குளங்கள் இல்லை. பருத்தி இதர புன்செய் தானியங்கள் விளைகின்றன. "பருவத்தே பயிர் செய்" என்பதற்கிணங்க உரிய காலத்தில் பயிரிடப்படுகிறது. பொறுக்கு விதை உபயோகிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சென்ற 2 ஆண்டுகளில் 1500 கிலோ கிராம் பொறுக்குவிதை வாங்கி பயிரிட்டிருக்கிருேம். விவசாய நிலப்பரப்பு 1890ஏக்கர். பயிர்செய்யப்படுவது 1656ஏக்கர். விவசாயத்தின் ஏற்றம் எருவிடுதலில்தான் என்பதை உணர்ந்து வருகிருர்கள். கம்போஸ்ட் உரம் உபயோகிக்க எல்லோரும் முன் வந்துள்ளனர். பஞ்சாயத்திலிருந்தே 10 உரக்குழிகள் நிர்வகிக்கப்பட்டு, உரம் தயாரிக்கப்படுகிறது. விவசாயத்தின் பெரும்பகுதி மழையை நம்பி நடைபெறுகிறது. சிறுபகுதி கிணற்று நீர்ப்பாசன மூலம் நடைபெறுகிறது. விவசாய கடன் திட்டத்தின் கீழ் ரூபாய் 6000—00 கடன் பெற்று 6 கிணறுகளுக்கு மோட்டார் பம்பு செட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

கால் நடைகள் 1300வரை எங்கள் கிராமத்தில் உண்டு. பசுக்களின் தரத்தை அபிவிருத்தி செய்யவும், சிறந்த பொலிகாளைகளை பெறவும் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒரு காங்கேயம் பொலிகாளை வினியோகிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர செம்மறியாடுகளின் தரத்தை அபிவிருத்திசெய்ய 10 ராமநாதபுரம் செம்மறி கிடாக்களும், கோழிகளின் தரத்தை உயர்த்த 15 வெள்ளை லக்கான் ஜாதிச் சேவல்களும் உண்டு. உரிய காலத்தில் தடுப்பு ஊசி பஞ்சாயத்து யூனியனிலிருந்து போடப்படுகிறது.

"கண்ணுடையர் என்பவர் கற்ருேர்" என்பதற் கிணங்க பள்ளி வயதுப்பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, எங்கள் பகுதியில் இரு ஆரம்பப்பள்ளிகள் உள்ளன-சின்னகாளாம்பட்டியில் ஒரு பள்ளியும், சங்குபட்டியில் ஒரு பள்ளியும் இருக்கின்றன சங்குபட்டியில் ரூபாய் 5000. செலவில் ஒரு பள்ளிக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

கிராம கூட்டுறவு சங்கம், திருவேங்கடம் விவசாய பாங்குடன் இணைக்கப்பட்டுள்ளது அதன்மூலம் கடன தேவைகள் பூர்த்திசெய்யப்படுகிறது.

"கிராம சுகாதாரமே நாட்டின் ஆதாரம்" என்ருல்மிகையாகாது. குடிதண்ணீர்கிணறு 3 வெட்டியுள்ளோம். 3 கிணறுகள் பழுது பார்த்துள்ளோம். இதற்கு ரூபாய்5000 செலவிட்டுள்ளோம். கக்கூஸ் இரண்டு கட்டியுள்ளோம்.

போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. கோவில்பட்டி பருவக்குடி ரோட்டிலிருந்து எங்களூருக்குச் செல்ல 1 மைல் ரோடு போட்டு சரள் பரப்பியுள்ளோம். ரூபாய் 6000 செலவில் இந்தரோடு போடப்பட்டுள்ளது. வேலையில்லாதோருக்கு வேலை வேலை கொடுக்க வேண்டுமல்லவா? இதற்காக ஆக்கவேலைத் திட்டத்தை ஏற்றுநடத்தி எல்லோருக்கும் வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதன் மூலம் சின்னக்காளாம்பட்டி ரோடு பழுதுபார்க்கப்பட்டது. ஆலங்குளம், குருவிகுளம் ரோடுடன் சங்குபட்டியை இணைத்து, இணைப்பு ரோடுபோடப்பட்டுள்ளது. பாறைப்பட்டி செல்லும் வழியில் ஒரு ரோடு போடப்பட்டுள்ளது. ரூபாய் 6000 மதிப்புள்ள வேலைகள் செய்துள்ளோம். செட்டியூரணியும் செங்கா ஊரணியும் செப்பனிடப்பட்டது.

கதர் கிராம கைத்தொழில்கள் அபிவிருத்தியில் தானே கிராமப் பொருளாதாரத்தைப் பெருக்கமுடியும்? இதற்கேற்ப தோல் பதனிடுவோருக்கு வேண்டிய தொட்டிகள் கட்டிக்கொடுத்தும், கருவிகள் வழங்கப்பட்டும் உள்ளது. மேலும் தச்சர் கொல்லர்களுக்கு நவீனகருவிகள் வழங்கப்பட்டு, கிராம கைத்தொழில்கள் ஆதரிக்கப்பட்டுள்ளன. 110—குடும்பங்கள் நூற்பை மேற்கொண்டுள்ளனர். எல்லோருக்கும் கல்வி என்பது போல எல்லோரும் கதர் அணியவேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

சமூகக்கல்வி, சமுதாயம் முன்னேற அவசியமல்லவா! சின்னக்காளாம்பட்டியில் ஒரு வாசகசாலை கட்டப்பட்டுள்ளது: பொதுமக்களே முன்வந்து, அரசினர் உதவியின்றி கட்டியுள்ளது போற்றத் தகுந்ததல்லவா? ரேடியோ மூலம் இங்கு மக்கள் பயனடைகின்றனர். சங்குபட்டியில் இளைஞர்விவசாய சங்கம் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. ரூபாய் 200 பெறுமானமுள்ள சாமான்கள் பஞ்சாயத்து யூனியனிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. சமூகக் கல்விமன்றம் நல்ல முறையில் செயல்பட்டுவருகிறது. தின,வார மாதப் பத்திரிகைகள் வரவழைக்கப்படுகிறது. இதன்மூலம் மக்கள் பயனடைகின்றனர்.

மாதர்கள் முன்னேற்றம் கருதவேண்டியது அவசியமல்லவா? மாதர் சங்கம் ஒன்று சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. ரூபாய் 500 செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஒரு தையல் மிஷினும் கொடுக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் தனித்தியங்கவல்ல, சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்ற காந்திஜியின் கனவு நனவாக எங்கள் பஞ்சாயத்து சகலவழிகளிலும் பணிபுரிந்து வருகிறது.

"சாந்தியை அறிந்தது நம் நாடு
சத்தியம் காத்தது நம் நாடு
காந்தியைத் தந்தது நம் நாடு"

என்று நாமக்கல் கவிஞர் கூறுவதுபோல் எல்லோரும் கூடி நின்று, நாடு தழைக்க காந்தி வழியில் செயல் புரிந்திடுவோம்.

நன்றி!

'படித்தவன் — பாமரன் என்ற வேறுபாடோ, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடோ இன்றி, சத்தியம் என்ற சக்கரம் சுழல, சமாதானம் என்ற சங்கு முழங்க, சட்டபூர்வமாக வெற்றி தரும் அமைதியான சுபிட்ச பாதைக்கு வழி காட்டும் இயக்கம் கூட்டுறவு இயக்கம் ஒன்றே தான்'.

—❋—

'கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் தலைவர்களாகத் தங்களை ஆக்கிக்கொள்ள முடியும்; இதற்கு நேரான சிந்தனையும், இடைவிடாத முயற்சியும்தான் தேவை'.

# சத்திரக்கொண்டான் பஞ்சாயத்து.

## திரு. அய்யப்ப நாயக்கர்,

### தலைவர்.

எங்கள் பஞ்சாயத்தின் எல்லைக்குள் கீழ்க் கண்ட கிராமங்கள் இருக்கின்றன.

1) சத்திரக்கொண்டான் 2) நாரணபுரம். இதன் மொத்தப் பரப்பு 3.6 சதுர மைல்கள். ஜனத்தொகை 2497. எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் ஒரே ஒரு குளம் தான் உள்ளது. அதன் ஆயக்கட்டு 21·27 ஏக்கர் மற்றபடி சுமார் 2098 ஏக்கர்கள் புஞ்சை நிலங்கள். புஞ்சை நிலங்களில் கிணற்று இறவையால் சோளம், கடலை, மிளகாய் முதலிய தானியங்கள் பயிரிடப்படுகின்றன. பருத்தியும் அதிகமாக பயிரிடப்படுகிறது.

எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் 3 பள்ளிக்கூடங்கள் நடந்து வருகின்றன. அவைகளில் நாரணபுரம் பள்ளியில் 1960-61-ம் ஆண்டு 6ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பள்ளியில் சுமார் பையன்கள் படித்து வருகிறார்கள்.

சமுதாய நல அலுவலகத்திலிருந்து கீழ்க் கண்ட வேலைகள் எங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் மக்கள் பங்குத்தொகையுடன் செய்யப்பட்டிருக்கின்றன.

1) ரூ 1682-ல் புதுக்கிணறுகள் அமைத்தல்.

2) ரூ 1607-ல் பழைய கிணறுகள் ஆழப்படுத்தல்.

3) ரூ 1000-ல் மனமகிழ் மன்றங்கள் அமைத்தல்.

4) ரூ 1368-ல் இடுகாட்டிற்கு பாதை அமைத்தல்,

நடப்பு ஆண்டில் அதாவது 1962-63ல் பஞ்சாயத்து நூல் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

எங்கள் ஊருக்கு நாரணபுரத்தையும், சங்கரன்கோவில்-திருவேங்கடம் ரோட்டையும் இணைக்கும் நல்லரோடு இல்லை. நல்லரோடு ஒன்று போடுவதற்கு முயற்சி செய்து வருகிறோம். ரோடு போட்ட பின் பஸ் விடுவதற்கும் துரிதமாக முயற்சி எடுத்துக் கொள்வோம்.

பஞ்சாயத்து வரிவசூலை கிராம முனிசீபுகளிடம் ஒப்படைத்து வரிவசூல் செய்வதில் எங்கள் கிராமத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பாக்கி அன்னியில் வசூலிக்கப்பட்டது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

"ஜெய்ஹிந்த்"

'நாளின் இயல்பை விடியற்காலம் காட்டுவது போல் மனித வாழ்வின் இயல்பை குழந்தைப் பருவம் காட்டுகிறது.

—மில்ட்டன்

'கல்வியின் தலையான நோக்கம் மக்களை சிந்திக்கத் தூண்டுவதே ஆகும்.

— கிரேன்மர் கோமகனர்

('கல்வி பெற வேண்டிய) சிறுவனைக் கீழ்த்தர நூல்கள் எவையுமில்லாத நூல் நிலையம் பார்த்து அதில் உலவ விட வேண்டும். அவன் விரும்பும் சுவடிகளை அவன்படித்து முன்னேறிக் கொள்வான்'.

— அறிஞர் ஜான்சன்

## பொதுப் பாட்டு.

ஆக்கியோன்: இசைவாணர் C. தங்கையா, செவல்குளம்.

பாலும் பழமும் என்ற பாட்டின் இசை.

தம்பிகாள் தங்கைகாள் தவத்திருமணிகாள்
தமிழ்த்தாய் தந்த நற்கனியே கண்மணிகாள்
நான் சொல்லும் வழியே நடந்துமே உயர்வீர்
நாடு போற்றிட உயர்புகழ் கொள்வீர் (தம்பி)

கதிரோன் உதிக்குமுன் எழுந்திட வேண்டும்
காலைக் கடமைகள் முடித்திட வேண்டும்
உடலுடை சுத்தமாய் குளித்திட வேண்டும்
உரிய தூலம் உண்ணுதல் வேண்டும் (தம்பி)

பசித்த பின்பே புசித்திட வேண்டும்
பள்ளி செல்வதில் தவறாமை வேண்டும்
படிக்கும் பாடத்தில் கவனமும் வேண்டும்
பாசம் நேசமாய்ப் பழகுதல் வேண்டும் (தம்பி)

அன்னை தந்தையை மதித்திட வேண்டும்
அடுத்தோர்க்குதவும் அருங்குணம் வேண்டும்
ஆசானைத் தெய்வமாய் எண்ணுதல் வேண்டும்
கூசாது நல்லதைச் செய்திட வேண்டும் (தம்பி)

பொய் பொறாமைகள் போக்கிட வேண்டும்
பொறுமை பணிவன்புடன் துணிவும் வேண்டும்
பக்தியாய்க் கடவுளைத் தினம் தொழவேண்டும்
சத்தியம் அகிம்சையைத் துணைகொள்ள வேண்டும். (தம்பி)

## ராஜேஸ்வரி ஹோட்டல்

திருவேங்கடம்.

நாவிற்கினிய சிற்றுண்டிகளும், உற்சாகம் இனிது ஊட்டும் பானங்களும், ருசி மிக்க சாப்பாடும் காலே 5 மணி முதல் இரவு 8 மணி வரை அப்போதைக்கப்போது தயார் செய்து வழங்கப்படும்.

தங்கள் ஆதரவை எப்பொழுதும் விரும்பும்
புரோப்: S. வேலுச்சாமி பிள்ளை
ராஜேஸ்வரி ஹோட்டல்,
திருவேங்கடம்



## சீதாபதி மேச் ஒர்க்ஸ்

**கரிசல்குளம்.**

விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கும்
எங்கள் தீப்பெட்டி தொழிற்சாலையாரின்
மனமார்ந்த வாழ்த்துக்கள்.

உரிமையாளர்கள்

V. சங்கரம்மாள்
V. லட்சுமியம்மாள்



முருகன் துணை. போன் நிர்: 88 & 48

உத்திரவாதமுள்ள பவுன் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், கல்ச்சர் ரெங்கூன் கமலங்கள் வாங்குவதற்கு சிறந்த இடம்

### "சங்கர் ஜுவல்லரி மார்ட்"

எங்கள் ஸ்ரீ கோமதி சங்கர் சினிஸில்

நவீன வசதிகளுடன் நல்ல படங்களை திரையிட்டு வருகிறோம்.

உரிமையாளர்: K. S. குற்றாலிங்கம்
சங்கரன்கோவில்.


# மகேந்திரவாடி பஞ்சாயத்து.

## திரு. S. ஆரோக்கியம்.

**தலைவர்.**

*கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்*
*கம்பன் பிறந்த தமிழ்நாடு.*

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற சான்றோர் வாக்கிற்கிணங்க கல்வியின் சிறந்த பணியை எங்கள் பஞ்சாயத்து ஓரளவு புரிந்து வருகிறது. எங்கள் பஞ்சாயத்தில் மூன்று ஆரம்பப்பள்ளியும் ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியும் நடைபெற்று வருகின்றன. 319 மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். இங்கு இரண்டு முதியோர் கல்வி நிலையங்கள் உள்ளன. முப்பது அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு இளைஞர் சங்கமும் உண்டு.

இவ்வூரில் 1600 பேர் வாழ்கின்றனர். இங்கு விவசாயமே முக்கிய தொழிலாக நடந்து வருகிறது. 4·50 சதுரமைல் பரப்பு கொண்ட எங்கள் பஞ்சாயத்தில் ஒரு சிறு பாசனத் திட்டகுளமும், 185 கிணறுகளும் விவசாயத்திற்கு இன்றியமையாத தண்ணீரைக் கொடுத்து வருகிறது. 74·87 ஏக்கர் நஞ்சை நிலத்திலும் 2205 ஏக்கர் புஞ்சை நிலத்திலும் சீர்திருத்திய விவசாய முறைகளைக் கைக்கொண்டு விவசாயம் செய்கிறோம். எங்கள் கிராமத்தில் சப்பானிய முறை சாகுபடி, பொறுக்குவிதை உபயோகித்தல், தழை உரங்கள் தயாரித்தல் நவீன கருவிகள், நவீனநோய்தடுப்பு மருந்துகள் உபயோகித்தல், ஆகிய முறைகளைக் கையாண்டு விவசாயத்தை முன்னேறச் செய்கிறோம். எங்கள் கிராமத்தில் மின்சார வசதியிருப்பதால் விவசாயத்திற்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இங்கு 5டன் ரசாயன உரம் வாங்கி உபயோகித்திருக்கிறோம்.

எங்கள் ஊரில் 3544 எருது, பசுக்கள், எருமைகள் செம்மறியாடுகள் உள்ளன. கால் நடைகளுக்கு நோய் வராமல் தடுக்க தடுப்பு ஊசி மருந்துகள் அவ்வப்போது வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து கொண்டு வந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார வசதி கிராமப்புறத்தில் போதிய அளவு செய்ய முடியாவிடினும் ஆங்காங்கு கழிவு நீர் தெருவழியே செல்ல விடாமல் தடுக்க நீர் உறுஞ்சு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஐந்து குடிதண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. ஓடைகளினால் ஊருக்கும் புஞ்சை நிலங்களுக்கும் கெடுதி நேராமல்தடுக்க இரண்டு பாலங்கள் கட்டித் தண்ணீரை ஒதுக்கி விட்டிருக்கிறோம். ஒரு வாசகசாலை ரூபாய் 500-00 செலவில் கட்டியுள்ளோம். சமூகக்கல்வி நிலையம் செயலாற்றி வருகிறது. தின, வார பத்திரிகைகள் நிலையத்திற்கு யூனியனிலிருந்து வழங்கப்படுகிறது. சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கும், கிராமப் பொருளாதாரவளர்ச்சிக்கும், நேரத்தையும் வீணாக்காமல் பயனுள்ள காரியத்தையும், பொருளை ஒருங்கே அடையும் வாய்ப்பையும், பஞ்சாயத்துயூனியன் அலுவலகத்தார் எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். அதாவது 25கிளாஸ் ராட்டைகள் அளித்துள்ளார்கள். இங்கு 50 குடும்பங்கள் நூற்பை மையமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

கூட்டுறவே நாட்டுயர்வு எனும் முதுரைக்கு இணங்க எங்கள் ஊரில் ஒரு கூட்டுறவு நாணயச்சங்கம் உண்டு. அதன் மூலம் எங்களுக்குத் தேவையான இரசாயன உர வகைகளை அவ்வப்போது

சுலபமாகப் பெற்றுக்கொள்ளுகிறோம். இதைத்தவிர எங்கள் மஜராக்களில் ஒன்றாகிய ரெங்க சமுத்திரத்தில் ஒரு தனிப்பட்ட கூட்டுறவு நாணயச் சங்கத்தை அமைக்கத் திட்டமாகி உள்ளது இன்னும் சில மாதங்களில் அது இயங்க ஆரம்பிக்கும்

குறைந்த வருவாயுள்ள எங்கள் பஞ்சாயத்தின் வருவாயைப் பெருக்க முயற்சிகள் எடுத்து வருகிறோம். காந்தி காட்டிய வழியை உணர்த்தி, கிராமப் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையான வருவாயை பெருக்குவது எப்படி என கிராம மக்களுக்கு 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என உத்தமர் கிராம நல எடுமூலம் அறிவிக்கும் அறிவுரையை கடைப்பிடித்து எங்கள் பஞ்சாயத்தில் செட்டி ஊரணியைச் சுற்றிலும் 50 புளிய மரங்களும் பயனுள்ள மரங்களும் நடுவதென தீர்மானித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். கிராமப் பொருளாதாரம் உயர்ந்தால் கிராமக்குடியாட்சி உயரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

"வரப்புயர" என சோழவளவனை வாழ்த்திய ஔவை பிராட்டியைப் போன்று, வழி வகுத்துக்கொடுக்க இன்று காமராசர் ஆட்சியில் எங்களுக்கு கிராம நலவுடு உற்ற துணைவனாக அமைந்துள்ளது.

வளர்க கிராம வளம்!

வளர்க கிராம குடியாட்சி!!

வாழ்க இந்நாட்டு மக்களெல்லாம்!!


# தங்கமணி மேச் இண்டஸ்ட்ரீஸ்.

விற்பனை நிலையம்: 305/3 புதுரோடு, கோவில்பட்டி.

தொழிற்சாலை: இளையரசனேந்தல்.

மழைகாலத்திற்கு உத்திரவாதமுள்ளதும், எங்கள் மேற்பார்வையில் தயாராவதுமான உயர்ந்தரக "ஸ்டார் பிளவர்' தீப்பெட்டிகளை வாங்கி உபயோகியுங்கள்.

**V. தங்கமணி நாடார்,**
தங்கமணி மேச் இண்டஸ்ட்ரீஸ்,
இளையரசனேந்தல்.




# அய்யனேரி பஞ்சாயத்து.


திரு. R. குருசாமித் தேவர்,
தலைவர்.


நாமிருக்கும் நாடு நம
தென்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்பதறிந்தோம்.

என்று பாடுகிறார் பாரதி. இந்தியா அன்னியராட்சியில் அடிமைத்தளையில் இருந்த காலத்தில் "நமது நாடு நமது" என்று அஞ்சாநெஞ்சத்துடன் கூறுகிறார். இன்று பெற்றுவிட்டோம் சுதந்திரம்; நம்மை நாமே ஆளுகிறோம். மக்களாட்சி மாண்புடன் மிளிர்கிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணி காக்க வேண்டாமா? நாமிருக்கும் நாடு நமதல்லவா? அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுவது இந்தியராகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையல்லவா?

நாட்டின் வளர்ச்சி, கிராமவளர்ச்சிவளம், செல்வம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கிராமங்கள் செழித்தால் தான் நாடு செழிக்கும் என்பதை நாமறிவோம். அறிந்தால் மட்டும் போதுமா? விரைவிலிருந்தால் வளர்ச்சியுறுகிறதா? இருப்பதுதான் முறையா? இல்லை—ஆதலால் நம்மை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்து, திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். கிராமப் பிரச்சனைகளை ஆராய, தீர்வுகாண, திட்டமிட, திட்டத்தை செயலாக்க பஞ்சாயத்துக்கள் எங்கும் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகிறது.

அய்யனேரி பஞ்சாயத்தும் கிராம நலனுக்காக சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது அய்யனேரி கிராமத்திற்கு முழுவதற்குமாக எங்கள் பஞ்சாயத்து அமைக்கப்பட்டுள்ளது. மின்வசதி பெற்றுள்ளது. வெய்யன்குளம் என்ற ஒரு குக்கிராமம் இதில் உடையது. மக்கள் தொகை 1950. கோவில்பட்டி—பருவக்குடி ரோட்டில், கோவில்பட்டியிலிருந்து $2\frac{1}{2}$ மைலில் ஒரு பிரிவுரோடு தென்கிழக்கு மார்க்கமாக எங்கள் ஊருக்குப் போடப்பட்டுள்ளது. இந்த பிரிவிலிருந்து 1 மைல் தூரத்தில் உள்ளது. வருமானம் ரூபாய் 2000–00. 14 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளது.

விவசாயமே இங்கு முக்கிய தொழிலாகும். பருத்தி சாகுபடி ஆகிறது. நீர்பாசனக் குளங்கள் இல்லை. கம்பு, ராகி, பயிர்களும் பயிராகிறது. பஞ்சாயத்திலிருந்து உணவுஉற்பத்தியை பெருக்கதிட்டம் வகுத்து, மூன்றுபோக்கு விவசாயிகளான கிராம சகாயக்குழுக்கள் மூலம் பொறுக்கு விதை விநியோகித்து, அவர்கள் மூலம் மறு ஆண்டு கிராமமே பொறுக்கு விதை உபயோகிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். கம்போஸ்ட் உரம் தயாரிப்பதிலும் எங்கள் கிராமத்தினர் தீவிர கவனம் செலுத்துகின்றனர். "கம்போஸ்ட் உரமே கட்டி தானியம்" என்று கூறுவார்கள். கம்போஸ்ட் உரம்இட்டால் தானியம் சோடை போகாமல் நல்ல (கனமாக)தாக இருக்கும்.

கால்நடையில் அபிவிருத்தி கண்டுள்ளோம். பசுவை "கோமாதா" என்று கிராமத்தில் வழங்குவது யாவரும் அறிந்ததே பால்பண்ணை சங்கம் ஒன்றும் உள்ளது. இதி

லிருந்தே கால்நடை வளர்ச்சியில் நாங்கள் முன்னணியில் உள்ளோம் என்பது விளங்கும்.

"கூட்டு முயற்சியில் கோடி நன்மை உண்டு." என்பார்கள். நாங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவு நாணயசங்கம் அமைத்துள்ளோம். கிராம கடன் தேவைகளை வேண்டியபோது பூர்த்திசெய்ய இச் சங்கம் நல்லபடி செயலாற்றி வருகிறது. 213 உறுப்பினர்கள் உள்ளனர்.

300 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கே பள்ளிகள் ஏற்படுத்தலாம் என்பது நமது அரசாங்கத்தின் கொள்கை. அன்னசத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் மேல் என்று பாரதியார் கூறுகிறார். அதற்கேற்ப ஒரு உயர் ஆரம்பப்பள்ளி தனியார் நிர்வாகத்தில் இங்கு இயங்கி வருகிறது.

"கல்விச் சாலைகள் அமைப்போம்

கல்லாமையை அறவே ஒழிப்போம்"

என்பது எங்கள் குறிக்கோள். அதன்படி பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வறுமையால் வாடும் நாட்டின் செல்வச் சிறுர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

தீப்பெட்டி தொழில் செய்தல் இங்குள்ள கைத்தொழில்களில் முக்கியமானதாகும். பக்கத்தில் கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் உள்ளதால், எல்லோரும் அங்கே வேலைக்கு சென்று விடுகின்றனர். ஆதலால் நூற்பில் போதிய அபிவிருத்தி செய்ய முடியவில்லை. இருந்தாலும் இதைப் பற்றி மக்கள் உணர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

எங்கள் கிராமத்திற்கு 1960 வரை சரியான ரோடு வசதி இல்லை. மழை காலங்களில் வண்டிகள் போகமுடியது. ரோடு போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுக்காரியங்கள் செய்யும் போது சிலருக்கு பாதகமும் ஏற்படத்தான் செய்கிறது ரோடு போடுவதென்றல் நிலத்துக்குச்சொந்தக் காரர்கள் பாதை செல்லும் நிலத்தை விட்டு கொடுக்க வேண்டும்.

இதில் சில சங்கடங்களும், தடங்கலும் ஏற்பட்டன. நமது கமிஷனர் திரு. நம்பி அவர்களின் சீரியமுயற்சியாலும், சலியாது உழைக்கும் நமது வட்டார அதிகாரிகளின் பணியினுலும் இக்குறை நீக்கப்பட்டு ரூ. 7000 செலவில் ஒரு மைல் நூரம் ரோடு போட்டு சரள் பரப்பப்பட்டது. இந்த ஆண்டு ரூபாய் 6500 செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது.

கிராம சுகாதாரத்தை அபிவிருத்தி செய்ய 400 அடி தூரமுள்ள வார்காலும், மூன்று கக்கூஸ்களும் ரூபாய் 2000 செலவில் கட்டியுள்ளோம். கழிவுநீர் வீட்டுக்குப்பக்கத்தில் தேங்காமல் இருக்க அவசியமான இடங்களில் பதினைந்து (15) உறிஞ்சு குழிகள் போடப்பட்டுள்ளன.

வாழ்க்கையை சரிவர நடத்த சமூகக் கல்வி இன்றியமையாததல்லவா? வாசக சாலை ஒன்று ரூ.500-00 செலவில் கட்டியுள்ளோம். ரூபாய் 550 மதிப்புள்ளரேடியோ வைத்துள்ளோம். சமூகக் கல்வி நிலையம் ஒன்று நடத்தப்படுகிறது. ஆசிரியர் திரு. சீனிவாசன் அவர்கள் இந்நிலைய நிர்வாகியாக சிறந்த முறையில் பணியாற்றி வருகிருர். இது பாராட்டத்தக்கது.

குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து, தின, வாரப் பத்திரிக்கைகள் நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம் பற்றிச்சொல்லப்பட்டு வருகிறது.

"முயற்சி திருவினையாக்கும்" என்பது என் துணிபு.

வணக்கம்!

# தெற்கு குருவிகுளம் பஞ்சாயத்து.

திரு. M. முத்தையா,

தலைவர்.

"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்; இனி—அஞ்சிடோம்,
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம்—பார்க்குமோ?

என்பதற்கிணங்க, பாரத நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட எளிய மக்களைக் கொண்ட தெற்குக் குருவிகுளம் முழுவதற்குமாக எங்கள் பஞ்சாயத்து செயலாற்றி வருகிறது.

புதூர், மீனுட்சிபுரம், அழகுநேரி ஆகியகுக்கிராமங்களைக் கொண்டது எங்கள் பஞ்சாயத்து. சங்கரன்கோவில்-கோவில்பட்டி பாட்டையில் 7-வது கல்லில் தென்புறம் இரண்டு பர்லாங்க் தூரத்தில் உள்ளது. பரப்பு 3,7 ச. மைல். கிராமத்தின் விஸ்தீரணம் 2345·13 ஏக்கர். நஞ்சை 213 ஏக்கர். 70செ. புஞ்சை 1702.67 ஏக்கர். புறம்போக்கு 200 ஏக்கர். மக்கள் தொகை 1195

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்று சிறப்பிக்கப்பட்ட விவசாயமேஎங்கள் முக்கிய தொழில். நீர்ப்பாசனத்திற்குரிய 4 குளங்கள் இருக்கின்றன. 215 கிணறுகளும் உள்ளன. 8 உறுப்பினர்கள் பஞ்சாயத்தில் உள்ளனர். சமுதாயத்திற்கு வேண்டிய பொதுத்தேவை பஞ்சாயத்து கவனித்து வருகிறது.

'கண்ணுடையவர் என்பவர் கற்ருேர்' என்பதற்கிணங்க-பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு செல்ல பஞ்சாயத்து சமூகக் கல்வி குழுவினர் தீவிர முயற்சியெடுத்து வருகின்றனர். இரு ஆரம்பப் பள்ளியும், ஒரு உயர் ஆரம்பப் பள்ளியும் கல்வி புகட்டி வருகிறது. ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பயிற்சி பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகிறது. ஆணுக்கு ஒன்றும் பெண்ணுக்கு ஒன்றுமாக இரு முதியோர் கல்வி நிலையங்கள் நடைபெறுகின்றன. இதன் மூலம் பகற் பள்ளியில் படிக்க முடியாதவர்கள் படிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

'ஒற்றுமை வழி யொன்றே வழியென்ப
தோர்ந்திட்டோம்-நன்கு-தேர்ந்திட்டோம்

என்ற பாரதியின் பாட்டிற்கிணங்க ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்தி வருகிறோம். கூட்டுறவு சங்கம் அமைத்து, நாங்கள் அனைவரும் உறுப்பினர்களாக சேர்ந்து, ஒன்ருக செயலாற்றி வருகிருேம். கடன், ரசாயன உரம் ஆகிய தேவைகளை கூட்டுறவு சங்கம் மூலம் எளிதில் பெற்று நல்வாழ்வு நடத்தி வருகிருேம்.

சுமார் 300 ஏக்கர் நிலத்தில் நெல்சாகுபடி செய்யப்படுகிறது. வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு வேண்டிய உணவு உற்பத்தியை அதிகரிக்க எங்களால் இயன்ற அளவு முயற்சித்து வருகிருேம். புஞ்செய் தானியம், பருத்தி ஆகியவையும் பயிர் செய்யப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் விவசாய அதிகாரியின் யோசனைக்கிணங்க கம்போஸ்ட் உரம் தயாரித்தல், பொறுக்கு விதை உபயோகித்தல் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தி வருகிருேம்.

கடந்த ஆண்டு 4 உயர்ஜாதி சேவல்களும் 8 பொலி கிடாக்களும் வழங்கப்பட்டுள்ளது, கால்நடையின் தரத்தை அபிவிருத்தி செய்வதிலும் முயன்று வருகிருேம். குருவிகுளம் கால்நடை ஆஸ்பத்திரி இங்கே உள்ளது. கால்நடைகளின் பிணிபோக்கி தரம்உயர்த்த வேண்டிய வசதிகள் உள்ளன. காங்கேயம் பொலிகாளையும், முர்ரா எருமையும் கால்நடைகளின் தரத்தை அபிவிருத்தி செய்ய இங்கே இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் நிர்வகிக்கப்பட்டுவரும் கோழிப்பண்ணையும் இங்குள்ளது. இதன் மூலம் கோழி

வளர்ப்பு பற்றி எல்லா மக்களுக்கும் எடுத்து எடுத்து விளக்கப்படுகிறது.

எங்களூருக்கு சங்கரன்கோவில்-கோவில் பட்டி ரஸ்தாவிலிருந்து 1½ பர்லாங் தூரம் சரள் விரித்து பாட்டை செய்துள்ளோம். பள்ளிக் கட்டிடம் ஒன்றும் 'கல்வி இலாகா' நிதிஉதவிகொண்டு நிர்மாணித்துள்ளோம்.

'உள்ளத்தை கோயிலாக்கி
உண்மையைத் தெய்வமாக்கிக்
கள்ளத்தைக் கடிந்து நீக்கிக்
கருணையின் காட்சி கண்டு
எள்ளொத்த ஆசையின்றி

என்ற தேசப் பிதா மகாத்மா காந்திஜியின் விருப்பம் கிராம சுத்தமே ஆகும் என்பதை அறிந்து, கிராமத்தை சுத்தமாக வைத்திருக்கிறோம். கக்கூஸ்கள் கட்டி, எல்லோரும் அங்கே மலஜலம் கழிக்கும்படியாக ஏற்பாடு செய்து வருகிறோம்.

மக்களின் பொழுதுபோக்கு வசதிக்காக ஒரு ரேடியோவும், ஒரு நூல் நிலையமும் வைக்கப்பட்டுள்ளது. இவைகள் அறிவைப் பெருக்கிக்கொள்ள கிராமவாசிகளுக்கு சிறந்த சாதனங்களாகும்.

'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கிணங்க, எங்கள் ஓயாத உழைப்பாலும் முயற்சியாலும் 'குடிநீர் தேக்கத் தொட்டி' ஒன்று ரூபாய் 8800 செலவில் கட்டியுள்ளோம். இதற்கு ரூபாய் 6600 குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனிலிருந்தும், ரூபாய் 2200 பஞ்சாயத்து நிதியிலிருந்தும் அளிக்கப்பட்டுள்ளது. புதூரில் 20 வீடுகள் கொண்ட ஒரு ஹரிஜன காலனி கட்டப்பட்டு குடிநீர் கிணறும் வெட்டப்பட்டுள்ளது. இதற்கு முந்திய ஆண்டுகளில் ரூ 14,098 அளவில் அரசாங்க உதவி பெற்று பொதுக் கட்டிட வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

கழிவு நீர் தெருக்களில் தேங்காமலிருக்க 18 உறுஞ்சு குழிகள் போடப்பட்டுள்ளன.

இங்கு மாதர் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு, ஆடல், பாடல், கோலாட்டம், கும்மி, தையல், பின்னல், பக்குவமாய் சமைத்தல் ஆகியவை செய்து காட்டப்படுகிறது.

இன்பருள் கருணை ஜோதியாம் காந்திஜீயின் நாமம் ஏந்திடும் நாங்கள் நூற்பு, கதர் அபிவிருத்தியில் ஈடுபட்டு வருகிறோம். சுமார் 50 இராட்டைகள் வரை விநியோகித்துள்ளோம்.

குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனின் அலுவலகம் இப் பஞ்சாயத்து எல்கையில் கட்டப்பட்டுள்ளது. யூனியனின் 'தலைமைப் பீடம்' எங்கள் கிராமத்தில் இருப்பது நாங்கள் பெற்ற பெரும் பேறு என்பது தான் எங்கள் எண்ணம்.

'வெள்ளத்து அனைய மலர் நீட்டம்
மாந்தர் தம்
உள்ளத்து அனைய துயர்வு'

என்ற வாயுறை வாழ்த்துப் பாடி எங்கள் உள்ளத்திலே கொண்ட வலிமை இந்த உயர்வுக்கு காரணமாய் அமைத்துள்ளது.

நாட்டின் நலம் கருதி, நம் ஒப்புயர்வற்ற தலைவர்களின் கனவை நனவாக்கி, ஜாதி, சமய இன வேறுபாடு அற்ற சமுதாயத்தை உருவாக்கி ஒன்றுபட்ட பாரதத்தை கட்டிக் காத்து

'பாருக்குள்ளே நல்ல நாடு-எங்கள்
பாரத நாடு

என்று எல்லோரும் ஒன்று சேர்ந்து பாட்டிசைப்போம்-வாரீர்-வாரீர்.

நன்றி!



# உசிலங்குளம் பஞ்சாயத்து.

திரு. V. வேலுச்சாமி நாயக்கர்,
தலைவர்.

"வாணிகஞ் செய்வோம் வயலிற்
பயிர் செய்வோம்
காரணரிய கைத்தொழிலும் கண்டு
செய்வோம் பேணி நம்
சந்தத்தமிழ் வளர்ப்போம்; தாய்
நாட்டிற்கே உழைப்போம்;
சிந்தை மகிழ்ந்து தினம்"
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கிராம அபிவிருத்தியின் முதல் அம்சம் உணவு உற்பத்திப் பெருக்கம். அடுத்தபடியாக வியாபாரப்பொருள் உற்பத்தி. அதன் பின் கிராம மக்களுக்கு அதிகப்பட்ட அளவில் வேலை வாய்ப்புகள் தருதல் முதலியன கிராமாந்திர விஸ்தரிப்பு திட்டங்கள் இந்தக் கண்ணோட்டத்துடன் தான் செயலாற்றப்பட வேண்டும்.

நம் நாட்டின் கிராமவாசிகளின் நிலைமையையும் போக்கையும் சற்றே நுட்பமாய் கவனித்தோமானால் ஒரு சாதாரண கிராமவாசி நிலனுக்கு நான் உதவியிழந்து ஒரு அவல நிலையை நோக்கி நகர்ந்துகொண்டே செல்வதைப் போன்றதொரு உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. சற்றே விளங்கச் சொன்னால் இன்றைய கிராமவாசியின் அவலநிலைக்குக் காரணம் அவனுடைய ஏழ்மை மட்டும்தான் என்பதற்கில்லை. விவசாய உற்பத்தி குறைந்து விடுகிறதென்றால் அது விவசாயியின் அசிரத்தையாலோ, கல்வியறிவின்மையாலோ, உழைப்புக் குறைவினாலோ, நிவர்த்திக்க முடியாத அறியாமையாலோ அல்ல. சிறிது காலத்திற்கு முன்பெல்லாம் ஒரு கிராம விவசாயி மேற்கண்டவாறுதான் எடுத்துரைக்கப்பட்டான். நாகரீக உலகம் இதைச்சொல்லித்தான் கண்ணீர் வடித்துக் காண்பித்தது. ஆனால் உண்மையாதெனில் ஒரு சாதாரண கிராமவாசி எந்தவிதத்திலும் தன்னுடைய 'நகர்வாசி' நண்பனுக்கு இளைத்தவனல்லன். சொல்லப்போனால் நகர்வாசியின் அறிவாற்றலுக்கும் சாமர்த்தியத்திற்கும் எல்லாவிதத்திலும் கிராமவாசி மேம்பட்டவன் கிராமவாசியின் கல்வித்தரம் நகரத்தில் திளைக்கும் தன் நண்பனின் கல்வித் தரத்தைக் காட்டிலும் பன்மடங்கு உயர்வு என்பதில் சந்தேகமில்லை. சூழ்நிலை காரணமாகவும் நவீன திருந்திய விஞ்ஞான முறைகளை அனுஷ்டிக்க இயலாததாலும், நல்ல பாசன வசதிகள் இன்மையாலும், முக்கியமாக விவசாயச் செலவுகளுக்கு அவ்வப்போது எதிர்பாராதவிதமாக ஏற்படும் பணப்பஞ்சத்தாலும் வெகுவாக அல்லலுற்று பரிதவித்து விவசாயத்தைப் புறக்கணித்து தானும் அவதியுற்று நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாக பாதித்துவிடுகிறான். எனவே இந்த கட்டத்தில்தான் நமது சமுதாய விஸ்தரிப்பு சேவைகளுக்கு முக்கியப்பணி ஏற்பட்டுள்ளது. கிராம விவசாயியின் உள்மனத்தில் சிறு பொறியாகத் திகழும் அறிவையும் ஆற்றலையும் தட்டி எழுப்பி, அவனுடைய பிரதானத் தொழிலாகிய, நாட்டின் ஜீவாதார நாடியாகிய, விவசாயத்திற்கு எந்த நிலைமையிலும் தடங்கல் இல்லாது நல்ல போக்கில் இயல ஏற்பாடு செய்தால் அது பொன்னான பலன்களைத்தரும் என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை.

கிராமவாசிக்கு இல்லாத வாய்ப்புகள் நகர்வாசிகளுக்கு இருக்கின்றன. அதிகச் சிலவில் விஞ்ஞான முறைகளில் தொழில்

# நமது கொடி.

நாட்டிற்கென்று பல சின்னங்கள் உண்டு. அவை கொடி, அரசாங்க முத்திரை, தேசிய கீதம் என்பன. அச்சின்னங்களுள், சிறப்பு மிக்கது கொடி. தமக்கென்று ஒரு தனிக்கொடி இருத்தல், அந்த நாட்டின் கௌரவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஒரு நாட்டின் கொடி இறக்கப்பட்டு, வேற்று நாட்டுக்கொடி ஏற்றப்படுகின்றதென்றால், அந்த நாடு வேற்று நாட்டிற்கு அடிமையாகி விட்டது என்று பொருள். கொடியினைக் காக்க எத்தனையோ பேர், தம் இன்னுயிரினை ஈந்துள்ளனர். தேசபக்தனுக்கு உணர்வூட்டும் உன்னதப் பொருளாக, நாட்டுக்கொடி காட்சியளிக்கும்.

## அமைப்பு

நமது தேசியக்கொடி மூவர்ணக் கொடி, ஒரே அளவுள்ள காவி, வெள்ளை, பச்சை ஆகிய மூவர்ணப் பட்டைகள் அதில் உள்ளன. மேலே காவிப்பட்டை, நடுவே வெள்ளைப்பட்டை, அடியில் பச்சைப்பட்டை. வெள்ளைப்பட்டையின் மத்தியில் கடல் நீல வர்ணத்தில் ஒரு சக்கரம் உள்ளது. அந்தச் சக்கரம் வெள்ளைப் பட்டையின் அகலத்துக்கு ஏறக்குறைய சமமாக உள்ளது. சாதாரணமாக கொடியின் நீளம், 3 : 2 என்ற விகிதத்தில் அமையவேண்டும்.

## பொருள்

காவி நிறம், துறவு மனப்பான்மையும், பற்றற்ற உள்ளத்தையும், குறிக்கின்றது. வெள்ளை நிறம், நன்னெறி காட்டுகின்ற சத்திய ஒளியைக் குறிக்கும். பச்சை நிறம் நமக்கும், நிலத்துக்கும் உள்ள உறவை எடுத்துக் கூறுகிறது. வெள்ளைப் பட்டையின் மத்தியில் உள்ள சக்கரம் தர்ம சக்கரத்தை உணர்த்தும். அது மட்டுமல்ல; சக்கரம் சுழற்சியை—ஓட்டத்தைக் காட்டும். ஓட்டத்திலே வளர்ச்சி ஏற்படுகிறது. முன்னேற்றப் பாதையை நோக்கி விரைவில் செல்லும் அமைதியான மாறுதலையே இந்தச் சக்கரம் உணர்த்துகிறது.

## விதிமுறைகள்:-

தேசியக் கொடியை உபயோகிப்பது சம்பந்தமான விதி முறைகளை எல்லோரும் நன்றாக அறிந்து கொள்ளவேண்டும் அவை யாவன.

1. தேசியக்கொடிக்கு அவமரியாதை ஏற்பட அனுமதிக்கக் கூடாது.

2. எந்த நபரையும், பொருளையும், தேசியக்கொடியால் தொடக்கூடாது. அதாவது அதைக்கொண்டு சுட்டிக்காட்டக்கூடாது.

3. காவி வர்ணம் கீழே இருக்குமாறு கொடியைப் பறக்க விடக்கூடாது.

4. தேசியக் கொடிக்கு வலப்புறத்திலோ, மேல் உயரத்திலோ வேறுகொடியை பறக்க விடக்கூடாது.

5. தரையையோ, தண்ணீரையோ தேசியக் கொடி தொடும்படி செய்யக் கூடாது.

6. தேசியக் கொடிக்கு மேல், எந்த வித அடையாளச் சின்னத்தையும் வைக்கக் கூடாது.

7. தேசியக்கொடியைப் படுதாவாக உபயோகிக்கக்கூடாது.

8. தேசியக்கொடி இலகுவில் கிழியும்படிக் கட்டக்கூடாது.

9. உடையாகவோ, விளையாட்டு உடுப்பாகவோ தேசியக்கொடியை உபயோகிக்கக்கூடாது.

10. தலையணை, மெத்தை, கைக்குட்டை புடவை, அங்கவஸ்திரம் முதலியவற்றின் மீது கொடியின் உருவத்தை சித்தரிக்கவோ

# கொடி வணக்கப் பாட்டு.

தாயின் மணிக்கொடி பாரீர்!—அதை
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ் வீரர்;—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார் (தாயின்)

செந்தமிழ் நாட்டுப் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள் சேரன்தன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக்கே பணி செய்திடு துளுவர், (தாயின்)

கன்னடர் ஒட்டியரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடையார் இந்துஸ்தானத்து மல்லர், (தாயின்)

தேர்ந்ததைக் காப்பது காணீர்!—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
சேர்ந்தவர் போற்ற பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!

அச்சிடவோ கூடாது.

11. தேசியக்கொடியில் எவ்வித எழுத்தையும் பொறிக்கக்கூடாது.

12. விளம்பரத்துக்காகக் கொடியை உபயோகிக்கக்கூடாது. கொடிக் கம்பத்தில் விளம்பரப் பலகையைத் தொங்கவிடக் கூடாது.

13. பறக்கவிடும் கொடி எப்பொழுதும் கிழிசல், அழுக்கு இல்லாமல், சுத்தமாக இருக்கவேண்டும்.

தேசியக்கொடி, தேசத்தின் பெருமைக்கு ஒரு சின்னம், இளமைப் பருவத்திலேயே பள்ளி மாணவர்களிடையே சீரிய நோக்கங்களையும், நல்ல குறிக்கோள்களையும், ஒருமைப் பாட்டுணர்வினையும் ஏற்படுத்த, கொடி வணக்கம் பெரிதும் துணைபுரியும்.

## கொடிக்கம்பம்.

கொடியேற்றப்படும் கொடிக்கம்பம் கனமானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டும். கம்பம் அப்படி உறுதியானதாகவும், கனமானதாகவும் இருக்கிறதா என்பதை முன்னதாகவே நன்றாய்ச் சரிபார்க்க வேண்டும்.

தந்தி: "கே எம் எஸ் கோ" போன்: 360

# K. M. S. & Co.,

**Railway Feeder Road,**

**TINNEVELLI JN.**

## பிரீமியர் மோட்டார்கள் ஸ்விட்சுகள் & ஸ்டார்ட்டர்கள்

**பூரண வினியோக உரிமையாளர்கள்:**

**திருநெல்வேலி & கன்யாகுமரி ஜில்லாக்களுக்கு**

எங்களிடம் விவசாயத்துக்குத் தேவையான எல்லா விதமான எலக்டிரிக் மோட்டார் பம்பு செட்டுகளும், வீடுகளுக்கு வேண்டிய பம்பு செட்டுகளும் கிடைக்கும்.

"ஷாவாலஸ்" கம்பெனியாரால் தயாரிக்கப்படும் மருந்தடிக்கும் ஹோல்டார் & ஹரிடன் ஸ்பிரேயர்கள், டஸ்டர்கள், இதர உபகரணங்களும் எங்களிடம் கிடைக்கும்.

விவசாய இலாகாவினரின் தவணைமுறைத் திட்டத்தின்கீழ் பிரீமியர் மோட்டார், பம்பு செட்டுகள் வினியோகிக்க அங்கீகாரம் பெற்றவர்கள் என்பதையும் அறிமுகப்படுத்திக்கொள்ளுகிறோம்.

**எல்லோருடைய ஆதரவையும் விரும்பும்:**

**கே. எம். எஸ். & கோ.,**

**திருநெல்வேலி ஜங்.**



# பெருங்கோட்டூர் பஞ்சாயத்து.

திரு. எம். மாணிக்கவாசகம் செட்டியார்,

தலைவர்.

'வாழ்க நீ எம்மான்! இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்கவே
-அமரகவி சுப்பிரமணிய பாரதியார்

மகாத்மா நம்மிலிருந்து சென்றுவிட்டார். ஆனால் அவருடைய காரியம் மறையவில்லை. அது அமரத்தன்மை வாய்ந்தது. நாட்டின் சீர்கேடான அவல நிலைமையை நுணுக்கமாய் பரிசீலனை செய்து பரிகாரம் காண விழைந்த பெருமை முற்றிலும் காந்தியடிகளையே சாரும். நம் நாட்டில் இதர பெருந்தலைவர்கள் இருக்கத்தான் செய்தார்கள். சுதந்திரத்தின் வேகத்தை முற்றிலும் உணர்ந்து மக்களையும் உணரச்செய்தனர். எனினும் விஞ்ஞான முறையில் நாட்டின் சீர்கேடான பொருளாதாரத்தை ஆராய்ந்து திட்டமான அடிப்படை திட்டங்களை தீட்டியது காந்தியடிகள்தாம்.

பாரதநாடு இவ்வுலகத்திலேயே விவசாயத்தில் பெருவாரியாக ஒன்றி நின்ற நாடு. பாரெங்கும், பொருள் உற்பத்தி செய்வதில் இந்தியாவும் சீனாவும்தான் அரிசி உற்பத்தியில் முதன்மையிடம் வகிக்கின்றன. பருத்தி உற்பத்தியில் அமெரிக்காவுக்கு அடுத்த இடமென்னும் சொத்துள்ளோர்கள். வேர்க்கடலை உற்பத்தியில்நம்நாடுதான் உயர்ந்த ஸ்தானம் கொண்டுள்ளது. சோளம் முதலியவற்றில் சீனாவுடனும் ஆப்பிரிக்காவுடனும் சம உற்பத்தி ஸ்தானம் கூடியதாம். உலகத்திலேயே சீன தேசத்துக்கு அடுத்தபடியாக பாரதநாடு தான் தேயிலை உற்பத்தியில் மிகுந்தது. கால்நடைகளின் எண்ணிக்கையில் உலகிலேயே நம்நாடுதான் முதன்மை இடம் பெற்றுள்ளது, அதிலும் அதற்கு இரண்டாவதாக இடம்பெற்ற அமெரிக்காவிலும் கால்நடை எண்ணிக்கை நம்நாட்டிற்கு அதிக அளவில் பின் தங்கியதாகும்.

நிலைமை இவ்வாறிருக்க நம்நாட்டின் பொருளாதாரம் மட்டும் மிகவும் பிற்போக்கான நிலைமையில்தான் இருந்து வந்தது என்றால் அது காந்தியடிகள் போன்ற தேசிய நிபுணர்களின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லையல்லவா. ஆரம்ப பரிசீலனைகளில் காந்தியடிகள் கண்ட உண்மை என்னவெனில், முதலாவதாக நம்நாட்டில் விவசாயம் ஒரு லாபகரமற்ற தொழில் என்பது. உதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் பிறநாட்டு மக்களுக்கு கிடைக்கும் ஆதாயத்தில் $\frac{1}{3}$ அல்லது $\frac{1}{4}$ பங்குதான் ஒரு இந்திய விவசாயி பெறமுடிகிறது. எனவே அடிப்படை ஏழ்மைத்தனம் மிகுந்துள்ளது. பசியாலும் பட்டினியாலும் அவதியுறும் ஏழை விவசாயினால் எவ்வளவுதான் பாடுபடமுடியும். ஆகவே விளைச்சல் குறையக் குறைய நமது கைத்தொழில்களுக்கு தேவைப்படும் மூலப்பொருள்களும் உற்பத்தி அதிகம் செய்ய முடிவதில்லை. இதனால் மக்களின் "வாங்கும் சக்தி" வெகுவாய்க்குறைகிறது ஒரு சிறு அளவு உற்பத்தியாகும் விளை

பொருள்களும் அந்நியநாட்டுக்கு மிகச்சிறு தொகைகளுக்கு ஏற்றுமதியாகி, அங்கே அவர்களுடைய நாட்டில் பதம்செய்து பக்குவப்படுத்தப்பட்ட முறையில் நம்நாட்டிற்கே விற்பனைக்கு அனுப்பப்பட்டுவந்தன இதை 10 15 மடங்கு விலையில் நாம் வாங்கிக்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டோம். ஆகவே நம் வாணிபம் குறைந்தது, நம் கைத்தொழில் குறைந்தது நம் தேசிய வருமானம் குறைந்தது. நாமும் நாளுக்கு நாள் ஏழைகளாய் அடிமைப்பட்டு வந்தோம். நம் நாட்டில் பெரிய கைத்தொழில்கள் கிடையாது. எனவே பக்குவப்படுத்தப்பட்ட, தயாரித்த பொருள்களை ஏற்றுமதி செய்து பொருள் சம்பாதிப்பதற்கில்லை. நம்நாட்டு ஜனத்தொகையே ஆண்டுக்கு 3—5% வரை பெருகிக்கொண்டே போகிறது.

நிலப்பரப்போ முன்னிருந்தபடியேதானிருக்கிறது. அதிகரிக்கவில்லை. இந்த நிலைமையில் இவ்வாறு ஜனத்தொகை பெருகிக்கொண்டேபோனால் இன்னும் 20 ஆண்டுகளில் இப்பொழுதிருக்கும் ஜனத்தொகை சரியாக இரட்டிப்பாகிவிடுமல்லவா ஆகவே உணவுப்பொருள் உற்பத்தியை பன்மடங்கு பெருக்க வேண்டியது அவசியம். ஆனால் தற்சமயம் உணவுப்பொருள்கூட இறக்குமதி செய்தாகவேண்டிய நிலைமையுள்ளது. இதை எந்த ரூபத்தில் திருப்பிக்கொடுப்பது அல்லது விலைகொடுத்து வாங்குவது என்று சற்றே யோசித்தால் நம்நாட்டின் பரிதாபகரமான நிலைமை தெரியவரும். தங்கமாகக் கொடுத்தால்தான் தொகை செலுத்தமுடியும். வேறு மாற்றுப்பொருள் ஏற்றுமதி செய்யும் அளவில் இல்லை. எனவே நாம் பிற நாடுகளுக்கு அடிமையாகிக்கொண்டே போகிறோம். பொருளாதார அடிமைத்தனம் நாளடைவில் அரசியல் அடிமைத்தனத்தில் கொண்டு சேர்க்கும் என்பது தெளிவு.

ஆகவே நாட்டின் உணவு உற்பத்தியை அநேகமாயிரம்மடங்கு பெருக்கவேண்டும் என்று சொன்னாலும் மிகையாகாது. ஜனசங்கியை கட்டுப்படுத்தவேண்டும். கிராமக் கைத்தொழில்களை எப்பாடு பட்டேனும் ஊக்குவித்து ஆதரவு அளிக்க வேண்டும். அன்னிய நாட்டுச் சரக்குகள் வந்துதான் நம்முடைய அன்றாடம் வாழ்க்கை நடத்த வேண்டும்என்ற நிர்ப்பந்தம் மாறவேண்டும் இதையெல்லாம் கொண்டுதான் காந்திஜி அவர்கள் சர்வோதயக் கொள்கைகளை பிரசாரம் செய்து கிராம ராஜ்யத்தை சர்வோதய அடிப்படையில் நிறுவ முயற்சி எடுத்தார்கள். அதன் விளைவுதான் இன்றைய மக்கள் ஆட்சியில், கிராம சுயதேவை பூர்த்தி சுயஆட்சி என்ற நோக்கத்துடன் திட்டங்கள் தீட்டப்பெற்று செயல்புரிந்து வருகின்றோம்.

இனி எங்கள் கிராம அபிவிருத்தியைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

எங்கள்கிராமம் சங்கரன்கோவிலிலிருந்து திருவேங்கிடம் போகும் ரஸ்தாவில், 4 வது மைலில் உள்ளது. ஜனத்தொகை சுமார் 1380. சுமார் 2634 ஏக்கர் விவசாய நிலங்களில் 2140 ஏக்கர் வெகு பாடுபட்டு சாகுபடியில் கொண்டு வந்து விட்டோம். பெரிய குளம், ஆலங்குளம் என்ற இரு கண்மாய்கள் உள்ளன. இவற்றின் ஆயக்கட்டு முறையே 326ஏக்கர் 73ஏக்கர் ஆகும். கீழ்க்கண்ட அளவில்சாகுபடிசெய்துவருகிறோம்.

| | |
|---|---|
| நெல் | 221 ஏக்கர் |
| சோளம் | 124 ,, |
| கம்பு | 95 ,, |
| கேப்பை | 131 ,, |
| வரகு | 415 ,, |
| பருத்தி | 170 ,, |
| சோளம் | 150 ,, |
| வாழை | 128 ,, |
| சிறுதானியங்கள் | 200 ,, |

கடந்த ஆண்டில் மழைக் குறைவின் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டது என்றும், சீர்திருந்திய விவசாயமுறைகளைப்பின்பற்றியதாலும் சுமார் 4 டன் உர உப்புகள் போட்டும், சுமார் 419 கிலோக்கள் வரை பெயறுக்கு விதைகள் உபயோகித்தும் ஓரளவு பயிர் சிகிச்சை செய்ததினால் தான் மேற்கண்ட அளவாவது விளைச்சல் காண முடிந்தது. நவீன விவசாய உபகரணங்கள் எங்கள் கூட்டுறவு சங்கத்திலும், பஞ்சாயத்திலும் வைத்து விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுத்து உதவுகிறோம். கம்போஸ்ட் உரம் தயாரித்தல் இப்பொழுது எங்களுக்கு வெகுவாகப் பழக்கப்பட்டு விட்டது.

சிறு பாசன சம்பந்தமாய் கடந்த இரு ஆண்டில் மட்டும் 4 கிணறுகள் கட்டுவித்தும் செப்பனிட்டும் வந்திருக்கிறோம்.

சுகாதார முறைகளில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 10 நீர் உறிஞ்சு குழிகள் தயாரித்துக் கொடுத்திருக்கிறோம்.

எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நாணய சங்கம் 55 அங்கத்தினர்களுடன் செயல்பட்டு வருகின்றது. அண்மையில் ஒரு கூட்டுறவு பால் பண்ணை அமைக்க முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

எங்கள் கிராமத்தில் ஒரு குஷ்டரோக நிவாரண நிலையம் உள்ளது. இது வெகு காலமாக செயல்புரிந்து வருகிறது. குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனால் ஓர் ஆரம்ப ஆதாரப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது.

எங்கள் கிராமத்தில் சுமார் 40 நூற்பாளர்கள் உளர். கதர் இயக்கத்திற்கு நிறைய ஆதரவு கொடுத்துள்ளோம்.

நாலே வார்டுகள் கொண்ட எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் சுமார் ரூ. 1724. எங்கள் பஞ்சாயத்தின் மூலம் 13 பொது மராமத்து வேலைகள் எடுத்து நடத்தியிருக்கிறோம்.

எந்த ஆக்கவேலைக்கும் நாங்கள் முன்னின்று வரவேற்போம் — பங்கெடுத்துக் கொள்வோம். இனி வரும் ஆண்டுகளில் எங்கள் பஞ்சாயத்து எல்லா அபிவிருத்தி வேலைகளிலும் பங்கு கொண்டு பல்வேறு இலாகாக்களின் வேலைகளுக்கும் பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்பட முயற்சிகள் எடுப்போம்.

வாழ்க பாரதம்! வளர்க மக்கள் ஆட்சி!!


**எங்களிடம்**

பள்ளிக்கூடத்திற்குத் தேவையான பாடப் புத்தகங்களும், நோட் புத்தகங்களும், மலிவுப்பதிப்பு புத்தகங்களும், மற்றும் நூல் நிலையங்களுக்கும், திருமண பரிசுகளுக்கும் மற்ற பரிசுகளுக்கும் தேவையான சகல விதமான புத்தகங்களும் ஸ்டேஷனரி சாமான்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

**STOCKISTS**
OF THE FAMOUS LIFCO BOOKS,

**M. ஆறுமுகம் பிள்ளை,**
புக்ஸெல்லர் & ஸ்டேஷனர்,
**திருநெல்வேலி ஜங்ஷன்.**

## எங்கள் பஞ்சாயத்து யூனியன்.

பாமரர் வாழ்வு மலர்ந்திடவே
பார்த்தோர் பரவசம் அடைந்திடவே
பார்புகழ் திட்டங்கள் தீட்டிடவே
பயிர்கள் செழித்து வளர்ந்திடவே
பள்ளிகள் எங்கும் தோன்றிடவே
பாலர் அனைவரும் படித்திடவே
பட்டிதொட்டி குறை நீங்கிடவே
பாட்டை வசதிகள் செய்திடவே
கிராமியக் கலைகள் பெருகிடவே
களியாட்டம் எங்கும் கண்டிடவே
கூட்டு முயற்சி வளர்ந்திடவே
கூட்டுறவு சங்கங்கள் தோன்றிடவே
கைத்தொழில் எங்கும் கண்டிடவே
கைராட்டையில் நூலும் நூற்றிடவே
கால்நடைச் செல்வம் தழைத்திடவே
கன்றுகளின் தரம் ஓங்கிடவே
சுகப் பிரசவங்கள் ஆகிடவே
மகப்பேறு நிலையங்கள் ஏற்படவே
மருத்துவ வசதிகள் பெற்றிடவே
மக்கள் மகிழ்ச்சி எய்திடவே
கிராம ராஜ்யம் வந்திடவே
பண்பும் அன்பும் கலந்திடவே
மலர்ந்தது பஞ்சாயத்து யூனியன்
குருவிகுளமாம் அதற்கு இணையேது?
ஏற்றமிகு எழில் கமிஷனர்தான்
நம்பியாம் ஓயா உழைப்பாளர்
பாங்குடன் பணிசெய் உறுப்பினர்கள்
நாற்பத்தாறு நல் முத்துக்களாம்
ஊக்கமிகு யூனியன் தலைவர்தான்
ஆக்கமிகு சங்கரப்ப நாயுடுவாம்
அவர்தம் முயற்சியால் திட்டங்கள்
ஆக்கிடவே வாழ்வு சிறந்திடவே
வாழிய எங்கள் யூனியன்
வாழிய வாழிய வாழியவே!

**அலுவலர்கள்,**
**குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன்.**



## நக்கலமுத்தன்பட்டி பஞ்சாயத்து

பெருமாள்சாமி நாயக்கர்,
**தலைவர்.**

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும சான்ற தண்டமிழ் பொன்னாட்டில் குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனில் அடங்கப் பெற்றது நக்கலமுத்தன்பட்டி என்னும் கிராமம். பருவக்குடியினின்று 17மை 2பர்லாங் அளவில் அமைந்துள்ளது சுமார் 800 மக்கள் 135 குடும்பங்களாக இல்வாழ்க்கையெனும் நல்லறத்தை நடாத்தி வருகிறார்கள். மணமிக்க கிராமிய சூழ்நிலையில் மக்களுக்குத் தேவையான, அன்றாட உணவுப் பொருட்களையும் ஏனைய கச்சாப் பொருட்களையும் நல் ஊக்கத்தோடும் மிகு ஆக்கத்தோடும் இக்கிராம வாசிகளால் விளைவிக்கப்படுகின்றன. உண்ண உணவும், உடுக்க உடையும் தரும். இச் சமுதாயச் சிற்பிகளின் நலத்திற்காகவும் நன்மைக்காகவும் "பஞ்சாயத்து ஆட்சி முறை" மிகவும் உதவியளித்து வருகிறதென்பது மிகையாகாது.

விவசாய வளர்ச்சிக்கு தற்காலத்தில் நவீன பொறிகளும் இரசாயன உரங்களும் பயன்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி அதிகமாக்கப்படுகிறது. அதற்கு தேவையான நடைமுறையாவற்றையும் கைக்கொண்டு தன்னிலையை முன்னேறச் செய்துள்ளது இக்கிராமம். பருத்தி, சோளம், கம்பு, கேப்பை, உளுந்து ஆகிய பொருட்கள் அதிகமளவில் பயிர் செய்யப்படுகின்றன. விவசாயிகள் 'கூட்டுறவு முறை' களினால் திருந்திய விவசாய முறைகளையும் பயிர் காப்பு முறைகளையும் நன்கறிந்து காலாகாலங்களில் நல்ல மேனி தரும் பொறுக்கு விதைகளை விதைத்து, நவீன கருவிகளின் உதவியால் செயலாற்றி மகசூலைப் பெருக்குகிறார்கள். தழையுரங் கூடவே தகுதியாய் இரசாயன உரங்களும் கலந்து கழனி சிறக்கச் செய்கிறார்கள். நீர்வளம் பெருகிய கேணிகள் அங்காங்கே வசதியாய் அமைந்துள்ளன. விவசாய நற்தொழிலோடு கொல், தச்சு போன்ற தொழில்களும வளமார வளர்க்கப்பட்டு சீரிய முறையில் நடைபெறுகின்றன. பஞ்சாயத்து யூனியன் மூலம் திறம் சான்ற தொழில் வல்லுநராக திகழ, பயிற்சி பள்ளிகளுக்கு, ஆர்வங் கொண்ட மாணவர்கள் உபகாரச் சம்பளச் சலுகையுடன் அனுப்பப்படுகின்றனர். உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை தேடித்தரவும், வேலை வாய்ப்புகள் அளிக்கவும், விவசாயக் கருவிகள், உரம், விதை, பூச்சி நாசினிகள் விநியோகம் செய்யவும கூட்டுறவு சங்கம் ஒன்று நன்முறையில் செயலாற்றி வருகிறது. 151 பேர்களை அங்கத்தினராக கொண்ட இச்சங்கத்தின் நன் முயற்சியால் மக்கள்தம் ஆக்கிடும் பொருட்களில் அளப்பரு மேன்மை கண்டு மனம் மகிழ்கின்றனர்.

ஓய்வு நேரத் துணைத் தொழிலாக இக்கிராம மக்கள் நூல் நூற்பதைக் கொண்டுள்ளார்கள். விளையும் பருத்தியினால் ஆடை அதிகமாக அண்ணல் காந்திஜியின் கொள்கைக்கேற்ப கைராட்டையே ஆயுதமாகக் கொண்டு நூல்நூற்று சிட்டங்கள் சேர்க்

கின்றனர். உழைப்பின் முயற்சிக்கேற்ப அதன் வருமானம் தனி நபருக்கு பயனளிக்கிறது.

சுமார் 50 சர்க்காக்கள் இங்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஊக்கமளிக்கும் நூல் நூற்கும் ஆக்க வேலையை பெண்கள் இல்லத்திலிருந்து இயக்கி கிராமநல ஊழியர் பணியினால் பெருமித வாழ்வு நடாத்துகின்றனர் என்பது குன்றிலிட்ட விளக்கென சுடர் வீசுகிறது.

கிராமங்களில் இல்லச் செல்வமாக இலங்குவது கால்நடைச் செல்வமாகும். இப்பட்டியில் கால்நடைச் செல்வம் கருத்தாய் வளர்க்கப்படுகிறது. புள்ளி விவரங்களின் படி மாடுகள் 346, ஆடுகள் 1282 என்று கணக்கிடப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மூலம் கால்நடைகள் நோய்த் தடுப்பு ஊசிகள், மருந்துகள் பெற்று நோயற்ற வாழ்வு கொண்டு குறைவற்ற செல்வமாக திகழ்கின்றன. உயரிய தரத்தைச் சான்ற திடமான அபிவிருத்திக்காக "பொலிக்காளை" ஒன்று இக்கிராமத்திற்கு பெருமை தருகிறது இல்லங்களில் கோழிகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. யூனியன் மூலம் உயர்தர காதக்கோழி முட்டைகள் பெற்று உற்பத்தி செய்து முயற்சி திருவினையாக்க பலனடைகிறார்கள் இக்கிராமவாசிகள். இச்செல்வங்களால் பால், தயிர் வெண்ணெய், நெய், முட்டை, மாமிசம் போன்ற உடலுக்கு உரமூட்டும் சக்திப் பொருட்கள் யாவற்றையும் தாமும் பெற்று வையகமும் இன்புற அளிக்கின்றனர் என்பது வெள்ளிடை மலை.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க 'கல்வி' கிராமத்தின் முக்கிய தேவையாக உள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் கேடில் விழுச்செல்வமாகிய கல்விக்காக பெருநிதியை ஆட்சியாளர்கள் செலவு செய்து வருகிறார்கள். இரண்டு ஆரம்ப பாடசாலைகள் கொண்ட இக்கிராமத்தில் பாடித் திரியும் கிராம சிறார்கள் சீருடன் கல்வி கற்கின்றனர். ஆசிரியர் பெருமக்களும் நன்கு செயலாற்றி நல்லறிவுதுலங்க மாணவர்களை வளப்படுத்துகின்றனர். 'மதிய உணவுத் திட்ட'த்தின் படி மாணவர்களுக்கு உணவளித்து ஊக்கப்படுத்துகின்றனர். இதனால் வருங்கால மன்னர்களான மாணவர்கள் நல்வழியில் வையகத்துள் வாழ்வாங்கு வாழ அடிகோலுகின்றனர்.

திட்டம் தீட்டி செயலாற்றி வரும் தமிழ் நாட்டிலுள்ள 19,000 கிராமங்களுள் ஒன்றாகத் திகழும் இப்பட்டியிலும் மின்சார சக்தி தன் இன்வருகை தந்து வாழ்வின் ஒளியாக விளங்கும் மின்னொளியை மக்கள் பயன்பட அளிக்கிறது. தெரு விளக்குகள் மூன்றாக சுடர் வீசிய போதிலும் அவை கிராம மக்களுக்கு இருளைப் போக்கி பெரிதும் உதவியாக இருக்கிறது. மின்னொளி சார்ந்த இப்பட்டியின் இல்லங்களில் ஒளி படர நாட்கள் தொலைவிலில்லை வானொலிப் பெட்டி (Radio) ஒன்று மக்கள் அகமும் முகமும் ஒருங்கே மலர இனிதே அணியாகிறது இங்கு சுகாதார முறைகள் நன்கு பாதுகாக்கப்படுகிறது. கழிவுநீர் போக்க வடிகால் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராம நலம் மக்களின் மனப்பான்மைக்கேற்றவாறு சிறுகச் சிறுக முன்னேற்றம் காணும் தன்மை கொண்டது. மக்கள் ஒற்றுமை இதற்கு முக்கியமானதாகும். ஒற்றுமை சிறக்கவும், தாழ்வுமனப்பான்மை தாழ்ந்து 'யாவரும் சமம்' என்ற நல்லுணர்வினைப் பெற்றுத் திகழவும், தன் கையே தனக்குதவி என்ற நியதியில் தன்னிறைவும் சுயபலமும் பெற்றுயாவும் இவ்வூரில் கூட்டுறவு சங்கம் ஒன்றும் சிறந்த முறையில் பயனளித்து வருகிறது. ஒன்றுபட்டு வாழ்வுக்காணக் கூடிய மாதர் சங்கம் ஒன்றும் இக்கிராமத்திற்கு பயன்பட செயலாற்றி வருகின்றன. மாதர் நல ஊழியர்களால் இக் கிராமிய பெண்கள் பயன்தரும் வேலைகளான நூற்பு, தையல், பூ வேலைகள் போன்ற நுண்கலைகளையும் கற்று தாய்-சேய் நலம் காத்து பிறர் மகிழ வாழ்கின்றனர்.

'வெள்ளத்தனைய மலர்நீட்டம்மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு'

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, இப்படி மக்கள் நல்வாழ்வு காண ஆவல் கொண்டு 'தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்ற தம் உழைப்பின் முயற்சியால் நாடோறும் வளத்துடன் உயருகின்றனர். காலச்சக்கர சுழற்சியால் இன்னும் தேவையான வைத்திய வசதிகளும், நூலக நிலையங்களும், நீர் சேகரிகளும் கிராம மக்கள் உழைப்பாலும் யூனியன் உதவியாலும் ஆக்கப்படும் என நம்புகிறோம். குணநலஞ் சான்ற சீருடைச் செல்வராய உள்ளு[...]தெல்லாம் உயர்வுள்ளும், மாநிலம் போற்[...]றும் மாண்புடையராய்த் திகழும் இக்கிரா[ம] மக்கள் பல்லாண்டு வாழ்ந்து தமக்கும் பி[ற]ருக்கும் நன்மை பயக்க நல்லோர் ஆ[சி] என்றும் பெருகுவதாக.


## O. 1903. திருவேங்கடம் கூட்டுறவு விவசாய பாங்கு லிமிட்டெட்.,

### திருவேங்கடம்.

**பதிவு தேதி: 6—11—58** **வேலை துவக்கிய தேதி: 12—12—58.**

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 50,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் மெம்பர்களால் | ரூ. 30,450 |
| சர்க்காரால் | ரூ. 10,000 |

கீழ்க்கண்டபடி டிபாசிட்டுகள் பெறப்படும்:

| | |
|---|---|
| பிக்ஸட்டிபாசிட் 6 மாதம் வரை | 4% |
| 6 மாதம் முதல் 1 வருடம் வரை | 4½% |
| சேவிங்ஸ் டிபாசிட் | 2½% |

தங்க நகைகள் ஈட்டின்பேரிலும், நவதானிய ஈட்டின் பேரிலும் குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கப்படும். சொத்துக்கள் ஜாமீன் பேரிலும், நபர் ஜாமீன்பேரிலுல் குறுகிய மத்திய நீண்டகால கடன்கள் கொடுக்கப்படும்.

மெம்பர்களின் சௌகரியத்தை முன்னிட்டு சிட்பண்[டு] நடத்தப்படும்.

V. S. சாத்தூரப்ப நாயக்கர்,
பிரஸிடெண்ட்.

S. வேயீன்றமுத்[து]
காரியதரிசி.

# "கிராமராஜ்யம்"

காந்தியடிகள் காண விரும்பும்
கிராம ராஜ்யம் ஏதுவெனக் கேளீர்!
பக்தர் தம் பாஷையில் பகருவதாயினன்
இறைவனுடைய ஏகாதிபத்தியம்
இப்புவி மீது ஏற்படுவதுவே,
அரசியல் மொழியில் அதன் பொருள் யாதெனில்
சர்வ ஜனங்களின் சம்மதம் பெற்ற
ஆட்சி முறையே அங்கு நடைபெறும்.
சுகவாழ்க்கையிலோ சொத்துரிமையிலோ
ஏற்றத்தாழ்வு ஏதுமங்கில்லை;
ஜாதிக்கொடுமையும், சமயப் பூசலும்
பால் வேற்றுமையும், இனவேற்றுமையும்
பண்டைக் காலப் பழங்கதையாகி
''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்''
என்றே அங்குளோர் எண்ணியிருப்பர்.
மாநில, முழுவதும் மக்களின் உடமையாம்;
மக்களெல்லோரும் மன்னர்களாவர்.
எளிதாய் விரைவாய் எவர்க்கும் ஆங்கே
நிலைதவறாத நீதி கிடைக்கும்;
எழுத்தில் பேச்சில் இறைவனைத் தொழுவதில்
சுதந்திரச்சோதி சுடர் விட்டொளிரும்
''இத்தகை ராஜ்யம் ஏற்படுவதற்கு
தத்தம் பணியைத் தாமே செய்திடும்
கடனறிய மக்களே காரண'' மென்ற
காந்தி வாசகம் கருத்திடைக் கொண்டு
இன்ப உலகாம் கிராம ராஜ்யம்
நிலைபெற அனைவரும் நித்தமும் உழைப்போம்.

**கோ. வே.**



# பிச்சத்தலைவன்பட்டி பஞ்சாயத்து


திரு. V. சுப்பைய நாயக்கர்,
தலைவர்.


சுதந்திரம் பெற்றபின் மக்களின் பல்வேறு வாழ்க்கை வசதிகளிலும் முன்னேற்றம் பெற்று வருகிறோம். முக்கியமாக கிராமங்கள் முன்னிருந்ததைப் போல் பின் தங்கியதாகவில்லை. நகரத்தில் காணப்படும் எல்லா வசதிகளும் பெற்று வருகிறோம். எனினும் நாம் அடைந்து வரும் முன்னேற்றத்திற்கேற்ப நம்முடைய வழி வகைகளிலும் நாம் சீர்திருத்திக்கொள்ள வேண்டியது அவசியம். கல்வி வளர்ச்சி பெருகிக்கொண்டு போகும் இந்த விஞ்ஞான உலகத்தில் இன்னமும் சில பிற்போக்கான வழிகளைப் பின்பற்றி வருகிறோம். அதை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, விவசாயத்தில் எவ்வாறு நவீன சாதனங்கள் கொண்டு வந்திருக்கிறோமோ, அதே மாதிரி அந்த விவசாயத்தையும் ஆராய்ச்சி கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டியது முக்கியம். நம்மில் அநேகர் விவசாய சம்பந்தமான கணக்குகளை எழுதி வைத்துக்கொள்வதில்லை. நமது சொந்த நிலங்களை என்றாலும், பண்ணைச் செலவுகளை பாகுபடுத்தி தனிக் கணக்காக எழுத முயல வேண்டும், அவ்வாறு செய்தால் நம்முடைய பிற அம்சங்களிலுள்ள வரவு செலவுகளுடன் கலந்து விடாமல் நம்முடைய விவசாயக் கணக்குகளை தனித் தனிக்கணக்கை செய்து அதின் ஏற்றத்தாழ்வு, நடைமுறை மாறுதல்கள் செய்ய வேண்டியது முதலியவை கவனித்து மறு உழவுக்கு முன் சீர்திருத்தங்கள் செய்து கொள்ள ஏதுவாகும். இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் கணக்குகள் வைத்துக்கொண்டால் ஒரு குறிப்பிட்ட கிராமம் அல்லது மாவட்டத்தின் பொது அம்சங்கள் விவசாயத்தைப் பற்றிய வரையிலும், குறிப்பிட்ட மகசூல்களைப் பற்றிய வரையிலும் ஒப்பிடக் கூடிய வகையில் இருக்கும். டி விவசாயக் கணக்குகள் எம்மாதிரி இருக்க வேண்டும் என்பது காலம் செல்லசெல்லத்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் மகசூல் வாரியாக கணக்குகள் வைத்துக்கொள்வது என்ற ஒரு பழக்கம் ஒவ்வொருவரும் நடைமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக கால்நடை அபிவிருத்தி. இதில் தான் பெரும்பாலும் நாம் நடைமுறை கவனத்தையும் புறக்கணிக்கிறோம். எப்படி மருத்துவ நிலையங்களிலும் பிரசவ விடுதிகளிலும் குழந்தை பிறப்பு விவரங்கள் வளர்ச்சி பற்றிய அட்டவணைகள் வைத்திருக்கிறார்களோ அதே மாதிரி காளும் நல்ல ஜாதிப் பொலிவில் உண்டாகும் கன்றுகள் முதலியவற்றின் 'சார்ட்டுகளை' ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக கால்நடை இலாகாவினர் அட்டவணை விவரங்கள் வைக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். கோழி வளர்ப்பிலும் இதே மாதிரி தான்.

சுருங்கச் சொல்லுமிடத்து கிராமப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் நாம் தீர்க்காலோசனை செய்ய வேண்டும். விஞ்ஞான நோக்குடனே பரிசீலனை செய்யவாய்ப்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

இனி வருங்காலத்தில் கிராமப் பஞ்சாயத்தேதான் எல்லா இலாகாவினர் வேலைக்கும்

இணைக்கும் ஸ்தாபனமாக விளங்கப் போகிறது. கிராம ராஜ்யம் காந்தி அடிகள் வகுத்த முறையில் முழு மலர்ச்சி பெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை. எனவே கிராம வேலைகள் அனைத்திலும் மக்களும் கிராமபஞ்சாயத்தும் தீவிரமாக ஒத்துழைக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் ஆட்சி ஆரம்பித்து இரண்டே ஆண்டுகள் தாம் ஆகின்றன இதற்குள் நம்முடைய கிராமம் பலவகைகளிலும் முன்னேற்றப் பாதையில் திரும்பி விட்டாது.

சுமார் 2030 ஏக்கர் அளவுள்ள நிலங்களில் 1993 ஏக்கர் அளவு வெகு முயற்சியுடன் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1500 ஜனத்தொகை கொண்ட எங்கள் பஞ்சாயத்தில் 1300 பேர் விவசாயத் தொழிலில் தான் ஈடுபட்டிருக்கிறார்கள்.

குளத்துப்பாசனம் அதிகம் இல்லை. கடந்த இரு ஆண்டுகளில் சுமார் 6 கிணறுகள் புதுப்பித்தோ, புதிதாகத் தோண்டியோ உபயோகத்திற்கு வந்திருக்கின்றன. அதிக அளவில் உரங்களிட்டு விவசாயம் முன்னேறியுள்ளது கடந்த ஆண்டில் 300 கிலோக்கள் வரை பொறுக்கு விதை உபயோகித்திருக்கிறோம். ரூ. 400 அளவில் நவீன விவசாயக் கருவிகள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். 83[illegible]கள் வரை பூச்சிமருந்து அடித்தும், 17 குழிகள் கம்போஸ்ட் உரங்கள் தயாரித்தும் 3 நேரிட விளக்கங்களும் அளித்துள்ளோம். பருத்தி எங்கள் முக்கிய மகசூல், சுமார் 674 ஏக்கர். கம்பு அடுத்தபடியாக அதிகமாகப் பயிராயுள்ளது. சுமார் 324 ஏக்கர் அளவில்.

சுகாதார வேலைகளில் 6 உறிஞ்சும் குழிகள் தாரித்தும், 3 குடிதண்ணீர் கிணறுகள் செப்பனிட்டும், 1 கைப்பம்பு ஏற்படுத்தியும் சிறிதளவு அபிவிருத்தி செய்திருக்கிறோம்.

ஒரு ஆரம்பப் பள்ளியும், ஓர் ஆதாரப் பள்ளியும் இருக்கின்றன. இளைஞர் சங்கமும் நிறுவியிருக்கிறோம். ஒரு கிணறு வேலை எடுத்து செய்திருக்கிறோம்.

எங்கள் பஞ்சாயத்தில் ஒரு கூட்டுறவு சங்கம் செயல்பட்டு வருகிறது. இதில் 75 அங்கத்தினர்கள் உளர். கடந்த ஆண்டில் ரூ 30000வரை கடன் கொடுத்திருக்கிறோம்.

இரண்டே வார்டுகள் உள்ள எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் ரூ. 1600 வரை தான் இனி வரும் ஆண்டுகளில் அதிக ஆக்க வேலைகள் எங்கள் பஞ்சாயத்தின் மூலம் ஏற்று நடத்த தீர்மானித்திருக்கிறோம்.

வணக்கம்.


அன்பர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் வணக்கம்!

உங்களுடைய பஸ், லாரி, பிளஷர்களை எந்த நேரத்திலும் நேர்த்தியான முறையில் லூப்ரிகேஷன் சர்வீஸ் செய்து கொடுத்து வருவதுடன், எலெக்ட்ரிக் & கியாஸ் வெல்டிங், கடைசல் முதலிய நுட்பமான வேலைகளையும் குறிப்பிட்ட நேரத்தில் பூர்த்தி செய்து தருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

இப்படிக்கு

**K. V. பரமசிவம் செட்டியார்,**

**"வேல்முருகன் இன்சினியரிங் ஒர்க்ஸ்"**

இளையரசனேந்தல் ரோடு,

கோவில்பட்டி.




# மைப்பாறை பஞ்சாயத்து.


திரு. அ. சுந்தர நாயக்கர்,

தலைவர்.


நமது நாட்டின் கண்கள் கிராமங்களே. கிராமம் செழித்து வளர்ச்சியுற்றால்தான் நாடு முன்னேற முடியும். கிராமங்கள் செழித்து வளர கிராமங்களிலுள்ள எல்லா தொழிலும் வளர்ச்சியுறவேண்டும். கிராம மக்களால் பெரும்பாலும் செய்யப்பட்டு வரும் தொழில் விவசாயமே. இன்றைய சூழ்நிலையில் எல்லா மக்களும் விவசாயத்தையே நம்பி வாழ முடியாத நிலையில் கிராமங்கள் இருக்கின்றன. விவசாயத்திலிருந்து வரும் வருமானம் ஏனைய தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட மிகமிகக் குறைவு.

கிராமமக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புகளைக் கொடுக்க கிராமத்தில் "உலக தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்" என்ற பாரதியின் நல்மொழிக்கிணங்க எல்லாவிதமான தொழில் வளங்களும் நிறம்பப் பெற்றதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமமும் சுய பலமும் தன்னிறைவும் பெற்றிருக்கவேண்டும்.

தன்னிறைவைப் பெறுவதற்கு கிராம மக்கள் எல்லோரும் ஒருங்குகூடி கிராமத்திற்குவேண்டிய திட்டங்களை தீட்டி அவைகளை செவ்வனே நடைபெறச்செய்யவேண்டும். மக்களுக்கு வேண்டிய எல்லாவிதமான பொருள்களும் கிராமங்களிலே உற்பத்தியாகி அப்பொருள்களையே அங்குள்ள மக்கள் உபயோகிக்க வேண்டும். சில கிராமங்கள் ஒரு சில குறிப்பிட்ட பொருள்களையே உற்பத்தி செய்யக்கூடிய நிலையிலிருக்கலாம். ஆனால் அப்பொருள்கள் அண்டைய கிராமங்களின் தேவைப் பொருள்களாக இருக்ககூடும். இங்ஙனமாயின் பக்கத்திலுள்ள கிராமமக்களுடன் கலந்தாலோசனை செய்து கிராமத்திருப்பணி திட்டங்களுக்கு வழிவகுக்கலாம். எல்லாவிதமான அம்சங்களிலும் தன்னிறைவு பெற சற்று காலதாமதம் ஆகலாம். உணவு,உடை உறையுள் போன்றவைகளின் தன்னிறைவுக்கு உடனே திட்டமிடவேண்டும்.

விவசாயப் பெருங்குடி மக்களும் ஏனைய கிராமத்தொழில் வல்லுநர்களாலும் நிறம்பப்பெற்றது மைப்பாறை எனும் கிராமம். இது குருவிகுளம் கிராமத்திற்கு வடகிழக்கே சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ளது. குறுக்குவழியாக குருவிகுளத்திலிருந்து இவ்வூர் வர நல்லபாட்டை இல்லாவிடினும் திருவேங்கடம் வழியாக மைப்பாறை வந்து சேரலாம்.

அறியாமை, இருள். மக்களிடமிருந்து அகல நெடுநாளாக இவ்வூரில் ஓர் உயர் ஆரம்பப்பள்ளி பணிபுரிந்து வருகிறது. பெரியவர்களும் தங்கள் ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியை பயனுள்ள வழியில் கழிக்க இவண் ஓர் வாசகசாலை இவ்வூர் மக்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான மக்களின்தொழில் விவசாயமே. 2219 ஏக்கர் நிலம் வருடா தோறும் பயிர் செய்யப்படுகிறது. பருத்தி கம்பு, சோளம், கேப்பை, உளுந்து ஆகிய பொருள்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன. எல்லா விவசாயப் பெருங்குடி

மகனும் திருந்தியவிவசாயமுறைகளை நன்கு தெரிந்தவர்கள் திருந்தியவிவசாயகருவிகளை உபயோக்கிருர்கள். இயற்கை உரத்துடன் செயற்கை உரத்தையும் உபயோகிக்கிருர்கள். நல்ல பொறுக்கு விதைகளை தேர்ந்தெடுக்கிருர்கள். பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதில் வல்லுநர்கள் மக்களின் விடா முயற்சிக்கு ஈடாக இயற்கை அன்னையும் விவசாயத்தில் நல்ல மகசூலை எல்லா மக்களுக்கும் பரவலாகக் கொடுத்து ஆதரிக்கிருர்கள்.

தங்களுடைய அன்ருடப் பிரச்சனைகளை கலந்தாலோசிக்க இவ்வூரில பல சங்கங்கள் உள்ளன. வாலிபர் சங்கம், விவசாயிகள் சங்கம், மாதர் சங்கம் போன்ற எல்லா சங்கங்களும் பயனுள்ள சங்கங்களாக செயலாற்றுகின்றன.

விவசாய அபிவிருத்திக்கு கால்நடைகளும் பெருமளவில் உதவி செய்கின்றன. எங்கள் கிராமத்தில் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக ஒரு பொலி காளையை வைத்திருக்கிரேம். ஜாதிக்கோழிகள் அனேகமாக எல்லா வீடுகளிலும் காணலாம்.

இவ்வூரிலுள்ள ஒவ்வொருவருக்கும் கைராட்டினத்தின் மூலம்நூல் நூற்கத்தெரியும் நாள் ஒன்றுக்கு சுமார் ரூ. 250 மதிப்புள்ள நூல் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. விவசாயத்தில் வேலையில்லாத ஓய்வு நேரங்களில் இப்பணி செய்யப்பட்டு தனிநபரின் வருமானம் அதிகமாக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் மூலம் இத்தொழிலை வளர்ப்பதற்கு எங்கள் கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான மக்கள் கதர் ஆடையையே அணிகிருர்கள் என்று பெருமையுடன் சொல்லவேண்டியதிருக்கிறது.

விவ்சாயத்தோடு பிணைக்கப்பட்ட ஏனைய கொல், தச்சு, பானை செய்தல், தோல் தொழில், போன்ற கிராமத் தொழில்களுக்கும் இவ்வூரில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சீரிய முறையில் அவைகளும் நடைபெற்றுவருகின்றன.

உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களுக்கு நல்ல விலை தேடிக் கொடுக்கவும், விவசாயக் கருவிகள், உரம், விதை, கிருமிநாசினிகள் வினியோகம் செய்யவும் மக்களிடையே ஒற்றுமை வளர்ப்பதற்கு ஓர் கூட்டுறவு சங்கம் இவ்வூரில் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

குடிதண்ணீர் வசதி செவ்வனே நடைபெற இவ்வூரில் ஓர் குடி தண்ணீர்திட்டம் செயல்பட்டு வருகிறது. கழிவு நீரைப் போக்க எல்லா வீதிகளிலும் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வீதிகளும் சுற்றுப்புறங்களும் சுத்தமாக இருப்பதற்காக இவ்வூரில் இரண்டு கிராமியகக்ஸ்கள் கட்டப்பட்டுள்ளன. தாய்சேய் நல விடுதி ஒன்றும் வெகு திறம்பட செயல்பட்டு வருகிறது.

இவ்வூரின் அருகே வடபகுதியில் ஓர் பாறையுள்ளது. இப்பாறையைக்கொண்டே இவ்வூருக்கு மைப்பாறை என பெயர் வந்துள்ளதோவென சிந்திக்கவேண்டிய திருக்கிறது. இப்பாறையை நம்பி வாழ்பவர் அனேகர் "என்பும் உரியர் பிறர்க்கு" என்ற குறளின் படி இப்பாறை நாளுக்குநாள் தேய்ந்துகொண்டே போனலும், அது பல மக்களுக்கு உணவளிப்பதுடன் பல்லாயிர மக்கள் சௌகரியமாக போய்வர நல்ல பாதைகள் அமைக்க உதவுகிறது.

எங்களூருக்கும் குருவிகுளத்திற்கும் குறுக்கே செல்ல ஒரு பாதை மிகவும் அவசியம். ஓர் மருத்துவமனை கட்டவேண்டியதிருக்கிறது. சிறுவர்கள் பூங்கா ஒன்றும், மனமகிழ் மன்றம் ஒன்றும் எங்களுக்கு இன்னும் தேவைப்படுகிறது. செயல்படவேண்டிய எல்லா வினைகளும் செவ்வனே நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாளுக!

"நாடென்ப நாடா வளத்தன"

✻

# முக்கூட்டுமலைப் பஞ்சாயத்து.



திரு. கிருஷ்ணசாமி நாயக்கர்,

தலைவர்.

தொன்று தொட்டுப் பூரிவாழத் தூய்மை
மிக்க அறமெல்லாம்
மன்ற உணர்ந்தி வளம் பெருக்கி
வாழ்ந்த தெங்கள் இந்தியா

என்று சிறப்பித்துக் கூறப்படும் நம் பாரதத் திருநாடு, கலை வளர்த்து, அறம் பெருக்கிக்கருணை வாழ்வு கண்டது; ஆனல் தாய் நாடாளும் தனியுரிமை தகைசால் மக்களுக்கில்லையென ஒரு கூட்டம் நம் நாட்டை நாமிருக்க அடிமைப்படுத்தியது.

"வீரசுதந்திரம் வேண்டிநின்ருர் பின்னர் வேறென்று கொள்வாரோ? என்று வீரக் கனல் எழுப்பினர் பாரதி. அடிமைத் தளை அறுத்து. சுதந்திர நாட்டில் வாழ்கிரேம என்ற பெருமிதம் எல்லோர் மனத்திலும் இருக்கிறது. "பொன்னெளிர் பாரத நாடெங்கள் நாடே" என்று வீறுடன் கூறுகிருர்.

சுதந்திரத்தைக் காப்பாற்றச் சுய பலம் வேண்டும். எல்லோரும் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்; அடுத்தவன் பார்த்துக்கொள்வான் என்று ஒருவன் நினைத்தால், எல்லோரும் அப்படியே நினைத்து, மீண்டும் நாடு வறுமையுறநேரிடும். அந்த நிலையில் நாம் இருக்கக் கூடாது.

'கட்டத் துணியுமின்றி உண்ண
கஞ்சி யுணவு மின்றி
நெட்டும் கிழவயதில் அவள்
நெஞ்சம் மிகவும் குன்றி
பெற்ற வயிரவள் பற்றி எரிந்திட
முற்றும் துயரவள் உற்ற சமயத்தில்
என்ன உறக்கமடா உனக்கென்ன
மயக்கமடா"

எனக் கேட்கிருர் நாமக்கல் கவிஞர். நாடு வறுமையுற்று, வளமிழந்து இருக்கும் நேரத்தில் நாம் தூங்கலாமா? கூடாது.

சுதந்திரம் அடைந்தவுடன் கிராமங்கள் தழைக்க, நமது தலைவர்கள் தீட்டிய திட்டங்களினல் இன்று அகிலம் போற்றும ஆட்சி முறை நமக்குக் கிட்டியுள்ளது.
கிராம நலம் பேணப் பஞ்சாயத்து.

வட்டார நலம் பேணப் பஞ்சாயத்து
யூனியன்.
மாவட்டம் நலம் பேண மாவட்ட அபி
விருத்தி மன்றம்.
மாநிலம், தேசம் காக்க மக்களாட்சிமுறை,
அரசு இன்று அமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் பஞ்சாயத்து, நடுவப்பட்டி, முக்கூட்டுமலை என்ற இரு தாய்க்கிராமங்களைக் கொண்டது. கஸ்தூரிரெங்கபுரம், ஸ்ரீரெங்கராஜாபுரம் என்ற இரு குக்கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது. பரப்பு 2·5 சதுர மைல். வருமானம் ரூபாய் 1500. மக்கள் தொகை 1864. மின்வசதி பெற்றுள்ளது. 11 உறுப்பினர்களை கொண்டது.

விவசாயமே எங்கள் முக்கிய தொழில் பருத்தி, கம்பு, இதர புஞ்செய்த் தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. நவீன விவசாயக்கருவிகள் வழங்கப்படுகின்றன. பார் பிடிக்க பார்க்கலப்பைகள், களையெடுக்கும் கருவிகள் ஆழமாய் உழுவதற்கு கலப்பை, விதை தெளிக்கும் இயந்திரம், குண்டக்கா ஆகிய விவசாயக் கருவிகளைத் தற்போது உபயோகித்து வருகிறோம். பொறுக்கு விதை போட்டு, போதிய கம்போஸ்டு இட்டு, பொன்னான மகசூலைப் பெற வழி வகுத்துள்ளோம். விவசாயத் திட்டம் வகுத்து எங்கள் கிராமத்தில் செயலாற்றி வருகிறோம். 3005.93 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு எங்கள் பஞ்சாயத்துப் பரப்பில் உள்ளது. நீர்ப்பாசனக் குளங்கள் இல்லை. மழையை நம்பியே சாகுபடி நடக்கிறது. கிணற்று நீர் சாகுபடியும் உள்ளது. ஒரு முர்ரா எருமைக்கிடா கால்நடை தரத்தை அபிவிருத்தி செய்ய வழங்கப்பட்டுள்ளது. 20 சிவப்பு ஜாதிக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன

"பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெல்லாம் செழித்தோங்கி வளர
வேண்டும்."

என்று பாடிய கவிமணி தே. வி. அவர்களின் கனவுகளை நனவாக்கி வருகிறோம்.

கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. கூட்டுறவு மனித வாழ்வை வளப்படுத்த ஏற்பட்டுள்ள பெரிய சாதனம் என்று நமது பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் அடிக்கடி கூறிவருகிறார்கள், மக்களே பொறுப்பேற்று கூட்டுறவு சங்கங்களை நடத்த வேண்டும் என்று அவர் கூறுவதற்கிணங்க நாங்கள் பொறுப்பேற்று நடத்தி வருகிறோம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று வள்ளுவர் கல்வி கற்றலைச் சிறப்பித்துக் கூறுகிறார். "சிலருக்குக் கல்வி" "பலருக்குக் கல்வி" என்ற நிலைமாறி "எல்லோருக்கும் கல்வி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இலவசக் கல்வி இன்றையப் பள்ளி வயதுப்பிள்ளைகள் அனைவருக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

"திருமகளும் கலைமகளும் சிறக்கவேண்டும்
தேசாபிமானமெங்கும் திகழ வேண்டும்"

என்பதற்கிணங்க இன்று கிராமங்களில் எல்லாம் பள்ளிகள் ஏற்பட்டு எல்லோரும் படித்து வருகிறார்கள். மூக்கூட்டுமலை, கஸ்தூரி ரெங்கபுரம், நடுவப்பட்டி ஆகிய ஊர்களில் ஒவ்வொரு ஆரம்பப்பள்ளி வீதம் 3 ஆரம்பப் பள்ளிகள் இப் பஞ்சாயத்துப் பகுதியில் உள்ளது. 3 பள்ளிகளிலும் நல்ல கட்டிட வசதிகள் உள்ளன. நடுவப்பட்டியில் உள்ள ப. யூ. பள்ளிக்கு கடந்த ஆண்டில் ரூபாய் 6000 செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

நாட்டின் விடுதலை பெற்றுத்தந்த மகான் காந்திஜீ கிராம சுகாதாரத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று கூறினார். "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்பது நமது பழமொழி. கிராம சுகாதாரத்தில் பஞ்சாயத்து கவனம் செலுத்தி வருகிறது. 2 கக்கூஸ்கள் ரூபாய் 650 செலவில் கட்டியுள்ளோம். 3 கிணறுகள் புதுப்பித்து, ரூபாய் 2000 வரை செலவிட்டுள்ளோம். 30 நீர் உறிஞ்சுக்குழிகள் போடப்பட்டுள்ளது தற்போது கஸ்தூரிரெங்கபுரத்தில் ஒரு குடிநீர் கிணறு வெட்டப்பட்டு வருகிறது. கழிவு நீர்த் தேங்காமல் இருக்க 1500 அடிநீளம் வார்கால் அமைத்துள்ளோம்.

போக்குவரத்து வசதி இன்று இன்றியமையாததாகி விட்டது தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலிருந்து 2 பர்லாங் ரோடு ரூபாய் 1700செலவில்போடப்பட்டுள்ளது. மூக்கூட்டுமலையில் தெருக்களுக்குச் சரள் விரிக்கப்பட்டது. ரூபாய் 330 செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டது. கஸ்தூரிரெங்கபுரத்தில் குளத்திற்கு தடுப்புச் சுவர் ரூபாய் 1000 செலவில் கட்டப்பட்டுள்ளது.

"கைத் தொழில் கெட்டுக் கலங்குதடி தேசம்
கைத் தொழிலின்றிப் புலம்புதடி
கைத் தொழில் தம்மை விருத்தி செய்தாலந்த
கண்ணுடை தேவியும் கண்விழிப்பாள்"

என்று கைத தொழிலின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது. கதரும் கிராமக் கைத்தொழில்களுமே இந்நாட்டின் ஆதாரம் எனக் காந்திஜி முழங்கினார்.

"தன்னரசளிப்பது ராட்டினம் ஆகும்
தரித்த தனைக் கையால்
தாழா நொடியுஞ் சுழற்றுகவென்னச்
சாற்றினார் காந்திஜி"

இதற்கேற்ப 300 இராட்டைகள் வரை இங்கு வழங்கப்பட்டு நூற்பு வளர்ச்சியடைந்து வருகிறது. கஸ்தூரிரெங்காபுரத்தில் ஒரு கிராமக் கதர் நிலையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. கிராமக் கைத்தொழில்கள் விருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

வாழ்க்கை முறைபற்றி தெரிந்து தெளிய ஒரு சமூகக் கல்வி நிலையம் இங்கு செயல்படுகிறது. ரூபாய் 500 செலவில் நடுவப்பட்டியில் ஒரு வாசகசாலையும் ரூபாய் 4000 செலவில் கஸ்தூரிரங்கபுரத்தில் ஒரு சமுதாய மண்டபமும் கட்டியுள்ளோம். இரு ரேடியோக்கள் இயங்கி வருகின்றன. குழந்தைகள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இரு இளைஞர் விவசாய சங்கங்கள் நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

எல்லாம் செய்தோம்; இன்னும் வேலை இல்லாதோருக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டாமா?

"வேலை இல்லா திண்டாட்டம் ஒழிய
வேண்டும்-
வெற்றியின் மேல் வெற்றி நமக் கெய்த
வேண்டும்.
தரும நெறி தவறாது தழைக்க வேண்டும்.
சாதி மதச் சண்டை யெல்லாம் ஒழிய
வேண்டும்"

என கவிமணி தே. வி. அவர்கள் கூறியதற்கிணங்க எங்கள் கிராமம் ஆக்க வேலைத் திட்டம் கண்டது. வேலை இல்லாத் திட்டம் ஒழியக்கண்டது 28—4—61 அன்று எங்கள் யூனியன் தலைவர் சீர் பெருஞ் செம்மல் திரு. எஸ். சங்கரப்ப நாயுடு அவர்கள் இத்திட்டத்தை துவக்க வெற்றி நமதே என்று கமிஷனர் திரு. எஸ். நம்பி அவர்கள் வாழ்த்துக் கூற

"ஒன்று சேர்ந்துழைத் திடுவோம்
ஊருக்கு நல்லது செய்திடுவோம்"

என்ற எங்கள் கிராம அபிவிருத்திக் கமிஷனர் கோ. வெங்கிடாசலபதியின் கருத்தினைக் கவிதையாக்கி செயலாற்றத் தொடங்கினார்கள் எங்களூர் வாசிகள் இதன் மூலம் 2 பர்லாங் தூரத்தில் ஒரு ரோடு போட்டு சரள் பரப்பினோம். ஒரு ரோடு ரிப்பேர் செய்தோம். ஊரணியை ஆளப்படுத்தி கரை செப்பனிட்டோம்.

விளையாட்டிடம் சமப்படுத்தி அமைத்தோம். 100 மரங்கள், பலாவும், மாவும் புளியும், வேம்பும் வைத்து வளர்த்து வருகிறோம் இவ்வாறு காந்திஜி கண்ட கிராமராஜ்யத்தை நிர்மாணிக்கப் பாடுபட்டு வருகிறோம்,

பாங்குடைய பாரதத்தாய்
பெற்றெடுத்த காந்தி யெழிற்
பாதமலர் மாமுடியிற் சூடி—அவர்
பகர்ந்ததொரு போறத்தை நாடி
பணிபுரிய வாரீர்!! எனக் கேட்டுக்கொள்கிறேன்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

நன்றி!



# சாயமலைப் பஞ்சாயத்து.

திரு. P. C. தலைவர்,
தலைவர்.

"பிணியின்மை செல்வம்
விளைவின்பம் எமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

நம் நாடு செழிப்புற நம் கிராமங்கள் செழிப்படையவேண்டும். நம் கிராமங்கள் செழிப்புற நம் விவசாயம் செழிக்க வேண்டும். நம் விவசாயம் செழிப்புற நாம் திருந்திய சாகுபடி முறைகள் மேற்கொள்ள வேண்டும். வயலுக்கு சத்துதரும் உரங்கள் இடவேண்டும். பொறுக்கு விதைகள் உபயோகிக்கவேண்டும். பயிர்பூச்சிகள் வராமல் காக்கவேண்டும். இதெல்லாம் செய்ய தேவையான பணவசதியை கிராம வாரியாக முன் கூட்டியே நிர்ணயித்து கிராம உற்பத்தி திட்டத்தை வகுத்து அதற்கேற்ப கடன் வசதிகளை அரசாங்கத்தின் மூலமாகவோ, கூட்டுறவு ஸ்தானங்கள் மூலமாக அதிகச் சிரமமின்றி கிடைக்கச் செய்ய வேண்டும். கிராமத்தில் புதிதாக கிணறு வெட்டுவது, ஏரி, கால்வாய் வெட்டுதல், இவ்வாறான அபிவிருத்திகள் தனிப்பட்ட நபரிடம் ஒப்புவிக்காமல் அந்தந்த பஞ்சாயத்தின் மூலமாகவோ, சங்கத்தின் மூலமாகவோ செய்யப்பட்டு அந்த சிலவு சம்மந்தமான கணக்குகளை சம்மந்தப்பட்ட தனி நபருடனோ ஸ்தாபனத்துடனோ தீர்த்துக் கொள்ள வழி வகுக்கவேண்டும். விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் உரம் வாங்குவதற்கான கடன் எல்லாம் பொருள் ரூபமாகக்கிடைக்க ஏற்பாடு செய்வது நல்லது. கூட்டுக் கிராம ஆட்சி முறையில் எல்லா முக்கியவேலைகளும் பொருள் ரூபமாகவோ சேவை ரூபமாகவோ செயலாற்றும் பக்ஷத்தில் கிராமத்தில் ஐக்கியத் தன்மை வளரும், வேலை வாய்ப்புகளுக்கு பஞ்சாயத்தின் மூலம் நிரந்தர ஏற்பாடும் செய்யலாம். இக்கருத்துகள் நடைமுறையில் வருவதற்கு சற்றுகாலம் செல்லக்கூடும் எனினும் இந்த முறையில் செயலாற்றினால் நன்மை பயக்கும் என்பது தெளிவு. இக்காலத்தில் விவசாயியின் முக்கிய சிரமம் யாதெனில் கடன்வசதி பெற்ற பின்பும் அதன் நோக்கத்தை நிறைவேற்ற முயலாமல் தவிப்பதுதான். உதாரணமாக உரப் பொடிக்கு பணவசதி கிடைத்தாலும் உர உப்புகள் கிட்டுவதில்லை. கிணறு வெட்ட பணவசதி கிடைத்தாலும் அதற்கு வேண்டிய ஆட்கள் கிடைப்பதில்லை. கற்கள் கிடைப்பதில்லை, சிமிண்டு கிடைப்பதில்லை முதலியன. ஆகவே இது சம்பந்தமாய் எல்லா சேவைகளையும் நிறைவேற்ற பிரத்தியேக ஸ்தாபனமாக ஒரு ஏஜென்ஸி இயங்கும் பக்ஷத்தில் ஷை சேவையை உடனே நிறைவேற்றச் செய்து கடன் தொகைகளில் ஈடு செய்துகொள்ள ஏற்பாடு செய்யலாமல்லவா? ஆகவே கிராமத்தின் சுபிட்சத்தில் கருத்துமட்டும் உண்மையாகவே ஒருமித்து விட்டால் கிராமத்தில் இயங்கும் ஒவ்வொரு காரியங்களிலும் ஒரு பொதுத்தன்மை மிளிரும் என்பதில் சந்தேகமில்லை ஒவ்வொரு கிராம வாசியும் ஒரு பொது காரியத்திற்கு உதவியவராவார். கிராம சுயதேவைபூர்த்தி என்பது மகாத்மா காந்தியடிகள் போதித்துவந்த சர்வோதயக் கொள்கையில் ஒன்றாகும். இது சம்மந்த ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் கிராமத் தலைவர்களும் சீரயோசித்து ஒரு நல்ல வழி வகுக்க உதவி செய்தல் நலம்.

இனி எங்கள் கிராமத்தைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்

எங்கள் கிராமம் மிகப்புராதன நகரங்களில் ஒன்றாய் இருந்ததாகும். சுமார் 800 வருடங்களுக்கு முன் கட்டியுள்ள ஒரு இந்துக்கோவில் இன்னமும் இருக்கிறது இதில் அநேக சிலாசாசனங்களும் கல்வெட்டுகளும் சிற்ப விசித்திரங்களும் காண்கின்றன. சரித்திரப்புகழ் பெற்ற மங்கம்மா சாலை எங்கள் கிராமம் வழியாகத்தான் மருதங்கிணர் – மகேந்திரவாடி – நாலுவாசன் கோட்டையை இணைக்கும்பாதையில் அமைகிறது சாயமலை என்பது எங்கள் கிராமத்தையடுத்துள்ள ஒரு குன்று. இதில் பல குகைகளும் உள. வெகு ஆண்டுகள் வரை இதை வாசஸ்தலமாக கொள்ளைக்கூட்டத்தினர் கொண்டிருந்தனர் என்றும் சொல்வார்கள். எங்கள் பஞ்சாயத்தில் சுமார் 363 எக்கர் நஞ்சையும் 1264 எக்கர் புஞ்செய்யும் உண்டு. மொத்த ஜனத்தொகை சுமார் 3176ல் 1820 பேர்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள். சுமார் 100 பேர் சுண்ணாம்புக் கல்வெட்டும் தொழில் செய்கிறார்கள். சுமார் 6 குளங்களும் 385 இறவைக் கிணறுகளும்தான் பாசனவசதியாகும், எங்கள் பஞ்சாயத்து சுமார் 10 சதுர மைல்கள். ஆகவே பெரும்பாலும் நிலங்கள் இன்னும் உழவுக்கு வராமலும் மானாவாரியாகவுமே இருக்கின்றன. எனவே எங்கள் திட்டங்கள் நிறைவேற்ற அதிகப்படியான அளவில் கிணறுகள் வெட்டியும், பணவசதிகள் செய்து கொடுத்தும் விவசாயிகளை முன்னுக்குக் கொண்டு வர வேண்டியதிருக்கிறது. இங்கு கிராம மக்களின் பொருளாதாரம் மிகவும் தாழ்ந்திருக்கிறது. நிலமில்லாத மக்கள் அநேகர். இப்பொழுது செயல்பட்டிருக்கும் முழுக் கடன் திட்டத்தின் சலுகைகளை நன்கு உபயோகித்து தகுந்த ஜாமின்பேரில் நிலமில்லாத, குத்தகைக்கு உழும் விவசாயிகளுக்கு பணம் கொடுத்து உதவ நடப்பு ஆண்டில் திட்டமிட்டிருக்கிறோம்.

ஆகவே எங்கள் பஞ்சாயத்திற்கும் கூட்டுறவு நாணய சங்கத்திற்கும் அதிகப்பொறுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இதுவரைக்கும் நாங்கள் மேற்கொண்ட பணிகளில் கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் செய்த சாதனைகள் பின்வருமாறு:-

சுமார் 250 கம்போஸ்ட் குழிகள் உரம் தயாரித்திருக்கிறோம். 10டன் உரஉப்புகள் விநியோகித்திருக்கிறோம், 200 பவுண்டு பூச்சி மருந்து உபயோகித்தும் 15 நேரிடை விளக்கங்கள் செய்தும் நவீன விவசாயக் கருவிகள் வழங்கியும் திருந்திய விவசாய முறைகளைப் புகுத்தியிருக்கிறோம்.

கால்நடை வைத்தியம் ஒழுங்காகக் கொடுத்து வருகிறோம். 14 ஜாதிச் சேவல்களும், 11 செம்மறி கிடாய்களும் மாற்று முறையில் விநியோகித்திருக்கிறோம். 2000 உயர்தர மீன் குஞ்சுகள் விநியோகித்திருக்கிறோம். கடந்த ஆண்டுகளில் 16 புதுக் கிணறுகள் கட்டுவித்தும், 15 பழைய கிணறுகளை செப்பனிட்டும் வந்திருக்கிறோம். சுமார் 60 மின்சார பம்பு செட்டுகள் வரை நிறுவியிருக்கிறோம்.

சுகாதார வசதிகளில் கடந்த ஆண்டுகளில் 44உறிஞ்சுகுழிகள் கட்டப்பட்டன. 15 கிராமக் கக்கூஸ்கள் கட்டப்பட்டன. 11 குடிதண்ணீர் கிணறுகள் கட்டப்பட்டன. 5 பழைய குடி தண்ணீர் கிணறுகள் செப்பனிடப்பட்டன.

கல்வியம்சத்தில், 1 வாசகசாலையிருக்கிறது. 2 வாலிபர் முன்னேற்ற சங்கத்தையும் ஆரம்பித்தோம். 1 விவசாயிகளின் யூனியனும் ஆரம்பிக்கப்பட்டன. 6 ஆரம்ப பள்ளிகளும் ஒரு உயர்தர ஆரம்பப்பள்ளியும் உள்ளன. சுமார் 420 மாணவர் கல்வி கற்கின்றனர்.

சுமார் 2½ மைல்தூரம் ரோடு செப்பனிட்டிருக்கிறோம். ஒரு பாலம் கட்டுவித்திருக்கிறோம். மனமகிழ் மன்றம் ஒன்றும் கட்டியிருக்கிறோம்.

காதி இயக்கமும் வலுவடைந்துள்ளது. எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நாணயசங்கமும் செயல்பட்டு வருகிறது. தொழில்வளத்தில்தோல்பதனிடும் குழிகள் அமைக்க முறையே ரூ. 200 மான்யம் 3 பேர்களுக்கு அளித்திருக்கிறது ஒருவருக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. ஒரு சுண்ணாம்புக் காளவாய் தொழில் யூனிட் அமைக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பஞ்சாயத்து ராஜ்யத்தின் முக்கிய அம்சங்களில் உணவு உற்பத்தியும் குடும்பக் கட்டுப்பாடும் ஆகும். முன்னதில் மகத்தான வெற்றி கண்டிருக்கிறோம் பின்னதில் நமது வட்டாரத்திலேயே எங்கள் பஞ்சாயத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 8பேர்கள் வரை அறுவைசிகிச்சைக்கு அனுப்பினோம்.

நமது நாட்டின் ஜனப்பெருக்கத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். கடந்த பத்து ஆண்டுகளில் மட்டும் 25 சதவிகிதம் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. இந்தக் கணக்கில் இன்னம் 30 ஆண்டுகளில் ஜனத்தொகை இரட்டிப்பு ஆகிவிடும் ஆனால் அதற்கேற்ப சாகுபடி நிலங்களோ, விவசாய உற்பத்தி இரட்டிப்பு ஆவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே நாடு கடும் பஞ்சத்திற்கு உள்ளாக நேரிடலாம் எனவே அளவான குடும்பம் வைத்துக்கொண்டு நன்முறையில் வாழ ஒவ்வொருபடித்த ஆணும் பெண்ணும் தெரிந்து கொள்ளவேண்டும் இதற்காக அரசாங்கம் இலவச வைத்திய உதவி, உபரித்தொகை கொடுத்து ஊக்குவிக்க வந்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. தவிரவும் குடும்பகட்டுப்பாடு என்பது ஏதோ புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட விஷயம் அல்ல. பழைய காலத்தில் ஐ. ஸி. எஸ். படித்த பெரியகலெக்டர்களும் துரைமார்களும் தங்கள் பதவிக் காலத்திலே அளவான குடும்பத்தைப்பெற இதே வைத்திய சிகிச்சைபெற ரூ. 500, 1000 அளவில் கட்டணம் செலுத்தி வைத்தியஉதவி பெற்றார்கள். ஆனால் தற்காலத்திலோ அதே சிகிச்சைக்கு தனிப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் இலவச சிகிச்சையும் உபரிதொகையும் கொடுத்து ஊக்குவிக்கிறது. ஏனெனில் நமது அரசாங்கம் கேவலம் அந்நியர் ஆட்சி அல்ல; அது ஒரு சேமநல அரசாங்கம். எனவே மக்களுக்கு பலவிதத்திலும் அறிவூட்டி நவீன மருத்துவமுறைகளை பயில்வித்து பொருளாதாரமேம்பாடு அடையச்செய்ய பெரும்பாடு பட்டிருக்கிறது. எல்லா மக்களுக்கு இதை நன்கு மனதில் வைத்து குடும்பக் கட்டுப்பாடு யோசனை வரவேற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இனி வருங்காலத்தில் பஞ்சாயத்து ஆட்சி மேன்மேலும் வளர்ச்சி பெற்று ஒரு கிராம க்ஷேம நல பஞ்சாயத்தாகத் திகழ எல்லாம் வல்லஇறைவன் அருள்புரிவாராக.

*வாழ்க நம்நாடு!*


குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன்

இரண்டாண்டு நிறைவு விழாவிற்கு

**எனது நல் வாழ்த்துக்கள்.**

**V. வீராசாமி,**
**கண்ட்ராக்டர்**
**ஆலடிப்பட்டி,**
**திருவேங்கடம் வழி.**


# குடும்பக் கட்டுப்பாடு.


**By. Captain T. V. K. . IYENGAR,**
*Medical Officer,*
*Primary Health Centre*
KURUVIKULAM.


மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் உலகத்திலே அப்போதைக்கப்போது ஏற்படக் கூடிய மாறுதல்களுக்குத் தகுந்தவாறு அவரவர்கள் தங்கள் வாழ்வை சீர்படுத்திக் கொள்ளாவிட்டால் அவசியமில்லாமல் பல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இப்போது உலக ஜனத்தொகையே வெகு அதிகமாக இருக்கிறது. அதிலும் நமது இந்தியாவில் மிக அபாயகரமான நிலையில் ஜனத்தொகை நெருக்கடியாகவும், அதிகமாகவும் இருக்கிறது.

பெனிஸிலின், செப்டோமைசின் போன்ற புதிய மருந்துகள் கண்டுபிடித்ததின் மூலம் ஜனங்களின் இறப்பை அதிகமாக குறைத்து விட்டது. ஆனால் அதற்கு தகுந்தவாறு பிறப்பு விகிதாசாரத்தை குறைக்கவில்லை. தற்பொழுதிருக்கும் பொருளாதார நெருக்கடி குடியிருக்க போதுமான வசதியில்லாததாலும், உணவு பற்றாக் குறையினாலும். நாம் பிறப்பு விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தமும். அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு என்றால் தாம்பத்திய உறவை இல்லாமல் செய்வதல்ல. ஆனால் வேண்டும்போது குழந்தைகளை பெறச் செய்வது ஒருகுழந்தைக்கும், மற்றொருகுழந்தைக்கும் பெறுவதற்குண்டான இடைக்காலத்தை நீடித்திருக்கச் செய்தல். குடும்ப வாழ்க்கையில் தாம்பத்திய உறவை குறைக்காமல் கர்ப்பம் தரிக்காமல் பாதுகாத்துக் கொள்ளுதல், குடும்ப கட்டுப்பாடு செய்வதால் கீழ்க்கண்ட அனுகூலங்கள் உள்ளன.

1. தாய்மார்கள் உடல் நலம் நன்றாய் இருத்தல். அடிக்கடி வேண்டாத பல குழந்தைகளைப் பெற்று தாய் பல நோய்களுக்கு உள்ளாகி கஷ்டப்படுவதை தடுத்தல்.

2. வேண்டும் போது குழந்தைகளை பெற திட்டம் போடுதல். இப்படி செய்வதால் தன்னுடைய உடல் நிலையையும், குழந்தையின் உடலையும் நல்லவிதமாக வியாதி இல்லாமல் வளர்க்க ஏதுவாயிருக்கும்.

3. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டினால் தேசத்தில் கிடைக்கக்கூடிய வசதிக்கு தகுந்தவாறு ஜனத்தொகையை கட்டுப்படுத்தல்.

மேற்கண்டவாறு செய்வதினால் ஒவ்வொரு குடும்பமும் அவர்கள் குழந்தைகளை நன்றாகவும், வசதியாகவும், நல்ல பிரஜைகளாகவும் ஆக்குவதற்கு உதவும்.

குடும்பக்கட்டுப்பாடு என்பதை பற்றி சிலர் மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உண்மை அப்படியல்ல. எந்த ஒரு மனிதனும் அவனவனுடைய அவசியத்தின் நிமித்தம் வாழ்வை மாற்றியமைத்துக் கொள்வதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். அப்படியிருக்க பூமியே தாங்கமுடியாத ஒரு நிலையில் அதிவிரைவில் வாயுவேகம் மனவேகமாக அபரிமிதமான பிறப்புக்கள் விரிந்து கொண்டே போகின்றன. ஆகையால் இந்த பிறவி பெருக்கத்தை தடுக்க வேண்டியதும், கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதைக் கட்டுபடுத்திதான் ஆக வேண்டும். இந்த நிலை-ஒரு இயற்கையான நிலைதான் என்ற பொருள். ஆகவே குடும்பக் கட்டுப்பாட்டை போதிய சிரத்தையுடன் நடத்திக்காண்பித்தால் அதுவேகடவுளுக்கு நாம் செய்யும் நல்ல பணி.

மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக நமது அரசாங்கம் பல துறைகளிலும் ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் இந்த குடும்பக் கட்டுப்பாடு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இதற்கான குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இருக்கின்றன. அங்குள்ள மருத்துவ அதிகாரியிடம் குடும்பக் கட்டுப்பாடுக்குண்டான விபரங்களை நன்கு கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்

கருத்தடைக்கான முறைகள் 8 கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. கருத்தரி நாள் கூடா விரத முறை.
2. கணவன் கவனம்.
3. எளிய கருத்தடை.
4. அணு மருந்திடல்.
5. ஆண் உறை அணிதல்.
6. பெண் உறை அணிதல்
7. ஆண் உறுப்பு தையல் முறை.
8. பெண் உறுப்பு தையல் முறை.

முதல் 6 முறைகளையும் நல்ல முறையில் கவனத்தோடு செய்தால் நல்லது.

ஆனால் நடைமுறையில் எவ்வளவு கவனம் வேண்டுமோ அவ்வளவு கவனம் செலுத்த முடியாமல் போய்விடுகின்றன. தற்சமயம் ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியில் நமக்கு வேண்டியஅளவு உறுதியாகவும், பரிபூரணமாகவும், வெற்றியாகவும்இருப்பது அறுவை சிகிச்சை தான்.

ஆனதால் எல்லா முறைகளையும் விட இந்த அறுவை சிகிச்சை தான் மிகச் சிறந்ததும், நிச்சயமானதும். இந்த ஆண்அறுவை முறையை எல்லா ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பெறலாம். அப்படி சிகிச்சை பெறுவோருக்கு சிகிச்சை முடிந்த உடன் ரூ. 30 இனமாகக் கொடுக்கப்படும். அறுவை சிகிச்சையினால் ஒரு கெடுதலும் ஏற்படாது அனுவசியமாக ஒருவரும் பீதி அடைய வேண்டாம்.

பெண்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தக்க காலம் குழந்தை பிறந்த 3 நாளைக்குள் செய்வது நலம். அறுவை சிகிச்சை நடந்த பிறகு 6 வாரம் கண்டிப்பாக தாம்பத்திய உறவு இருக்கக் கூடாது, அப்படியிருந்தால் ஒரு வேளை கர்ப்பம் தரிப்பதற்கு ஏதுவாகலாம். அதனால் தான் 6 வாரம் தனித்தனியாக பிரிந்திருக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு வெற்றிகரமாக செய்வதற்கு உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பை வேண்டிக்கொள்கிறேன்.


குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன்
ஆண்டு விழாவிற்கு
**எங்கள் நல் வாழ்த்துக்கள்.**

குறித்த காலத்தில் நல்லமுறையில் எங்கள் ஜின்னிங் பாக்டரியில் பருத்தி அரைத்துக் கொடுக்கப்படும்.

**P. ஜோசப்,**
**ராஜபுஷ்பம் ஜின்னிங் பாக்டரி**
**கழுகுமலை.**




# புளியங்குளம் பஞ்சாயத்து.

**திரு. P. N. துரைராஜ் நாயக்கர்,**
**தலைவர்.**

1—9—55ம் வருடம் புளியங்குளம் பஞ்சாயத்து ஏற்பட்டு, பிரசிடெண்ட் பி என். துரைராஜ் நாயக்கர் மற்றும் 6 மெம்பர்களும் தேசீய விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். அன்று முதல் இப் பஞ்சாயத்து நடைமுறையில் இருந்து வருகிறது.

இரண்டாவது முறை தேர்தல் நடந்தது. 9-7-59ல் நடந்த தலைவர் தேர்தலில் தலைவர் பி. என். துரைராஜ் நாயக்கரே மீண்டும் தலைவர் உள்பட மெம்பர்கள் 9 பேர். 1960ம் வருடம், அக்டோபர் மாதம் 2ந் தேதி பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டு குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனின் கீழ் இப்பஞ்சாயத்து செயல்பட்டு வருகிறது. பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்ட பிறகு, இப்பஞ்சாயத்திற்கு பெண் மெம்பர் ஒருவர் கூடுதலாகச் சேர்க்கப்பட்டார்.

இப்பஞ்சாயத்து, கிராம குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்துள்ளது. குடிதண்ணீர் கிணறு ஆழப்படுத்தப்பட்டு போதுமான தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேல்நிலைத் தண்ணீர் தொட்டி சாங்ஷன் ஆகி இருக்கிறது. ஹரிஜனங்களுக்கென்று இரு புதுக்கிணறுகள் வெட்டப்பட்டது, பழைய கிணறு ஒன்று ஆழப்படுத்தி, புதுப்பிக்கப்பட்டு, போதிய தண்ணீர் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜில்லா போர்டு சாங்ஷனில் பெருவழித்துறை மூலம் கோவில்பட்டி-பருவக்குடி ரோட்டிலிருந்து 1¼ மைல் இணைப்பு ரோடு போடப்பட்டு சரள் விரிக்கப்பட்டுள்ளது. ஊருக்குள்ளும் தெருக்கள் சமன் செய்யப்பட்டு சரள் விரிக்கப்பட்டுள்ளது. விளக்கு வசதிகள் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளன. 15 மின்சார விளக்குகள் தெருக்களில் போடப்பட்டுள்ளது.

'காவியம் செய்வோம்'
'கலை வளர்ப்போம்'

என்று பாரதியார் கூறியுள்ளார்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதை விட ஏழைக்கு கல்வி கற்பித்தல் சிறந்தது எனவும் அவர் கூறியுள்ளார். அதற்கிணங்க எங்கள் ஊரில் ஆரம்பப் பள்ளி இயங்கி வருகிறது. பள்ளிக் கட்டிடம் ரூபாய் 4000 செலவில் சமுதாய நலத் திட்டத்திலிருந்து கட்டப்பட்டுள்ளது. இது தவிர ஊர்வாசிகள் மனமுவந்தளித்த கட்டிடமும் உள்ளது. எங்களூரில் தற்போது உயர் ஆரம்பப் பாடசாலையாக உயர்த்தப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வி அமுலுக்கு வந்து செவ்வனே நடத்தப்பட்டு வருகிறது. 6 ஆசிரியர்கள் வரை நல்ல முறையில் பணி புரிகிறார்கள்.

வீடு கட்டும் திட்டம் அரசாங்க மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குரிய சர்வே மற்றும் இதர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கம்போஸ்ட் உரக்குழிகள் மூலம் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்பட்டு வருகி

றது. விவசாய உற்பத்தியை பெருக்க திட்டமிட்டு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

பலவகை மரங்கள், சுமார் 150 வரை வைத்து பாதுகாத்து வருகிறோம். மாதம் ரூபாய் 30 சம்பளத்தில் ஒரு ஆள் நியமிக்கப்பட்டு வருகிறது. இதற்கு யூனியனிலிருந்து மான்யமாய் மாதம் ரூபாய் 20ம், பஞ்சாயத்திலிருந்து ரூபாய் 10ம் அளிக்கப்படுகிறது.

கூட்டுறவு நாணய சங்கம் 1953ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. பஞ்சாயத்துத் தலைவரான திரு. பி. என். துரைராஜ் நாயக்கரே கூட்டுறவு சங்கத்திற்கும் தலைவராயிருந்து நல்ல முறையில் சங்கத்தை அபிவிருத்தி செய்து வருகிருர். ரூபாய் 45000 வரை லேவாதேவியைப் பெருக்கி, 200 மெம்பர்கள் வரை பயனடைந்து வருகிருர்கள். இச்சங்கத்திற்கு ரூபாய் 14,100 மதிப்பீட்டில் ஒரு தானியக் கிட்டங்கி கட்ட சாங்ஷன் ஆகி, வேலை துரிதமாய் நடைபெற்று வருகிறது. இச்சங்கத்திற்கு சிறப்புப் பரிசு கிடைக்குமெனவும் நினைக்கிறோம்.

பஞ்சாயத்து இவ்வாறு ஊர் நலன் கருதி பலவித வேலைகளையும் செய்து வருகிறது- இன்னும் பெரும் காரியங்களை ஆற்ற திட்டமிட்டிருக்கிறது.


தந்தி: "நர்ஸரி" ஸ்தாபிதம் 1913 தபால் பெட்டி நி. 17

சர்க்கார் அங்கீகாரம் பெற்றதும், சென்னையில் நடந்த அகில இந்திய மாம்பழக் கண்காக்ஷியிலும், 8—4—1961ல் கோவையில் நடந்த மாகாண திராக்ஷைப் பழக் கண்காக்ஷியிலும் முதற் பரிசாக வெள்ளிக் கோப்பைகளையும் மற்றும் பல நற்சாக்ஷி பத்திரங்களையும் பெற்றது.

எங்கள்

## ரஹ்மானியா நர்ஸரி கார்டன்ஸ்

### திருநெல்வேலி-1

நாங்கள் தரத்தில் சிறந்ததும், கவர்ச்சி நிறைந்ததும் மனதிற்குகந்தமான பல ஜாதி ஒட்டு மாங்கன்றுகளையும் மற்றும் தென்னை, மாதுளை, பலா எலுமிச்சை போன்ற பலவித ஜாதி பழக்கன்றுகளும், எல்லாவிதமான காய்கறி விதைகளும், பூச்செடி விதைகளும், கண்கவர் குரோட்டன்ஸ்களும் மிகக் குறைந்த விலையில் சப்ளை செய்துவருகின்றோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வழக்கம்போல 1962-63க்கும் எங்கள் நர்ஸரி சர்க்கார் அங்கீகாரம் பெற்றுள்ளது.

தங்கள் ஆதரவை அன்புடன் எதிர்பார்க்கும்

**Rahmania Nursery Gardens**

Madhurai Road

**TIRUNELVELI-1.**




# குலக்கட்டாகுறிச்சி பஞ்சாயத்து.


திரு. G. அய்யப்ப நாயக்கர்,

தலைவர்.


நம் நாடு 1947ல் சுதந்திரம் பெற்றது. இதற்குப்பின் நாம் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களை இயற்றி செயல் புரிந்தும் காட்டி விட்டோம். இப்பொழுது மூன்ருவது ஐந்தாண்டு திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது, இப்படித் திட்டங்கள் போட்டுத்தான் வேலை செய்ய வேண்டுமா. திட்டம் திட்டம் என்று வாழ்நாள் முழுவதும் எதற்கெடுத்தாலும் 'திட்டம்' இயற்றிவந்தால் என்ன பயன் என்று சிலர் பரிகசிக்கிருர்கள். இது சரியல்ல இதற்கு ஒரு சிறு உதாரணம் சொன்னல் பொருத்தமாயிருக்கும். ஒரு நபருக்கு வரக்கூடிய ஊதியம் ரூ. 100 வரையில் உள்ளது என்று வைத்துக்கொள்வோம். ஆனல் அவருக்கு செலவழிக்க வேண்டிய பகுதிகள் உணவு, உடை, குடிக்கூலி, கொடுக்கவேண்டிய பாக்கிகள், பல விதப்பட்ட ஓய்வு நேரத் தேவைகள் முதலானவை. இவற்றையெல்லாம் கொடுத்து விடவேண்டுமென்ருல் அவருடைய ஊதியம் அரைவாசி கூட காணது. எனவே, பலத்த யோசனை செய்து இந்த மாதம் என்னென்ன செலவுகள் செய்வோம், புதுஆடை வாங்குவது அடுத்த மாதம் வைத்துக்கொள்ளலாம் என்றே அல்லது வேறு எந்த புதிய அம்சத்தையாவது தள்ளிப் போட்டோ, குறைத்தோ, ஓரளவில் தான் வரவு செலவு திட்டத்தை ஒழுங்கிட வைத்துக்கொண்டால்தான் அன்ருடம் வாழ்க்கை என்று போகாமல் நடந்து கொண்டிருக்கும். இதே மாதிரிதான் நம் நாட்டு வரவு செலவு கணக்குகளும் பல தேவைகளிலிருந்து, பற்றாக்குறை வருமானமும் இருந்துவிட்டால் நாட்டின் அவசர வசதிகளுக்கேற்ப திட்டமிட்டு முன்னேற வேண்டியது தான். தேவைகளின் அவசரத்தையும் கிடைக்கக் கூடிய வரவு இனங்களையும் கொண்டு சாஸ்த்ரீயமுறை திட்டங்கள் தீட்டி நலன் காண்கிறோம். இதில் மற்றொரு நன்மையாதெனில், நடைமுறையில் திட்டங்கள் செயல்படும் போது திட்டத்தின் செயல் முறை அம்சங்களிலுள்ள குறைகளைக் கண்டு நிவர்த்தி காண ஏதுவாகிறது.

நமது ஐந்தாண்டு திட்டங்களின் முக்கிய அம்சம் என்னவெனில் அது மக்கள் தீட்டிய திட்டமாகும் மக்களின் தேவைகளை மக்களே நிர்ணயித்து, மக்கள் நலனுக்காக மக்களைக் கொண்டு நடத்தப்படும் திட்டம். அன்னியர் ஆட்சியில் இதற்கு முக்கியத்துவம் இல்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் சொந்த நலனுக்கு தங்கள் நாட்டிற்கு, தங்கள் சமுதாயத்திற்கு எது தேவையோ, அதை எம்முறையிலேனும் எந்த ஒரு பகுதியிலேயிருந்தும் பெற்றுக் கொண்டார்களே தவிர பொன் முட்டையிடும் வாத்துவை பராமரிக்க வேண்டும் என்றஎண்ணமே கொள்ளவில்லை.

முக்கியமாக விவசாய விஷயத்தில் நமது அரசாங்கம் தற்போது செய்துவரும் முயற்சிகள் பத்தில் ஒரு பங்காவது "அந்த காலத்தில்" எடுத்திருந்தார்களானல் நம் விவசாயம் அப்பொழுது அவ்வளவு சீர் குலைந்திருக்காது. அன்னியர்கள் ஆண்டபோது அவர்கள் வரப்பைக்கட்டவில்லை. தூர்த்து

போன கால்வாய்களை செப்பனிடவில்லை. ஏதோ ஒரிரு நதிகள் ஆறுகளில் உள்ள தண்ணீரும் கடலில் கலந்து வெறும் உப்புநீராக்கிக்கொண்டிருந்தது. இப்பொழுது எங்கு பார்த்தாலும் அணைக்கட்டு திட்டங்களிட்டு பாசன வசதிகளைப் பெருக்கி லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. பொறுக்கு விதைகளிட, தேர்ந்த ரஸாயன உரஉப்புக்களிட கம்போஸ்ட் என்ற இயற்கை உரம் தயார் செய்ய. நவீன விவசாயக் கருவிகள் வழங்க புஞ்சை நிலங்களுக்கு பாசனத்திற்கு புதுக்கிணறுகள் வெட்ட இப்படிப் பலவித உதவிகளிலும், அரசாங்கம் மானியம் கொடுத்தோ குறைந்த வட்டியில் கடன் துகைகள் வழங்கியோ விவசாயத்திற்கு ஊக்குவிக்கப் பல வழிகளும் செய்திருக்கிறார்கள். இவை சம்பந்தமான வேலைகள் பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன, இம்மாதிரி விவசாய மானியங்களாவன:

1) விறகு, தீவனம், பசுந்தழை உரம், பழம் தரும் மரங்கள் முதலியன உற்பத்தி. (வாழையைத் தவிர)

2) கலவை எரு தயாரித்தல் சமுதாயக்கலவை எரு தயாரிக்கும் இடங்களைப் பராமரித்தல்,

3) பசுந்தழை உரத்தைத்தயாரித்தல்

4) பயிர் பாதுகாப்பு சாதனங்கள் உபகாரணங்கள்.

5) மற்ற இனங்கள், கால்நடை பராமரிப்பு முதலியனவை. பஞ்சாயத்துயூனியன் மூலம் நடக்க வேண்டியவை.

ஆகவே விவசாயத்தையே கண்ணும் கருத்துமாக அரசாங்கம் கவனித்து வருகிறது. இதில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் முழுப் பொறுப்புடன் பணிசெய்யவேண்டும்

அடுத்தப்படியாகக் கல்வி. குழந்தைகளை பள்ளிக்கு வரும்படி செய்வதில் ஊக்கமளிப்பதற்காக மதிய உணவு திட்டம் கொண்டு வந்தது நமது நாட்டிலேயே சென்னை அரசாங்கம் தான் முதல். நமது மாநிலத்தில் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைவதாகச் [illegible]

கிராம வாசிகளுக்கு விவசாயம் மட்டிலுமே முழுநேர ஊதியத்தை தரவல்லது அல்ல எனவே தொழில் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து பாதி விலை சகாயத்தில் தொழிற்கருவிகள் விநியோகிக்கப்படுகிறது. மேலும் தொழிலில் முன்னேற்றம் காண தொழிற் கூட்டுறவுகள் அமைத்தும், விசேட பயிற்சிகள் அளித்தும் உதவி கொடுக்கப்படுகின்றன.

இவ்வாருகப்பல் வேறு துறைகளிலும் அரசாங்கம் வெகு பாடுபட்டு திட்டமிட்ட முன்னேற்றதை காண விழைகின்றனர். இதை கிராமரீதியில் பரிணமித்து ஒன்றுக்கொன்று இணைப்புடன் செயல்பட விடுவது பஞ்சாயத்தின் பொறுப்பும் சிறப்பும் ஆகும்.

இனி எங்கள் பஞ்சாயத்தின் சிறப்பு அம்சங்களைப்பற்றி ஒரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் கிராமம் குருவிகுளத்திலிருந்து 5 மைல் தூரத்தில் உள்ளது. கோவில்பட்டி பருவக்குடி ரஸ்தாவில் 14 வது மைலில் தெற்கே சுமார் 2 மைல் தூரத்திலுள்ளது. மழைகாலம் என்றுவிட்டால் எங்கள் கிராமத்திற்கு வருவது போவது மிகக்கடினம். சுமார் 1095 ஏக்கர் நிலங்களை சாகுபடி செய்திருக்கிறோம். பருத்திதான் முக்கிய மகசூல். அதுவும் அநேகமாய் மானாவாரிதான். எங்கள் நிலங்களை இன்னும் அபிவிருத்திசெய்ய அதிகப்படியாக கிணறுகளைத் தோண்டவும், உரங்கள் அதிகமாக இடவேண்டியதாயும் இருக்கிறது இப்பொழுது எங்கள் பஞ்சாயத்திலுள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் சுமார் 81 மெம்பர்கள் இருக்கின்றனர். முழுக்கடன் உதவிதிட்டம் அமுலுக்கு வந்துவிட்டமையால் இனி, குடும்பத்துக்கு ஒரு நபர் சங்கத்தில் சேர்ந்து ஒரு தீர்மானிக்கப்பட்ட உற்பத்தி திட்டத்தின்படி சாகுபடி செய்ய பணவசதி பெறமுடியும்.

கோழி அபிவிருத்தியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மிகுந்த முன்னேற்றம் செய்திருக்கிறோம். 2 கோழிப்பண்ணைகள் வைத்து 26 கோழிகளும் 4 சேவல்களும் உயர்ந்த ஜாதி முறையில் வழங்கியிருக்கிறோம்.

சுகாதார வசதிகளில் கடந்த இரு ஆண்டுகளில் மட்டும் 1000 அடி நீளமுள்ள சாக்கடைகள் கட்டியிருக்கிறோம். 15 உறிஞ்சு குழிகள் தயாரித்து இருக்கிறோம்.

எங்கள் ஊரில் ஒரு ரேடியோ நிலையம் உள்ளது. ஒரு சமூக கல்வி நிலையம் வைத்திருக்கிறோம். ரூ.100 மதிப்புள்ள தினசரி வார ஏடுகள் வாங்கிக்கொடுக்கிறோம்.

ஒரு ஆரம்பப் பள்ளியும் ஒரு உயர் ஆரம்பப்பள்ளியும் உள்ளன.

எங்கள் பஞ்சாயத்தின் மூலம் எங்கள் கிராமத்தை அபிவிருத்தி செய்யவும் குருவிகுளம் மைப்பாறை கிராமங்களுக்கு நல்ல சாலைகள் போடவும் முயற்ச்சித்து வருகிறோம்.

வணக்கம்!


எலும்புத்தூள் உற்பத்தி,
தோலுரிப்பு நிலையம்
குருவிகுளம்.

குறைந்த செலவு! அதிக மகசூல்!!

உரங்களில் சிறந்தது அவித்த எலும்பு உரமே!

பயிர்களுக்கு வேண்டிய மணிச்சத்தை கொடுப்பதுடன், பயிர்களை நோய் நொடிகளிலிருந்தும் காப்பாற்றுகிறது.

அவித்த எலும்பு உரத்தையே வாங்கி பயனடையுங்கள்.

அரிய சந்தர்ப்பம்! தேவைக்கு முந்துங்கள்!

கிடைக்குமிடம்:
பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், குருவிகுளம்.

விபரங்களுக்கு:
உங்கள் பகுதி கிராம சேவக்குகளை அணுகவும்.

# ஸ்ரீ முருகன் மேச் ஒர்க்ஸ்

**பழங்கோட்டை.**

அடைமழை காலத்திற்கு உத்திரவாதமுள்ள கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு தயார் செய்த "குமுதம்" தீப்பெட்டிகளையே உபயோகியுங்கள்.

உரிமையாளர்: S. சுப்பையா
ஸ்ரீ முருகன் மேச் ஒர்க்ஸ்,
பழங்கோட்டை.

ஸ்ரீ ராமஜெயம்.

போன் நிர். 54.

# S. S. ஜெகநாத நாயக்கர்

**கமிஷன் மளிகை,**
**சங்கரநயினர்கோவில்.**

மிளகுவத்தல், பருத்தி, சோளம் மற்றும் விவசாய விளைபொருள்களை நல்ல விலைக்கு குறைந்த செலவில் விற்பனை செய்து தருகிறோம். நல்ல கிட்டங்கி வசதி உண்டு.

T. N. சாமி நாயக்கர்
சங்கரன்கோவில்.

மணம் நிறைந்தது! ருசி உள்ளது!

# ஸ்ரீ ஜெயராம் காபி

ஸ்ரீ ஜெயராம் காபி பவுடரையே வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
M. S. அனந்தப்ப நாயக்கர்
திருவேங்கடம், (வழி) கோவில்பட்டி.

# ஸ்ரீ கோமதி மேச் பாக்டரி,

**சங்கரன்கோவில்.**

தரத்தில் உயர்ந்ததவையும் மழை காலத்திற்கு உத்திரவாதமுள்ள எங்கள் "ஜோடி மான்" பிராண்ட் தீப்பெட்டிகளை வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: N. K. S. தர்மலிங்க முதலியார்
ஸ்ரீ கோமதி மேச் பாக்டரி,
சங்கரன்கோவில்.




# வரகனூர் பஞ்சாயத்து.

**திரு. வி. சீனி நாயக்கர்,**
**தலைவர்.**

வண்மையிலே உளத்திண்மையிலே-மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்விலிலே யுயர்நாடு.

–என்று பாரதி போற்றிப் புகழ்ந்த பாரத நாடு சிறக்க வேண்டுமானால் கிராமங்கள் செழிக்க வேண்டும். கன்னலும், கதலியும் செந்நெல்லும் விளைவித்து தேனும், பாலும் பெருக்கெடுத்தோடச் செய்து, வற்றாத வளமும், குன்றாத செல்வமும் உடைய கிராமங்களை நாம் ஆக்கவேண்டும்.

சீர்பெற்றோம் சிறப்புற்றோம்
தீண்டுவார் யார் உளர் எம்மை?

என்று பெருமிதத்துடன் வாழ்ந்தோம்; இடையிலே அடிமையானோம் ஆங்கிலேயருக்கு; வறுமையுற்றோம்; வாழ்விழந்தோம்.

கொள்ளை கொள்ளை சிறையிருந்த
குறிகள் தோன்றும்
குலவு பிள்ளைச் சிதம்பரத்தை
நினைவு கூர்ந்தால்.

என நாமக்கல் கவிஞர் கூறிய செக்கிழுத்த செம்மல் வ. உ. சி. அவர்களின் சுதந்திர வேட்கையாலும்

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற லட்சியம் படைத்த அமரகவி பாரதியின் கவிதா சக்தியாலும்,

காந்திக்கு நிகர்வேறும் உண்டோ--மக்கள்
கண்கண்ட ஒரு தெய்வம் அன்றோ?

என்று போற்றப்பட்ட தேசப்பிதா மகாத்மா காந்திஜியின் ஒப்பற்ற முயற்சியாலும், இன்னும் நம் அறிய பெருந்தலைவர்களின் அரும் பெரும் பணியாலும் நாடு விடுதலை பெற்றது.

நாட்டின் விடுதலையோடு நம்பணி முடிந்து விட்டதா? சுதந்திர வாழ்வுகாண வழிவகுக்க வேண்டாமா! எல்லோருக்கும் ஆட்சியில் பங்குண்டு. அதுதான் மக்களாட்சி என்பதைச் செயல்படுத்த மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபைகள் மக்கள் நல்வாழ்வுக்குத் திட்டங்களும், சட்டங்களும் தீட்டின. அதுதான் மக்கள் திட்டமாகிய ஐந்தாண்டுத் திட்டங்களும், அரசியல் நிர்ணய சட்டமுமாகும்.

நாடு செழிக்க நாம் போட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் இரண்டு (1951லிருந்து 1961 வரை) முடிந்து, இன்று நாம் 3வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் பெறுப்பேற்றிருக்கிறோம். முதல் இரண்டு திட்டங்களில் பெரிய நீர்த்தேக்கங்களில் அணைக்கட்டுகள் மின்சார உற்பத்தி நிலையங்கள், உணவு உற்பத்தித் திட்டங்கள், இரும்புத் தொழிற்சாலைகள், ரயில்வே தொழிற்சாலைகள் ஏற்பட்டு இன்று பலன் தருகிறது. வெள்ளையன் நம்நாட்டைவிட்டு வெளியேறியபோது நமக்கென்று பெரிய அணைக்கட்டுக்களையோ, பெரும் தொழிற்சாலைகளையோ விட்டுச்செல்லவில்லை. காரணம் இங்கிலாந்தில் செய்த

பொருள்களை விற்கும் மார்க்கெட்டாக இந்தியா மாற்றியமைக்கப்பட்டது தான் காரணம்-விடுதலை பெற்றபின் இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு, கிராமங்கள் நலம் பெறத் திட்டங்கள் தீட்டப்பட்டது. அவைகள்தான் சமுதாய நலத் திட்டமும், தற்போது போற்றிப்புகழப்படும் பஞ்சாயத்து ஆட்சியுமாகும்-குடிநீர், ரோடு, பள்ளி, கூட்டுறவு ஆகிய வசதிகள் இன்று கிராமங்களில் செய்து கொடுக்கப்பட்டுவருகிறது. இதற்கு கிராம அளவில் பணியாற்றும் ஸ்தாபனம் ஒன்று வேண்டுமல்லவா? அந்த ஸ்தாபனம் தான் "பஞ்சாயத்து" ஆகும்.

எங்கள் பஞ்சாயத்தும் இந்த முறையில் செயலாற்றி வருகிறது. வரகனூர் கிராமம் முழுவதற்கும் இப்பஞ்சாயத்து பணிபுரிகிறது. உறுப்பினர்கள் 14 பேர். வருமானம் சுமார் 3500. 30 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளது மின்சாரவசதியில்லை மின்வசதி பெற முயற்சி செய்யப்பட்டு வருகிறது, கோவில்பட்டி-பருவக்குடி ரோட்டில் 14வது கல்பிரிவில் வடக்கே 1½ மைல் தூரம கழுகு-மலை-சிவகாசி ரோட்டில் சென்று, அங்கிருந்து 1½ மைல் தூரம் கிழக்கே சென்றால் "தொல்லை தரும் வந்தோமே என்று மலைக்காதே" எனக்கூறி வரவேற்கும் சிறப்புடை மலையைக்கொண்ட எங்களூரை அடையலாம். வையகுண்டம்பட்டி, குண்டம்பட்டி என்ற இரு குக்கிராமங்கள் எங்களூரில் அடங்கியுள்ளன. மக்கள் தொகை 2571.

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு)ஒப்பில்லைகண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

என ஔவையார் சிறப்பித்துக் கூறிய உழவுத்தொழிலே எங்கள் முக்கியதொழில் பருத்தி, உளுந்து, கம்பு ஆகியவை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. மகசூலை அதிகப்படியாக்க வேண்டிய எல்லா முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். கம்போஸ்ட் உரம் உபயோகிக்கிறோம். சாகுபடி நிலம் 3465 ஏக்கர். திருந்திய சாகுபடி முறைகளை அனுசரிப்பதுடன் பொறுக்கு விதையை எல்லோரும் உபயோகிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். பஞ்சாயத்திலேயே உணவுஉற்பத்தித்திட்டம் வகுத்து செயலாற்றிவருகிறோம் எங்கள் தேவைக்கு வேண்டிய உணவு தானியங்களை நாங்கள் வெளியிலிருந்து வாங்குவதில்லை, இரு உயர் ஜாதிப் பன்றிகளும், உயர் ஜாதி சிவப்பு கோழிகளும் வளர்க்கப்படுகின்றன.

கூட்டுறவுசங்கம் ஒன்று 141 உறுப்பினர்களைக்கொண்டு செயல்பட்டு வருகிறது. குடும்பத்திற்கு ஒருவர் உறுப்பினர் ஆக வேண்டும் என்பதை உணர்ந்துள்ளோம்; அவ்வாறு சேர்த்து விடுவோம் என்பது உறுதி. சேமிப்பு தனிமனிதனின் நன்மைக்கு மாத்திரமின்றி நாட்டின் பல்வேறு திட்டங்களைச் செயலாற்ற முதலீடு செய்யவும் அவசியமல்லவா? ஒவ்வொருவரும் ஒருரூபாய் சேமிப்பில் போட்டால் 40கோடி மக்களைக்கொண்ட நாட்டில் 40 கோடி சேருமல்லவா? ஒரு வருடத்திற்கு 40X12 : 480 கோடி சேருமல்லவா? சிறு துளி பெரு வெள்ளம் ஆகுமல்லவா? இதை நாம்உணர்ந்தோமா? உணர்ந்திருந்தால் நமது சுபிட்ச திட்டச் செலவுக்கு அமெரிக்காவையோ, ருஷ்யாவையோ எதிர்பார்க்க வேண்டியதில்லையல்லவா? இதை விட்டு பணக்காரர்கள் சேமிப்பார்கள் என்று நாம் வாளாயிருக்கலாமா? கூடாது,இதை எங்கள் கிராமவாசிகள் உணர்ந்து வருகின்றனர். தகுதிக்கேற்ப சேமிப்பு நிதியைப் பெருக்க முயற்சித்து வருகிறோம்

"பள்ளியில்லா ஊர் இல்லை" என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. வரகனூரில் ஒரு பஞ்சாயத்து யூனியன் உயர் ஆரம்பப்பள்ளியும், குண்டம்பட்டியில் ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப்பள்ளியும், வையகுண்டம்பட்டியில் தனியார் ஆரம்பப்பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது. நமது யூனியன் தலைவர் திரு. S. சங்கரப்ப நாயுடு அவர்களும், கமிஷனர் திரு. S. நம்பி அவர்களும் சிறந்த முறையில் ஒத்துழைத்ததன் பேரில் வரகனூர் பள்ளி இன்று ஓர் உயர் ஆரம்ப ஆதாரப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள இப்பள்ளி நல்ல முறையில் பணிபுரிந்து வருகிறது பள்ளிப்பிள்ளைகள் அனைவரும் பள்ளி செல்லுகின்றனர். குண்டம்பட்டியில் ரூபாய் 5800 செலவில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. வையகுண்டம்பட்டியிலும் ரூபாய் 5000 செலவில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

வரகனூர் செல்ல 1½ மைல் தூரம் ரோடு போடப்பட்டு சரள் விரிக்கப்பட்டுள்ளது. 2 பாலங்கள் கட்டப்பட்டுள்ளது. இதற்கு ரூபாய் 11,600 செலவிடப்பட்டுள்ளது. தற்போது ரூபாய் 6,600 செலவில் பாலம்ஒன்று கட்டப்பட்டு வருகிறது. வையகுண்டம்பட்டி செல்லும் வழியில் ரூபாய் 9900 செலவில் இந்த ஆண்டு ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது இவ்வாறு போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

"மேழியும் தொழிலும் தந்த
மேதினிப் பொருள்கள் யாவும்
வாழிய எவர்க்கும் கிட்டி
வருந்துவார் எவருமின்றி"

இருக்கவேண்டும் என்பதற்கிணங்க விவசாயத்தில் ஈடுபட்ட நாங்கள் கதர், கிராமக் கைத்தொழில்களை ஆதரித்து வருகிறோம். தச்சர், கொல்லர், சக்கிலியர் ஆகியோர் தொழில் அபிவிருத்திக்கு வகைசெய்யப்பட்டுள்ளது. ஏறக்குறைய எங்கள் கிராமத்தில் 40% குடும்பங்கள் ராட்டை நூற்பில் ஈடுபட்டுள்ளனர்.

கிராமசுகாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது, பஞ்சாயத்திலிருந்து ரூபாய் 1000 செலவில் 1000 அடி நீளம் வார்கால் கட்டப்பட்டுள்ளது. இது தவிர சமுதாய நலத்திட்ட உதவியுடன் ரூபாய் 2500 செலவில் 2000 நீளம் வார்கால் கட்டப்பட்டு, கழிவு நீர்' தேங்காமல் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 1500 செலவில் 2 கிணறு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சமூகக்கல்வி, வாழ்க்கைக்கு வழிவகுக்கும் ஒரு படிப்பு அல்லவா? அதற்குரிய வசதிகளைப் பெருக்க வேண்டாமா? அதற்காக ஒரு ரேடியோ இயங்கி வருகிறது நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுபஞ்சாயத்து யூனியனிலிருந்து ரூபாய் 400 க்கு புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன,

பொதுமேடை ஒன்றுரூபாய் 500 செலவில் குண்டம்பட்டியில் கட்டப்பட்டுள்ளது. வையகுண்டம்பட்டியில் சமூகக் கல்வி நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆசிரியர் திரு. ஜோசப் ராஜாரத்தினம் அவர்கள் நிலையத்தின் பொறுப்பேற்று நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்.

இவ்வாறு கிராமத்தின் அபிவிருத்திக்கு சகல வழிகளிலும் எங்கள் பஞ்சாயத்து பணிபுரிந்து வருகிறது,

"வாடிய மக்கள் வாழ்வில் வளம்பெற
வகுத்தது திட்டந்தனை வரகனூர்பஞ்சாயத்து

என்ற மங்களச் சங்கொலி மகிழ்தரக் கேட்கிறது. சென்று வருகின்றேன். நன்றி.


## குழந்தை வளர்ப்புக்கு

உங்கள் வீட்டில் ஒரு நூல் நிலையம் தேவை. குறைந்த விலையில் அரிய நூல்கள் வெளியிட........

**தென்மொழிகள் புத்தகடிரஸ்டு உதவுகிறது.**

அவர்கள் ஆதரவில் வெளிவந்த நூல்களின்
விற்பனையாளர்கள் :

**(குமரி, நெல்லை, கோவை, இராமநாதபுரம், நீலகிரி, சேலம்
ஆகிய மாவட்டங்களுக்கு.)**

**எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை,**
புத்தக வியாபாரிகள்
திருநெல்வேலி - 1.

கிளைகள்: போன் நிர். 343.

**சென்னை-1, கோவை, நாகர்கோவில்.**

# சாயமலை விடிவெள்ளி ஆசிரமம்

By. Miss, வயோளுபிலிப்ஸ்

சாயமலை கிராமத்தில் உள்ள விடிவெள்ளி ஆசிரமம் 1932ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மிஸ். முரியல் பிராஸ்ட்டும், மிஸ் ஜாய் சாலமன் இருவரும் ஆசிரம மெம்பர்கள். மிஸ் பிலிப் அம்மையார் 1953ம் வருடம் மேற்படி ஆசிரமத்தில் சேர்ந்தார்கள்.

ஆசிரம வாசிகள் உதவி கொண்டு நான்கு இளம் ஆதார பள்ளிகளும், ஒரு முதிர் ஆதாரப் பள்ளியும், ஒரு நர்ஸரி பள்ளியும், இரண்டு இராப்பள்ளிகளும் நடத்தப்படுகின்றன, நர்ஸரி பள்ளியில் 2½ வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. சுமார் 40 குழந்தைகள் வரை நர்ஸரிப் பள்ளியில் படித்து வருகிறார்கள். காலையில் 8 மணியிலிருந்து 9 மணிக்குள் பிள்ளைகளை குளிக்கச் செய்து ஆசிரமத்திலிருந்து சப்ளை செய்யும் ஒரே மாதிரியான உடைகள் கொடுக்கப்படுகின்றன. மதியம் நல்ல சாப்பாடு போடப்படுகின்றன. மாலை அவர்கள் வீட்டுக்கு போகு முன் அவர்களுக்கு பால் கொடுக்கப்படுகின்றது. நர்ஸரி பள்ளிகளுக்கென பிரத்தியேகமாக பயிற்சி அளிக்கப்பட்ட உபாத்தியாயரும், ஒரு ஆயாவும் குழந்தைகளை கவனித்துக் கொள்கிறார்கள்.

பகலில் வேலைக்குப்போகும் பெண்களுக்கு இராப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு எழுதப்படிக்கவும், பாட்டுகள் பாடவும், துணிமணிகள் தைக்கவும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. வகுப்புகள் மாலை 7-30 மணி முதல் 9-30 மணி வரை நடைபெறுகின்றன. ஆசிரமத்திலிருந்து ஹரிஜன குழந்தைகளுக்கு சாயமலை சேரியிலும், மற்றயவர்களுக்கு வலசையிலும் இராப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

அடிக்கடி, பெண் டாக்டர்களை வரழைத்து சுகாதாரம், ஆரோக்கியம் முதலான விஷயங்களைப் பற்றி எடுத்துச்சொல்லப்படுகின்றது.

இது தவிர ஆசிரமத்திலிருந்து ஒரு சிறிய மருத்துவ நிலையமும் நடத்தப்படுகின்றது. காலை 8லிருந்து 10 மணி வரை நோயாளிகளுக்கு மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

*பெண் மக்களிடையே சமூகசேவை செய்ய மிகுந்த வாய்ப்புகள் இருக்கின்றன. இதற்கு நல்ல ஆர்வமிக்க சமூக சேவக்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள்.


குருவிகுளம் பஞ்சாயத்து யூனியன்
ஆண்டு விழாவுக்கு
**எனது நல் வாழ்த்துக்கள்.**

உரிமையாளர்:
தனலட்சுமி டாக்கீஸ்,
கழுகுமலை.


# "பஞ்சாயத்தும் அதன் கடமைகளும்"


திரு. K. V. கஸ்தூரிரெங்க அப்பாசாமி நாயுடு,
தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் நிர்வாகக் குழு உறுப்பினர்.


நம் நாடு அனேக நூற்றாண்டு காலமாய் அன்னிய ஆட்சியில் அடிமைப்பட்டு இருந்ததினால்; முக்கியமாக நமது கிராமங்கள் கவனிப்பாரற்று, கல்வி அறிவு இல்லாமலும் கிராமங்கள் மிகவும் சீர்கெட்டு, வறுமை அடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். நகரங்கள் மட்டும் கவனிக்கப்பட்டு வந்தது. நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் அண்ணல் காந்தியடிகள் நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் சுதந்திரம் அடைய வேண்டுமென்றும் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாய் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதன்படி நமது சுதந்திர அரசாங்கம் கிராம நலனை முக்கியமாக கவனித்து கிராமங்கள் முன்னேற்றமடைய வழி கண்டுபிடித்து, ஐந்தாண்டு திட்டங்கள் வகுத்து, எல்லா கிராமங்களிலும் பஞ்சாயத்து சபை அமைத்து அதற்கு அனேக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது.

இப்போது இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் நடந்து வருகிறது. இந்த இரண்டு ஐந்தாண்டு திட்டங்களிலும் கிராமங்கள் மிகவும் முன்னேற்றம் கண்டு வருகிறது. கிராமஜனங்கள் அறிவு வளர்ச்சிக்காக கிராமந்தோறும் ஆரம்ப பள்ளிகள் அமைத்து சம்பளம் இல்லாமலும், மதியஉணவு அளித்தும் வருகிறார்கள். கிராமங்கள் முன்னேற்றத்திற்காக குடிதண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டும் பழைய கிணறுகள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன. கிராமத்தில் நல்ல பாட்டை வசதியும், இணைப்பு ரோடுகளும், செய்து தரப்பட்டும், மனமகிழ் மன்றங்கள், வானொலி நிலையங்கள், பூங்காக்கள், வாசகசாலைகள் வைக்கப்பட்டும், விளக்கு வசதிகள் செய்து கொடுத்தும்; சாக்கடை வாருகால் கட்டப்பட்டும் கிராமத்தை நல்லநிலைமைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

விவசாய அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன்வசதி அளிக்க கிராமங்கள் தோறும் கூட்டுறவு நாணய சங்கங்கள் அமைத்தும்; கிணறுகள் தோண்டவும், பம்புசெட் வைக்கவும், மாடுகள் வாங்கவும் உதவித்தொகை அளித்தும், பொறுக்கு விதை, நவீன கலப்பைகள்,பயிர் பாதுகாப்பு முறைகள் செய்யப்பட்டும், வருகிறது.

முன்பு சர்க்கார் திட்டம் போட்டு அதை மக்களாகிய நாம் செய்து வந்தோம். இப்போது அந்த நிலைமாறி மக்களாகிய நாம் திட்டம் தயாரித்து, அதை அரசாங்கம் செய்து கொடுக்க சட்டம் இயற்றி இருக்கிறார்கள். இந்த திட்டங்களை நிறைவேற்றி கொடுக்கவும், கிராம நல முன்னேற்றம் செய்யவும், முக்கியமாக பஞ்சாயத்துக் தலைவர்களாகிய நாம் நமது கடமையை உணர்ந்து, கட்சி வேறுபாடு இல்லாமல் நடுநிலைமையாய் இருந்து நமது கடமையை செய்து வரவேண்டும். இதற்கு நமதுகிராம மக்களின் ஆதரவு திரட்ட வேண்டும்.

இன்றைய நிலைமையில் கிராமமக்கள் ஒன்றும் கவனியாமல் எல்லாம் பஞ்சாயத்தின் கடமை என நினைத்து இருக்கிறார்கள். பஞ்சாயத்திலிருந்து ஒன்றும் செய்யவில்லை என்று குறைகூறிக் கொண்டும் விபரம் தெரியாமல் இருக்கிறார்கள். கிராமங்கள் முன்னேற வேண்டுமென்றால் கிராம மக்களும் பஞ்சாயத்தும் ஒத்துழைத்து இந்த ஐந்தாண்டு திட்டத்தை நல்லமுறையில் எவ்வளவோ முன்னேற்றமடையச் செய்யமுடியும்.

இதற்கு என்னவழியென்றால் பஞ்சாயத்து தலைவர்களும் அங்கத்தினர்களும் சேர்ந்து ஊர் பொதுக்கூட்டம் கூட்டி கிராம ஜனங்கள் அனைவரையும் வரும்படி செய்து கிராம வரவு செலவு திட்டம் என்ன என்பதை தெரியும்படி சொல்லவேண்டும்.

பஞ்சாயத்துக்கு வரும் வருமானத்தை வரிகள் மூலம் இன்னும் அதிகமாக்குவதற்கு பஞ்சாயத்து தீர்மானம் செய்த போதிலும் அந்த தீர்மானத்தை விளக்கி அதன் அவசியத்தையும் எடுத்துச்சொல்லி, அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்தால், வரிவசூல் அதிகம் சிரமம் இல்லாமல் செய்யமுடியும். மேலும் நம் கிராம வருமானம் என்ன என்ற விபரமும் அவர்களுக்குத் தெரியவரும். இதனால் பஞ்சாயத்து நிர்வாகத்திற்கும் பெரிது உதவியாய் இருக்கும் பஞ்சாயத்து திட்டங்களை நிறைவேற்ற படும் கஷ்டங்களையும் சொல்லி விளக்க வேண்டும். இதற்குஇன்ன ரீதியில் ஒத்துழைப்பு செய்யவேண்டியதையும் எடுத்துச் சொல்லி அவர்களை அபிவிருத்தி திட்டத்தினல் நாட்டம் கொள்ளும்படி செய்தால்; கிராம ஜனங்கள் திட்டத்தில் தன் பங்கு இன்னது என்று தெரிந்துகொள்வார்கள்.

திட்டவேலைகள் சம்பந்தமாக பஞ்சாயத்தும், ஊர் ஜனங்களும் சேர்ந்து பேசிமுடிவு செய்யவேண்டும். பஞ்சாயத்து தலைவர் அந்த ஊரை ஒரே குடும்பம் போல கருதி; அந்த குடும்பத்திற்கு தலைவனாக இருந்து கிராம ஜனங்களின் அபிப்பிராயத்தை தெரிந்துவந்தால் கிராமம் நல்லமுன்னேற்றமடையும்.

வாழ்க பஞ்சாயத்து ராஜ்யம்!

## உலகின் வயது

சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு புதுத்துறையில் ஆராய்ச்சி செய்து உலகின் வயது ஏறக்குறைய (3500) மூவாயிரத்து ஐந்நூறு மில்லியன் வருடங்கள் இருக்க வேண்டும் என்கின்ற முடிவிற்கு வந்திருக்கின்றனர். முதலில் தோன்றிய பளிங்குப் பாறைகள் ஒரு மலைக் குழம்பால் ஆனவை. அது மெதுவாகப் கடினப் பொருளாய் ஆகும் போது, பல மூலப் பொருள்களும், சேர்ந்து மலையாக உருவம் பெறுகின்றது ஒவ்வொரு கூட்டுப்பொருளும் தன்னிடம் அடங்கியுள்ள ஒவ்வொரு மூலப்பொருளில் ஒருகுறிப்பிட்ட விகிதத்தில் தான் சேர்ந்திருக்கின்றது. இக் கூட்டுப்பொருள்கள் நாள்பட மூலப்பொருள்களாகப் பிரிகின்றன. முதலில் இருந்த மூலப்பொருளில்தற்போது சிதறியபின் இருக்கும் மூலப் பொருளின் விகிதத்தைக் கணக்கிட முடியும். இந்த இருவகை மூலப்பொருள்களின் தன்மையும் மாறுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதனையும் ஆராய்ச்சிசாலைகளில் கணக்கிட்டுப் பார்க்கவும் இயலும். இதனால் ஒரு மலைக் குழம்பு பின்னர் மலையாகமாறிய நேரத்தையும் அதன் பிறப்பையும் கணக்கிட முடிவதால் முதலில் தோன்றிய அதிகாலத்து மலைகளின் வயதினை ஒரு அளவிற்குக் கணக்கிட்டுச் சொல்ல இயலுகின்றது.

இதில் ஒரு சிறப்பு என்னவெனில் இந்து சமயம் விண்ணியல் முறைப்படி ஆய்வு செய்து உலகின் வயதினை வரையறையிட்டிருக்கும் மதிப்பு சற்றேறக்குறைய அறிவியல் முறைப்படி ஆராய்ச்சி செய்து வந்த முடிவான வயதுடன் ஒத்திருக்கிறது இதனின்று இந்துக்கள் வானவியலிலும் கணிதத்திலும் சிறந்த வல்லுநராக இருந்தார்களென்று நன்கு புலப்படுகின்றது.

—கலைக் கதிர்

## கேரட் கண்ணுக்கு நல்லது.

கண்பார்வை திடமில்லாததவர்களுக்கு கேரட் கிழங்கு மிகவும் நல்லது. அதில் 'ஏ' வைட்டமின் சத்து போதிய அளவில் இருப்பதாலும் மீனெண்ணெய் போன்றவைகளை காட்டிலும் விலைமலிவாய் இருப்பதாலும் சாதாரண மக்கள் தாராளமாய் உபயோகிக்க முடியும். கேரட் கிழங்கை பச்சையாய் உபயோகிப்பதுதான் நல்லது. உடற்பாதுகாப்புக்கும் ரத்த சுத்திக்கும் நரம்புக்கும் இது மிகவும் நல்லது. பிரான்ஸ் தேசப் பெண்கள் தங்கள் முகத்தோற்றத்தின் அபிவிருத்திக்குக் கேரட் கிழங்கை அதிகமாய் உண்டுபயனடைகிறார்கள்.

"கூட்டுறவு';
1—7—1961.

# சங்கரநயினார்கோவில் கூட்டுறவு பால் சப்ளை சங்கம் லிமிடெட்., ஓ. 1884

### சங்கரநயினார்கோவில்.

**(திருநெல்வேலி மாவட்டம்.)**

( ஆரம்பம் 1958. )

*அதிகப் பால் அருந்தி ஆரோக்கியத்தைப் பெறுங்கள்.*

*எங்கள் சங்கத்தில் விஞ்ஞான முறைப்படி சுத்தமான பசுவின்பால், எருமையின் பால் கறவைசெய்து பொதுமக்கள், அரசினர் மருத்துவ நிலையம், சிறைச்சாலை, உணவு விடுதிகள் முதலிய ஸ்தாபனங்களுக்கும் தினமும் காலை, மாலை விநியோகம் செய்துவருகிறோம்.*

**கடந்த நான்கு ஆண்டுகளில் சங்கத்தின் வளர்ச்சி பற்றிய விபரங்கள்:**

| வருடம் | மெம்பர்கள் எண்ணிக்கை. | செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. | பால் உற்பத்தி மதிப்பு ரூ. | பால் விற்பனை மதிப்பு ரூ. | கிடைத்த வியாபார லாபம் ரூ. | நிகர லாபம் ரூ' | காப்பு நிதி ரூ. | கறவை மெம்பர்களுக்கு போனஸ் ரூ. | டிவிடெண்ட் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1958—59 | 263 | 4845 | 77760 | 70099 | 9676 | 1884 | — | — | — |
| 1959—60 | 317 | 6525 | 95262 | 1,05,969 | 19,218 | 7022 | 475 | 973 | 117 |
| 1960—61 | 404 | 8650 | 1,31,934 | 1,47,199 | 24,921 | 8310 | 2270 | 1692 | 297 |
| *1961-62 | 497 | 10615 | 1,50,037 | 1,78,262 | 30,704 | 10,973 | 6253 | 1859 | 340 |
| (* தணிக்கை செய்யப்படவில்லை.) | | | | | | | | | |

பால் மிதமாகும் காலங்களில் பாலில் தயாராகும் உப பொருள்கள்.

வீட்டு முறையில் தயாராகும் கட்டித்தயிர், புது வெண்ணை, ருசிமிக்க பால்கோவா முதலியன கைதேர்ந்த தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்டு மிகவும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

பொதுமக்கள் தங்கள் தேவைக்கு எங்களிடம் வாங்கி சங்க வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு கோருகிறோம்.

கறவை மாடுகளின் இனவிருத்திக்காக சிந்தி காளை, முர்ரா எருமை கிடா பராமரிக்கப்படுகிறது.

ச. மீனாக்ஷிசுந்தரம்,
செயலாளர்.

பி. வெங்கிடாசலம் அய்யர்,
தலைவர்.

# GANESH MATCH WORKS

**Sales Office: KOVILPATTI. S. Ry.**

Estd: 1962 Factory at AYYANERI

Use always "TEMPLE" Brand

quality safety matches

Manufacturers

**M/S GANESH MATCH WORKS,**

Sales Office:

KOVILPATTI S. Ry. (South India)



# E. M. GOPALAKRISHNA KONE TRUST.

PUBLICATIONS.

**120, High Road, TIRUNELVELY Jn.**

| | |
|---|---|
| **Excelsior School Dictionary English to English -Do- Junior Rs. 5/- -Do- Senior Rs. 10/-** | ஆங்கில ஆசான் உபாத்தியாயர் இல்லாமலே 60 நாளில் ஆங்கிலம் கற்றுக் கொள்ள உதவும் அரிய புத்தகம். **விலை 4-50.** |
| ஹிந்தி—தமிழ் ஆசான் இப்போது கற்க வேண்டிய தேசிய பாஷை தமிழ் படித்தவர்கள் உபாத்தியாயரில்லாமல் இலகுவில் வெகு சீக்கிரத்தில் ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொள்ளலாம். | மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்லாயிரக்கணக்கான சொற்கள் அதிகம் சேர்க்கப் பட்டுள்ள புதிய பதிப்பு வெளி வந்துவிட்டது. பாகம் 1 & 2 **விலை 40-00.** |


# இளைஞர் விவசாய சங்கம்

**ஆலமநாயக்கர்பட்டி.**

**போ. சன்னாசி, தலைவர்.**

*பாருக்குள்ளே நல்ல நாடு-நம்*
*பாரத நாடு—*

*எனப் பாரதி பாடினன்.*

பாரத நாடு தழைக்க வேண்டுமானல், வேளாண்மை ஓங்க வேண்டும்-உழவர்கள் வாழ்வில் ஏற்றம் காண வேண்டும்.

வேளாண்மைத் தொழிலை பலவித வழிகளிலும் நமது அரசாங்கம் அபிவிருத்தி செய்து வருவதை நாம் அனைவரும் அறிந்ததே. இளைஞர்கள் விவசாய உற்பத்தி பெருக்கத்திலும் நாட்டின் போக்கிலும், நல்ல பண்பாடுகளை ஏற்படுத்துவதிலும் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் முக்கிய பங்குகொள்ள வேண்டும் என்ற உயரியநோக்கங்களை அடிப்படையாக கொண்டு கிராமங்கள் தோறும் இன்று இளைஞர் விவசாய சங்கங்களை தோற்றுவித்து வருகிறது நமது அரசாங்கம்.

அதன்படி 5-4-1962ல் ஆலமநாயக்கர்பட்டியில் ஒரு இளைஞர் விவசாய சங்கம் நிறுவப்பட்டுள்ளது. ஊருக்குழைக்கும் உத்தமப் பணியாளர் எங்கள் கிராமநல ஊழியர் திரு. ராமானுஜம் அவர்கள் சங்க அமைப்பைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறினர்கள். பிறகு விஜயம் செய்த எங்கள் நலம் காடும் கமிஷனர் திரு. S. நம்பி அவர்களும், கல்வி வளர்ச்சி அதிகாரி திரு. M. நடேசன் அவர்களும் சங்கத்தின் ஆக்கவேலைத் திட்டங்களை பற்றியும் விரிவாகக் கூற அதன்படி செயல்பட்டு வருகிறோம். ஆரம்பத்தில் இருந்த அங்கத்தினர்கள் 15 பேர். இன்று 34 பேர்களைக் கொண்டுள்ளது. எங்கள் சங்கம் திங்கள் ஒருமுறை கூடுகிறது. அங்கே பல தரப்பட்ட பயனுள்ளகருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. நவீன விவசாய முறைகள் பற்றி விவாதித்து விளக்கங்கள் கூறி, ஐயங்கள் அகற்றி, அதன்படி செயலாற்ற சங்கம் முயற்சி செய்து வருகிறது.

கிராம மக்களின் எழுச்சியைத் தூண்ட, அறிவை வளர்க்க, ஆர்வத்தை ஊட்ட ஆவன செய்கிறது. முதலுதவிச் சிகிச்சையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து வருகிறது. சமூகக் கல்வி நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறோம். தினசரி, வார, மாத ஏடுகளை குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து வழங்குகிறார்கள். இதன் மூலம் பொதுமக்கள் பயனடைந்து வருகிறார்கள். ஊர்நலம் காக்கும் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. V. வீராசாமி நாயக்கர் அவர்களின் முயற்சியால் ஊராட்சி மன்றத்தில் நூல் நிலையம் இயங்கி வருகிறது. அதிலிருந்து புத்தகங்கள் பெற்று பயனடைந்து வருகிறோம்.

"எல்லோருக்கும் கல்வி" என்ற நிலையை எட்ட, பள்ளி வயதுப் பிள்ளைகள் அனைவரையும் பள்ளிக்கு அனுப்புவதில் நாங்கள் உதவி வருகிறோம். கிராம சுகாதாரத்தில் கவனம் செலுத்துகிறோம். ஊர் பொது வேலைகளில் அவ்வப்போது ஈடுபட்டு சேவையே எங்கள் லட்சியம்" என்ற உணர்வை வளர்த்து வருகிறோம். விதைப் பண்ணை, மாதிரிப்பண்ணை ஆகியவைகளை நடத்தி வருகிறோம். சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாய்ச் செயல்படுகிறார்கள்.

## எங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்.

1. சமுதாய உணர்வை உண்டுபண்ணுவது, துரிதமாகப் பரவச் செய்வது.
2 ஒழுக்கத்தையும், உடல் நலத்தையும் வளரச் செய்வது.
8. தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளவும், பிறர்க்கு உதவி செய்யும் மனப்பான்மையையும் ஏற்படச் செய்வது

4. விஞ்ஞான ரீதியான மனோபாவம் ஏற்படச் செய்தல்.

5. தலைமைப் பொறுப்பேற்கும் தகுதியை உண்டாக்குதல்.

6. தன்னம்பிக்கையை வலுப்படுத்துதல்.

7. சமுதாயத் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு அளித்தல் பொது வேலைகளை எடுத்து நடத்துதல்.

8. விவசாய அபிவிருத்தி விஷயங்களை பரப்புதல்.

9. கிராம துப்புரவு, சுகாதாரம் ஆகியவற்றை பாதுகாத்தல்.

10. நூற்பில் கவனம் செலுத்தி கதர் அபிவிருத்தியில் ஈடுபடுதல்.

11. பள்ளிசெல்லாதபிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புதம்.

12. நூல்நிலையத்தை அறிவு வளர்ச்சிக்கு பயன்படுத்துதல்.

13. கலை வளர்ச்சியில் ஈடுபடுதல்.

14. சங்க நிதிக்கு சந்தா வசூலித்தல்; பயன்படு முறையில் செலவிடுதல்.

இந்த நோக்கங்களின் அடிப்படையில் எங்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க பாரத சமுதாம்!

84221

# "குழந்தை வளர்ப்பு"

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளின் வளர்ச்சியைப் பொறுத்தது. இது எவரும் மறுக்க முடியாத உண்மை. அதிர்ஷ்டவசமாக நம் நாட்டின் மாபெருந்தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவும் அன்னாரின் புதல்வி ஸ்ரீமதி. இந்திராகாந்தியும் குழந்தைகளின் நலனுக்கு அதிக கவனம் செலுத்தி வருபவர்களாக அமைந்து விட்டார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் நலன் என்பது அரசாங்க கொள்கையில் ஒன்றாகவே ஆகிவிட்டது. குழந்தைகள் நலன் சரிவர பாதுகாக்காவிட்டால் நாகரீக சமுதாயத்தின் அஸ்திவாரமே பலவீனமடையும். சொல்லப்போனால் ஒரு குழந்தையின் நலன் அதுதன் தயாரின் கர்ப்பத்தில் இருக்கும் போதிலிருந்தே ஆரம்பித்து அது வாலிப வயதை எட்டும் வரையுமுள்ள பிராயம் கவனிக்கவேண்டிய விஷயம். ஆகவேதான் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் குழந்தைகள் நலனை பல்வேறு பிரிவுகளாக அதாவது, பள்ளிக்கு முந்திய கல்வி, ஆரோக்கிம், புஷ்டி, பொழுதுபோக்கு, அவதிப்படும் சேய்களின் நலன் கவனிப்பு முதலியனவாக பிரித்திருக்கிறது.

எனினும், இந்த விஷயத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அக்கரை பூராவாக எடுத்துக்கொள்ளப் படவில்லை எனச் சிலர் கருதலாம். இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. இருந்தாலும், திட்டத்தில் எப்பொழுது இடம் பெற்றுவிட்டதோ அதுவே ஓர் நல்ல ஆரம்பமெனலாம். போகப்போக செயல்முறையில் செய்யவேண்டிய மாறுதல்களையும் சீர்திருத்தத்தையும் செய்யலாமல்லவா?

ஆறிலிருந்து பதினொன்று வயதுவரையிலுள்ள சிறுவர்களுக்கு இலவசக்கட்டாயக்கல்வி ஏற்படுத்த அரசாங்கம் முன் வந்திருப்பது நாடறிந்த விஷயம். ஆனால் அதற்கு முந்திய பிராயத்தில் முக்கியமாக 3 லிருந்து 6 வயதுள்ள காலத்தின சூழ்நிலைதான் குழந்தைகளின் வாழ்க்கையை அமைக்கும் ஆரம்ப காலமாகும். எனச் சிறந்த கல்வி நிபுணர்கள் கருதுகிறார்கள். இந்தக்காலத்தைப் பற்றித்தான் அரசாங்கம் அதிகக்கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

இது சம்மந்தமாக பரிசிலனை செய்ய மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சராலுவலம் ஒரு கமிட்டி நிறுவியுள்ளது. இதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

செய்யும் அறிவை கற்கிறான் பின்னவன். ஆனல் அவனுக்கு நடைமுறை அப்பியாசம் மிகக்குறைவு நடைமுறை ஆராய்ச்சி பெருமளவில் இல்லை. இது கிராம விவசாயிகளிடம்தானே தெரிந்துகொண்ட அறிவு ரூபத்தில் இருக்கிறது. இவை இரண்டையும் பொருத்தினல் விஸ்தரிப்பாளர் மூலமாக நவீன விஞ்ஞான அறிவு கிராம வாசிக்கும் அதன் நடைமுறை சிக்கல்களை கிராமவாசியின் மூலமாக விஸ்தரிப்பாளர்களுக்கும் தெற்றென விளங்கிவிடுகிறது. ஆகவே விஸ்தரிப்பு வேலைகள் இருபக்கமும் பாயும் அறிவூற்று பரஸ்பரம் கல்விபுகட்ட வாய்ப்பு அளிக்கிறது.

இந்த முறையாக முதல் ஐந்தாண்டுத் திட்டம் நாட்டின் உணவு உற்பத்தி பெருக்கத்தை முக்கிய குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது. உற்பத்தி சற்று பெருகிற்றேயொழிய அது கிராமவாசியின் பூர்ண தேவைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. எனவே இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் சிறு கைத்தொழில்கள் செய்ய கிராமத்தில் வசதிசெய்து விவசாயிகளுக்கு ஓரளவு உபரி வருமானம் காண விழைந்தார்கள். நமது தேசத் தலைவர்கள். சுமார் ரூபாய் 200கோடி வரையிலும் இதற்கென ஒதுக்கி திட்டமிடப்பட்டது. இது தொழில்வளர்ச்சியின் ஆரம்ப முன்னேற்றம் எனச் சொல்லலாம். இதன் நடுவில் தொழில் வளர்ச்சியிலேயே சிறிய கைத்தொழில்களையும் ஆங்காங்கே இயந்திர வசதியுடன் நடத்துதல் என்று மூன்றாவது அங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதுஒவ்வொரு கைத்தொழிலுக்கும் பொருந்தும் உதாரணமாக, நெசவுத்தொழில் எடுத்துக்கொண்டால், தக்ளி சுற்றுவதிலிருந்து, ராட்டைக்கு வந்து, அம்பர் சர்க்கா இயக்கிப் பின் "பவர் லூம்" சாதனங்களை கொண்டுவந்துவிட்டோம்: அதேமாதிரி நாட்டுச்செக்கு மாறி எண்ணை பிழியும் நவீன இயந்திரங்களுக்கு வந்துவிட்டோம். கையால் மரமறுத்து வேலை செய்ததுபோக இப்பொழுது மரமறுப்பதற்கும், டிசைன் செய்வதற்கும் ஆரம்பித்து பூரா வேலையையும் முடிக்க வல்ல சிறு மின்சார இயந்திரங்கள் கொண்டுவந்து விட்டோம். மூன்றும் ஐந்தாண்டு திட்டத்தின் இறுதியில் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடிசைத் தொழிலுக்கும் இம்மாதிரி மின் இயந்திரங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே நல்ல முற்போக்கு சக்திகளை மக்களிடையே பரப்ப சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். கிராமப்பள்ளி ஆசிரியர்கள் இதைக் கருத்தில் கொண்டு சிறுர்களுக்கு அறிவுபுகட்ட முயலவேண்டும்.

இனி எங்கள் கிராமத்தில் நாங்கள் செய்துள்ள செய்யப்போகும் காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் கிராமம் பஸ் போக்கு வரத்தில்லாத ஒரு உள்நோக்கிப் போகவேண்டிய கிராமமாகும் சங்கரன்கோவில் — கோவில்பட்டி ரஸ்தாவில் நாலுவாசன்கோட்டையிலிருந்து சுமார் 4 மைல் தூரம் தெற்குநோக்கிச் செல்லவேண்டும். இது ஒரு சிறிய கிராமம். ஜனத்தொகை 640 சுமார் ½ சதுர மைல் தான் விஸ்தீரணம் சுமார் 270 ஏக்கர்தான் சாகுபடிக்கு வந்துள்ளது. முக்கியத்தொழில் விவசாயம் சுமார் 200 பேர் விவசாயத் தொழில் செய்கிறார்கள். மற்றும் 200பேர் தீப்பெட்டி செய்து சம்பாதிக்கிறார்கள். மேலும் 50 பேர் நூற்புத்தொழில் செய்கிறார்கள். எங்கள் கிராமத்தில் இன்னும் மின்சார வசதிவரவில்லை கடந்தஆண்டுகளில் ரூபாய் 1200 மதிப்புள்ள பொதுக் கட்டிடமொன்று கட்டியுள்ளோம், 2 குடி தண்ணீர் கிணறுகள் வெட்டியுள்ளோம். சுமார் 131 ஏக்கரில் நெல் சாகுபடி செய்கிறோம். நவீன விவசாயமுறைகள் வெகுவாகப் பின்பற்றி வருகிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 15டன் உர உப்புகள் விநியோகித்திருக்கிறோம். நவீன விவசாயக் கருவிகள் நான்கு. 50 கிலோக்கள் பூச்சி மருந்து, நேரிடை விளக்கங்கள் 4 இவை கொடுத்திருக்கிறோம். கம்போஸ்ட் உரத்தின் பிரயோசனத்தை நன்கு உணர்ந்திருக்கிறோம். சென்ற ஆண்டுகளில் 162 குழிகள் வரை கம்போஸ்ட் தயாரித்தோம். 60—61ம ஆண்டில் எலும்புத்தூள் உரம் சுமார் 3 டன் உபயோகித்து நல்ல மகசூலைக் கண்டிருக்கிறோம்,

கால்நடை எண்ணிக்கை எங்கள் கிராமத்தில் சுமார் 400வரை மதிப்பிடலாம் ஒரு பொலிக்காளை வாங்கப்பட்டிருக்கிறது. நல்ல தாக்கோழிகள் பத்துஎண்ணம் வாங்கியிருக்கிறோம். கால் நடைகளுக்கு அவ்வப்போது சிகிச்சைபெற்று வருகிறோம்

சிறு பாசன திட்டத்தில் சுமார் 270 ஏக்கர் வரை பாசனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. 4 கிணறுகள் அமைத்தும், மூன்று பம்பு செட்டுகள் அமைத்தும் பாடுபட்டிருக்கிறோம். விவசாயத்தைப் பொறுத்தமட்டில் எங்களுக்கு என்றுமே அயராத உழைப்பு தான்.

குடிதண்ணீர் கிணறுகள் இரண்டு புதுப்பித்தும், இரண்டு புதிதாகக் கட்டுவித்தும் வசதிகள் அமைத்திருக்கிறோம். 15 உறிஞ்சு குழிகள் அமைத்து சுகாதார அபிவிருத்தி ஓரளவு செய்திருக்கிறோம்.

ஒரு வாசகசாலையும் ஓர் ஆரம்பப்பள்ளியும் உள்ளன. சுமார் 62 பேர் வரை கல்வி கற்கின்றனர். எங்கள் கிராமத்திலிருந்து நவீன முறையில் தோல் பதனிடும் தொழிற்பயிற்சிபெற இரண்டு நபர்களை அனுப்பி அவர்களும் பயிற்சிமுடிந்து வந்துள்ளார்கள். அவர்களுக்கு தொழில் அபிவிருத்திக்காக பூரா மானியத்தொகை ரூ. 300 ல் இரண்டு தொட்டிகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம். அண்மையில் எங்கள் கிராமத்தில் சுமார் 42 ஏக்கர் நிலம் வரையிலும் ஒரு பெரிய நிலச்சுவான்தாரிடமிருந்து நாங்கள் 12தனித்தனி குடும்பங்கள் தனித்தனியாக கிரயம் பெற்றிருக்கிறோம்' இதைக் கூட்டுறவு விவசாயப் பண்ணை மூலம் அபிவிருத்தி செய்யலாமென்று நமது கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி அவர்களும், யூனியன் கமிஷனர் அவர்களும் எடுத்துரைத்தார்கள்: இது ஒரு நல்ல அம்சமாகக் காணப்படுகிறது இது சம்பந்தமாய் மேற்படி நிலங்களை பார்வையிட்டு திட்டமியற்றிக் கொண்டிருக்கிறோம். அண்மையிலுள்ள உசிலங்குளம் கண்மாய் மடை முதலானது மராமத்து செய்ய வேண்டியதிருக்கிறது. இதையும் மேற்கொண்டு செய்துமுடிக்க எண்ணுகிறோம்.

இரண்டே வார்டுகள் கொண்ட எங்கள் பஞ்சாயத்தின் வருட வருமானம் ரூ. 400 அளவில் தான் இருக்கிறது. என்றாலும் அபிவிருத்தி திட்டங்களை மேலும் மேலும் வரவேற்கிறோம். செயல்பட்டும் காண்பிக்கத்தயாராக உள்ளோம்.

இதற்கெல்லாம் எங்களுக்கு இறைவன் துணை புரிவாராக!

வாழ்க சமுதாயம்!

---

'கூட்டுறவு இயக்கத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறைத்திருப்பதன் மூலம் நமது நாடு வேகமாக முன்னேறியிருக்கிறது. மந்திரிகளும், அதிகாரிகளும் பெரும்பாலும் இந்த இயக்கத்தில் அதிகாரப் பதவிகளை வகிக்கவில்லை. தேசியக் கூட்டுறவுச் சங்கம் சமஷ்டி அமைப்பையேற்றுக்கொண்டு இன்னெரு படி முன்னேறியிருக்கிறது. இந்தப் போக்கு, கிராமங்கள் வரையிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுத்துறையின் பல்வேறு அம்சங்களிலுல் சமஷ்டி அமைப்புக்கள் இருக்க வேண்டும். அவை சர்க்காருக்கு பதிலாக இருந்து சங்கங்களை வளர்க்க முடியும். இந்த இயக்கத்தின் சக்தியை எல்லாரும் உணர வேண்டுமானல், ராஜ்யக் கூட்டுறவு யூனியன்கள் சுயபலம் பெற வேண்டும். அப்போதுதான் திட்டத்தில், கூட்டுறவுத் துறைக்கும் போதிய தொகை கிடைப்பதோடு வேறு விதங்களிலும் உதவி கிடைக்கும். குழப்பம் நிறைந்த இன்றைய நிலையிலிருந்து சுபிட்சம் நிறைந்த நாளைய நிலைமை உருவாக்கப்படும்'.

திரு. எஸ். கே. டே

மத்திய அரசாங்க சமுதாய நல கூட்டுறவு இலாக்கா மந்திரி.

---

'படிப்பு ஒரு மனிதனை நிறைவுடையவனுக்குகிறது. கேள்வி அவனை எதற்கும் சித்தமுடையவனுக்குகிறது; எழுதுதலே அவனுக்குத் திட்பம் தருகிறது.

—பிரான்சிஸ் பேகன்



# அத்திப்பட்டி பஞ்சாயத்து.

**திரு. சு. பெருமாள் முதலியார்,**

**தலைவர்.**

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதி பாடியது விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களும் மக்களின் வாழ்வுக்கும், நாட்டின் வளத்திற்கும் மிகவும் இன்றியமையாதவை என்பதன் பொருட்டேயாகும்.

தொழில்களில் முக்கிய தொழிலான நெசவுத் தொழிலை வாழ்க்கையின் வருவாய்க்கு உரிய தொழிலாகக் கொண்ட மக்களைக் கொண்ட அத்திப்பட்டிக் கிராமம் முழுவதும் அத்திப்பட்டி பஞ்சாயத்து செயலாற்றி வருகிறது. குருவிகுளத்திலிருந்து-அத்திப்பட்டி 1மை. 2பர்லாங் தூரத்தில் அமைந்துள்ளது. கிராம விஸ்தீரணம் 416 ஏக்கர். நன்செய் 23ஏ. 73செ. புஞ்சை 300 ஏ. 46 செ. புறம்போக்கு 57 ஏ. 12செ. குளம் பாசன வசதியுள்ளது. 6 உறுப்பினர்களைக் கொண்ட இப்பஞ்சாயத்தின் வருமானம் சுமார் ரூபாய் 600-00.

செந்நெல்லும், கரும்பும், வாழையும் தழைத்து விளையும் தமிழ்நாட்டின் ஒருபகுதியாகிய எங்கள் கிராமத்திலும் நெல்லும், வாழையும் புன்செய் தானியங்களும்பயிரிடப் படுகிறது. பொறுக்கு விதையும் கம்போஸ்ட் உரமும் உபயோகித்து வருகின்றனர்.

இங்கு முக்கிய தொழில் நெசவுத்தொழிலே ஆகும்.

"வினைக் கண், வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்த்தாரின் தீர்த்தன்று உலகு"

அதாவது தொழிலாகிய குறையைச் செய்யாமல் விட்டவரை உலகம் கைவிடும். ஆகையால் தொழிலில் முயற்சி இல்லாதிருத்தலை ஒழிக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இதற்கிணங்க எங்களூர் வாசிகள் அனைவரும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு சிறப்புடன் தொழில் செய்து வருகின்றனர். கைத்தறியின் மூலம் ஏழைக் குடும்பங்கள் வாழ வழி ஏற்படுகிறது. ஆடை மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியம். அதை உற்பத்தி செய்யும் தொழிலிலே இக்கிராமத்தினர் ஈடுபட்டுள்ளது மனித வர்க்கத்திற்கே பெரியதொரு சேவை போல் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

உழவும் நெசவும் இந்தியப் பொருளாதாரத்தின் கடைக் கால்கள்:- இவற்றின் அடிப்படையில் எழுந்த வாழ்க்கை முறைகளையே பல லட்சம் மக்கள் மேற்கொண்டு வாழ்கிறார்கள். காலத்தால் முதுமையாகாமலும், பழக்கத்தால் புதுமை கெடாமலும் நவநவமாக விளங்குகின்றன இந்தியக் கைத்தறித் துணிகள். நிகரற்ற திறமையும் கலைத்தெளிவும் மிளிர எளிய குடிசைகளிலே வளரும் நமது நெசவுக் கலைக்கு நிரந்தரமாகக் கிடைத்து வரும் சிறப்பு நெசவுக் கலைஞர்களின் புகழ்பாடுகிறது. நமதுநெசவிலே பழமை மெருகும், புதுமைப் பொலிவும் கைகோர்த்து விளையாடுகின்றன. இல்லாவிட்டால் அமெரிக்க மக்களின்மனதை நம்நாட்டு கைத்தறி வண்ணமாறும் கைத்தறித்துணி ஈர்க்குமா? பட்டும், பட்டாடையும் பல திறப்பட்ட உயர்வகை மில்களிலே செய்யப்பட்ட மெல்லிய, பளபளப்பான துணிகளை விட இந்திய நாட்டுக் கைத்தறிக்கு ஏற்றமும் எழில் மிகு கவர்ச்சியும் சொல்லொணா கிராக்கியும் இருக்குமேயானால் நம் கைத்தறி நெசவாளர்களின் பெருமையை என்னென்று சொல்வது.

அத்திப்பட்டி தனக்குரிய பங்கை கைத்தறித் துணி உற்பத்தியில் செலுத்தி வருகிறது. என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து, குறைந்த வருமானத்தில் நிறைந்த சேவை செய்துவருகிறது. 4கிராம கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளது. குடி தண்ணீருக்காக இருகிணறுகள் ரூபாய்3000-00 செலவில் வெட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் ரூ. 3040 செலவில் பொதுக் கட்டிடவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சாக்கடை (வார்கால்) ரூபாய் 500-00 செலவில் கட்டப்பட்டுள்ளது. சமுதாயப் பணியில் பின்வாங்க வில்லை.

பணிபல புரிவோம் - நல்ல
பாட்டைகள் செய்வோம்.

என்ற உணர்ச்சிமிக்க இளம் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து ராமலிங்கபுரம்-கழுகுமலை வழியில் 2 பர்லாங் பாதை அமைத்தார்கள்.

கிராமந்தோறும் பள்ளி
வீடு தோறும் கல்வி.

என்ற நிலையினை எங்கள் கிராமம் பெற்றுவிட்டது. பள்ளி வயதுச்சிறுவர்கள் அனைவரும் பள்ளிக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அத்திப்பட்டி கிராம ஆரம்பப் பள்ளி அடிப்படைக் கல்வி சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

இத்தனை நாள் உலக மெல்லாம் இருந்தறிந்த
பெரியவர்கள் இசைத்த ஞானம்
அத்தனையும் ஒருவாய்த் திரண்டதெனக்
கலியுகத்தே அவதரித்தோன்.
சத்தியமே மந்திரமாம் சாந்த மொன்றே
தந்திரமாம் சமயம் தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த

சாத்வீகத்தை வாழ்க்கையின் லட்சியமாக கொண்ட நாங்கள் பள்ளியில் சேரவாய்ப்பில்லாதவர்களும் பொது அறிவு பெற; நாட்டின் நடப்புத் தெரிய, சமூகக் கல்வி மன்றம் நடத்தி வருகிறோம். குருவிகுளம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ரூபாய் 100-00மதிப்புள்ள தின, வார, மாத ஏடுகள் வழங்கப்படுகிறது.

"காவியம் செய்வோம் நல்ல காடுகள்
வளர்ப்போம்."

என்ற பாரதியின் மொழிக்கிணங்கவும், பஞ்சாயத்து தனது வருமானத்தைப் பெருக்க புறம்போக்கு நிலங்களில் மரம் வைக்க வேண்டும் என்று அடிக்கடி கிராம நலம் மூலமும் கூட்டங்கள் மூலமும் சொல்லிவரும் நமது காந்தீய நிர்மாண தொண்டர் அறிவுசால் சென்னை மாநில கிராம அபிவிருத்தி கமிஷனர் உயர்திரு. கோ. வெங்கிடாசலபதி அவர்களின் விருப்பத்திற்கிணங்கவும் எங்கள் பஞ்சாயத்தில் மரம் வைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். என்பதைச் சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்.

நன்றி பல!

★

---

"பெண்டிரே நம்மை இயக்குகின்றனர். எனவே அவர்களையே முழுநிறை பண்புடையவராக்குக; அவர்கள் திருந்துந்தோறும், நாம் தாமாகவே திருந்துவோம். பெண் மனம் அறிவு பெறுவதைப் பொறுத்ததே மனிதன் அறிவு வளர்ச்சி"
—ஷெரிடன்.

---